**நகராட்சி மன்ற உறுப்பினர் / தலைவர்**
**தேர்தல் குறித்து**

# வேட்பாளர் கைச்சுவடி

**மாநிலத் தேர்தல் ஆணையம்**
**புதுச்சேரி**

**2021**

# வேட்பாளர் கைச்சுவடி

# பொருளடக்கம்


| இயல் எண் | உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| I. | முன்னுரை | 5 |
| II. | தகுதிகள் மற்றும் தகுதிக் கேடுகள் | 7 |
| | ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளும் அரசு சட்டம் 1963-லிருந்து எடு குறிப்புகள் | 11 |
| | புதுச்சேரி சட்டப் பேரவை உறுப்பினர்கள் (தகுதிக்கேடு தடுப்புச் சட்டம், 1994 | 13 |
| | இந்திய அரசமைப்பின் எடுகுறிப்புகள் | 16 |
| | நாடாளுமன்ற (தகுதிக்கேடு தடுப்பு) சட்டம், 1959 | 17 |
| | மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951-லிருந்து எடுகுறிப்புகள் | 32 |
| | மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1950-லிருந்து எடுகுறிப்புகள் | 56 |
| | புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973-இன் எடு குறிப்புகள் | 57 |
| | இந்திய தண்டனைச் சட்டம் 1860-இன் எடு குறிப்புகள் | 63 |
| | புதுச்சேரி உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் (வேட்பாளர்களால் வேட்புமனு தாக்கல் செய்வது தொடர்பான தற்செயல் விதிகள்) ஆணை, 2021 | 64 |
| III. | வேட்பு மனு மற்றும் சின்னங்களை ஒதுக்கிக் கொடுத்தல் | 89 |
| | தேர்தல் அறிவிப்பு | 106 |
| | வேட்புமனு படிவம் | 107 |
| | புதுச்சேரி மாநகர சபையின் தேர்தல் சின்னங்கள் (இட ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கீடு) ஆணை, 2002 | 110 |
| | புதுச்சேரி நகராட்சி மன்றத் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக் கொடுத்தல்) ஆணை, 1996 | 121 |
| | அரசியல் கட்சிகளுக்குச் சின்னங்கள் ஒதுக்கீடு / தடையில்லாச் சின்னங்கள் பற்றிய அறிவிக்கை 2021 | 123 |
| IV. | வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வு | 129 |
| | செல்லுநிலையில் முன்மொழியப்பெற்ற வேட்பாளர்களின் பட்டியல் (படிவம் - 4) | 136 |
| | புதுச்சேரி உள்ளாட்சி தேர்தல் (தேர்தல் செலவுகள் உச்சவரம்பு நிர்ணயித்தல்) உத்தரவு, 2021 | 137 |
| V | வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுதல் | 143 |
| | வேட்புமனுக்களை திரும்பப் பெறுதல் பற்றிய அறிவிப்பு (படிவம்-6) | 149 |
| | போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் (படிவம் - 7) | 150 |

| | | |
|---|---|---|
| | தேர்தல் முகவரின் பணியமர்த்துகை (படிவம் - 8) | 151 |
| VI | தேர்தல் முகவர்கள் | 152 |
| | தேர்தல் முகவர்களின் பணியமர்த்துகையை முறித்தறிவு (ரத்து) செய்தல் (படிவம் - 9) | 154 |
| VII | தேர்தல் செயலியக்கக் காலம் | 155 |
| | புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973-இன் எடுகுறிப்புகள் | 170 |
| | புதுச்சேரி திறந்த இடங்கள் (சிதைவு தடுப்பு) சட்டம், 2000 | 185 |
| | துண்டு வெளியீடு, சுவரொட்டிகள் முதலியவற்றை அச்சிடுதல் மீதான வரையறைகள் | 192 |
| VIII | வாக்குப்பதிவு நாள் | 197 |
| | வாக்குச்சாவடி முகவர்களின் பணியமர்த்துகை (படிவம் - 10) | 224 |
| | வாக்குச்சாவடி முகவர்களின் பணியமர்த்துகை முறித்தறவு (ரத்து) (படிவம் - 11) | 226 |
| | வேட்பாளர்கள் மற்றும் அவர்களுடைய தேர்தல் முகவர்களின் மாதிரிக் கையொப்பங்களுக்கான படிவமுறை | 227 |
| | தேர்தல் முகவரின் பணியமர்த்துகை (படிவம்-8) | 228 |
| | தேர்தல் முகவரின் பணியமர்த்துகை முறித்தரறு (ரத்து) (படிவம் - 9) | 229 |
| | தாள் முத்திரைகள் / வாக்குச்சாவடி முகவர்கள் கையொப்பத்தின் ஆவணயேடு | 230 |
| | வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு, தேர்தல் நடைபெறும்போது மற்றும் முடியும் போது தலைமை அலுவலரின் விளம்புகை | 231 |
| | எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட வாக்குகளின் பட்டியல் (படிவம் - 20) | 236 |
| | வாக்காளர்களின் விளம்புகை படிவம் | 237 |
| | பார்வையற்ற அல்லது ஏலாத வாக்களர் துணைவரின் விளம்புகை (படிவம் - 18) | 238 |
| | ஆராய்வுக்குரிய வாக்குகளின் பட்டியல் (படிவம் - 21) | 239 |
| IX | வாக்குகளை எண்ணுதல் | 240 |
| | வாக்கெண்ணும் முகவர்களின் பணியமர்த்துகை (படிவம் - 23) | 263 |
| | வாக்கெண்ணும் முகவர்களின் பணியமர்த்துகை முறித்தறவு (ரத்து) செய்தல் (படிவம் - 24) | 265 |
| | வாக்குச்சீட்டுகளின் கணக்கு வாக்கெண்ணிக்கையின் முடிவு (படிவம் - 22A) | 266 |

# இயல் 1

## முன்னுரை

1.1 நீங்கள் நகராட்சி மன்ற உறுப்பினர் / தலைவர் தேர்தலில் ஒரு வாக்காளராக நிற்கின்றீர்கள் என்றால், தேர்தல் சட்டத்தின் முனைப்பான வழிமுறைகளையும் நடைமுறையையும் நீங்கள் அறிந்து கொள்ளவேண்டியது இன்றியமையாததாகிறது; அப்போதுதான் நீங்கள் வேட்பாளர் நிலை தொடர்பான இடர்பாடு அல்லது வசதி குறைவு எதையும் நீங்கள் பட்டறியாது இருக்கலாம். ஒருகால், நீங்கள் ஏற்கனவே அடிப்படையான தேர்தல் சட்டங்கள் மற்றும் வீடுகளின் வகைகள் பற்றி அறிந்து கொண்டிருக்கலாம் இருப்பினும், உங்களுடைய நன்மை மற்றும் வழிகாட்டுதல்களுக்காக, நீங்கள் போட்டியிடுகின்ற தேர்தல் தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிகளின் முக்கியமான தொடர்பான வகைமுறைகளைச் சுருக்கமாக அளிக்கும் கைச்சுவடியை மாநில தேர்தல் ஆணையம் வெளிக்கொண்டு வந்திருக்கிறது

உள்ளாட்சி அமைப்பின் எண்ணிக்கை / தொகுதிகளின் வரம்பீடு:

1.2 1973-ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் 9 மற்றும் 16ஆம் பிரிவுகளின் கீழ் புதுச்சேரி அரசு ஐந்து நகராட்சிகளில் 116 தொகுதிகளில் அறிவிக்கை செய்து இருக்கிறது. ஒவ்வொரு தொகுதியின் பரப்பளவும் அறிவிக்கை செய்யப்பட்டிருக்கிறது. பல்வேறு பதவிகளுக்காக பட்டியல் சாதிகள், பட்டியல் சாதி மகளிர், பொதுத் தொகுதி மகளிர் முதலியோருக்கான இட ஒதுக்கீடுகளும் அறிவிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. தொகுதிகள் மற்றும் ஒதுக்கீடுகள் பற்றிய விபரங்கள் உங்களுக்கு தனித்தனியாக வழங்கப்படும்.

வாக்காளர் பட்டியல்கள்

1.3 மேற்கண்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் நடத்தப்படுகின்றன. இந்தியாவின் ஒரு குடிமகனாகவும் தகுதிகோறும் தேதியன்று 18 வயதிற்கு குறைந்தவராக குடியிருப்பின்மை, குற்றம் அல்லது ஊழல், அல்லது சட்டமுரணான நடைமுறை என்னும் காரணம் காட்டிச் சட்டம் எதன் கீழும் பிறவாறு தகுதிக்கேடு இல்லாதவராகவும் உள்ள ஆள் ஒவ்வொருவரும் இத்தகைய தேர்தல்களில் ஒரு வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதற்கு உரிமைப்பாடு உடையவர் ஆவார்.

**வேட்பாளர் ஒரு வாக்காளராக இருக்கவேண்டும்**

1.4 **இத்தகைய தேர்தல்களில் வேட்பாளர் நிலைக்கான அடிப்படைத் தகுதிகளில் ஒன்று, தொடர்புடைய ஒரு வாக்காளராக இருக்கவேண்டும் என்பதாகும். எனவே தேர்தல் நடத்தப்படுவதற்கு அடிப்படையாக உள்ள நடப்பு வாக்காளர் பட்டியலில், உங்கள் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை, ஒரு வேட்பாளர் என்ற நிலையில் நீங்கள் முதலில் உறுதி செய்து கொள்ளவேண்டும் என்பதை கவனத்தில் கொள்வது தேவையாகிறது. சட்டத்தின் கீழ், தேர்தல் நிகழ்வுத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு போதிய அளவு முன்னதாகவே, தொகுதியின் வாக்காளர் பட்டியல் திருத்தி அமைக்கப்பட்டு அறுதியாக வெளியிடப்பட்டிருக்கும்**

# இயல் 2

## தகுதிகள் மற்றும் தகுதிக்கேடுகள்

2.1 நீங்கள் ஒரு வேட்பாளராக நிற்க வேண்டுமென்றால், நீங்கள் குறித்தசில தகுதிகளை உடையவராய் வேண்டும். அதே நேரத்தில் நீங்கள் குறித்த சில தகுதிக்கேடுகளுக்கு ஆட்படாதவராகவும் இருக்க வேண்டும். இத்தகைய தகுதிகளும் தகுதிகேடுகளும், இந்திய அரசமைப்பிலும் தேர்தல் கட்டளைச்சட்டங்களிலும் வகுத்தமைக்கப்பட்டிருக்கின்றன.

தகுதிகள்

2.2 நீங்கள் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர் / தலைவர் தேர்தலில் ஒலு வேட்பாளராக நிற்க விரும்புகிறீர்கள் என்றால், நீங்கள் பின்வரும் தகுதிகளில் ஒவ்வொன்றையும் உடையவராதல் வேண்டும்

(அ) முதல் நிலையில், நீங்கள் ஒரு இந்திய குடிமகனாக இருக்க வேண்டும்.

(ஆ) இரண்டாம் நிலையில், நியமனங்களில் கூர்ந்தாய்வு தேதி என்று நீங்கள் மன்ற உறுப்பினர்காக 21 வயதுக்கும், நகராட்சி மன்றத் தலைவருக்காக 25 வயதுக்கும் குறையாதவராக இருக்க வேண்டும். 22(1)(k) பிரிவுக்கான வரை பரம்பரை மற்றும் 12 பிரிவுக்கான வரம்புரை மற்றும் 12 அ(1) (அ) பிரிவுக்கான வரம்புரை, புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973)

2.3 நீங்கள் உள்ளாட்சி அமைப்புகள் தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்க விரும்புகிறீர்கள் என்றால், ஒன்றிணைத்து ஆட்சிப் பரப்பு சட்டப்பேரவைத் தேர்தலுக்காகச் சட்டம் எதன்வாயிலாகவோ வழியாகவோ வகுத்தமைக்கப்பட்டுள்ளத் தகுதிகேடுகில் எதற்கும் ஆட்படாதவராக இருக்க வேண்டும். [காண்க: பிரிவு 22 உட்பிரிவு ஒன்றின் (k) பிரிவுக்கூறு புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973, இது புதுச்சேரி நகராட்சி மன்றத் (தலைவர் தேர்தல்) விதிகள், 1996இன் 5ஆம் விதியுடன் சேர்ந்து படித்து பொருள் கொள்ள வேண்டும்].

1963ஆம் ஆண்டு ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள் அரசுச் சட்டத்தின் 14ஆம் பிரிவில் அடங்கியுள்ள தகுதிக்கேடுகள் (பின்னிணைப்பு 2.1).

2.4 (i) முதல் நிலையில், நாடாளுமன்றத்தால், அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப் பரப்பின் சட்டப்பேரவையால், பதவியேற்று இருப்பவர் தகுதிக்கேடு இல்லாதவர், என்று விளம்பப்பட்ட ஒரு பதவி அல்லாமல், இந்திய அரசு, அல்லது ஏதேனும் மாநில அரசு அல்லது ஏதேனும் ஒன்றியத்து ஆட்சிப் பரப்பு அரசின் கீழ் வேறு ஆதாய பதவி எதையும் நீங்கள் ஏற்றிருத்தல் கூடாது. புதுச்சேரி சட்டப்பேரவை

1994ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினர்கள் (தகுதிக் கேடு தடுப்பு) சட்டத்தை நிறைவேற்றி இருக்கிறது (பின்னிணைப்பு 2.2). நீங்கள் அதை கவனமாக படித்துப்பார்க்கலாம்.

(ii) இரண்டாம் நிலையில், இந்திய அரசமைப்பின் 102(1) ஆம் உறுப்பின் உட்கூறு (ஆ), உட்கூறு (இ) அல்லது உட்கூறு (ஈ) ஆகியவற்றின் வகைமுறைகளில், அல்லது அந்த உறுப்பை அடியொற்றி செய்யப்பட்ட ஏதேனும் சட்டத்தில் வகுத்தமைக்கப்பட்டவாறு, நாடாளுமன்ற ஈரவை எதிலும் ஒரு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கான அல்லது இருப்பதற்கான தகுதி கேடுகளில் ஏதொன்றுக்கும் நீங்கள் ஆட்படாதராதல் கூடாது. 14 (1)(ஆ) பிரிவில் பயன்படுத்தப்பட்ட "அந்த உறுப்பை அடியொற்றி செய்யப்பட்ட ஏதேனும் சட்டம்" என்னும் சொல்லமைப்பிலிருந்து நீங்கள் குடியியல் தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்க விரும்புகிறீர்கள் என்றால் 1959ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தொகுதிக்கு (தகுதிக்கேடு சட்டம்) (பின்னிணைப்பு 2.4) பொருந்தலாம் என்று கூறும் அது பாதுகாப்பானதாக தோன்றுகிறது ஏனென்றால் 1951ஆம் ஆண்டு நீங்கள் மக்கள் சார்பாக சட்டத்தில் அடங்கியுள்ள தகுதிகள் தொடர்பாக பொருந்துகிற வகை முறைக்கும் கூடுதலாக, 1959ஆம் ஆண்டு நாடாளுமன்ற (தகுதிக் கேடு தடுப்பு சட்டம்) 102ஆம் உறுப்பை அடியொற்றிச் செய்யப்பட்டிருக்கிறது. பொருட்பாடு பற்றிய இந்த நோக்கில் நீங்கள் உங்களுடைய வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் முன்பு ஒரு பதிவில் அரசின் கீழ் வரும் ஒரு ஆதாய பதவிக்காக இருந்து 1989ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தகுதிக்கேடு தடுப்பு சட்டத்தின் மூன்றாம் பிரிவில் (ஏ) அல்லது மற்றும் (ஐ) கூறின் தடைசெய்யப்பட்ட நோக்கில் அது வருகிறது என்றால், நீங்கள் அப்பதவியிலிருந்து விலக வேண்டுமா என்பது பற்றிக் கவனமாக நீங்கள் கருதவேண்டும். எந்தத் நேர்விலும் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படலாகாது என்பதற்காகவே, இப்பொருட்டில் உங்களுடைய வழக்குரைஞரிடம் கலந்து பேசுவது உங்களுக்கு காப்பாகும்.

மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951இன் கீழ் தகுதிக்கேடுகள்

2.5 இப்போதைய தேர்தல்களுக்குப் பொருந்தத்தக்க, ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப்பேரவை உறுப்பினர் நலைக்குரிய சட்ட முறைப்படியான தகுதிக்கேடுகள., 1951ஆம் ஆண்டின் மக்கள் சார்பாண்மைச் சட்டத்தின் பிரிவு 8, பிரிவு 8(அ), பிரிவு 9, பிரிவு 9(அ), பிரிவு 10, பிரிவு 10(அ) ஆகியவற்றில் (பின்னிணைப்பு 2.5) அடங்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நிலைக்குரிய அதே தகுதிக்கேடுகள் ஆகும். ஆனால், 9-அ-பிரிவு அல்லது 10ஆம் பிரிவிலுள்ளதைப்போன்று பிரிவு எதிலும் உள்ள "உரிய அரசுக்கு" என்னும் கட்டுகை (reference) ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு அரசு என்று மட்டுமல்லாமல் மைய அரசு என்றும், பொருள்பட வேண்டும் என்னும் இவ்வேறுபாடு ஆட்சிபரப்பு அரசு என்று மட்டுமல்லாமல் மைய அரசு என்றும் பொருள்படவேண்டும் என்னும் இவ்வேறுபாடு மட்டும் உண்டு. உங்களது வாணிகம் அல்லது அலுவல் தொழில் போக்கில் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புடன் நீங்கள் உயிர்ப்புள்ள ஓர் ஒப்பந்தத்தைச் செய்துக்கொண்டிருக்கிறீர்கள் என்ற நிலையில் நீங்கள

தகுத்கேடுற்றவராக ஆவீர்கள். புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு நோக்கத்திற்காக நீங்கள மைய அரசுடன் ஒப்பந்தம் எதையும் செய்துகொண்டிருந்தாலும், அப்போதும் கூட நீங்கள் தகுதிக்கேடுள்ளவராக ஆவீர்கள். அதே நிலை 1951ஆம் ஆண்டு மக்கள் சார்பாண்மை் சட்டத்தின் 10ஆம் பிரிவு தொடர்பாகவும் நிலைத்து நிற்கும். 1950ஆம் ஆண்டு மக்கள சார்பாண்மைச் சட்டத்தின் 2(1)(அ) பிரிவு (பின்னிணைப்பு 2.6), 1963ஆம் ஆண்டு ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளின் அரசுச் சட்டத்தின் 55ஆம் பிரிவு (பின்னிணைப்பு 2.1) ஆகியவற்றின் பயன்திறனால், 1950ஆம் ஆண்டுச் சட்டத்தின் ”மாநில அரசு” என்பதற்குக் கொடுக்கப்பட்ட பொருள் வரையறைக் கவனத்தில் கொண்டு, இந்த நோக்குரை கொள்ளப்பட்டது. தேர்தல்கள் போன்றதொரு செயல்முனைப்புள்ள பொருட்டில், நீங்கள் சேமக்காப்புடன் பங்காற்ற வேண்டும் மற்றும் இடரேற்பு (risk) எதையும் எடுக்கக் கூடாது. எந்த நேர்விலும் இந்த சிக்கல்கூறு பற்றி உங்கள் வழக்குரைஞரை நீங்கள் கலந்து பேசுவது உங்களுக்கு நல்லதாக அமையும்.

புதுவை நகராட்சிகள் சட்டம் 1973இன் கீழ் தகுதிக்கேடுகள் (பின்னிணைப்பு 2.7)

2.6 (i) சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் ஒழுக்கநெறிக் குற்றமிழப்பை உள்ளடக்கும் குற்றம் எதற்காகவும் அல்லது 1955ஆம் ஆண்டு குடியியல் உரிமைகள் பாதுகாப்பளிப்புச் சட்டத்தின்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றத்திற்காக ஒரு குற்றவியல் நீதிமன“றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கபட்ட அல்லது சிறைத்தண்டணை விதிக்கபட்ட ஆள் ஒருவர், அத்தீர்ப்பபுத் தண்டனையை அனுபவிக்கையிலும் அத்தீர்ப்புத் தண்டணை முடிவற்ற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுக்கும் தேர்தலில் நிற்கத் தகுதிக்கேடுற்றவர் ஆவார். எனினும், அத்தகை தீர்ப்புத் தன்டணை ஒரு தகுதிக்கோடாகச் செயற்படுதல் என கட்டளையிடுவதற்கு அரசுக்கு தகுதிறம் உடையது ஆகும்

(ii) வேட்புமனுவைப் பதிந்துவைக்கும் கடைசிநாளில் அல்லது தேர்தல் நாளில் ஆள் ஒருவர் மனநலமற்றவராகவோ, காதுகேளாதவராகவோ அல்லது ஊமையாக இருக்கிறார் என்றால், அவர் தகுதிக்கேடுற்றவர் ஆகிறார். விவரங்களுக்கு நீங்கள் 22(2)ஆம் பிரிவைப் பார்வையிடலாம். (காண்க. பின்னிணைப்பு 2.7).

(iii) தேர்தலில் போட்டியிடுவதற்கான மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர் / தலைவர் ஆக இருந்துவருவதற்கான தகுதிக்கேடு, 21ஆம் பிரிவில் வகுத்தமைக்கப் பட்டிருக்கின்றது. (பின்னிணைப்பு 2.7).

வாக்களிப்பதற்கான தகுதிக்கேடுகளிலிருந்து எழும் தகுதிக்கேடு :

2.7 (i) தேர்தல் தொடர்புள்ள ஊழல் நடைமுறைப் பழக்கம் அல்லது வேறு குற்றச்செயல்களுக்குத் தொடர்பான சட்டம் எதன் கீழும், ஆள் எவரும், அப்போதைக்கு, வாக்களிப்பதற்கு தகுதிக்கேடுற்றவராகிறார் என்றால், அப்போது அவர், ஒரு வாக்காளர் பட்டியலில் பதிவுசெய்யத் தகுதிக்கேற்றவராக ஆகிறார்

மற்றும் பதிவு செய்த பின்பு அவ்வாறு தகுதிக்கேற்றவராக ஆகியிருக்கிற ஆள் எவரின் பெயரும் வாக்காளர் பட்டியலிலிருந்து அடித்து நீக்கப்படுமாறு வேண்டுறுத்தப்படுகிறது. தேர்தலில் நிற்பதற்கான தகுதிகளில் ஒன்று நீங்கள் ஒரு வாக்காளராக இருக்க வேண்டும் என்பதாம். பார்க்க பிரிவு 20. புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973, ஆனால் நீங்கள் வாக்களிக்கத் தகுதிக்கேடுற்றவராக இருக்கிறீர்கள் என்றால், நீங்கள் தேர்தலில் நிற்பதற்கான தகுதிகேடுற்றவராக ஆகிறீர்கள்.

(ii) மைய மாநில அரசின், அல்லது உள்ளூர் அதிகார அமைப்பின் அல்லது அரசினால் அறிவிக்கை செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் பணியிலுள்ள எவரும் தேர்தலில் போட்டியிடத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்; ஆனால், அந்த ஊழியர் முழு நேர ஊழியராகவும், அவர் வரைவூதியம் அல்லது கட்டணங்கள் மூலம் பணியூதியம் பெறுபராகவும் இருக்க வேண்டும். ஆள் ஒருவர் தகுதிக் கேடு உற்றவராக இருக்கிறாரா அல்லது இல்லையா என்பதைக் குறித்து வினா எதுவும் எழுகிற நேர்வில், அரசு அதைப்பற்றி முடிவு செய்தல்வேண்டும். மற்றும் அதன் முடிவு அறுதியானது ஆகும்.

(iii) பிரிவு 11-அ, மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951 (பின்னிணைப்பு 2.5) குற்றத்தீர்ப்பு மற்றும் ஊழல் பழக்கமுறைகளிலிருந்து எழும் வாக்களிப்பதற்கான தகுதிக்கேட்டுக்கு வகை செய்கிறது.

(iv) இந்திய தண்டணைச் சட்டத்தின் பிரிவு 171-உ அல்லது 171-ஊ ஆம் பிரிவின் கீழ் (பின்னிணைப்பு 2.8) அல்லது 1951ஆம் ஆண்டு மக்கள் சார்பாண்மைச் சட்டத்தின் 125 அல்லது 135ஆம் பிரிவு அல்லது 136ஆம் பிரிவின் உட்பிரிவு (2)இன் (அ) கூறின் கீழ் (பின்னிணைப்பு 2.5) தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் எவரும் வாக்களிக்கத் தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(v) 1951ஆம் ஆண்டு மக்கள் சார்பாண்மைச் சட்டத்தின் 99ஆம் பிரிவின் கீழ் வரும் ஓர் ஆணை மூலம் ஓர் ஆள் ஊழல் பழக்க முறைக் குற்றவாளியாகக் கருதப்படும் நேர்வில், தேர்தலில் நிற்பதற்கான தகுதிக்கேடு பற்றி 8-அ பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்டவாறு அதே கால அளவுக்கு அவர் வாக்களிக்க தகுதிகேடுற்றவர் ஆவார்.

2.8 தகுதிகள் மற்றும் தகுதிக்கேடுகள் தொடர்பான அனைத்து முக்கிய விவாக்கூறுகளும் இவ்வியலில் சொல்லப்பட்டிருக்கின்றன. நீங்கள் மேலே சொல்லப்பட்ட வகைமுறைகளைக் கவனமாகப் படிக்க வேண்டும். ஏனென்றால், இக்கைச்சுவடியைப் படித்துப்பார்த்தல், அரசமைப்பு மற்றும் சட்டத்தின் வகைமுறையை அறிந்து கொள்ள உங்களுக்கு உதவும்.

2.9 பின்னிணைப்பு 2.9-இல் உள்ள ஆணைக்கு ஏற்ப, குற்றத்தீர்ப்பு எதுவும் இருப்பின் அதுப் பற்றி நீங்கள் ஒரு விளம்புகையைச் செய்ய வேண்டும்.

## பின்னிணைப்பு 2.1

## 1963ஆம் ஆண்டு ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள் அரசு சட்டத்திலிருந்து எடு குறிப்புகள் (Extracts) (20/1963)

14. உறும்பினர் நிலைக்கான தகுதிக்கேடு

14.1 ஓர் ஆள், ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப்பேரவை உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கும், அத்தகையவராக இருந்து வருவதற்கும், -

(அ) நாடாளுமன்றத்தால் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப்பேரவையால் செய்யப்பட்ட சட்டத்தின் மூலம் பதவியேற்பவர் தகுதிக்கேடு உற்றவராவார் என விளம்பப்பட்ட பதவி அல்லாத வேறு ஆதாயப் பதவி எதையும், இந்திய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசு, அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு அரசின் கீழ் அவர் ஏற்றிருக்கிறார் என்றால், அல்லது.

(ஆ) 102-ஆம் உறுப்பின் பிரிவு (1)-இன் உட்பிரிவு (ஆ), உட்பிரிவு (இ) அல்லது உட்பிரிவு (ஈ) -இன் வகைமுறைகளின் கீழ், நாடாளுமன்ற ஈரவைகளில் எதிலும் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கும் அவ்வாறு இருந்து வருவதற்கும் அவர் அப்போதைக்கு தகுதிக்கேடுற்றவராக இருக்கிறார் என்றால், தகுதிக்கேடற்றவர் ஆவார்.

14.2 இப்பிரிவின் நோக்கங்களுக்காக, அவர் இந்திய அரசின், ஏதேனும் மாநில அரசில், அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் வந்தால், ஓர் அமைச்சராக இருக்கிறார் எனும் காரணத்தால் மட்டுமே, இந்திய அரசு, அத்தகைய மாநில அரசு அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு அரசின் ஓர் ஆதாயப் பதவியை அவர் வகிக்கிறார் என கொள்ளப்படுதல் ஆகாது.

14.3 ஒன்றியத்தது ஆட்சிப்பரப்பின் சட்டப் பேரவை உறுப்பினர் ஒருவர், 1-ஆம் உட்பிரிவின் வகைமுறைகளின் கீழ் அத்தகைய ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதிக்கேடற்றவராக ஆகி இருகிக்கிறார் என்பது குறித்து வினா எதுவும் எழுகிறது என்றால், அந்த வினா, குடியரசுத் தலைவரின் முடிவுக்காக சுட்டியனுப்பப்படுதல் வேண்டும். மற்றும் அவரது முடிவு, அறுதியானதாகும்.

14.4 அத்தகைய வினா மீது முடிவு எதுவும் செய்யும் முன்பு, குடியரசுத் தலைவர் தேர்தல் ஆணையத்தின் கருத்துரையைப் பெறுதல், அத்தகைய கருத்துரைக்கு இணங்க செயலாற்றுதலும் வேண்டும்.

14(அ). ஓர் உறுப்பினராக இருந்து வருவதற்கு கட்சித் தாவுதல் காரணமான தகுதிக்கேடுகள்;

இந்திய அரசமைப்பின் 10-ஆம் இணைப்புப் பட்டியலில் உள்ள வகைமுறைகள், அதிலுள்ள பொருள் மாநில சட்டப்பேரவை, 188-ஆம் உறுப்பு, 194-ஆம் உறுப்பு, 212-ஆம் உறுப்பு ஆகிய கட்டுகைகள் (reference) இச்சட்டத்தின் முறையே ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டப்பேரவை, 11-ஆம் பிரிவு, 16-ஆம் பிரிவு, 37-ஆம் பிரிவு ஆகிய கட்டுகைகளாக பொருள் கொள்வதற்குரிய மாற்றமைகள் (modifications) உள்ளடக்கங்களாக தேவைப்படும் மாற்றமைவுக்கு உட்பட்டு, ஒரு மாநில சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் அவர்கள் தொடர்பாகவும் அவை பொருந்துவதைப் போன்றே ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கும் அவர்கள் தொடர்பாகவும் பொருந்துதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க -

(அ) அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்டுள்ள மேற்கூறிய 10-ஆம் இணைப்புப் பட்டியல், இச்சட்டத்தின் பகுதியாக அமைந்துள்ளது என கொள்ப்படுதல் வேண்டும்.

(ஆ) ஓர் ஆள், மாற்றமைவு செய்யபட்ட மேற்சொன்ன 10-ஆம் இணைப்புப் பட்டியலின் கீழ் அவ்வாறு தகுதிக்கேடற்றவராக இருக்கிறார் என்றால் ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து வருவதற்கும் அவர் தகுதிக் கேடற்றவராக ஆவார்.

ஒப்பந்தங்கள் மற்றும் உரிமை வழக்குகள்

55. ஐயப்பாடுகளை அகற்றுவதற்காக -

(அ) ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் ஆட்சித்துறைத் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களும், ஒன்றியத்து செயல் அதிகாரத்தைச் (Executive Power of the Union) செலுத்துகையில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களாக இருக்கின்றன என்றும்,

(ஆ) ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு தொடர்பான அனைத்து உரிமை வழக்குகளும், நடவடிக்கைகளும் இந்திய அரசினால் அல்லது அதற்கு எதிராக தொடுக்கப்படுதல் வேண்டும் என்றும், இதன் மூலம் விளம்பப் படுகிறது.

# பின்னிணைப்பு 2.2

## புதுச்சேரி அரசு
## சட்டத்துறை

No.63/Leg.194-LD **புதுச்சேரி, 21 நவம்பர் 1994**

**புதுச்சேரி சட்டப்பேரவையின் பின்வரும் சட்டம், புதுச்சேரி ஆட்சியாளரின் ஏற்பிசைவை (Assent) 17 நவம்பர் 1994 அன்று பெற்றது. மற்றும் பொதுமக்கள் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது; -**

**புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினர்கள்**
**(தகுதிக்கேடு தடுப்பு) சட்டம், 1994**

**சட்ட எண். 13/1994**

**17.11.1994**

**அரசின் கீழுள்ள குறித்த சில ஆதாயப் பதவிகள், புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்படுவதற்கு, அல்லது அவ்வாறு இருந்து வருவதற்கு அவர்களைத் தகுதிக்கேடு உற்றவர்களாக ஆக்காது எனது விளம்புவதான**

**ஒரு சட்டம்**

**இது இந்திய குடியரசின் 45ஆம் ஆண்டில் புதுச்சேரி சட்டப்பேரவையால் பின்வருமாறு சட்டமாக இயற்றப்படுவதாக**

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் - (1) இச்சட்டம் புதுச்சேரி சட்டப்பேரவை உறுப்பினர்கள் (தகுதிக்கேடு தலைப்பு) சட்டம், 1994 என வழங்கப்பெறும்.**

**(2). இது உடனடியாக செயலாற்றத்திற்கு வரும்.**

**2. பொருள் வரையறைகள்:- இச்சட்டத்தில் வருவாய் பிறவாராக வேண்டுறுத்துகிறது என்றாலன்றி, -**

**(அ) "சரியீட்டுப் படித்தொகை" (Compensatory Allowances) என்பது, ஒரு பதவி வகிப்பவருக்கு நாள்படித்தொகை என்ற வகையில் கொடுக்கத்தக்க பணத்தொகை எதுவும் எனப் பொருள்படும். ஆனால், 1964-ஆம் ஆண்டு (புதுச்சேரி) சட்டப்பேரவை உறுப்பினர்கள் வரையூதியம், படித்தொகை மற்றும் ஓய்வூதிய சட்டத்தின் கீழ், சட்டப்பேரவை உறுப்பினர் ஒருவர் அப்பதவியின் அலுவல் பணியாற்றுகையில் அவரால் ஏற்க நேரிட்ட செலவீனம் எதையும் ஈடு செய்வதற்கு அவரை இயல்விக்கும்**

நோக்கத்திற்காக, ஊர்திப்படித்தொகை, வீட்டுவாடகைப்படித் தொகை, அல்லது பயணப்படித் தொகை எதற்கும் அவர் உரிமைப்பாடுடைய நாள்படித் தொகையை விட மேற்சொன்ன அத்தகைய படித்தொகை மேற்படுதல் ஆகாது.

(ஆ) சட்ட முறை சாரா குழுமம் என்பது, ஒரு சட்ட முறை குழுமம் அல்லாத வேறு ஆட்சிகளின் குழுமம் என பொருள்படும்.

(இ) "இணைப்புப் பட்டியல்" என்பது, இச்சட்டத்திற்கு பின்சேர்க்கையாக உள்ள இணைப்புப் பட்டியல் எனப் பொருள்படும்.

(ஈ) "சட்டமுறைக் குழுமம்" என்பது, அப்போதைக்கு செயலாகத்திலுள்ள ஏதேனும் சட்டத்தின் வாயிலாகவோ, கீழாகவோ நிறுவப்பட்ட கூட்டிணையாக்கப்பட்டிருந்தாலும் அல்லது இல்லையென்றாலும், ஏதேனும் கழகம், குழு, ஆணையம், மன்றம், வாரியம் அல்லது ஆட்சிகளின் குழுமம் எனப் பொருள்படும்.

3. இணைப்புப் பட்டியல் குறித்துரைக்கப்பட்ட பதவிகளின் எதுவும், புதுச்சேரி சட்டப்பேரவையின் ஓர் உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு, அல்லது அவ்வாறு இருந்து வருவதற்கு அப்பதவி வகிப்பவரை தகுதிக்கேடு உற்றவராக ஆக்காது என்று இதன் மூலம் விளம்பப்படுகிறது.

## இணைப்புப் பட்டியல்
**(காண்க, பிரிவு - 3)**

பின்வரும் சட்ட முறை அல்லது சட்டமுறை சாரா குழுமங்களில் ஏதொன்றின் குழுத்தலைவர் (Chairman), தலைவர் (President), குழுத் துணைத்தலைவர், துணைத்தலைவர், இயக்குனர் அல்லது உறுப்பினர் பதவி அல்லது :-

(அ) புதுச்சேரி வடிப்பாலை வரையம்;

(ஆ) புதுச்சேரி வேளாண்பணி மற்றும் தொழிற்கழக வரையம்;

(இ) புதுச்சேரி வேளாண் செய்பொருள், உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்குகை கழக வரையம்;

(ஈ) புதுச்சேரி சுற்றுலா மற்றும் போக்குவரத்துக் கழக வளர்ச்சி கழக வரையம்;

(உ) புதுச்சேரி ஆதி திராவிடர் வளர்ச்சிக் கழக வரையம்; மற்றும்

(ஊ) புதுச்சேரி சட்ட உதவி மற்றும் அறிவுரை வாரியம்

ஆனால், அத்தகையப் பதவி எதையும் வகிப்பவர், சரியீட்டுப் படித்தொகை அல்லது வேறு கட்டணம் அல்லது பணி ஊதியம் (Remuneration) எதையும் பெற்றுக் கொள்வதோ அல்லது அதற்கு கொண்டாடுவதோ இல்லை.

வி. நாராயணசாமி
அரசுத் துணைச் செயலாளர்

## பின்னிணைப்பு 2.3

## இந்திய அரசமைப்பிலிருந்து எடுகுறிப்புகள்

102. **உறுப்பினர் நிலைக்கான தகுதிக்கேடுகள் :-**

(1) **ஆள் ஒருவர் -**

(அ) எந்த பதவி பொறுத்து அதை ஏற்றிருப்பவர் தகுதிக்கேடு உற்றவர் ஆகார் என நாடாளுமன்றத்தால் சட்டத்தின் வாயிலாக விளம்பப்பட்டிருக்கிறதோ அந்தப் பதவி அல்லாத வேறு ஆதாயப் பதவி எதனையம் இந்திய அரசின் கீழோ, ஏதேனும் மாநில அரசின் கீழோ அவர் ஏற்றிருக்கிறார் என்றால்,

(ஆ) அவர் மன நலம் இல்லாதவராயிருந்து, ஒரு தகுதி திறம் வாய்ந்த நீதிமன்றத்தால் அத்தகையவர் என விளம்பப்பட்ட நிலையில் இருக்கிறார் என்றால்,

(இ) அவர் விடுப்புப் பெறாத ஒரு நொடிப்பு நிலையாராக இருக்கிறார் என்றால்,

(ஈ) அவர் ஒரு இந்தியக் குடிமகனாக இல்லாதிருக்கிறார், அல்லது ஓர் அயல்நாட்டு அரசின் குடிமை (Citizenship)-யினை தன் விருப்பமாகப் பெற்றிருக்கிறார், அல்லது ஓர் அயல்நாட்டு அரசிடம் தமக்கு பற்றுறுதியோ அல்லது ஒட்டுறவோ (Allegiance or Adherence) இருப்பதை எவ்வகையிலேனும் ஒப்புகை செய்துக் கொண்டிருக்கிறார் என்றால்,

(உ) அவர் நாடாளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டம் எதனின் வாயிலாகவோ, கீழாகவோ அவ்வாறு தகுதிக்கேடற்றவராக ஆக்கப்படுகிறார் என்றால்,

நாடாளுமன்ற ஈரவைகளில் ஏதொன்றிலும் தெரிவு செய்யப்படுவதற்கும் உறுப்பினராக இருந்து வருவதற்கும் தகுதிக் கேடற்றவர் ஆவார்.

விளக்கம்:- இப்பிரிவுக்கூறின் நோக்கங்களுக்காக, ஓர் ஆள் ஒன்றியத்துக்கான அல்லது ஏதேனும் மாநிலத்திற்கான அமைச்சராக இருக்கிறார் எனும் காரணத்தினால் மட்டுமே அவர் இந்த அரசின் கீழோ அத்தகைய ஏதேனும் மாநில அரசின் கீழோ ஓர் ஆதாயப் பதவியை ஏற்றிருக்கிறார் என கருதப்படுதலாகாது.

(2) ஓர் ஆள், பத்தாம் இணைப்புப் பட்டியலின் கீழ், நாடாளுமன்ற ஈரவைகளில் ஏதொன்றின் ஒரு உறுப்பினராக இருந்து வருவதற்கு தகுதிக் கேடற்றவராக இருக்கிறார் என்றால் அவர் அவ்வாறு தகுதிக்கேடற்றவர் ஆவார்.

# பின்னிணைப்பு 2.4

## நாடாளுமன்ற (தகுதிக்கேடு தடுப்பு) சட்டம், 1959

(10/1959)

(4 ஏப்ரல் 1959)

அரசின் கீழுள்ள குறித்த சில ஆதாயப்பதவிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்படுவதற்கு, அல்லது இருந்துவருவதற்கு அவர்களைத் தகுதிக்கேடு உற்றவர்களாக ஆக்காது என விளம்புவதான

ஒரு சட்டம்

(இது, இந்திய குடியரசின் பத்தாம் ஆண்டில் பின்வருமாறு சட்டமாக இயற்றப்படுவதாக.)

1. குறுந்தலைப்பு :- இச்சட்டம் 1959ஆம் ஆண்டு நாடாளுமன்ற (தகுதிக்கேடு தடுப்பு) சட்டம் என வழங்கப் பெறும்.

2. பொருள் வரையறைகள் :- இச்சட்டத்தில் தறுவாய் (Context) பிறவாக வேண்டுறுத்துகிறது என்றாலன்றி, -

(அ) "சரியீட்டுப் படித்தொகை" (Compensatory Allowance) என்பது, ஒரு பதவி வகிப்பவருக்கு நாள்படித்தொகை என்ற வகையில் கொடுக்கத்தக்க பணத்தொகை எதுவும் எனப் பொருள்படும். ஆனால் 1954ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரைவூதியங்கள் மற்றும் படித்தொகைகள் சட்டத்தின் (30/1954) கீழ், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அந்த பதவியின் அலுவற்பணியாற்றுகையில் அவரால் ஏற்க நேர்ந்த செலவினம் எதையும் ஈடு செய்வதற்கு அவரை இயல்விக்கும் நோக்கத்திற்காக ஊர்திப்படித்தொகை, வீட்டு வாடகைப் படித்தொகை, அல்லது பயணத்தொகை எதற்கும் அவர் உரிமைப்பாடு கொண்டுள்ள நாள் படித்தொகையை விட மேற்சொன்ன அத்தகைய படித்தொகை மேற்படிதல் ஆகாது.

(ஆ) சட்டமுறைக் குழுமம் (Statutory Body) என்பது, அப்போதைக்குச் செயலாற்றிலுள்ள ஏதேனும் சட்டத்தின் வாயிலாகவோ கீழாகவோ நிறுவப்பட்ட, கூட்டிணை வாக்கப்பட்டிருந்தாலும் அல்லது இல்லை என்றாலும் ஒரு கழகம், குழு, ஆணையம், மன்றம், வாரியம் அல்லது ஆட்களின் குழுமம் எனப் பொருள்படும்.

(இ) "சட்டமுறைக்குழுமம்" என்பது, ஒரு சட்டமுறைகுழுமம் அல்லாத வேறு ஆட்களின் குழுமம் எனப் பொருள்படும்.

3. குறித்த சில ஆதாயப் பதவிகள் தகுதிக்கேடுற்றவராக ஆக்காமை :-

பின்வரும் பதவிகளில் எதுவும், அது இந்திய அரசில், அல்லது ஏதேனும் மாநில அரசின் கீழ் ஓர் ஆதாயப்பதவியாக இருக்கிறவரையில், அப்பதவி வகிப்பவரை ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்வதற்கு அல்லது இருந்து வருவதற்கு தகுதிக் கேடுள்ளவராக ஆக்காது என இதன் மூலம் விளம்பப்படுகிறது. அவையாவன

(அ) பதவி வழியிலேனும் அல்லது பெயர் சுட்டியேனும், ஒன்றியத்து அல்லது ஏதேனும் மாநிலத்து அமைச்சர், இணை அமைச்சர், அல்லது துணை அமைச்சரால் வகிக்கப்படும் ஏதேனும் பதவி;

(அ)(அ) நாடாறுமன்றத்தில் ஓர் எதிர்க்கட்சித் தலைவரின் பதவி;

(ஆ) தலைமை ஏவுரையர் (கொறடா - Whip), துணைத்தலைமை ஏவுரையர் அல்லது நாடாளுமன்றத்தின் அல்லது நாடாளுமன்றச் செயலாளரின் ஏவுரையர், பதவி;

(இ) தேசிய மாணவர் படைச் சட்டம், 1948 (31/1948), ஆட்சிப் பரப்பெல்லை படைச் சட்டம் (56/1948), அல்லது சேமக் காவல் மற்றும் துணை விமானப் படைச் சட்டம், 1952 (62/1952) இப்படைகளின் கீழ் உருவாக்கிய அல்லது பேணி வருகிற படை எதிலுமுள்ள ஓர் உறுப்பினர் பதவி;

(ஈ) மாநிலம் எதிலும் அப்போதைக்குச் செயலாற்றிலுள்ள ஏதேனும் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஊர்காவல் படையின் ஓர் உறுப்பினர் பதவி;

(உ) பம்பாய், கல்கத்தா அல்லது சென்னை மாநகரத்தில் மாநகர் மணியம் பதவி;

(ஊ) ஒரு பல்கலைகழகத்தின் ஆட்சிக்குழு, பேரவை, செயற்குழு, மன்றம் அல்லது காட்சியரங்கக்கூடம், அல்லது ஒரு பல்கலைக் கழகத்துடன் தொடர்புடைய வேறு ஏதேனும் குழுமத்தின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி;

(எ) ஏதேனும் சிறப்பு நோக்கத்திற்காக, அரசினால் இந்தியாவுக்கு வெளியே அனுப்பப்படும் பேராளர்குழு அல்லது தூதுக்குழு (Delegation of Mission) உறுப்பினர் பதவி;

(ஏ) பொது முக்கியத்துவம் வாய்ந்த பொருட்பாடு எதைப் பொறுத்த மட்டிலும் அரசுக்கு அல்லது வேறு ஏதேனும் அதிகார அமைப்பு (Authority)க்கு அறிவுரை வழங்கும் நோக்கத்திற்காகவோ அல்லது அத்தகைய பதவி வகிப்பவர் சரியீட்டுப்படித்தொகை அல்லாமல் வேறு பணிவூதியம் (Remuneration) எதற்கும் உரிமைப்பாடு இல்லாதவர் என்றால், அத்தகைய பொருட்பாடு எதைப் பொறுத்தமட்டிலும் விசாரணை செய்கிற, அல்லது புள்ளி விவரங்கள் திரட்டுகிற நோக்கத்திற்காகவோ, தற்காலிகமாக அமைக்கப்பட்ட (ஓர் உறுப்பினர் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்) ஒரு குழுவின் தலைவர் அல்லது உறுப்பினர் பதவி;

(ஐ) (i) இணைப்பு பட்டியலின் பகுதி - 1இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டமுறை அல்லது சட்டமுறைச்சாராக் குழுமத்தின் தலைவர் பதவி, (ii)

இணைப்புப்பட்டியலின் பகுதி - IIஇல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டமுறை அல்லது சட்டமுறைச்சாராக் குழுமத்தின் தலைவர் அல்லது செயலாளர் பதவி, (iii) இணைப்பு பட்டியலின் பகுதி - IIIஇல் குறித்துரைக்கப்பட்ட ட்டமுறைசாராத குழுமத்தின் துணைத்தலைவர் பதவி ஆகிய இவை நீங்கலாக, அத்தகைய பதவி வகிப்பவர் சரியீட்டுப் படித்தொகை அல்லாமல் வேறு பணிவூதியம் எதற்கும் உரிமைப்பாடு கொண்டிராதவர் என்றால், (ஏ) பிரிவுக்கூறில் சுட்டுகை செய்யபட்டவாறு அத்தகைய குழுமம் தவிர வேறு சட்ட முறை அல்லது சட்டமுறைச்சாராத ஏதேனும் குழுமத்தின் தலைவர், இயக்குநர், அல்லது உறுப்பினர் பதவி;

(ஓ) நில வருவாய் திரட்டுதலைக் கடமையாக கொண்டும், தம்மால் திரட்டப்பட்ட நில வருவாயில் ஒரு பகுதியை, அல்லது ஒரு கழிவுத் தொகையைப் பணிவூதியமாக பெற்றுக்கொண்டும், ஆனால் காவல் துறை, அலுவற்பணிகளை ஆற்றாமல் இருக்கிற லம்பார்தார், மால்குவாசார், பட்டேல், தேஷ்முக் அல்லது வேறு எந்தப் பெயராலும் அழைக்கப்படும் கிராம வருவாய் அலுவலர் பதவி.

விளக்கம்:- (1) இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, தலைவர் அல்லது செயலாளர் பதவி, எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும் அந்த விவரிப்பையுடைய பதவி, ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்.

(2) (அ)(அ) பிரிவுக்கூறிலுள்ள "எதிர்கட்சித் தலைவர்" என்னும் சொல்லமைப்பு நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர்கள் வரைவூதியம் மற்றும் படித்தொகைகள் சட்டம் 1977 (33/1997) இல் குறிப்பீடு செய்துள்ள பொருளையே கொண்டிருக்கும்.

4. குறித்த சில நேர்வுகளில் தகுதிக்கேட்டைத் தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்தல்:-

இச்சட்டத்தின் தொடக்கத்தை ஒட்டி முன்பு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்த ஆள் ஒருவர், இச்சட்டத்தால் நீக்கறவு (Repeal, ரத்து) செய்யப்பட்ட சட்டம் எதனாலும், அத்தகைய உறுப்பினராக இருந்து வருவதிலிருந்து அப்பதவி ஏற்றிருப்பரைத் தகுதிக்கேடுறச் செய்யாது என விளம்பப்பட்ட ஓர் ஆதாயப் பதவியை ஏற்றிருந்தார் என்றால், இச்சட்டத்தில் அடங்கிய வகைமுறைகளில் எதொன்றின் காரணமாக அவ்வாறு தகுதிக்கேடுற்றவர் ஆகிறார். அத்தகைய பதவி, இச்சட்டத்தின் தொடக்கத்திலிருந்து ஆறுமாத கால அளவுக்கு அப்பால் நீடிக்கும் ஒரு கால அளவின் போது அத்தகைய ஆளால் ஏற்கபட்டது என்றால், நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதிலிருந்து அவரைத் தகுதிக் கேடுற்றவராக ஆக்காது.

5. **நீக்கறவுகள்** (Repeals):-

**நாடாளுமன்றம்** (**தகுதிக்கேடு தடுப்பு**) **சட்டம்** 1950 (19/1950), **நாடாளுமன்றத் தகுதிக்கேடு தடுப்பு சட்டம்** 1951 (68/1951), **தகுதிக்கேடு தடுப்புச் சட்டம்** 1953 (1/1954) **மற்றும் இச்சட்டத்துடன் ஒவ்வாதிருக்கிற வேறு ஏதேனும் செய்சட்டத்திலுள்ள வகைமுறை, இதன் மூலம் நீக்கறவு செய்யப்படுகின்றன.**

# இணைப்புப் பட்டியல்

(காண்க, பிரிவு - 3(1))

## பகுதி - 1

## மைய அரசின் கீழுள்ள குழுமங்கள்

1953ஆம் ஆண்டு விமானக் கழகங்கள் சட்டத்தின் (27/1953) 30ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஏர் இந்தியா பன்னாட்டுக் கழகம்

1953ஆம் ஆண்டு விமானக் கழகங்கள் சட்டத்தின் (27/1953) 30ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட அமைக்கப்பட்ட விமான போக்குவரத்து கழகம்

ஏற்றுமதி இடரேற்புகள் காப்பீட்டுக் கழக வரையத்தின் இயக்குநர் வாரியம்

மிகு மின்பொருட்கள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

இந்துஸ்தான் கம்பிவடங்கள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

இந்துஸ்தான் பூச்சிக்கொல்லிகள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

இந்துஸ்தான் எந்திரக்கருவிகள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

இந்துஸ்தான் கப்பல்துறை வரையத்தின் இயக்குநர் வாரியம்

இந்துஸ்தான் வேதிப்பொருட்கள் மற்றும் உரங்கள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

தேசிய நிலக்கரி வளர்ச்சிக் கழக (தனியார்) வரையத்தின் இயக்குநர் வாரியம்

தேசிய தொழில் வளர்ச்சிக் கழக வரையத்தின் இயக்குநர் வாரியம்

தேசிய செயற் கருவிகள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

தேசிய சிறு தொழில் கழக வரையத்தின் இயக்குநர் வாரியம்

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத் (தனியார்) வரையத்தின் இயக்குநர் வாரியம்

சிந்திரி உரங்கள் மற்றும் வேதிப்பொருட்கள் வரையத்தின் இயக்குநர் வாரியம்

இந்திய அரசு வாணிகக் கழக வரையத்தின் இயக்குநர் வாரியம்

வேளான் விளைபொருள் (வளர்ச்சி மற்றும் பண்டகசாலை வசரி) கழகங்கள் சட்டம் 1956 (28/1956)இன் 17ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட மைய அரசு பண்டசாலை வசதிக் கழகம்

நிலக்கரி சுரங்கங்கள் (அழியாது காத்தல் மற்றும் காப்புநிலை) சட்டம், 1952 (12/1957)இன் பிரிவு 4இன் கீழ் நிறுவப்பட்ட நிலக்கரி வாரியம்.

நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் நலவாழ்வு நிதியச் சட்டம், 1947 (32/1947)இன் 6ஆம் பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் வீட்டு வசதி வாரியம்

கல்கத்தா துறைமுக ஆணையர்கள்

காந்தி கிராமம் நகரியத்தில் நிலம் ஒதுக்கி கொடுத்தலுக்கான குழு நிறுமங்கள் சட்டம், 1956 (1/1956), பிரிவு 6இன் கீழ் அமைக்கப்பட்ட நிறுமச் சட்ட அறிவுரை ஆணையம்.

நெசவாலைகள் நிதியங்கள் அவசரச் சட்டம், 1944 (அ.ச. 34/1944)இன் கீழ் அமைக்கப்பட்ட பருத்தி நெசவாலைகள் நிதியக்குழு

கப்பல் துறை வேலையாட்கள் (வேலையமைவு ஒழுங்குமுறை) சட்டம் 1948 (9/1948)இன் கீழ் செய்யப்பட்ட, பம்பாய் கப்பல்துறை (வேலையமைவு ஒழுங்குமுறை) திட்டமுறை, 1956இன் கீழ் நிறுவப்பட்ட கப்பல்துறைத் தொழிலாளர் வாரியம், பம்பாய்.

கப்பல் துறை வேலையாட்கள் (வேலையமைவு ஒழுங்குமுறை) சட்டம் 1948 (9/1948)இன் கீழ் செய்யப்பட்ட, கல்கத்தா கப்பல்துறை (வேலையமைவு ஒழுங்குமுறை) திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட கல்கத்தா கப்பல்துறைத் தொழிலாளர் வாரியம்

கப்பல் துறை வேலையாட்கள் (வேலையமைவு ஒழுங்குமுறை) சட்டம் 1948 (9/1948)இன் கீழ் செய்யப்பட்ட, சென்னை கப்பல்துறை (வேலையமைவு ஒழுங்குமுறை) திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சென்னை கப்பல்துறைத் தொழிலாளர் வாரியம்

வருங்கால வாய்ப்பு வள ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1952 (74/1952) பிரிவு 3இன் கீழ் நீறுப்பட்ட வருங்கால வாய்ப்புவளச் சந்தைகள் ஆணையம்.

விமானக் கழகங்கள் சட்டம், 1953 (27/1953) பிரிவு 3இன் கீழ் நிறுவப்பட்ட இந்திய விமானப் போக்குவரத்துக் கழகம்.

தொழில்துறை நிதிக்கழகச் சட்டம், 1948 (15/1948) பிரிவு 3இன் கீழ் நிறுவப்பட்ட இந்தியத் தொழில்துறை நிதிக் கழகம்

தொழில்துறை (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட, தொழில்துறை ஏற்பு நிறுவனங்களின் பதிவு மற்றும் உரிமம் வழங்குதல் விதிகளின் 10ஆம் விதியின் கீழ் அமைக்கப்பட்ட உரிமம் வழங்கும் குழு

சுரங்கங்கள் சட்டம், 1952 (34/1952) பிரிவு 12இன் கீழ் அமைக்கப்பட்ட சுரங்கத் தொழில் வாரியம்.

வேளாண் விளைப்பொருட்கள் (வளர்ச்சி மற்றும் பண்டகசாலை வசதி) கழகங்கள் சட்டம், 1956 (28/1956) பிரிவு 3-இன் கீழ் நிறுவப்பட்ட தேசியக் கூட்டுறவு வளர்ச்சி மற்றும் பண்டகசாலை வாரியம்.

மறுவாழ்வளிப்பு நிதி ஆட்சியச் சட்டம், 1948 (12/1948) பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட மறுவாழ்வளிப்புநிதி ஆட்சியம்

சுங்கக் கட்டணவரி ஆணையச் சட்டம், 1951 (51/1951) பிரிவு 3இன் கீழ் நிறுவப்பட்ட சுங்கக் கட்டணவரி ஆணையம்.

பம்பாய்த் துறைமுகப் பொறுப்புக் கட்டளையர்கள் (Trustees) சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கட்டளையர்கள்

கல்கத்தா, பம்பாய், சென்னை துறைமுகம் தவிர, இந்திய துறைமுகங்கள் சட்டம் 1908 (15/1908) இல் பொருள் வரையறை செய்துள்ளவாறு, ஏதேனும் பெருந்துறைமுகத்தின் பொறுப்புக் கட்டளையர்கள் அல்லது ஆணையாளர்கள்.

## மாநில அரசுகளின் கீழுள்ள குழுமங்கள

### ஆந்திரப் பிரதேசம்

ஐதராபாத் வேளாண் மேம்பாட்டுச் சட்டம், 1952, பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட வேளாண் மேம்பாடு நிதிக்குழு.

கூட்டுறவு வேளாண்மை மற்றும் சந்தைப்படுத்துதல் குழு

கால்நடை கொள்முதல் குழு

### அசாம்

அசாம் ஆதியார்கள் பாதுகாப்பளிப்பு மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம், 1948, உ.அ. பிரிவின் கீழ் அமைக்கப்பட்ட ஆதி இசைவிணக்க வாரியங்கள்

அசாம் நாடகன்றோர் சொத்துச் சட்டம், 1951, பிரிவு 12இன் கீழ் அமைக்கப்பட்ட அசாம் நாடகன்றோர் சொத்து மேலாண்மைக் குழு

அசாம் பாடப்புத்தகக் குழு.

### பீகார்

நிலக்கரி சுரங்கங்களுக்கான சுரங்கத் தொழில் வாரியம், பாடப்புத்தம் மற்றும் கல்வி இயக்கக் குழு

### மும்பை

ஊழியர்கள் அரசு காப்பீட்டுத் திட்டமுறையின் கீழ் ஒதுக்கி கொடுப்புக் குழு (ஆங்கில மருத்துவம்)

ஊழியர்கள் அரசு காப்பீட்டுத் திட்டமுறையின் கீழ் ஒதுக்கி கொடுப்புக் குழு (ஆயுர்வேதம்)

ஷோலாப்பூர் நரசிங்கிரிஜி ஆலையின் அலுவல்தொழில்கள் மற்றும் அலுவல்களின் ஒட்டுமொத்த மேற்பார்வை நடத்துவதற்கான வாரியம்

பம்பாய் வீட்டு வசதி வாரியச் சட்டம் 1948, பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட பம்பாய் மாநில மின் வாரியம்

மின்சாரம் (வழங்குகை) சட்டம் 1948 (54/1948) பிரிவு 5இன் கீழ் அமைக்கப்பபட்ட பம்பாய் மாநில மின் வாரியம்

மின்சாரம் (வழங்குகை) சட்டம் 1948 (54/1948) பிரிவு 16இன் கீழ் அமைக்கப்பபட்ட பம்பாய் மாநில மின் வாரியம்

ஊழியர்கள் அரசு காப்பீட்டுத் திட்டமறையின் கீழ் மருத்துவப் பணிச்சேவைக் குழு

ஊழியர்கள் அரசு காப்பீட்டுத் திட்டமுறையின் கீழ் மருந்தாக்கக் குழு

இயக்கூர்திகள் (Motor Vehicles) சட்டம், 1939, (4/1939) பிரிவு 44இன் கீழ் அமைக்கப்பட்ட அகமதாபாத், அவுரங்காபாத், பம்பாய், நாகபுரி, பூனா, இராஜ்கோட், தானா ஆகியவற்றுக்காக அமைக்கப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகார அமைப்பு

சௌராஷ்டிரா வீட்டு வசதி வாரியச் சட்டம், 1954, பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பபட்ட சௌராஷ்டிரா வீட்டு வசதி வாரியம்

இயக்கூர்திகள் சட்டம், 1939 (4/1939) பிரிவு 44இன் கீழ் அமைக்கப்பட்ட மாநில போக்குவரத்து அதிகார அமைப்பு

மத்திய பிரதேச வீட்டு வசதி சட்டம், 1950, பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட விதர்பா வீட்டு வசதி வாரியம்.

கேரளம்

திருவாங்கூர்-கொச்சி கொதிகலன்கள் உதவியாட்கள் விதிகள், 1954, பிரிவு 8இன் கீழ்ப் பணியமர்த்தப்பட்ட தேர்வாளர் வாரியம்

திருவாங்கூர்-கொச்சி கொதிகலன்கள் உதவியாட்கள் விதிகள், 1954, பிரிவு 8இன் கீழ்ப் பணியமர்த்தப்பட்ட மதிப்பீட்டாளர் பெயர்பட்டியல் குழு.

திருவாங்கூர்-கொச்சி சிக்கன அமைவு விதிகள், 1956இன் கீழ் அமைக்கப்பட்ட மதிப்பீட்டாளர் பெயர்பட்டியல் குழு

கல்வி வரிவாக்கத் துறைக்குப் புத்தகங்களைத் தெரிந்தெடுப்பதற்கான துணைக் குழு

உத்தர பிரதேசம்

உ.பி. சர்க்கரை மற்றும் மதுச்சத்துத் தொழிற்சாலைகள் தொழிலாளர் நல்வாழ்வு மற்றும் நிதியச் சட்டம் 1950, பிரிவு 10இன் கீழ் அமைக்கப்பட்ட உ.பி. சர்க்கரை மற்றும் மதுச்சத்து மற்றும் தொழிலாளர் வீட்டு வசதி வாரியம்

### மேற்கு வங்காளம்

இந்திய மின்சார விதிகள், 1956, 45ஆம் விதியின் கீழ் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி அமைக்கப்பட்ட உரிமை வழங்கும் வாரியம்.

மேற்கு வங்காள வளர்ச்சிக்கழகம், சட்டம், 1954இன் கீழ் அமைக்கப்பட்ட மேற்கு வங்காள வீட்டு வசதி வாரியம்

## ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள குழுக்கள்

தில்லி வளர்ச்சிச் சட்டம், 1957, (61/1957) பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட தில்லி வளர்ச்சி அதிகார அமைப்பு

தில்லிக்குப் பொருந்திவாறு பம்பாய் மின்சாரம் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டம், 1946, பிரிவு 5இன் கீ அமைக்கப்பட்ட மின்சார அதிகாரக் கட்டுப்பாட்டு வாரியம்

மின்சாரம் (வழங்குகைச் சட்டம்) 1948, (54/1948) பிரிவு 16இன் கீழ் அமைக்கப்பட்ட தில்லி மாநில மின்சார மன்றம்.

### பகுதி - II

## மைய அரசின் கீழுள்ள குழுமங்கள்

விமானக் கழகங்கள் சட்டம், 1953, (27/1953) 41ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட ஏர் இந்தியா பன்னாட்டுக் கழகத்திற்கான அறிவுரைக் குழு

விமானக் கழகங்கள் சட்டம, 1953, (27/1953) 41ஆம் பிரிவின் கீழ் பணியமர்த்தப்பட்ட விமான போக்குவரத்து கழகத்திற்கான அறிவுரைக் குழு.

மைய அரசு பட்டுவாரியச் சட்டம், 1948, (61/1948) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட மைய அரசு பட்டு வாரியம்.

கா஁பி சட்டம், 1942 (7/1942) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட கா஁பி வாரியம்

கயிற்றுத் தொழில் சட்டம், 1953 (45/1953) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட கயிறு வாரியம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட அமிலங்கள் மற்றும் உரங்கள் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட வேதிக்காரங்கள் மற்றும் இணைவுடைய தொழில்கள் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட மிதிவண்டி வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட மருந்துப் பொருட்கள், வண்ணச்சாயங்கள் இடைவருபொருட்கள் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட உணவுப் பதனத் தொழில் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட மிகுமின் பொறியியல் தொழில்கள் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட உள் எரிவெப்ப எந்திரங்கள் மற்றும் மின்னாற்றல் ஓட்டக்குழாய் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட இலகுரக மின்பொறியியல் தொழில்கள் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட எந்திரக் கருவிகள் வளர்ச்சி மன்றம்.

தொழில் துறைகள் (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951, (65/1951), பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட கலப்பு உலோகங்கள் உள்ளடங்கிய இரும்பு சாரா உலோகங்கள் வளர்ச்சி மன்றம்.

மத்தியப் பிரதேசம்

மத்தியப் பிரதேச வீட்டு வசதி வாரியச் சட்டம், 1950, பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட மத்தியப் பிரதேச வீட்டு வசதி வாரியம்.

மகாகொசல் வீட்டு வசதி வாரியம்.

## தமிழ்நாடு

எஸ்.எஸ்.எல்.சி தேர்வுப் படிப்புக்கான புத்தகங்கள் தெரிந்தெடுப்புக் குழு

சிறு துறைமுகங்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டணக் குழு.

ஊழியர்கள் அரசுக் காப்பீட்டு (பொது) ஒழுங்குமுறை விதி 1950, பிரிவு 10-அ ஒழுங்கு முறையின் கீழ் அமைக்கப்பட்ட உள்ளூர்க் குழு

சென்னைப் போக்குவரத்து வாரியம்.

மின்சாரம் வழங்குகைச் சட்டம், 1948 (54/1948), பிரிவு 5இன் ீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு மின் வாரியம்.

மின்சாரம் வழங்குகைச் சட்டம், 1948 (54/1948), பிரிவு 5இன் ீழ் அமைக்கப்பட்ட சென்னை மாநில மின்துறை ஆலோசனை மன்றம்.

துறைமுகப் பாதுகாப்பு வாரியங்கள்.

சிறுதுறைமுகங்களின் துறைமுகப் பொறுப்புக்கட்டளை வாரியங்கள்

மாநில செய்தித் தொடர்பு வாரியம்.

பாடநூற் குழு.

## கர்நாடகா

பத்ராவதியிலுள்ள மைசூர் இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலையின் மேலாண்மை வாரியம்

தொழில் நிறுவனங்களின் மேலாண்மை வாரியம்

## ஒரிசா

இடைநிலைக் கல்வி வாரியத்தின் கீழ் மேல் முறையீட்டுக் குழு

ஒரிசா செய்தித் தொடர்பு மற்றும் போக்குவரத்து வாரியம்.

இயக்கூர்திகள் சட்டம், 1939, (4/1939) பிரிவு 44இன் கீழ் அமைக்கப்பட்ட வட்டாரப் போக்குவரத்து அதிகார அமைப்பு

இயக்கூர்திகள் சட்டம், 1939, (4/1939) பிரிவு 44இன் கீழ் அமைக்கப்பட்ட மாநிலப் போக்குவரத்து அதிகார அமைப்பு

### பஞ்சாப்

பஞ்சாப் மாநில தேசிய வேலையாட்கள் (குறைதீருதவி) மற்றும் மறுவாழ்வளிப்பு வாரியம்.

### இராஜஸ்தான்

கோட்டா நகர மேம்பாட்டுச் சட்டம், 1946இன் கீழ் அமைக்கப்பட்ட கோட்டா நகர மேம்பாட்டுப் பொறுப்புக்கட்டளை

ஆயத்துறை மேல்முறையீட்“டு வாரியம், ஆஜ்மீர்

மின்சாரம் (வழங்குகை) சட்டம், 1948 (54/1948), பிரிவு 5இன் கீழ் அமைக்கப்பட்ட இராஜஸ்தான் மாநில மின் வாரியம்.

நகர்ப்புற மேம்பாட்டு வாரியம், ஜெய்ப்பூர்

### உத்தரப் பிரதேசம்

அரசு சிமெண்ட் தொழிற்சாலை வாரியம்.

ஊழியர்கள் அரசு காப்பீட்டுச் சட்டம், 1948 (34/1948) பிரிவு 25இன் கீழ் பணியமர்த்தப்படட ஆக்ரா, கான்பூர், லக்னோ, மற்றும் சகாரன்பூருக்கான உள்ளூர்க் குழு.

தொழில்துறை (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951 (65/1951) பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட எண்ணெய் ஆதாரம் மற்றும் பிளாஸ்டிக் தொழிற்சாலை வளர்ச்சி மன்றம்.

தொழில்துறை (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951 (65/1951) பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட சர்க்கரை தொழில் வளர்ச்சி மன்றம்.

தொழில்துறை (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951 (65/1951) பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட செயற்கைப் பட்டு இழை உள்ளடங்கிய செயற்கைப்பட்டு நெசவுத் தொழில் வளர்ச்சி மன்றம்.

தொழில்துறை (வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1951 (65/1951) பிரிவு 6இன் கீழ் நிறுவப்பட்ட கம்பளி இழை, பின்னல் ஆடை, சமக்காளங்கள், முரட்டுத் துணைகள் ஆகியவை உள்ளடங்கிய கம்பளி நெசவுத் தொழில் வளர்ச்சி மன்றம்.
தர்கா குவாஜா சாகிப் சட்டம், 1955 (36/1955) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட ஆஜ்மீர் - தர்காக் குழு

இந்திய மைய அரசு அடைக்காய்க் குழு

இந்திய தேங்காய்க் குழுச் சட்டம், 1944 (10/1944) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட இந்திய மைய அரசு தேங்காய்க் குழு

இந்தியப் பருத்தி மேல்வரிச் சட்டம், 1923 (14/1923) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட இந்திய மைய அரசு பருத்திக் குழு

இந்திய மைய அரசு சணல் குழு

இந்திய எண்ணெய் வித்துக்கள் குழுச் சட்டம், 1946 (9/1946) பிரிவு 4-இன் கீழ் நிறுவப்பட்ட இந்திய மைய அரசு எண்ணெய் வித்துக்கள் குழு.

இந்திய மைய அரசு சர்க்கரைக் குழு.

இந்திய மைய அரசு புகையிலைக் குழு.

இந்திய அரசுக்கு மேல்வரிச் சட்டம், 1930 (24/1930) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட இந்திய அரசுக்கு மேல்வரிக் குழு ரப்பர் சட்டம், 1947 (24/1947) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட ரப்பர் வாரியம்

தேயிலைச் சட்டம், 1953 (29/1953) பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட தேயிலை வாரியம்.

## மாநில அரசுகளின் கீழுள்ள குழுமங்கள்

### ஆந்திரப் பிரதேசம்

ஐதராபாத் வேளாண்மை சந்தைச் சட்டம் எண் 11/1939, பிரிவு 4இன் கீழ் அமைக்கப்பட்ட சந்தைக் குழு

சென்னை வர்த்தகப் பயிர்கள் சந்தைகள் சட்டம், 1933 பிரிவு 4-அ-இன் கீழ் அமைக்கப்பட்ட சென்னைக் குழு.

### பீகார்

பீகார் மாநிலச் சமயப் பொறுப்புக்கட்டளை வாரியம்.

பீகார் சகை மஜ்லிஸ் அவ்குவா:ப்.

புத்த கயா ஆலயச் சட்டம், 1949, பிரிவு 5இன் கீழ் அமைக்கப்பட்ட புத்த கயா ஆலய அறிவுரைக் குழு.

கேரளம்

கயிறு கொள்முதல் திட்டமுறை ஆட்சியக் குழு

சென்னை வர்த்தகப் பயிர்கள் சந்தைகள் சட்டம், 1933 பிரிவு 4அ இன் கீழ் அமைக்கப்பட்ட மலபார் சந்தைக் குழு

மரவள்ளிக் கிழங்கு சந்தை விரிவாக்க வாரியம்.

தமிழ்நாடு

சென்னை இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1951, பிரிவு 12இன் கீழ் அமைக்கப்பட்ட இந்து சமய அறநிலைக் கொடைப்பரப்பிடக் குழு.

வ:க்புச் சட்டம் 1954 (29/1954) பிரிவு 9இன் கீழ் அமைக்கப்பட்ட சென்னை வ:க்பு வாரியம்.

பஞ்சாப்

பாட்டியாலா வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டம் 2004, பிரிவு 3இன் கீழ் அமைக்கப்பட்ட மாநிலச் சந்தைவாய்ப்பு வாரியம்.

## பகுதி - III

## மைய அரசின் கீழுள்ள குழுமம்

திட்ட ஆணையம்.

## பின்னிணைப்பு 2.5

### 1951-ஆம் ஆண்டு மக்கள் சார்பாண்மைச் சட்டத்திலிருந்து எடு குறிப்புகள்

4. மக்களவை உறுப்பினர் நிலைக்கான தகுதிகள் :- ஓர் ஆள் -

(அ) மாநிலம் எதிலும் பட்டியல் சாதியினருக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில், அந்த மாநிலத்திலேனும், வேறு எந்த மாநிலத்திலேனும் உள்ள பட்டியல் சாதிகளின் உறுப்பினராக அவர் இருக்கிறார். மற்றும் நாடாளுமன்றத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி.

(ஆ) அசாம் தன்னாட்சியுரிமை மாவட்டங்களில் உள்ளவை அல்லாமல் வேறு மாநிலம் எதிலும் உள்ள பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில், அந்த மாநிலத்திலேனும் அல்லது (அசாம் பழங்குடியினர் பரப்பிடம் நீங்கலாக) வேறு எந்த மாநிலத்திலேனும் உள்ள பட்டியல் பழங்குடிகளில் ஏதொன்றின் உறுப்பினராக அவர் இருக்கின்றார். மற்றும் நாடாளுமன்றத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி.

(இ) அசாம் தன்னாட்சியுரிமை மாவட்டங்களில் பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில், அவர் அந்த பழங்குடிகளில் ஏதொன்றின் உறுப்பினராக அவர் இருக்கின்றார். மற்றும் நாடாளுமன்றத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி.

(இஇ) இலட்சத் தீவுகள் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில் அந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் அந்த பழங்குடிகளில், ஏதொன்றின் உறுப்பினராக அவர் இருக்கின்றார். மற்றும் நாடாளுமன்றத் தொகுதிக்கான ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி.

(இஇஇ) சிக்கிம் மாநிலத்திற்கு ஒதுக்கிக் கொடுத்த ஓர் இடம் ஆகும் நேர்வில் சிக்கிம் நாடாளுமன்றத் தொகுதிக்கான ஒரு வாக்காளராக அவர் இருக்கிறார் என்றாலன்றி

(ஈ) வேறு ஏதேனும் ஆகும் நேர்வில் நாடாளுமன்றத் தொகுதி எதிலும் அவர் ஒரு வாக்காளராக இருக்கின்றார் என்றாலன்றி

மக்களவையில் ஓர் இடத்தை நிரப்பத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியுடையவர் ஆவார்.

5. சட்டப் பேரவை உறுப்பினர் நிலைக்கான தகுதிகள் :- ஓர் ஆள்,

(அ) அந்த மாநிலத்தில் பட்டியல் சாதியினருக்காக அல்லது பட்டியல் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில், அந்த மாநிலத்திலுள்ள பட்டியல் சாதிகள் அல்லது நேர்வுக்கேற்ப பட்டியல் பழங்குடிகளில் ஏதொன்றின் உறுப்பினராக அவர் இருக்கிறார் மற்றும் சட்டப்பேரவை தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி

(ஆ) அசாமின் ஒரு தன்னாட்சியுரிமை மாவட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில் அவர் தன்னாட்சியுரிமை மாவட்டம் எதிலுமுள்ள பட்டியல் பழங்குடியின் ஓர் உறுப்பினராக இருக்கிறார் மற்றும் அந்த மாவட்டத்திற்காக அத்தகைய இடம் அல்லது வேறு ஏதேனும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிற பேரவைத் தொகுதி ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி மற்றும்

(இ) வேறு ஏதேனும் இடம் ஆகும் நேர்வில், அந்த மாநிலத்திலுள்ள சட்டப் பேரவைத் தொகுதி எதிலும் அவர் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி

ஒரு மாநில சட்டப் பேரவையில் ஓர் இடத்தை நிரப்பத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியுடையவர் ஆகார்.

ஆனால், 171-ஆம் உறுப்பின் (2) ஆம் பிரிவுக்கூறில் சுட்டுகை செய்யப்பட்டுள்ள கால அளவுக்கு, ஓர் ஆள் அந்த உறுப்பில் சுட்டுகை செய்யப்பட்ட வட்டார மன்றத்தில் ஓர் உறுப்பினராக இருக்கின்றால என்றாலன்றி நாகாலந்து சட்டப் பேரவையில் டுயென்சாங் மாவட்டததிற்கு ஒதுக்கிக் கொடுத்த இடம் எதையும் நிரப்பத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியுடையவர் ஆகார்.

5.அ. சிக்கிம் சட்டப் பேரவை உறுப்பினர் நிலைக்கான தகுதிகள் :-

(1) 5ஆம் உறுப்பில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், ஓர் ஆள் -

(அ) பூடியா - லெப்காச் சிக்கியமியர்களுக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில், அவர் பூடியா அல்லது லெபதா குடிப்பிறப்புடையவராக இருக்கிறார், மற்றும் சங்காக்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகுதி அல்லாத மாநிலச் சட்டப்பேரவையின் வேறு தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி,

(ஆ) நேபாளிக் குடிபிறப்புள்ள சிக்கியமியர்களுக்காக ஒதுக்கீடு செய்த ஓர் இடம் ஆகும் நேர்வில், அவர் நேபாளிக் குடியிறப்படையவாக இருக்கிறார் மற்றும் அந்த மாநிலத்திலுள்ள பேரவைத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறர் என்றாலன்றி,

(இ) பட்டியல் சாதியினருக்காக ஒதுக்கீடு செய்த ஓர் இடம் ஆகும் நேர்வில், சிக்கிம் குடிமக்கள் சார்பாண்மைச் சட்டம் 1974இல் குறித்துரைக்கப்பட்ட சாதிகளில் ஏதோன்றிலும் அவர் உறுப்பினராக இருக்கிறார் மற்றும் அந்த மாநிலத்திலுள்ள சட்டப் பேரவைத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி, மற்றும்,

(ஈ) சங்காக்களுக்காக ஒதுக்கீடு செய்த ஓர் இடம் ஆகும் நேர்வில், சங்காத் தொகுதியில் ஒரு வாக்காளராக அவர் இருக்கிறார் என்றாலன்றி,

அரசமைப்பின் கீழ் உரியவாறு அமைக்கப்பட்ட அந்த மாநிலத்தின் சட்டப் பேரவைக்காக க் கொள்ளப்படுகிற, சிக்கிம் சட்டப்பேரவையில் ஓர் இடத்தை நிரப்பத் தெரிவு செய்யப்படுவதற்காக தகுதியுடையவர் ஆகார்.

(2) 5ஆம் உறுப்பில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், ஓர் ஆள் -

(அ) பூடியா - லெப்காச் சிக்கியமியர்களுக்காக ஒதுக்கீடு செய்த இடம் ஆகும் நேர்வில், அவர் பூடியா அல்லது லெபதா குடிப்பிறப்புடையவராக இருக்கிறார், மற்றும் சங்காக்களுக்காக ஒதுக்கீடு செய்த தொகுதி அல்லாத மாநிலச் சட்டப்பேரவையின் வேறு தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி,

(ஆ) பட்டியல் சாதியினருக்காக ஒதுக்கீடு செய்த ஓர் இடம் ஆகும் நேர்வில், சிக்கிம் மாநிலத்திலுள்ள அந்தச் சாதிகளில் ஏதோன்றிலும் அவர் உறுப்பினராக இருக்கிறார் மற்றும் அந்த மாநிலத்திலுள்ள சட்டப் பேரவைத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி, மற்றும்,

(இ) சங்காக்களுக்காக ஒதுக்கீடு செய்த ஓர் இடம் ஆகும் நேர்வில், சங்காத் தொகுதியில் ஒரு வாக்காளராக அவர் இருக்கிறார் என்றாலன்றி,

(ஈ) வேறு ஏதேனும் இடம் ஆகும் நேர்வில், அவர் மாநிலத்திலுள்ள சட்டப்பேரவைத் தொகுதி எதிலும் ஒரு வாக்காளராக இருக்கிறார் என்றாலன்றி,

மக்கள் சார்பாண்மை (திருத்துகை) சட்டம் 1980 (8/1980) இன தொடக்கத்திற்கு பின்பு, எந்த நேரத்திலும் அமைக்கப்பட வேண்டிய சிக்கிம் மாநிலச் சட்டப் பேரவையில் ஓர் இடத்தை நிரப்பத் தெரிவு செய்யப்படுவதற்கான தகுதியுடையவர் ஆகார்.

விளக்கம்:- இந்த உட்பிரிவில் “பூடியா” என்பது கம்பியா, டோப்தபா, டூக்பா, காசுதே, செர்பா, திபெத்தன், ட்ரோமோபா, யோவ்மோ ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

8. குறித்த சில குற்றச் செயல்களுக்காகக் குற்றத்தீர்ப் பனிப்பின் மேல் தகுதிக்கேடு

(அ) இந்தியத தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 153 (சமயம், இனம், பிறப்பிடம், உறைவிடம், மொழி முதலியவை காரணமாக வெவ்வேறு குழுக்களுக்கிடையே பகைமையை வளர்க்கும் குற்றச்செயல், மற்றும் ஒத்திசைவுவைப் பேணிவருவதற்கு ஊறு செய்யும் செயல்களைச் செய்தல், பிரிவு 171-உ (கைக்கூலி கொடுக்கும் குற்றச்செயல்) அல்லது பிரிவு 171-ஊ (ஒரு தேர்தலில் ஆள்மாறாட்டத்தின் மேல் தகாத செல்வாக்கு செலுத்தும் குற்றசெயல்) அல்லது 376ஆம் பிரிவின் உட்பிரிவு (1), அல்லது உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு 375-அ அல்லது பிரிவு 375-ஆ அல்லது பிரிவு 376-இ அல்லது 376-ஈ (வன்புணர்ச்சி தொடர்பான குற்றச் செயல்கள்) அல்லது பிரிவு 498-அ, கணவனால் அல்லது கணவரின் உறவினர்களால் ஒரு பெண் வகையில் குற்றச்செயல் அல்லது கொடுமை செய்தல் அல்லது பிரிவு 505-இன் உட்பிரிவு (2) அல்லது உட்பிரிவு (3) (வகுப்பினர்களுக்கிடையே பகைமை, வெறுப்பு அல்லது தீய எண்ணத்தைத் தோற்றுவிக்கிற அல்லது வளர்க்கிற உரைகளைச் செய்யும் குற்றச்செயல் அல்லது வழிபாட்டு இடம் எதிலும் அல்லது சமய வழிபாடோ அல்லது சமயச் சடங்குகளோ செய்வதில் ஈடுபட்டுள்ள கூட்டம் எதிலும் அத்தகைய உரைக்குத் தொடர்பான குற்றச் செயல்) அல்லது

(ஆ) குடியியல் உரிமைகள் பாதுகாப்பளிப்புச் சட்டம், 1955 (27/1955) “தீண்டாமை”யைப் பரப்புவதற்கும் பயிலுவதற்கும் மற்றும் அதிலிருந்து எழும் இயலாமை எதையும் நடைமுறைப்படுத்துவதற்கும் தண்டனை விதிக்க இச்சட்டம் வகை செய்கிறது, அல்லது

(இ) மரபு வழக்கங்கள் சட்டம், 1962 (52/1962) பிரிவு-2 (தடை செய்யப்பட்ட சரக்குகளை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்தல் பற்றிய குற்ற செயல்), அல்லது

(ஈ) சட்ட முரணான செய்கைப்பாடுகள் (தடுப்பு) சட்டம், 1967 (37/1967), பிரிவு 10 முதல் 12 (சட்ட முரணானது என விளம்பப்பட்ட ஒரு சங்கத்தின் உறுப்பினராக இருக்கும் குற்றச் செயல், சட்டமுரணான சங்கத்தின் நிதியங்களைக் கையாளுதல் தொடர்பான குற்றச் செயல் அல்லது அறிவிக்கை செய்த ஓர் இடத்தைப் பொறுத்து இடப்பட்ட ஓர் ஆணையை மீறுதல் தொடர்பான குற்றச் செயல்), அல்லது

(உ) அயல்நாட்டு நாணயமாற்று ஒழுங்குமுறைச் சட்டம் 1973 (46/1973) அல்லது

(ஊ) மயக்க மருந்துப்பொருள்கள் மற்றும் உளவியல் மருத்துவ உணவூட்டப் பொருள்கள் சட்டம் 1985 (51/1985)

(எ) தீவிரவாத மற்றும் பிளவுபடுத்துகிற செயற்கைப்பாடுகள் (தடுப்பு) சட்டம் 1986 (28/1987), பிரிவு 3 (தீவிரவாதச் செயல்களைச் செய்யும் குற்றச் செயல்) அல்லது பிரிவு 4 (பிளவுபடுத்துகிற செய்கைப் பாடுகளை செய்யும் குற்றச் செயல்) அல்லது

(ஏ) சமய நிறுவனங்கள் (தவறான பயன்பாடு தடுப்பு) சட்டம் 1988 (41/1988), பிரிவு 7 (3 முதல் 6 வரையான பிரிவுகளின் வகைமுறைகளை மீறும் குற்றச் செயல்) அல்லது

(ஐ) இச்சட்டத்தின் பிரிவு 125 (தேர்தல் தொடர்பாக வகுப்பினர்களுக்கு இடையே பகைமையை வளர்க்கும் குற்றச் செயல் அல்லது பிரிவு 135 (வாக்குச் சாவடியை கைப்பற்றும் குற்றச் செயல்) அல்லது பிரிவு 136, உட்பிரிவு (உ) பிரிவுக்கூறு (அ) - வேட்புமனு எதையும் மோசடியாக உருக்குலைக்கிற அல்லது மோசடியாக அழிக்கும் குற்றச் செயல்) அல்லது

(ஒ) வழிபாட்டு இடங்கள் (சிறப்பு வகைமுறைகள்) சட்டம் 1991, பிரிவு 6 (வழிபாட்டு இடம் ஒன்றை மாற்றியமைக்கும் குற்றச் செயல்) அல்லது

(ஓ) நாட்டு மதிப்பின் அவமதிப்புத் தடுப்புச் சட்டம் 1971 பிரிவு 2 (இந்திய கொடி, அல்லது இந்திய அரசமைப்பை அவமதிக்கும் குற்றச் செயல்) அல்லது பிரிவு 3 (நாட்டு வாழ்த்துப்பாடுவதைத் தடுக்கும் குற்றச் செயல்)

ஆகியவற்றின் கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச் செயலுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒருவர், அத்தகைய குற்றத்தீர்ப்புத் தேதியிலிருந்து ஆறு ஆண்டுக் கால அளவுக்குத் தகுதிக் கேடுற்றவர் ஆதல் வேண்டும்.

(2) ஓர் ஆள், -

(அ) கொள்ளை ஆதாயக் குவிப்பு தடுப்புச் சட்டம் எதையும்,

(ஆ) உணவு அல்லது மருந்துப்பொருள் கலப்படம் தொடர்பான சட்டம் எதையும்.

(இ) 1961ஆம் ஆண்டு சீதனத் தடைச்சட்டத்தின் (28/1961) வகைமுறைகள் எவற்றையும் அல்லது

(FF) 1967ஆம் ஆண்டு உடன்கட்டையேறுதல் (தடுப்புச்சட்டத்தின் (3/1988) வகைமுறைகள் எவற்றையும்

மீறியதற்காக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டார் மற்றும் ஆறு மாதங்களுக்குக் குறையாமல் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்பட்டார் என்றால், அவர் அத்தகைய குற்றத் தீர்ப்புத் தேதியிலிருந்து தகுதிகேடுற்றவர் ஆதல் வேண்டும் மற்றும் அவர் விடுவிக்கப்பட்டதிலிருந்து மேற்கொண்டும் ஓர் ஆறு ஆண்டுக் கால அளவுக்குத் தகுதிகேடுற்றவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) [உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) இல் சுட்டுகை செய்யப்பட்ட குற்றச் செயல் அல்லத வேறு] குற்றச் செயல் எதற்காகவும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட ஆள் ஒருவர், அத்தகைய குற்றத் தீர்ப்புத் தேதியிலிருந்து தகுதிக் கேடுற்றவர் ஆதல் வேண்டும் மற்றும் அவர் விடுவிக்கப்பட்ட பின்பு மேற்கொண்டும் ஓர் ஆறு ஆண்டுக் கால அளவுக்குத் தகுதிக்கேடுற்றவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(4) (உட்பிரிவு (1) உட்பிரிவு - 2 அல்லது உட்பிரிவு (3)இல் எது எவ்வாறிருப்பினும், உட்பிரிவு எதன் கீழும் வரும் ஒரு தகுதிக்கேடு, குற்றத்தீர்ப்புத் தேதியன்று நாடாளுமன்றத்தின் அல்லது ஒரு மாநிலச் சட்டப் பேரவையின்ட ஓர் உறுப்பினராக ஓர் ஆள் இருக்கிறார் என்னும் நேர்வில், அந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிகின்ற வரையில், அல்லது குற்றத்தீர்ப்பு அல்லது தீர்ப்புத் தண்டணை பொறுத்த மட்டில் அந்தக் கால அளவுக்குள் ஒரு மேல்முறையீடு அல்லது சீராய்வுக்கான ஒரு விண்ணப்பம் கொணரப்படுகிறது என்றால், அந்த மேல்முறையீடு அல்லது விண்ணப்பம் நீதிமன்றத்தால் தீர்வுமுறை செய்யப்படுகிற வரையில், செயல்விளைவு கொள்ளுதல் ஆகாது.

விளக்கம் - இந்தப் பிரிவில்

(அ) கொள்ளை ஆதாயம் குவிப்பைத் தடுப்பதற்கு வகை செய்யும் சட்டம் என்பது,

- (i) இன்றியமையாத வாணிகப்பண்டம் எதனுடைய உற்பத்தி அல்லது ஆக்குவிப்பு பற்றிய ஒழுங்குமுறை விதி
- (ii) இன்றியமையாத வாணிகப்பண்டம் எதுவும் வாங்க அல்லது விற்கப்படலாகும் விலைக் கட்டுப்பாடு,
- (iii) ஏதேனும் இன்றியமையாத வாணிகப்பண்டத்தின் கையகுப் படுத்துகை, உடைமை கொள்ளுதல், சேமித்து வைத்தல், ஏற்றிக் கொண்டு செல்லுதல், வழங்கீடு செய்தல், தீர்வுமுறைகள், பயன்படுத்துதல் அல்லது பயனீடுகொள்ளல் பற்றிய ஒழுங்குமுறை விதி,
- (iv) வழக்கமாக விற்பனைக்கு வைக்கப்படும் இன்றியமையாத வாணிகப் பண்டத்தின் விற்பனைத் தடுப்பு நிறுத்துவதற்கு தடை

ஆகியவற்றுக்கு வகை செய்யும் சட்டம் எதுவும் அல்லது ஆணை விதி, அல்லது சட்ட ஆற்றலைக் கொண்டிருக்கும் அறிவிக்கை எதுவும் என்று பொருள்படும்.

(ஆ) ”மருந்துப்பொருள்” என்பது மருந்துப்பொருள் மற்றும் அழகு ஒப்பனைப் பொருள்கள் சட்டம், 1940 (23/1940) இல்,ஈ அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளையே கொண்டிருக்கும்.

(இ) ”இன்றியமையாத வாணிகப்பண்டம்” என்பது இன்றியமையாத வாணிகப் பண்டங்கள் சட்டம், 1955 (10/1955)இல், அதற்கு குறித்தளிக்கப்பட்ட பொருளையே கொண்டிருக்கும்.

(ஈ) ”உணவு” என்பது உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம், 1954 (37/1954) இல், அதற்கு குறித்தளிக்கப்பட்ட பொருளையே கொண்டிருக்கும்.

8அ. ஊழல் பழக்க முறைகள் காரணமான தகுதிக்கேடு -

(1) பிரிவு 99இன் கீழ் ஓர் ஆணை மூலம் ஓர் ஊழல்பழக்க முறைக் குற்றவாளியாகக் கண்டறியப்பட்ட ஆள் ஒவ்வொருவரின் வழக்கும், அத்தகைய ஆணை செயல்விளைவு கொண்ட பின்பு, மைய அரசு இதன் பொருட்டுக் குறித்துரைக்கலாகும் அதிகார அமைப்பினால், அந்த ஆள் தகுதிக் கேடுற்றவராக ஆக்கப்பட வேண்டுமா, அப்படி என்றால், எநத்க்கால அளவுக்கு என்பது குறித்துத் தீர்மானிப்பதற்காகக் குடியரசுத் தலைவருக்கு இயன்ற அளவு விரைவில் பணிந்தனுப்பப்பட வேண்டும்.

ஆனால், இந்த உட்பிரிவின் கீழ் ஆள் எவரும் தகுதிக்கேடுற்றவராக ஆக்கப்படும் கால அளவு எந்த நேர்விலும் அவர் தொடர்பாக இடப்பட்ட ஆணை 99ஆம் பிரிவின் கீழ் செயல் விளைவுகொள்கிற தேதியிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு மேற்படுதல் ஆகாது.

(2) 1975ஆம் ஆண்டு தேர்தல் சட்டங்கள் (திருத்துகை சட்டத்தின் (40/1975) தொடக்கநிலையை அடுத்து முன்பு அது நிலைநின்றவாறு, இச்சட்டத்தின் 8-அ பிரிவின் கீழ் தகுதிக்கேடுள்ளவராயுள்ள ஆள் எவரும், அத்தகைய தகுதிக்கேட்டுக் கால அளவு கழிவுறவில்லை என்றால், மேற்கூறிய கால அளவின் கழிவுறாத பகுதிக்கான அத்தகைய தகுதிக்கேட்டை அகற்ற வேண்டி குடியரசுத் தலைவருக்கு ஒரு மனுவை பணிந்தனுப்பலாம்.

(3) உட்பிரிவு (1) இல் சொல்லப்பட்ட வினா எதன்மதும், அல்லது உட்பிரிவு (2)இன் கீழ் பணிந்தனுப்பப்பட்ட மனு எதன் மீதும் தமது முடிவை அளிக்கும் முன்பு குடியரசுத் தலைவர் அத்தகைய வினா அல்லது மனு மீது தேர்தல் ஆணையத்தின் கருத்துரையைப் பெறுதலும், அத்தகைய கருத்துரைக்கு இணங்கச் செயலாற்றுதலும் வேண்டும்.

9. ஊழல் அல்லது பற்றுறுதியின்மைக்காகப் பணியறவு செய்தல் (Dismissal) மேல் தகுதிக்கேடு -

(1) இந்திய அரசின் கீழ் அல்லது ஏதேனும் மாநில அரசின் கீழ் பதவி எதையும் ஏற்றுக்கொண்டிருந்து, ஊழலுக்காக அல்லது அரசுக்குப் பற்றுறுதியின்மை (Disloyalty) காரணமாக பணியறவு செய்யப்பட்டிருக்கிற ஆள் ஒருவர் அத்தகைய பணியறவுத் தேதியிலிருந்து ஓர் ஐந்து ஆண்டுக்கால அளவுக்குத் தகுதிகேடுற்றவராக ஆக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இன் நோக்கங்களுக்காக, இந்திய அரசின் கீழ் அல்லது ஒரு மாநில அரசின் கீழ் பதவி ஒன்றை ஏற்றிருந்த ஆள் ஒருவர் ஊழலுக்காக அல்லது அரசுக்குப் பற்றுறுதியின்மை காரணமாகப் பணியறவு செய்யபடுகிறார் அல்லது செய்யப்பட்டிருக்கிறார் என்பது பற்றித் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ், அந்த உண்மை விவரத்தின் அறுதியான மெய்ப்பிப்பு (Proof) ஆகும்.

ஆனால், ஊழலுக்காக அல்லது அரசிற்கு பற்றுறுதியின்மை காரணமாக ஆள் ஒருவர் பணியறவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது பற்றிய சான்றிதழ் எதுவும் மேற்கூறிய ஆளுக்குக் கேட்புநல்குவதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தால் அன்றி, வழங்கப்படுதல் ஆகாது.

9. (அ) அரசு ஒப்பந்தங்கள் முதலியவற்றிற்காக தகுதிக்கேடு -

உரிய அரசுக்கு பண்டங்கள் வழங்குவதற்காக அல்லது அதனால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் எவற்றையும் நிறைவேற்றுவதற்காக அந்த அரசுடன் தமது வாணிக அல்லது அலுவல்தொழில் போக்கில் தம்மால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் உயிர்ப்புடனுள்ளது என்றாலும் அவ்வாறுள்ள காலம் வரையிலும் ஓர் ஆள் தகுதிக்கேடுற்றவர் ஆதல் வேண்டும்.

விளக்கம் - இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, ஓர் ஒப்பந்தம் உரிய அரசுடன் செய்துகொள்ளப்பட்ட ஆனால் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிற விடத்து, முழுமையாகவோ பகுதியாகவோ ஒப்பந்தப்பகுதியை அரசு நிறைவேற்றியிருக்கவில்லை என்னும் உண்மை விவரத்தின் காரணமாக, அவ்வொப்பந்தம் உயிர்ப்புடன் இல்லை என்று கொள்ளப்பட வேண்டும்.

10. அரசு நிறுமத்தின் கீழ் பதவியேற்பதால் தகுதிக்கேடு -

உரிய அரசு இருபத்தைந்து விழுக்காட்டுக்கு குறையாமல் மூலதனததில் பங்குக் கொண்டுள்ள (கூட்டுறவு சங்கம் அல்லாத வேறு) நிறுமம் அல்லது கழகத்தின் மேலாண்மை முகவர், மேலாளர் அல்லது செயலாளராக ஆள் ஒருவர் இருக்கிறார் என்றாலும் இருக்கிறகாலம் வரையிலும், அவர் தகுதிக்கேடுற்றவராக ஆவார்.

10. அ. தேர்தல் செலவுக் கணக்கை முன்வைக்கத் தவறியமைக்காக தகுதிக்கேடு தேர்தல் ஆணையமானது, ஆள் ஒருவர்-

(அ) இச்சட்டத்தின் வாயிலாகவோ,ஈ கீழாகவோ வேண்டுறுத்தப்பட்ட நேரத்திற்குள்ளும் முறையிலும் தேர்தல் செலவுக் கணக்கை ஒப்புவிக்கத் தவறியிருக்கிறார், மற்றும்

(ஆ) அத்தவறுகைக்குத் தகுந்த காரணம் அல்லது அதை சரியென்று நிறுவனம் எதுவும் கொண்டிருக்கவில்லை

என்று மனநிறைவு கொள்கிறது என்றால், தேர்தல் ஆணையம், அதிகார முறை அரசிதழில் வெளியிடப்படும் ஆணை மூலம், அவரைத் தகுதிக்கேடுற்றவராக விளம்புதல் வேண்டும். மற்றும் அத்தகைய ஆள் அந்த ஆணைத் தேதியிலிருந்து ஒரு மூன்றாண்டுக்கால அளவுக்குத் தகுதிக்கேடுற்றவராதல் வேண்டும்.

## வாக்களிப்பதற்கான தகுதிக்கேடுகள்

11. அ. குற்றத்தீர்ப்பு மற்றும் ஊழல் நடைமுறைப் பழக்கங்களிலிருந்து எழும் தகுதிக்கேடு :-

(1) ஆள் எவரும், இச்சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம் (45/1860) பிரிவு 171-உ, 171-ஊ அல்லது இச்சட்டத்தின் 125 அல்லது பிரிவு 135 அல்லது பிரிவு 136இன் உட்பிரிவு (2)இன் பிரிவுக்கூறு (அ) ஆகியவற்றின் கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்படுகிறார் என்றால், அக்குற்றத்தீர்ப்புத் தேதியிலிருந்து அல்லது அந்த ஆணை செயல் விளைவு கொள்ளும் தேதியிலிருந்து அவர் தேர்தல் எதிலும் வாக்களிக்கத் தகுதிகேடுற்றவராதல் வேண்டும்.

(2) பிரிவு 8-அ உட்பிரிவு (1).இன் கீழ் ஆள் எவரும் குடியரசுத் தலைவரின் முடிவினால் எந்தக்கால அளவுக்குத் தகுதிக் கேடுற்றவராகியிருக்கிறாரோ அதே கால அளவுக்குத் தேர்தல் எதிலும் வாக்களிக்கத் தகுதிக்கேடுற்றவராதல் வேண்டும்.

(3) நாடளுமன்ற ஈரவைகளிலும் ஏதோன்றின் அல்லது ஒரு மாநிலத்தின் சட்டபேரவை அல்லது சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகத் தெரிவுசெய்யபடுவதற்கும் இருந்து வருவதற்குமான தகுதிக்கேடு எதை பொறுத்தம்ட்டிலும், 8-அ பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆள் எவராலும் பணிந்தணுப்பப்ட்ட ஒரு மனு மீது குடியரசுத் தலைவர் எடுத்த முடிவானது, தேர்தல் சட்டங்கள் (திருந்துகை) சட்டம் 1975 (40/1975) இன் தொடக்கத்தையொட்டி முன்பு, நிலைநின்றாவாறு, இச்சட்டத்தின் 11அ-பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) பிரிவுக்கூறின்கீழ் தேர்தல் எதிலும் அவருக்கு நேரிட்ட வாக்களிப்புத் தகுதிக்கேடு பொறுத்தமட்டில், அத்தகைய முடிவு, மேற்சொன்ன வாக்களிப்புக்கான தகுதிகேடு பொறுத்தும் ஓர் முடிவான இருந்ததைப்போன்றே, இயலும் அளவுக்குப் பொருத்துதல் வேண்டும்.

99. உயர்நீதிமன்றத்தால் செய்யப்பட வேண்டிய பிற ஆணைகள் -

(1) பிரிவு 98இன்கீழ் ஓர் ஆணை இடப்படும் நேரத்தில், உயர் நீதிமன்றம் -

(அ) தேர்தலில் செய்யபட்டிருந்த ஊழல் பழக்கமுறை பற்றிய குற்றச்சாட்டு எதுவும் மனுவில் செய்யப்படுகின்ற விடத்து-

(i) தேர்தலில் செய்யப்பட்டிருந்தான ஊழல் பழக்க முறை எதுவும் மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறதா அல்லது மெய்ப்பிக்கப்படாதாக இருக்கிறதா என்பது பற்றிய ஒரு காண்புரை (finding) யையும் அந்த ஊழல் பழக்கமுறையின் தன்மையையும்,

(ii) ஏதேனும் ஊழல் பழக்கமுறையின் குற்றவாளியாக வழக்காய்வில் மெய்ப்பிக்கப்பட்டிருந்த ஆட்கள் எவரேனும் இருந்தால், அந்த ஆட்கள் அனைவரின் பெயர்களையும், அந்தப் பழக்கமுறையின் தன்மையையும்,

பதிவு செய்கிற, மற்றும்

(ஆ) செலுத்தத்தக்க மொத்த செலவுத்தொகையை நிருணயிக்கிற மற்றும் அச்செலவுத் தொகை யாரால் எவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்துரைக்கிற,

ஆணை ஒன்றையும் இடுதல் வேண்டும்.

ஆனால், மனுவில் ஒரு சார்பினராக இல்லாத ஆள் ஒருவர்,

(அ) அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி, அந்த ஆணையில் ஏன் அவ்வாறுப் பெயர் குறிப்பிடக்கூடாது என்பதற்கான காரணம் காட்டுவதற்கு அவர் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறார், மற்றும்

(ஆ) அவர் அவ்வறிக்கையை அடியொற்றி முன்னிலையாகிறார் என்றால், உயர்நீதி மன்றத்தால் ஏற்கனவே விசாரிக்கப்பட்டிருந்து அவருக்கு எதிராகச் சான்றையும் அளித்திருக்கிற சான்றுரைஞர் (Witness) எவரையும், தமது தற்காப்புக்காகச் சான்று தருமாறும் கேட்பு நல்கப்படுவதற்குமான குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு ஒன்று அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது,

என்றாலன்றி, பிரிவுக்கூறு (அ) இன் உட்பிரிவுக் கூறு (ii) இன் கீழ் அந்த ஆணையில் அவரின் பெயர் குறிப்பிடுதல் ஆகாது.

(உ) இப்பிரிவிலும் 100ஆம் பிரிவிலும் "முகவர்" என்னும் சொல்லமைப்பு 123ஆம் பிரிவிலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருக்கும்.

# தேர்தல் குற்றச்செயல்கள்
## இயல் III

### தேர்தல் குற்றச் செயல்கள்

**125. தேர்தல் தொடர்பாக வகுப்புகளுக்கிடையே பகையை வளப்பாடு செய்தல் :** **இச்சட்டத்தின்கீழ் ஒரு தேர்தல் தொடர்பாக, சமயம், இனம், சாதி, சமூகம் அல்லது மொழி ஆகிய காரணங்களினால் இந்தியக் குடிமக்களின் வெவ்வேறு வகுப்புகளுக்கிடையே பகையுணர்வு அல்லது வெறுப்புணர்வை வளர்ப்பாடு செய்கிற அல்லது வளர்ப்பாடு செய்ய முயலுகிற ஆள் எவரும், மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.**

125**அ. தவறான பிரமாணப் பத்திரம் அளித்தல் போன்ற செயல்களுக்கான தண்டம்,-**

**தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்னும் நோக்கத்திற்காக, வேட்பாளரோ அல்லது அவரை முன்மொழிபவரோ,-**

- (i) **பிரிவு 33இன் உட்பிரிவு (1)க்குத் தொடர்பான செய்திகளை அளிக்கத் தவறுதல்; அல்லது**
- (ii) **தவறு என்று தெரிந்த அல்லது தவறு என்று உணர்ந்திருக்கின்ற செய்தியை அளித்தல் ; அல்லது**
- (iii) **பிரிவு 33இன் உட்பிரிவு (1)இன் கீழ் வேட்புமனுவில் கொடுக்கப்பட்டுள்ள எந்தவொரு செய்தியையும் மறைத்தல், அல்லது பிரிவு 133இன் உட்பிரிவு (2)இன் கொடுக்கப்படவேண்டிய பிராமணப் பத்திரம் போன்ற எந்தவொரு நேர்வுகளிலும், செயல்காலத்தில், பிற எந்தச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டிருக்காத எதுவும் 6 மாதக் கால அளவிலான சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.**

**126. வாக்குப்பதிவு முடிவடைவதற்காகக் குறித்திட்ட மணி நேரத்துடன் முடியும் நாற்பத்தெட்டு மணி நேரத்தின் போது பொதுக்கூட்டங்களுக்குத் தடை :** 1. **ஆள் எவரும் வாக்குப்பதிவுப் பகுதி எதிலும் தேர்தல் எதற்குமான வாக்குப்பதிவு முடிவடைவதற்காகக் குறித்திட்ட மணிநேரத்துடன் முடியும் நாற்பத்தெட்டு மணிநேரக் கால அளவின்போது, அந்த வாக்குப்பதிவுப் பகுதி எதிலும்**-

(அ) **ஒரு தேர்தல் தொடர்பாகப் பொதுக்கூட்டம் அல்லது ஊர்வலம் எதையும் கூட்டவோ, நடத்தவோ அல்லது அதற்குச் செல்லவோ, அதில் சேர்ந்துகொள்ளவோ அல்லது உரையாற்றுதலோ கூடாது ; அல்லது**

(ஆ) திரைப்படம், தொலைக்காட்சி அல்லது அதுபோன்ற வேறு கருவியம் வாயிலாகத் தேர்தல் பொருட்பாடு எதையும் பொதுமக்களுக்குக் காட்டுதல் கூடாது, அல்லது

(இ) பொதுமக்களைக் கவரும் ஒரு நோக்கில், ஏதேனும் இசை நிழ்ச்சி அல்லது ஏதேனும் நாடக நிகழ்ச்சி அல்லது வேறு ஏதேனும் கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்துவதன்மூலம், தேர்தல் பொருட்பாடு எதையும் பொதுமக்களுக்குப் பரப்புதல் கூடாது.

2. உட்பிரிவு (1) இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும், இரண்டாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

3. இந்தப் பிரிவில் "தேர்தல் பொருட்பாடு" என்னும் சொல்லமைப்பு, ஒரு தேர்தல் முடிவின் மீது செல்வாக்குச்செலுத்துவதற்கு அல்லது அதைப் பாதிப்பதற்கு உட்கருத்துக்கொண்ட அல்லது திட்டமிடப்பட்ட பொருட்பாடு எதுவும் என்று பொருள்படும்.

126ஆ. நிறுமங்களின் குற்றச்செயல்கள்.- (1) பிரிவு 126அ இன் உட்பிரிவு (2) இன் கீழ் ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, குற்றச்செயல் செய்யப்பட்ட சமயத்தில் அந்நிறுமத்தைப் பொறுப்பில் கொண்டிருந்த மற்றும் அந்நிறுமத்தின் அலுவல் நடத்துகைக்குப் பொறுப்பாயிருந்த ஆள் ஒவ்வொருவரும், அக்குற்றச் செயலைச் செய்த குற்றவாளியாகக் கருதப்பட்டு, எதிரான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு அங்ஙனமே தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

ஆனால், அத்தகையவர் எவரும் அக்குற்றச்செயல் தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டது என்றோ அல்லது அத்தகைய குற்றச்செயல் நிகழ்வதைத் தடுக்க உரிய கடும் முயற்சி அனைத்தையும் தாம் செய்திருக்கிறார் என்றோ அவர் மெய்ப்பிக்கிறார் என்றால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அவரை எந்தத் தண்டனைக்கும் உள்ளாக்காது.

(2). உட்பிரிவு (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின்கீழ் ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலர் ஒருவரின் இசைவுடன் அல்லது மறைமுக ஆதரவுடன் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவர்மீதான புறக்கணிப்பு எதனுடனும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலர் அக்குற்றச்செயல் செய்த குற்றவாளியாகக் கருதப்பட்டு எதிரான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு, அங்ஙனம் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**விளக்கம் - இப்பிரிவின் நோக்கங்களுக்காக , -**

(அ) **"நிறுமம்' என்பது, ஆட்களின் கூட்டமைப்பு எதுவும் எனப்பொருள்படும்; மற்றும் இதில் ஒரு நிறுவகம் அல்லது வேறு தனிப்பட்டவர்கள் சங்கத்தை உள்ளடக்கும்; மேலும்**

(ஆ) **ஒரு நிறுவகம் தொடர்பாக இயக்குநர் என்பது, அந்த நிறுவகத்தின் ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.**

**127. தேர்தல் கூட்டங்களில் குழப்பம்:** 1. **இந்தப் பிரிவு பொருந்துகிற ஒரு பொதுக்கூட்டத்தில், எந்த அலுவல் நடைபாடு** (transaction of business) **குறித்து அக்கூட்டம் கூடுமாறு அழைக்கப்பட்டதோ அந்த அலுவல் நடைபாட்டைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒழுங்கற்ற முறையில் செயலாற்றுகிற அல்லது செயலாற்றப் பிறரைத் தூண்டுகிற ஆள் எவரும், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரை போகலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.**

(1**அ**) **உட்பிரிவு**(1)**இன் கீழ்த்தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை** (**கைது**) **செய்வதற்குரியதாகும்.**

2. **உறுப்பினர் ஒருவரை அல்லது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கத் தொகுதியினரைக்கோரும் இச்சட்டத்தின்படியான ஓர் அறிவிக்கை பிறப்பித்த தேதிக்கும் அத்தகைய தேர்தல் நடைபெறும் தேதிக்கும் இடையே தேர்தல் தொகுதி எதிலும் நடத்தப்படும் அரசியல் இயல்புகொண்ட பொதுக்கூட்டம் எதற்கும் இப்பிரிவு பொருந்துகிறது.**

3. **உட்பிரிவு** (1)**இன்கீழ் ஒரு குற்றச்செயலைச் செய்யும் ஆள் எனக்காவல் அலுவலர் எவரும் தகவானமுறையில் ஐயுறுகின்றார் என்றால், அக்கூட்டத்தின் தலைவரால் அவர் அவ்வாறு செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறவிடத்து, அவர் அந்த ஆளை அவருடைய பெயரையும் முகவரியையும் தம்மிடம் விளம்புமாறு வேண்டுறுத்தலாம். மற்றும் அந்த ஆள் தம்முடைய பெயரையும் முகவரியையும் அவ்வாறு விளம்ப மறுக்கிறார் அல்லது தவறுகிறார் என்றாலோ, அல்லது காவல் அலுவலர் அந்த ஆள் பொய்யான பெயரை அல்லது முகவரியைக் கொடுப்பதாகத் தகவானமுறையில் ஐயுறுகிறார் என்றாலோ, அக்காவல் அவலுவலர் பிடியாணை** (warrant) **இன்றி அவரைச் சிறை** (**கைது**) **செய்யலாம்.**

**127அ. துண்டுவெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியவற்றை அச்சிடுவதன் மீது வரையறைகள் :** 1. **ஆள் எவரும், தேர்தல் துண்டுவெளியீடு அல்லது சுவரொட்டி எதையும் அச்சிடுபவர், அதைவெளியிடுபவர் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும் அதன் முகப்பில் கொண்டிராமல் அச்சிடவோ வெளியிடவோ, அல்லது அச்சிடுமாறு அல்லது வெளியிடுமாறு செய்விக்கவோ கூடாது.**

2. **ஆள் எவரும், தேர்தல் துண்டுவெளியீடு அல்லது சுவரொட்டி எதையும்**-

(அ) வெளியிடுபவரால் கையொப்பமிடப்பட்டும் அவரை நேர்முகமாக அறிந்துள்ள இரண்டு ஆட்களால் சான்றொப்பமிடப்பட்டும் உள்ள அவரது அடையாளம் குறித்த விளம்புகை ஒன்று, இரட்டைப் படியத்தில் அவரால் அச்சிடுபவரிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றாலன்றி,

(ஆ) அந்த ஆவணத்தை அச்சிட்டபின்பு ஒரு தகவான காலத்திற்குள் அந்த ஆவணத்தின் ஒரு படியத்துடன் சேர்த்து அந்த விளம்புகையின் ஒரு படியம் அச்சிடுபவரால்-

(i) அது மாநிலத் தலைநகரில் அச்சிடப்படுகிறவிடத்து, தலைமைத் தேர்தல் அலுவலருக்கும்,
(ii) வேறு எந்த நேர்விலும், அது அச்சிடப்படுகிற மாவட்டத்தின் மாவட்ட நீதி நடுவருக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது என்றாலன்றி, அச்சிடவோ அல்லது அச்சிடுமாறு செய்வித்தலோ கூடாது.

3. இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக,-

(அ) கையால் படியெடுத்தல் அல்லாமல் வேறு வகையில் ஓர் ஆவணத்தைப் பல படியமெடுக்கும் செயல்முறை எதுவும் அச்சிடுதல் எனக்கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் "அச்சிடுபவர்" என்னும் சொல்லமைப்பு அங்ஙனமே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) "தேர்தல் துண்டுவெளியீடு அல்லது சுவரொட்டி" என்பது ஒரு வேட்பாளரின் அல்லது வேட்பாளர்கள், குழுவின் தேர்தலை வளர்ப்பாடு செய்யும் அல்லது ஊறுபடுத்தும் நோக்கத்திற்காக வழங்கப்படும் அச்சிட்ட துண்டுவெளியீடு, கையறிக்கை அல்லது வேறு ஆவணம் எதுவும் அல்லது ஒரு தேர்தலைச் சுட்டிக்குறிப்பிடும் விளம்பரத்தட்டி அல்லது சுவரொட்டி எதுவும் என்று பொருள்படும்.

4. உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)இன் வகைமுறைகளில் எதையும் மீறுகிற ஆள் எவரும், ஆறு மாதங்கள்வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரை போகலாகும். பணத்தண்டம், அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

**128. வாக்களிப்பு இரகசியத்தைப் பேணிவருதல்** : 1. ஒரு தேர்தலில் வாக்குகளைப் பதிவுசெய்தல் அல்லது எண்ணுதலுக்குத் தொடர்புடைய கடமை எதையும் ஆற்றுகிற அலுவலர், எழுத்தர், முகவர் அல்லது வேறு ஆள் எவரும், வாக்களிப்பு இரகசியத்தைப் பேணிவருதலும் பேணிவர உதவி செய்தலும் வேண்டும்; (ஏதேனும் சட்டத்தின் வழியாகவோ வாயிலாகவோ அதிகாரமளிக்கப்பட்ட சில நோக்கத்திற்காகத் தவிர) அத்தகைய இரகசியத்தை மீறுவதாகக் கருதப்படும் தகவல் எதையும் ஆள் எவருக்குத் தெரிவித்தல் கூடாது.

2. உட்பிரிவு (1)இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும், மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**129. அலுவலர்கள் முதலியோர் தேர்தல்களில் வேட்பாளர் களுக்காகச் செயலாற்றாதிருத்தல் அல்லது வாக்களிக்கச் செல்வாக்கைப் பயன்படுத்தாதிருத்தல்;**
1, ஒரு மாவட்டத் தேர்தல் அலுவலர் அல்லது ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர் ஆக இருக்கும் ஆள் அல்லது உதவித் தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது ஒரு தேர்தல் தொடர்பாக கடமை புரியும் ஒரு தலைமை அலுவலர் எவரும் தேர்தலை நடத்துகையில் அல்லது மேலாண்மை செய்கையில், ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வெற்றிவாய்ப்புகளை மிகுவிப்பதற்காக, (வாக்கைக்கொடுப்பதைத் தவிர வேறு) செயல் எதையும் செய்தல் கூடாது.
2. மேற்கூறிய அத்தகைய ஆள் எவரும், காவல்படை உறுப்பினர் எவரும்-

(அ) ஒரு தேர்தலில் ஆள் எவரையும் அவரது வாக்கை அளிக்குமாறு வேண்டிக்கொள்ளுவதற்கு, அல்லது

(ஆ) ஒரு தேர்தலில் ஆள் எவரையும் அவரது வாக்கை அளிப்பதிலிருந்து அறிவுறுத்தித் தடுப்பதற்கு, அல்லது

(இ) ஒரு தேர்தலில் ஆள் எவரையும் எந்த முறையிலும் வாக்களிக்கச் செல்வாக்கைச் செலுத்துவதற்கு அருமுயற்சி செய்தல் ஆகாது.

3. உட்பிரிவு (1) மற்றும் உட்பிரிவு (2) இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

4. உட்பிரிவு (3)இன்கீழ்த் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயல் கைது செய்வதற்குரியது ஆகும்.

**130. வாக்குச் சாவடியில் அல்லது அதற்கு அருகில் ஆதரவுதிட்ரடுதலுக்குத் தடை :**
1.வாக்குச்சாவடி எதிலும் ஒரு வாக்குப்பதிவு நடத்தப்படுகிற தேதி அல்லது தேதிகள் அன்று, ஆள் எவரும் வாக்குச்சாவடிக்குள், அல்லது வாக்குச்சாவடியிலிருந்து நூறு மீட்டர் தொலைவுக்குள் உள்ள பொது அல்லது தனி இடம் எதிலும் பின்வரும் செயல்களில் எதையும் செய்தல் கூடாது; அவையாவன:-

(அ) வாக்குகளுக்காக ஆதரவுதிரட்டுதல்; அல்லது

(ஆ) வாக்காளர் எவருடைய வாக்கினை வேண்டிப்பெறுதல்; அல்லது

(இ) குறிப்பிட்ட வேட்பாளர் எவருக்கும் வாக்களிக்காதிருக்க வாக்காளர் எவரையும் கேட்டுக்கொள்ளுதல்; அல்லது

(ஈ) தேர்தலில் வாக்களிக்காதிருக்க வாக்காளர் எவரையும் கேட்டுக் கொள்ளுதல்; அல்லது

(உ) தேர்தல் தொடர்பாக (ஓர் அதிகார முறை அறிவிப்பு அல்லாத வேறு) அறிவிப்பு அல்லது சின்னம் எதையும் காட்சிக்கு வைத்தல்.

2. உட்பிரிவு (1) இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும் இருநூற்று ஐம்பது ரூபாய் வரை போகலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

3. இப்பிரிவின் கீழ்த்தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயல் கைது செய்வதற்குரியது ஆகும்.

**131. வாக்குச் சாவடியில் அல்லது அதற்கருகில் ஒழுங்கற்ற நடத்தைக்கான தண்டம் :**

1. வாக்குச்சாவடி எதிலும் ஒரு வாக்குப்பதிவு நடத்தப்படும் தேதி அல்லது தேதிகள் அன்று, ஆள் எவரும்,

(அ) வாக்குச்சாவடிக்குள் அல்லது அதன் வாயிலில், அல்லது அதன் அக்கம்பக்கத்திலுள்ள பொது அல்லது தனி இடம் எதிலும், ஒரு குரல்பெருக்கி அல்லது ஒலிபெருக்கியைப்போன்று மனிதக் குரலைப் பெருக்கிக்காட்டும் அல்லது மீண்டொலிக்கச்செய்யும் கருவி எதையும் பயன்படுத்துதல் அல்லது செயற்படுத்துதல் கூடாது, அல்லது

(ஆ) வாக்குச்சாவடிக்குள் அல்லது அதன் வாயிலில், அல்லது அதன் அக்கம்பக்கத்திலுள்ள பொது அல்லது தனி இடம் எதிலும், ஒரு ஒழுங்கற்ற முறையில் கூச்சலிடுதல் அல்லது வாக்குச்சாவடிக்கு வாக்களிக்க வருகைதரும் ஆள் எவருக்கும் தொல்லை விளைவிக்கிற வகையில் அல்லது வாக்குச்சாவடியில் கடமையாற்றும் அலுவலர்கள், வேறு ஆட்கள் ஆகியோரின் பணியில் தலையிடுகிற வகையில், செயலாற்றுதல் கூடாது,

2. உட்பிரிவு (1)இன் வகைமுறைகளை மீறுகிற அல்லது மீறுவதற்கு விருப்பத்துடன் உதவுகிற அல்லது உடந்தையாயிருக்கிற ஆள் எவரும், மூன்று மாதங்கள்வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

3. இப்பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க குற்றச்செயல் ஒன்றை ஆள் எவரும் செய்துகொண்டிருக்கிறார் அல்லது செய்திருக்கிறார் என்று நம்புவதற்குரிய காரணத்தை, ஒரு வாக்குச்சாவடியின் தலைமை அலுவலர் கொண்டிருக்கிறார் என்றால், அத்தகைய ஆளைச் சிறை (கைது) செய்யுமாறு காவல் அலுவலர் எவருக்கும் அவர் கட்டளையிடலாம், அதன்மேல் அக்காவல் அலுவலர் அவரைச் சிறை (கைது) செய்யவேண்டும்.

4. உட்பிரிவு (1) இன் வகை முறைகளின் மீறுகை எதையும் தடுக்கும் பொருட்டு, தகவான (நியாயமான) முறையில் தேவைப்படலாகும் அத்தகைய செயற்படிகளைக் காவல்

அலுவலர் எவரும் எடுக்கலாம். மற்றும் அத்தகைய வல்லாற்றலைப் (force) பயன்படுத்தலாம்.

**132. வாக்குச் சாவடியில் நடத்தைக்கேட்டுக்கான தண்டம் :**

1. வாக்குச்சாவடி எதிலும் வாக்குப் பதிவுக்காகக் குறித்திட்ட நேரத்தின்போது, தாமே தவறாக நடந்துகொள்கிற, அல்லது தலைமை அலுவலரின் சட்டமுறையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கிற ஆள் எவரும், தலைமை அலுவலரால், அல்லது கடமையாற்றும் காவல் அலுவலர் எவராலும் அல்லது அத்தகைய தலைமை அலுவலரால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவராலும் வாக்குச் சாவடியிலிருந்து அகற்றப்படலாம்.

2. உட்பிரிவு (1) ஆல் அளிக்கப்பட்ட அதிகாரங்கள், ஒரு வாக்குச்சாவடியில் வாக்களிக்கும் வாய்ப்பைப் பெற்றிருப்பதிலிருந்து அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்கப் பிறவாறு உரிமைப்பாடு உடைய வாக்காளர் எவரையும் தடுக்கும் வகையில், செலுத்தப்படுதல் ஆகாது.

3. ஒரு வாக்குச்சாவடியிலிருந்து அவ்வாறு அகற்றப்பட்டிருக்கிற ஆள் எவரும் தலைமை அலுவலரின் இசைவளிப்பின்றி வாக்குச்சாவடிக்குள் மீண்டும் நுழைகிறார் என்றால், அவர் மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

4. உட்பிரிவு (3)இன் கீழ்த்தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்வதற்குரியது ஆகும்.

**132அ. வாக்குப் பதிவு நடைமுறையைக் கடைப்பிடிக்கத் தவறுவதற்கான தண்டம் :**
ஒரு வாக்குச்சீட்டு வழங்கப்பட்டிருக்கிற வாக்காளர் எவரும், தமக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டை வாக்களிப்பதற்காக வகுத்துரைத்த நடைமுறையைக் கடைப்பிடிக்க மறுக்கிறார் என்றால், அறவு (ரத்து) செய்வதற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும்.

**133. தேர்தல்களில் ஊர்திக்கலங்களைச் சட்டமுரணாக வாடகைக் கமர்த்துதல் அல்லது முயன்று பெறுதலுக்கான தண்டம் :**

ஒரு தேர்தலில் அல்லது அது தொடர்பாக 123ஆம் பிரிவின் (5)ஆம் பிரிவுக்கூறில் குறித்துரைத்தவாறு அத்தகைய ஊழல் பழக்கமுறைக் குற்றவாளியாக ஆள் எவரும் இருக்கிறார் என்றால், அவர் மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனையும் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

**134. தேர்தல்கள் தொடர்பான அலுவல் முறைக்கடமையின் மீறல்கள்:**

1. இப்பிரிவு பொருந்துகிற ஆள் எவரும் தகவான காரணமின்றித் தமது அலுவல்முறைக் கடமையின் மீறலாகச் செயல் அல்லது விடுகை எதனையும் செய்த குற்றவாளியாக இருக்கிறார் என்றால், அவர் ஐந்நூறு ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(1அ.) உட்பிரிவு(1) இன்கீழ்த் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை(கைது) செய்தற்குரியது ஆகும்.

2. மேற்கூறியவாறு அத்தகைய செய்கை அல்லது விடுகை எதனையும் பொறுத்தமட்டில், அத்தகைய ஆள் எவருக்கும் எதிராக இழப்பீட்டுக்கான உரிமைவழக்கு எதுவும் அல்லது வேறு சட்டமுறை நடவடிக்கைகள் எவையும் கொணரப்படுதல் ஆகாது.

3. மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்கள், தலைமை அலுவலர்கள், வாக்குப் பதிவு அலுவலர்கள், ஒரு தேர்தலில் வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வேட்புநிலையைத் திரும்பப்பெறுதல் அல்லது வாக்குகளைப் பதிவுசெய்தல் அல்லது எண்ணுதல் தொடர்பாகக் கடமை எதையும் ஆற்றுவதற்காகப் பணியமர்த்தப்பட்ட வேறு ஆட்கள் ஆகியோர் இந்தப் பிரிவு பொருந்துகிற ஆட்கள் ஆவர். மேலும் "அலுவல்முறைக்கடமை" என்னும் சொல்லமைப்பு இப்பிரிவின் நோக்கங்களுக்காக அங்ஙனமே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; ஆனால், இச்சட்டத்தின் வழியாகவோ வாயிலாகவோ அல்லாமல் பிறவாறாகச் சுமத்தப்பட்ட கடமைகளை உள்ளடக்குதல் ஆகாது.

134அ. தேர்தல் முகவர், வாக்குப்திவுமுகவர் அல்லது வாக்கெண்ணும் முகவராகச் செயலாற்றும் அரசு பணியாளர்களுக்கான தண்டம்: அரசு பணியிலுள்ள ஆள் எவரும் ஒரு தேர்தலில் ஒரு தேர்தல் முகவர் அல்லது ஒரு வாக்குப்பதிவு முகவர் அல்லது ஒரு வாக்கெண்ணும் முகவராகச் செயலாற்றுகிறார் என்றால், அவர் மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

134ஆ. வாக்குச் சாவடிக்கு அல்லது அதனருகில் படைக்கலத்துடன் செல்லத் தடை:

தேர்தல் நடத்தும் அலுவலர், தலைமை அலுவலர், எவரேனும் காவல் அலுவலர், வாக்குச்சாவடியில் சட்டம் ஒழுங்கைப்பேணிவருவதற்குப் பணியமர்த்தப்பட்டு அவ்வாக்குச்சாவடியில் கடமையாற்றுகிற எவரேனும் வேறு ஆள் ஆகியோர் அல்லாமல் வேறு ஆள் எவரும், ஒரு வாக்குப்பதிவு நாளன்று, படைக்கலங்கள் (ஆயுதங்கள்) சட்டம், 1959இல் பொருள் வரையறை செய்தவாறுள்ள எவ்வகையான படைக்கலங்களை ஏந்திக்கொண்டு ஒரு வாக்குச்சாவடியின் அக்கம்பக்கத்தில் செல்லுதல் கூடாது.

2. உட்பிரிவு (1)இன் வகைமுறைகளை ஆள் எவரும் மீறுகின்றார் என்றால், இரண்டாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

3. படைக்கலங்கள் சட்டம் 1959இல் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் ஒரு குற்றச்செயலுக்காக ஓர் ஆள் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகிற விடத்து, அவருடைய உடைமையில் காணப்பட்ட மேற்சொன்ன சட்டத்தில் பொருள் வரையறைசெய்தவாறுள்ள படைக்கலங்கள் பறிமுதல் செய்வதற்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய படைக்கலங்கள் தொடர்பாக வழங்கப்பட்ட உரிமமானது

அந்தச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் பின்னறவு (ரத்து) செய்யப்பட்டிருப்பதாகச் கொள்ளப்படுதல் வேண்டும்.

4. பிரிவு (2)இன்கீழ்த் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் கைது செய்வதற்குரியது ஆகும்.

135. வாக்குச்சாவடியிலிருந்து வாக்குச்சீட்டுகளை அகற்றுதல் ஒரு குற்றச்செயல் ஆதல்

(1) தேர்தல் எதிலும் ஒரு வாக்குச் சாவடியிலிருந்து ஒரு வாக்குச்சீட்டை அதிகாரமளிப்பு இல்லாமல் வெளியே எடுத்துச் செல்கிற அல்லது எடுத்துச்செல்ல முயல்கிற அல்லது அத்தகைய செயல் எதையும் செய்வதில் உதவுகிற அல்லது உடந்தையாயிருக்கிற ஆள் எவரும், ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது ஐந்நூறு ரூபாய் வரை போகலாகும் ஒரு பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2) ஒரு வாக்குச்சாவடியின் தலைமை அலுவலர், (1)ஆம் உட்பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயலை ஆள் எவரும் செய்துகொண்டிருக்கிறார் அல்லது செய்திருக்கிறார் என்று நம்புவதற்கான காரணம் பெற்றிருக்கிறார் என்றால், அத்தகைய அலுவலர், வாக்குச்சாவடியை விட்டு அத்தகைய ஆள் செல்லும் முன்பு கைது செய்யலாம், அல்லது அத்தகைய ஆளைக் கைது செய்ய ஒரு காவல் அலுவலருக்குக் கட்டளையிடலாம். மற்றும் அத்தகைய ஆக ளைச் சோதனையிடலாம் அல்லது ஒரு காவல் அலுவலரால் சோதனையிடப்படுமாறு செய்விக்கலாம்,

ஆனால் ஒரு பெண் சோதனையிடப்படுமாறு செய்விப்பது தேவைப்படுகிறபோது, அச்சோதனை பெண்ணின் மாண்பினை நன்கு கவனத்தில்கொண்டு மற்றொரு பெண்ணால் செய்யப்படவேண்டும்.

(3) சோதனையில் வாக்குச்சீட்டு எதுவும் காணப்பட்டுக் கைது செய்யப்பட்ட ஆள் தலைமை அலுவலரால் ஒரு காவலரிடம் பாதுகாப்பான காவல் வைப்புக்காக ஒப்படைக்கப்பட வேண்டும், அல்லது அச்சோதனை ஒரு காவல் அலுவலரால் செய்யப்பட்டிருக்கிறபோது, அத்தகைய அலுவலரால் பாதுகாப்பான காவல் வைப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1)இன்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்தற்குரியது ஆகும்.

135அ. வாக்குச்சாவடி யைக் கைப்பற்றும் குற்றச்செயல்

(1) வாக்குச்சாவடியைக் கைப்பற்றும் ஒரு குற்றச்செயலைச் செய்கிற எவராயினும், ஓராண்டுக்குக் குறையாது மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையும் பணத்தண்டமும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்; மற்றும் ஓர் அரசு பணியிலுள்ள ஓர் ஆளால் அத்தகைய குற்றம் செய்யப்படுகிற விடத்து, மூன்றாண்டுகளுக்கு குறையாது ஆனால் ஐந்தாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால

அளவுக்குச் சிறைத்தண்டனையும் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

விளக்கம்: இந்த உட்பிரிவின் மற்றும் 20ஆ பிரிவின் நோக்கங்களுக்காக, "வாக்குச்சாவடியைக் கைப்பற்றுதல்" என்பது மற்றவற்றுக்கிடையில், பின்வரும் செய்கைப்பாடுகளில் அனைத்தையும் அல்லது ஏதொன்றையும் உள்ளடக்குகிறது ; அதாவது-

(அ) ஆள் அல்லது ஆட்கள் எவராலும் ஒரு வாக்குச்சாவடி அல்லது வாக்குப் பதிவுக்காகக் குறித்திட்ட ஓர் இடம் கைப்பற்றப்பட்டு, வாக்குச் சீட்டுகளை அல்லது வாக்குப்பதிவு எந்திரங்களை வாக்குப் பதிவு அதிகாரிகளை ஒப்படைக்கும்படி செய்தல் அல்லது தேர்தல் ஒழுங்காக நடத்தப்படுவதைப் பாதிக்கிற வேறு செயல் எதையும் செய்தல்;

(ஆ) ஆள் அல்லது ஆட்கள் எவரும் ஒரு வாக்குச்சாவடியை அல்லது வாக்குப்பதிவுக்காகக் குறித்திட்ட ஓர் இடத்தை உடைமைகொண்டு, அவருடைய அல்லது அவர்களுடைய சொந்த ஆதரவாளர்களை மட்டுமே தங்களது வாக்களிக்கும் உரிமையைச் செலுத்த அனுமதித்தல், மற்றவர்களை அவர்களுடைய வாக்களிக்கும் உரிமையைத் தடையின்றிச் செலுத்துவதிலிருந்து தடுத்தல்;

(இ) வாக்காளர் எவரையும் நேரடியாகவோ மறைமுகமாகவோ வலுக்கட்டாயப்படுத்தல், அல்லது மிரட்டிப் பணியவைத்தல் அல்லது அச்சுறுத்தல்; மற்றும் தமது வாக்கினை அளிக்க வாக்குச்சாவடிக்கு அல்லது வாக்குப்பதிவுக்காகக் குறித்திட்ட ஓர் இடத்திற்குச் செல்வதிலிருந்து அவரைத் தடுத்தல்;

(ஈ) ஆள் அல்லது ஆட்கள் எவராலும் வாக்குகளை எண்ணுவதற்கான ஓர் இடம் கைப்பற்றப்பட்டு, வாக்குச்சீட்டுகளை அல்லது வாக்குப்பதிவு எந்திரங்களை, வாக்கெண்ணும் அதிகாரிகளை ஒப்படைக்கும்படி செய்தல், மற்றும் வாக்கெண்ணிக்கை ஒழுங்காக நடத்தப்படுவதைப் பாதிக்கிற வேறு செயல் எதையும் செய்தல்;

(உ) அரசு பணியிலுள்ள ஆள் எவராலும், மேற்கூறிய செய்கைப் பாடுகளில் அனைத்தும் அல்லது எதுவும் செய்யப்படுதல் அல்லது ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வெற்றிவாய்ப்புகளை மிகுவிப்பதற்கான அத்தகைய செய்கைப்பாடு எதிலும் உதவி செய்தல் அல்லது உட்கையாளாக.

2. உட்பிரிவு (1)இன்கீழ்த் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்வதற்குரியதாகும்.

**135ஆ. வாக்குப் பதிவு நாளன்று ஊழியர்களுக்கு ஊதிய விடுமுறை அளித்தல்** :

1. **அலுவல் தொழில், வாணிகம், தொழில்ஏற்பு நிறுவனம் எதிலும் அல்லது நிறுவனம் ஏதொன்றிலும் ஊழியம்செய்கிற, மற்றும் மக்களவைக்கான அல்லது ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவைக்கான ஒரு தேர்தலில் வாக்களிக்க உரிமைப்பாடு கொண்டிருக்கிற ஆள் ஒவ்வொருவருக்கும், தேர்தல் நாளன்று, விடுமுறை வழங்கப்படுதல் வேண்டும்.**

2. **அத்தகைய ஆள் எவருடைய ஊதியத்திலும் பிடித்தம் அல்லது குறைப்பு எதுவும்** (1) **ஆம் உட்பிரிவுக்கு இணங்கியவாறு விடுமுறை அளிக்கப்பட்டிருப்பதன் காரணமாகச் செய்யப்படுதல் ஆகாது. மற்றும் அத்தகைய ஆள், அத்தகைய ஒரு நாளுக்குரிய உழைப்பூதியத்தை வழக்கமாகப் பெறமுடியாத அடிப்படையில் வேலைக்கமர்த்தப்படுகிறார் என்றபோதிலுங்கூட, அந்த நாளன்று அவருக்கு விடுமுறை அளிக்கப்படாததைப் போன்றும், அத்தகைய நாளுக்கான உழைப்பூதியத்தை அவர் பெற்றிருந்தால் போன்றும் கொடுக்கப்படவேண்டும்.**

3. **உட்பிரிவு** (1) **அல்லது உட்பிரிவு** (2) **இன் வகைமுறைகளை வேலை தருபவர்** (employer) **மீறுகிறார் என்றால், அப்போது அத்தகைய வேலை தருபவர் ஐந்நூறு ரூபாய் வரை போகலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.**

4. **எந்த ஒரு வாக்காளர் ஈடுபட்டிருக்கிற ஒரு வேலையைப் பொறுத்தமட்டில், அவரது இல்லாநிலை இடர்வு** (danger) **அல்லது கணிசமான இழப்பை விளைவிக்கலாகுமோ அந்த வாக்காளருக்கு இப்பிரிவு பொருந்துதல் ஆகாது.**

**135இ. வாக்குப் பதிவு நாளன்று மது விற்கப்படுதல், கொடுக்கப்படுதல் அல்லது வழங்கப்படுதல் கூடாது**

1. **வெறியூட்டுகிற, புளித்துப்பொங்கிவைத்த அல்லது மயக்கமூட்டுகிற குடிவகைகள் அல்லது அதுபோன்ற இயல்புள்ள வேறு பொருள்கள் எவையும் ஒரு வாக்குப்பதிவுப் பகுதியில் நடைபெறும் தேர்தல் எதற்கும் வாக்குப்பதிவு முடிவுக்காகக் குறித்திட்ட நாற்பத்தெட்டு மணிநேரத்துடன் முடிவடையும் கால அளவின்போது அந்த வாக்குப்பதிவுப் பகுதிக்குள் இருக்கும் ஓர் உணவகம், பரிமாறகம், மதுக்குடியகம், கடை அல்லது வேறு இடம் எதிலும், அது பொது அல்லது தனி இடமாயினும், விற்கப்படுதலோ, கொடுக்கப்படுதலோ அல்லது வழங்கப்படுதவோ கூடாது.**

2. **உட்பிரிவு** (1)**இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரை போகலாகும் பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.**

3. **இந்தப் பிரிவின்கீழ் ஆள் எவரும் ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுகிறவிடத்து, அவரது உடைமையில் காணப்பட்ட வெறியூட்டுகிற, நொதிக்கவைத்த அல்லது மயக்கமூட்டுகிற மதுக்குடிகள் அல்லது அது போன்ற இயல்புள்ள வேறு பொருள்கள் பறிமுதலுக்கு உள்ளாக்கப்படுதல் வேண்டும். மற்றும்**

அது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் தீர்வுமுறை செய்யப்படுதலும் வேண்டும்.

**136. பிற குற்றச் செயலும் அதற்கான தண்டனைகளும்-**

(1) ஆள் ஒருவர், தேர்தலில்,-

(அ) வேட்புமனு எதையும் மோசடியாக உருக்குலைக்கிறார், அல்லது மோசடியாக அழிக்கிறார், அல்லது

(ஆ) தேர்தல் நடத்தும் அலுவலரின் அதிகாரத்தின் வாயிலாகவோ கீழாகவோ ஒட்டப்பட்ட பட்டியல், அறிவிப்பு அல்லது வேறு ஆவணம் எதையும் மோசடியாக உருக்குலைக்கிறார், அழிக்கிறார். அல்லது அகற்றுகிறார், அல்லது

(இ) ஏதேனும் வாக்குச்சீட்டு, அல்லது வாக்குச்சீட்டு எதன் மீதுள்ள அலுவல்முறைக் குறி அல்லது ஏதேனும் அடையாளம் பற்றிய விளம்புகை அல்லது அஞ்சல் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிப்பது தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட அலுவல்முறை உறையை மோசடியாக உருக்குலைக்கிறார் அல்லது மோசடியாக அழிக்கிறார். அல்லது

(ஈ) உரிய அதிகாரவுரிமை இன்றி, வாக்குச்சீட்டு எதையும் ஆள் எவருக்கும் வழங்குகிறார், அல்லது வாக்குச்சீட்டு எதையும் ஆள் எவரிடமிருந்தும் பெறுகிறார் அல்லது வாக்குச்சீட்டு எதையும் உடைமையில் கொண்டிருக்கிறார், அல்லது

(உ) சட்டத்தினால் உள்ளே போடுவதற்கு அவர் அதிகாரமளிக்கப்பட்ட வாக்குச்சீட்டு அல்லாமல் வேறு எதையும் வாக்குப்பெட்டி எதற்குள்ளும் மோசடியாகப் போடுகிறார், அல்லது

(ஊ) உரிய அதிகாரவுரிமை இன்றி, தேர்தல் நோக்கத்திற்காக அப்போது பயன்படுத்தப்படுகிற வாக்குப்பெட்டி அல்லது வாக்குச்சீட்டு எதையும் அழிக்கிறார், எடுக்கிறார், திறக்கிறார், அல்லது பிறவாறு குறுக்கிடுகிறார், அல்லது

(எ) மோசடியாக, அல்லது நேர்வுக்கேற்ப, உரிய அதிகாரவுரிமை இன்றி, முன்சென்ற செயல்களில் எதையும் செய்ய முயல்கிறார். அல்லது அத்தகைய செயல்கள் எவற்றையும் செய்வதற்கு வேண்டுமென்றே உதவுகிறார் அல்லது உடந்தையாகிறார் என்றால், ஒரு தேர்தல் குற்றச்செயல் புரிந்த குற்றவாளியாக ஆவார்.

(2) இப் பிரிவின்கீழ் ஒரு தேர்தல் குற்றச்செயல் புரிந்த குற்றவாளியாகிய ஆள் எவரும்-

(அ) அவர் ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் அல்லது ஒரு வாக்குச் சாவடியில் தலைமை அலுவலர் அல்லது தேர்தல் தொடர்பாக அலுவல் முறைக் கடமையில் ஈடுபட்டுள்ள வேறு அலுவலர்

அல்லது எழுத்தர் ஆக இருக்கிறார் என்றால், இரண்டாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(ஆ) அவர் வேறு எந்த ஆளாகவும் இருக்கிறார் என்றால், ஆறு மாதங்கள் ' வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை, அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆள் ஒருவரின் கடமை, வாக்கு எண்ணிக்கை உள்ளடங்க ஒரு தேர்தலை அல்லது தேர்தலின் பகுதியை நடத்துவதில் பங்குபெறுதல் அல்லது அத்தகைய தேர்தல் தொடர்பாகத் தேர்தல் முடிந்த பின்பு பயன் படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுகளுக்கும் பிற ஆவணங்களுக்கும் பொறுப்பாக இருத்தல் என்பதாகக் இருக்கிறது என்றால், அவர் அலுவல் முறைக் கடமையில் இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால் "அலுவல் முறைக் கடமை" என்னும் சொல்லமைப்பு இச்சட்டத்தின் வாயிலாகவோ, கீழாகவோ அல்லாமல் பிறவாறாகச் சுமத்தப்பட்ட கடமை எதனையும் உள்ளடக்குதல் ஆகாது.

(4) உட்பிரிவு (2)இன்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் கைது செய்தற்குரியது ஆகும்.

## பின்னிணைப்பு 2.6

**மக்கள் சார்பாண்மைச் சட்டம், 1950-லிருந்து எடுகுறிப்புகள்**

**2. பொருள் வரையறைகள்**

இச்சட்டத்தில், வருவாய் பெறவாக வேண்டுறுத்துகிறது என்றாலன்றி -

(அ) "உறுப்பு" என்பது அரசமைப்பின் ஓர் உறுப்பு என்று பொருள்படும்.

**16. வாக்காளர் பட்டியலில் பதிவு செய்தல் பொறுத்த தகுதிக்கேடுகள் -**

(1) ஆள் ஒருவர் -

(அ) ஓர் இந்தியக் குடிமகனாக இல்லை, அல்லது

(ஆ) மனநலமற்றவராக இருக்கிறார் மற்றும் அவ்வாறு தகுதித்திறம் வாய்ந்த ஒரு நீதிமன்றத்தால் விளம்பப்பட்டிருக்கிறர், அல்லது

(இ) தேர்தல்கள் தொடர்பான ஊழல் நடைமுறை பழக்கங்கள் மற்றும் வேறு குற்றச்செயல்கள் பற்றிய ஏதேனும் சட்டத்தின் வகைமுறைகளின் கீழ், வாக்களிப்பிலிருந்து அப்போதைக்கு தகுதிக்கேடுற்றிருக்கிறார்.

என்றால், அவர் ஒரு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்வதற்கு தகுதி கேடுற்றவர் ஆவார்.

(2) பதிவுக்குப் பின்பு அவ்வாறு தகுதிக்கேடுற்றவராக ஆகிற ஆள் எவரின் பெயரும், அச்சேர்க்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலில் இருந்து உடனடியாக அடித்து நீக்கப்பட வேண்டும்.

ஆனால், (1) உட்பிரிவின் (இ) பிரிவுக்கூறின் கீழ் ஒரு தகுதிக்கேடு காரணமாக ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியிலிலிருந்து அடித்து நீக்கப்பட்ட ஆள் எவரின் பெயரும், அத்தகைய வாக்காளர் பட்டியல் செயலாற்றலில் இருக்கும் போது அத்தகைய தகுதிக்கேடு அகற்றப்படுவதற்கு அதிகாரம் அளிக்கும் சட்டம் எதன் கீழும் அகற்றப்படுகிறது என்றால், அந்தப் பட்டியலில் உடனடியாக மீண்டும் சேர்க்கப்பட வேண்டும்.

## பின்னிணைப்பு 2.7

### புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973லிருந்து எடுகுறிப்புகள்
### (1) மன்ற உறுப்பினர் நிலைக்கான தகுதி நிலைகள்

**20. வேட்பாளர்களின் தகுதி நிலை :**

(1) ஆள் எவரின் பெயரும் நகராட்சி வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது, மற்றும் பட்டியல் சாதியினர் மற்றும் அல்லது மகளிருக்காக ஓர் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நேர்வில், அவரே பட்டியல் சாதிகளில் ஏதொன்றின் உறுப்பினராக இருக்கிறார் அல்லது ஒரு பெண்ணாக இருக்கிறார் என்றாலன்றி, அத்தகைய ஆள் மன்ற உறுப்பினராகும் தேர்தலுக்கு தகுதிநிலை உடையவர் ஆகார்.

(2) மைய அரசின் அல்லது ஏதேனும் மாநில அரசின், அல்லது உள்ளூர் அதிகார அமைப்பின், அல்லது இதன் பொருட்டு அரசினால் அறிவிக்கை செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் அலுவலர் அல்லது பணியாளர் எவரும் ஒரு மனற் உறுப்பினர் தேர்தலுக்கு அல்லது அத்தகைய பதவியை ஏற்றிருப்பதற்குத் தகுதியுடையவர் ஆவார்.

ஆனால், இந்த தடை, பின்வரும் இரண்டு அடைவுகளையும், அதாவது பணியேற்றுபவர் -

(அ) மைய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசின், அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார அமைப்பின், அல்லது அவ்வாறு அறிவிக்கை செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் முழுநேரப் பணியாளராக இருக்கிறார், மற்றும்

(ஆ) வரைவூதியம் (Salary) அல்லது பணிக்கட்டணம் மூலம் பணியூதியமளிக்கப்படுகிறார், என்ற நிலையில் அத்தகைய ஏதேனும் பதவிறேறிருப்பவருக்குப் பொருந்துதல் ஆகாது.

மேலும் இந்த உட்பிரிவின் கீழ், ஆள் எவரும் தகுதிநிலை உள்ளவரா அல்லது இல்லாதவரா என்னும் வினா எதுவும், ஒரு தேர்தலுக்கு முன்போ பின்போ எழுகிறது என்றால், அவ்வினாப்பொருள் அரசுக்குச் சுட்டியனுப்பப்படுதல் வேண்டும். அதன் முடிவு அறுதியானதாக இருக்கும்.

**21. வேட்பாளரின் தகுதிக்கேடுகள் :**

(1) ஒழுக்கநெறிக் குற்றத்தை உள்ளடக்கும் ஒரு குற்றச்செயல், அல்லது குடிமை உரிமைகள் பாதுகாப்பளிப்புச் சட்டம், 1955 (மையச்சட்டம் 22/1955) இன் கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் எதற்காகவும் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால், குற்றத்தீர்ப்பும் தண்டனையும் தீர்ப்பும் அளிக்கப்பட்டு சிறைதண்டனை பெற்றிருக்கிற

ஆள் எவரும், தண்டனையை அனுபவிக்கும் போதும், தண்டனை முடிவுற்ற தேதியிலிருந்து ஐந்தாண்டுக் காலத்திற்கும், மன்ற உறுப்பினர் தேர்தலில் நிற்க தகுக்கேடுற்றவர் ஆவார்.

(2) உட்பிரிவி (1)இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் அத்தகைய தண்டனைத் தீர்ப்பு ஒரு தகுதிக்கேடாகச் செயற்படுதல் கூடாது என்று அரசு கட்டளையிடலாம்.

(3) ஆள் ஒருவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் கடைசித் தேதியில் அல்லது தேர்தல் தேதியில் -

(அ) மனநலமற்றவராக அல்லது காதுகேளாதவராக அல்லது ஊமையாக,

(ஆ) ஒரு நொடிப்பு நிலையராக, அல்லது விடுப்புப் பெறாத ஒரு நொடிப்பு நிலையராக நீதி முறையில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரு விண்ணப்பதார்ராக

(இ) ஒரு நிறுமத்தில் (ஓர் இயக்குநர் அல்லாமல் வேறு) ஒரு பங்குதார்ர் என்பதைத் தவிர, நகராட்சியுடன் ஓர் ஒப்பந்தத்தில் அல்லது அதற்காக செய்துக்கொண்டிருக்கு ஒரு வேலையில் அக்கறையுள்ளவராக.

இருக்கிறார் என்றால், அத்தகைய ஆள் ஒரு மன்ற உறுப்பினராகத் தேர்தலில் நிறகத் தகுதிக்கேடு உடையவர் ஆவார்.

ஆனால், ஒருவர்

(i) அசையாச் சொத்தின் குத்தகை விற்பனை அல்லது வாங்குகை அல்லது அதற்கான உடன்பாடு எதிலும், அல்லது

(ii) பணக் கடனுக்கான உடன்பாடு எதிலும், அல்லாது பணம் கொடுப்பதற்கான ஏதேனும் காப்புறுதிப்பிணையத்தில் மட்டுமே, அல்லது

(iii) மன்ற அலுவல்கள் தொடர்பான விளம்பரம் வெளியிடப்படும் செய்திதாள் எதிலும், அல்லது

(iv) ஒப்பந்த வேலைக் காலத்தின்போது எந்த ஆண்டிலும் மொத்த மதிப்பில் ஆயிரத்தைந்தூறு ரூபாய்க்கு மேற்படாமல் எந்த உருப்படிப்பொருள்களில் அவர் வாணிகம் செய்கிறாரோ அந்த உருப்படிப்பொருள்களை மன்றத்திற்கு விற்றல் அல்லது அந்த உருப்படிபெபொருளை மன்றத்திடமிருந்து வாங்குதல் ஆகிய இரண்டு நேர்வுகள் எதிலும், அவர் ஒரு பங்கைக் கொண்டிருக்கிற காரணத்தினால் மட்டுமே,

அத்தகைய ஒப்பந்தம் அல்லது வேலையில் அவர் அக்கறை எதையும் கொண்டிருக்கிறார் எனக்கொள்ளப்படுதல் ஆகாது.

(ஈ) நகராட்சி மன்றத்தின் சார்பாக ஊதியம் பெறும் ஒரு சட்டத் தொழிலாற்றுநராகவோ, அல்லது மன்றத்திற்கு எதிராக ஒரு சட்டம் தொழிலாற்றுநராகவோ அல்லது அரசு சார்பாக ஊதியம் பெரும் சட்டத் தொழிலாளராகவோ வேலைக்கமர்த்தப்படுகிறார்,

(உ)இச்சட்டத்தின்கீழ் பதவியேற்றிருக்கும் அனைத்து அலுவலர்கள் அல்லது பணியாளர்கள் அல்லது நகராட்சிகள் அல்லது அவற்றின் பகுதி எதன்மீதும் அதிகார வரம்புக்கொண்டுள்ள மதிப்பியல் நீதி நடுவர் ஆக இருக்கிறார்,

(ஊ) மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவறாதிருந்து, புதிய தேர்தல் செயல்விளைவு கொள்ளுவதற்கு முன்பு, அல்லது ஏற்கனவே ஒரு மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவிக் காலம் இன்னமும் தொடங்கப்படாமல், ஏற்கனவே மன்ற உறுப்பினராக இருக்கிறார்,

(எ) ஆள் ஒருவர் மைய அரசு அல்லது ஏதேனும் மாநில அரசு அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார அமைப்பின் கீழ் பதவி எதையும் ஏற்றிருந்து பணியறவு செய்யப்பட்டு, அத்தகைய பதவி எதற்கும் மேற்கொண்டு வேலையமைவுக்குத் தகுதிக்கேடுற்றிருக்கியார்.

(ஏ) ஒரு சட்ட தொழிலாற்றுநராகத் தொழில் செய்யத் தடையுறுத்தப்படுகிறார்,

(ஒ)முந்திய ஆண்டுகள் வரையிலும் உள்ளடங்கலாகவும் நகராட்சிக்கு (ஒரு நம்பகப்பொறுப்பு முறையில் அல்லாமல் வேறு) எல்லா வகையிலும் அவரால் கொடுக்கப்படவேண்டிய நிலுவைகளைப் பொறுத்து ஒரு கேட்புப்பட்டியல் அல்லது அறிவிப்பு அவருக்கு உரியவாறு சார்வு செய்யப்பட்டிருந்து, அதில் குறித்துரைக்கப்பட்ட காலம் ஏதேனுமிருப்பின் அது முடிவுற்றிருக்கிறது.

(ஓ)ஓர் ஆள் ஓர் அயல் நாட்டு அரசின் குடியுரிமையை தன் விருப்பாக முயன் பெற்றிருக்கிறார் அல்லது ஓர் அயல்நாட்டு அரசுக்குப் பற்றுறுதியோ ஒட்டுறவையோ ஒப்புகை செய்திருக்கிறார்.

என்றால், அத்தகைய ஆள் ஒரு மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பதற்கு தகுதிக்கேடு உடையவர் ஆவார்.

22. உறுப்பினர்களின் தகுதிக்கேடுகள்

ஆள் ஒருவர்

(அ)பிரிவு 2-இன் உட்பிரிவு (1)இல் விளக்கப்பட்டவாறுள்ள குற்றச்செயலுக்கான தண்டனை, தகுதிக்கேடாகச் செயற்படாது என்று அரசு கட்டளையிட்டாலன்றி,

அத்தகைய பிரிவின் கீழ் வரும் குற்றச்செயலுக்கான தண்டனை ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் விதித்துத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்,

(ஆ) மனநலமற்றவராகவோ அல்லது செவிட்டு-ஊமையாக ஆகியிருக்கிறார்,

(இ) நொடிப்பு நிலையராக நிதி முறையில் தீர்மானிக்கப்படவேண்டி விண்ணப்பிக்கிறார் அல்லது தீர்மானிக்கப்படுகிறார்.

(ஈ) ஒரு நிறுமத்தில் (ஓர் இயக்குநர் என்று அல்லாமல் வேறு) ஒரு பங்குதார்ர் என்பதைத்தவிர, நகராட்சி மன்றத்துடன் செய்துகொண்ட ஓர் உயிர்ப்புள்ள ஒப்பந்தம் ஒன்றில், அல்லது அதன்பொருட்டுச் செய்யப்பட்டுவரும் வேலை எதிலும், 21ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (இ) பிரிவுக்கூறுக்கான வரம்புரைக்கு உட்பட்டு, அக்கறை எதையும் முயன்று செய்திருக்கிறார்,

(உ)நகர் மன்றத்தின் சார்பாக ஊதியம் பெறும் ஒரு சட்டத் தொழிலாற்றுநராக வேலையில் அமர்த்தப்படுகிறார், அல்லது நகர் மன்றத்திற்கு எதிராக ஒரு சட்டத் தொழிலாற்றுநராக அரசு சார்பாக ஊதியம் பெறும் ஒரு சட்டத் தொழிலாற்றுநராகவோ வேலையை ஏற்றுக் கொள்கிறார்,

(ஊ) இச்சட்டத்தின் கீழ் ஓர் அலுவலராகவோ வேறு ஊழியராகவோ, அல்லது நகராட்சி அல்லது அதன்பகுதி எதன்மீதும் அதிகார வரம்புக் கொண்டுள்ள ஒரு மதிப்பியல் நீதி நடுவராகவோ பணியமர்த்தப்படுகிறார்.

(எ) வேறு ஏதேனும் நகர்மன்றத்தின்கீழ் வேலையமைவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

(ஏ) நகராட்சியில் அல்லது அதன் மூன்றேகால் கிலோமீட்டருக்குள் குடியிருப்பது அற்றுப் போகிறார்,

(ஐ) இச்சட்டத்தின்கீழ்த் தம்மீது சார்வுசெய்யப்பட்டிருக்கிற ஒரு கேட்புப்பட்டி அல்லது அறிவிப்புக்குப் பின்னுள்ள மூன்று மாதங்களுக்குள், அல்லது நிலுவை எதுவுமுள்ள நேர்வில், இச்சட்டம் அத்தகைய கேட்புப்பட்டி அல்லது அறிவிப்பு எதையும் வேண்டுற்றதாத விடத்து, நிலுவையைச் செலுத்தக் கோரும் ஒரு கேட்புப்பட்டி அல்லது அறிவிப்பு ஆணையாளரால் தம்மீது உரியவாறு சார்வு செய்யப்பட்டதன் பின்னுள்ள மூன்று மாதங்களுக்குள், (நம்பகப் பொறுப்பு முறையில் அல்லாமல் வேறு) எவ்வகையிலும் அவரால் கொடுக்கப்பட வேண்டிய நிலுவைகள் எவற்றையும் செலுத்த தவறுகிறார்,

(ஒ)அவரது பதவிக்காலம் தொடங்கப்பட்ட, அல்லது கடைசியாக அவர் வருகை தந்த கூட்டத்தின் அல்லது நேர்வுக்கேற்ப (4)ஆம் உட்பிரிவின் கீழ் மன்ற உறுப்பினராகப் பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்ட தேதியிலிருந்து

கணக்கிடப்படும் தொடர்ச்சியான ஆறு மாதக்கால அளவின்போது நடைபெற்ற மன்றக் கூட்டங்களுக்கு அவர் தாமே வாராதிருக்கிறார், அல்லது மேற்கூறிய காலத்தில், மூன்று கூட்டங்களுக்குக் குறையாமல் நடந்திருந்து, மேற்சொன்ன தேதிக்குப் பின்பு நடைபெற்ற மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு தாமே வாராதிருந்தார்,

ஆனால், எந்தக் கூட்டத்திற்கு உறுப்பினர் வாராதிருந்தாரோ அந்தக் கூட்டம் எதுவும் -

(i) அந்தக் கூட்டம் பற்றி உரிய அறிவிப்புக் கொடுக்கப்படவில்லை,
(ii) வழக்கமான கூட்டங்களுக்காக வகுத்துரைக்கப்பட்டதை விடக் குறைந்த கால அளவு அறிவிப்புக் கொடுக்கப்பட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது, அல்லது
(iii) உறுப்பினர்களின் வேண்டுக்கோளின்படி கூட்டம் நடத்தப்பட்டது என்றால், அவருக்கு எதிராக இந்தப் பிரிவின் கீழ் கணக்கிடப்படுதல் கூடாது.

(ஒ) ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப்பேரவைக்காக தேர்தல் நோக்கங்களுக்காக, அப்போதைக்குச் செயலாற்றலில் இருக்கும் ஏதேனும் சட்டத்தின் வாயிலாகவோ கீழாகவோ அவ்வாறு தகுதிக்கேடுற்றவராகியிருக்கிறார்.

ஆனால், ஆள் எவரும் இருபத்தோரு வயது எய்திருக்கிறார் என்றால், அவர் இருபத்தைந்து வயதுக்கும் குறைந்தவராக இருக்கிறார் என்னும் காரணங்காட்டி அவர் தகுதிக்கேடுற்றவராக ஆக்கப்படுதல கூடாது.

(ஔ) ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டத்தின் வாயிலாகவோ கீழாகவோ அவ்வாறு தகுதிக்கேடு உற்றவர் ஆகிறார்.

என்றால், அத்தகைய ஆள் நகர் மன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவதற்கு அல்லது இருந்துவருவதற்கு தகுதிக்கேடுற்றவர் ஆவார்.

(2) உட்பிரிவு (1)இன் பிரிவுக்கூறு (அ)இன் கிழ், அல்லது பிரிவு 63இன் கீழ் ஆள் ஓருவர் மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப்போகிறவிடத்து, அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட கால அளவில் மீண்டும் பதவியில் அமர்த்திய தேதியில் முடிவுறாது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு, அவர் பதவியில் மீண்டும் அமர்த்தப்படுதல் வேண்டும். தீர்ப்புத் தண்டனை அல்லது ஆணை மேல்முறையீடு அல்லது சீராய்வு மீது அழித்தறவு (ரத்து) செய்யப்படுகிறது அல்லது தீர்ப்புத் தண்டனை மூலம் விளைந்த, அல்லது 63ஆம் பிரிவின் கீழ் ஏற்கநேரிட்ட தகுதிக்கேடு அரசு ஆணை ஒன்றினால் அகற்றப்படுகிறது என்றாலும் என்றப்போதும், இடைக்காலத்தில் ஒழிவிடத்தை (காலியிடத்தை) நிரப்பத் தெரிவு செய்யப்பட்ட ஆள், அவ்வாறு மீண்டும் அமர்த்தியதன்மேல், பதவியை ஒழிவு (காலி) செய்ய வேண்டும்.

(3) உட்பிரிவு (1)இன் பிரிவுக்கூறு (ஒ)இன் கிழ், ஆள் ஒருவர் மன்ற உறுப்பினராக இருப்பது அற்றுப்போகிறவிடத்து, ஆணையாளர் உடனேயே அத்தகைய ஆளுக்கு எழுத்துருவில் அந்த உண்மை விவரத்தைத் தெரிவித்தலும், அது பன்றி மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அதற்கு அறிக்கை கொடுத்தலும் வேண்டும். அத்தகைய ஆள், பதவியில் மீண்டும் அமர்த்துவதற்குத் தாமாகவோ, அல்லது அடுத்த கூட்டத் தேதிக்கு முன்போ, அல்லது அத்தகைய செய்தியறிவிப்பைத் தாம் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து பதினைந்து நாட்களுக்குள்ளோ மன்றத்திற்கு விண்ணப்பித்திருக்கிறார் என்றால், நகர் மன்றமானது அத்தகைய விண்ணப்பத்தைப் பெற்றபின்பு வரும் அடுத்த கூட்டத்தில் மன்ற உறுப்பினர் பதவியில் அவரை மீண்டும் அமர்த்தலாம்.

ஆனால், மன்ற உறுப்பினர் ஒருவர், அவரது பதிவிக் காலத்தின்போது இரண்டு தடவைகளுக்கு மேல் அல்லது மீண்டும் பதவியில் அமர்த்தப்படுதல் கூடாது.

## பின்னிணைப்பு 2.8

### இந்திய தண்டனைச் சட்டம் 1860-இன் எடுகுறிப்புகள்

**171உ. கைக்கூலிக்கான தண்டனை**

கைக்கூலியாகிய குற்றச்செயலைச் செய்கிற எவராயினும் ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கு சிறைத் தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால், விருந்தோம்பல் மூலமான கைக்கூலி பணத்தண்டத்தால் மட்டுமே தண்டிக்கப்பட வேண்டும்.

விளக்கம் - அவாநிறைவானது உணவு, மதுக்குடிவகை, கேளிக்கை அல்லது ஏற்பாடு என்பதில் அடங்குகிறவிடத்து ”விருந்தோம்பல்” என்பது அந்த வடிவத்தில் அமைந்த கைக்கூலி என்று பொருள்படும்.

**171ஊ. ஒரு தேர்தலில் தகாத செல்வாக்கு அல்லது ஆள்மாறாட்டத்திற்கான தண்டனை**

ஒரு தேர்தலில் தகாத செல்வாக்கு அல்லது ஆள்மாறாட்டம் என்னும் குற்றச் செயலைச் செய்கிற எவராகிலும் ஓராண்டு வரை நீடிக்கலாகும் இரண்டு வகைகளில் ஒரு சிறைத்தண்டனை, அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

பின்னிணைப்பு 2.9

# மாநிலத் தேர்தல் ஆணையம்

No. 1-29/SEC/Civic Elections/2021 புதுச்சேரி, 1 செப்டம்பர் 2021

## ஆணை

ஒரு மக்களாட்சி அரசில், எந்த வாயில் வழியாக நாடு அதனுடைய சட்டமன்றத்தினரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மட்டுமல்லாமல், உள்ளாட்சி அமைப்புகளாகிய கிராமப் பஞ்சாயத்துக்கள், கொம்யூன் பஞ்சாயத்துக்கள் நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும் அதனுடைய சார்பாளர்களைத் தேர்ந்தெடுக்கிறதோ அந்த வாயில் தேர்தல்கள் ஆகும் என்பதாலும்,

வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்களின் தகுதிகள் மற்றும் தகுதிக்கேடுகள், தேர்தல்களையும் தேர்தல் பூசல்களையும் நடத்தும் முறை பற்றிய வகையில், குறித்து சில பொதுவான சிறப்புக் கூறுகள் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களில் உள்ளன என்பதாலும்,

வாக்காளர்கள், தேர்தல் முகவர்கள், பல்வேறு திறப்பாடுகளில் தேர்தல் கடமையாற்றும் அலுவலர்கள், பல்வேறுநிலைகளில் தேர்தல் நடத்துவதைக் கட்டுப்படுத்தும் அலுவலர்கள் ஆகிய குடிமக்களின் ஒத்துழைப்பானது, அவர்களை ஆளுகை செய்யும் சட்டத்திற்கும் தேர்தல்களில் பேணிவரப்பட வேண்டிய தூய்மையுடனும் இணங்கியவாறு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றால், முற்றிலும் தவிர்க்க முடியாததாகிறது என்பதாலும்,

இத்தகைய தேர்தல்களில் தூய்மையைப் பேணிவரும் நோக்கில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேர்மையும் விரும்பத்தக்க பண்பு நலனும் கொண்ட ஆட்கள் மட்டுமே சார்பாளர்களாகப் போட்டியிடுதலும் தேர்ந்தேடுக்கப்படுதலும் இன்றியமையாதன என்பதாலும்,

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப் பரப்பில் செயற்பாட்டிலுள்ள உள்ளாட்சி அமைப்புக்களுக்கான தேர்தல்களைப் பொறுத்தமட்டில் தொடர்புற்ற சட்டங்கள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் போட்டியிடுவதற்கு. குற்றத்தீர்ப்பளிப்புக்கு காரணமாக ஓர் ஆள் எந்த வரைக்கட்டு (நிபந்தனை) களின்மேல் தகுதிக்கேடுற்றவராகக் கூடுமோ அந்த வரைக்கட்டுகளை விதித்தமைத்திருக்கின்றன என்பதாலும்,

i) பின்னிணைப்பு - 1 - வேட்பாளரின் பிரகடனம்

ii) பின்னிணைப்பு - 2 - போட்டியிடும் வேட்பாளருடைய அசையும் / அசையா / சொத்து மற்றும் குற்றப்பின்னணி பற்றிய பிராமணப் பத்திரம் அல்லது பிரகடனம்

iii) பின்னிணைப்பு - 3 - போட்டியிடும் வேட்பாளர் நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்துடன் மேற்கொள்ளும் ஒப்பதந்கள் பற்றிய விவரங்களை அளித்தல்

iv) பின்னிணைப்பு - 4 - தேர்தல் அதிகாரி அளித்த ஆணைக்கு இணங்குதல்

வேட்பாளர்களின் வேட்பு மனுவைத் திறம்படத் கூர்ந்தாய்வு செய்ய இத்தகைய தேர்தல்களில் தேர்தல் நடத்தும் அலுவலரை தேர்தல் நடத்தும் உதவி அலுவலரை இயல்விப்பதற்கு, வேட்பாளர்களில் எவரொருவரின் குற்றத் தீர்ப்புப் பற்றிய தகவல்களைப் பெறும் வகையில், தகுந்த துணையமைவான மற்றும் இடைவிளைவான வகைமுறைகளைச் செய்வது உகந்ததாகிறது என்பதாலும்,

இப்போது. 1973ஆம் ஆண்டு புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துச் சட்டத்தின் அ-பிரிவடனும், 1973ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் 15ஆம் பிரிவுடனும், படித்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய இந்திய அரசமைப்பின் 243-K, உறுப்பு, 243-ZA உறுப்பு ஆகியவற்றால் வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும். மற்றும் இதன் பொருட்டு மாநிலத் தேர்தல் ஆணையத்தை இயல்விக்கும் அனைத்து அதிகாரத்தையும் செலுத்தி அதன் கண்காணிப்பு, வழிகாட்டுதல், கட்டுப்பாடு ஆகியவற்றின் கீழ் இத்தகைய வகைமுறைகளின்படி தேர்தல்களை நடத்துவது தொடர்பாகப் புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையம் பின்வரும் ஆணையைப் பிறப்பிக்கிறது.

1. குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்

(1) இந்த ஆணை, புதுச்சேரி உள்ளாட்சி அமைப்பு தேர்தல்கள் (வேட்புநிலை பற்றிய வேட்புமனு வகையில் துணையமைவான மற்றும் இடை விளைவான வகைமுறைகள் ) ஆணை, 2001 என்று வழங்கப்பெறும்.

(2) இது புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நடத்தப்படும் அனைத்துத் தேர்தல்களுக்கும் பொருந்தத்தக்கதாகும்.

(4) இது உடனடியாகச் செயலாற்றலுக்கு வரும்

2. வேட்பாளரால் அளிக்கப்பட வேண்டிய தகவல்

தொடர்புடைய சட்டத்தின் கீழ் கிராமப் பஞ்சாயத்து, கொம்யூன் பஞ்சாயத்து அல்லது நகராட்சி மன்றத்திலுள்ள பதவியிடம் எதற்கும் தேர்தலில் போட்டியிடுவதற்காக, அத்தகைய தொடர்புடைய சட்டம் எதிலும் குறித்துரைக்கப்பட்டவாறு குற்றச் செயல்கள் எதற்காகவும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒருவரின் தகுதிக் கேட்டிற்கு வகை செய்யும் தொடர்புடைய சட்டத்தில் வகை செய்யப்பட்ட வகைமுறைகளைக் கருத்தில் கொண்டு, வேட்பாளர் ஒவ்வொருவரும், வேட்புமனுவைப் பணிந்து முன்வைக்கையில்,

i) பின்னிணைப்பு - 1 - வேட்பாளரின் பிரகடனம்
ii) பின்னிணைப்பு - 2 - போட்டியிடும் வேட்பாளருடைய அசையும் / அசையா / சொத்து மற்றும் குற்றப்பின்னணி பற்றிய பிராமணப் பத்திரம் அல்லது பிரகடனம்
iii) பின்னிணைப்பு - 3 - போட்டியிடும் வேட்பாளர் நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்துடன் மேற்கொள்ளும் ஒப்பதங்கள் பற்றிய விவரங்களை அளித்தல்
iv) பின்னிணைப்பு - 4 - தேர்தல் அதிகாரி அளித்த ஆணைக்கு இணங்குதல்

வேட்பாளர்களின் வேட்பு மனுவைத் திறம்படத் கூர்ந்தாய்வு செய்ய இத்தகைய தேர்தல்களில் தேர்தல் நடத்தும் அலுவலரை தேர்தல் நடத்தும் உதவி அலுவலரை இயல்விப்பதற்கு, வேட்பாளர்களில் எவரொருவரின் குற்றத் தீர்ப்புப் பற்றிய தகவல்களைப் பெறும் வகையில், தகுந்த துணையமைவான மற்றும் இடைவிளைவான வகைமுறைகளைச் செய்வது உகந்ததாகிறது என்பதாலும்,

3. தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு கட்டளை :

(அ) பின்வரும் ஆவணங்களை வழங்குவதன் காரணமாக சம்பந்தப்பட்ட எந்த சட்டத்தின் கீழும் தேர்தலில் போட்டியிட தகுதி நீக்கம் செய்ய

i) பின்னிணைப்பு - 1 - வேட்பாளரின் பிரகடனம்
ii) பின்னிணைப்பு - 2 - போட்டியிடும் வேட்பாளருடைய அசையும் / அசையா / சொத்து மற்றும் குற்றப்பின்னணி பற்றிய பிராமணப் பத்திரம் அல்லது பிரகடனம்
iii) பின்னிணைப்பு - 3 - போட்டியிடும் வேட்பாளர் நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்துடன் மேற்கொள்ளும் ஒப்பதங்கள் பற்றிய விவரங்களை அளித்தல்
iv) பின்னிணைப்பு - 4 - தேர்தல் அதிகாரி அளித்த ஆணைக்கு இணங்குதல்

(ஆ) தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அனைவரும், வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வு நேரத்திலும், இச்சட்ட வகைமுறையைக் கவனத்தில் கொண்டும் தொடர்புற்ற சட்ட வரைமுறைகளின் கீழ் வேட்பாளரின் வேட்புநிலையின் செல்லுநிலை அல்லது பிறநிலை பற்றி முடிவு செய்தல் வேண்டும்.

(இ) வேட்புமனுவைப் பெற்றுக்கொள்ளும் பொறுப்பிலுள்ள தேர்தல் நடத்தும் அலுவலர், அல்லது நேர்வுக்கேற்ப தேர்தல் நடத்தும் உதவி அலுவலர், பிற்சேர்க்கைக் குறிப்பாணையில் குறித்துரைக்கப்பட்ட குற்றச்செயல்களில் எதற்காகவும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆள் ஒருவரின் தகுதிக்கேட்டுக்கு வகை செய்யும் தொடர்புற்ற சட்டவகை முறையின் கோணத்திலிருந்து வேட்புமனு செல்லுநிலை உள்ளதா என்பது குறித்து, வேட்புமனுவின் கூர்ந்தாய்வு நேரத்தில் உறுதி செய்து கொள்வதற்காக, பிற்சேர்க்கையில் இணைக்கப் பட்டுள்ள ஆணையுறுதியாவனத்தின் படிவமுறை (proforma) யுடன் சேர்த்துப் பிற்சேர்க்கை II இல் உள்ளவாறு இணைக்கப்பட்ட குறிப்பாணையை வேட்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

விளக்கம் : "தொடர்புற்ற சட்டம்" என்னும் சொல்லமைப்பு-

(அ) பஞ்சாயத்துத் தேர்தல் தொடர்பாக, புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துச் சட்டம், 1973 (எண் 10/1973) என்று பொருள்படும்.

(ஆ) நகராட்சிகள் தேர்தல் தொடர்பாக, புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973 (எண் 9/1973) என்று பொருள்படும்.

4, இதற்கு முன்னர் வழங்கப்பட்ட ஆணைகளை மாறாக இந்த ஆணை வழங்கப்படுகிறது.

ராய் P. தாமஸ்,<br>
மாநிலத் தேர்தல் ஆணையாளர்.

## பிறசேர்க்கை - I

தேர்தல் நடத்தும் அலுவலர் / தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பு

| | | |
|---|---|---|
| ........................ கிராமப் பஞ்சாயத்து ......ஆம் எண்<br>........................ தொகுதி உறுப்பனர்<br>........................ கிராமப் பஞ்சாயத்து தலைவர்<br>........................ கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பனர் | } | தேர்தல் |
| ........................ நகராட்சி மன்றம் ......ஆம் எண்<br>........................ தொகுதி மன்ற உறுப்பனர்<br>........................ நகராசட்சி மனற்த் தலைவர் | } | தேர்தல் |

பிரகடனம்

........................ குடியிருந்துவரும் ........................ வயதுள்ளவர்ம் ........................ என்பவரின் மகனும்/மகளும்/மனைவியும் ஆகிய நான் ........................ இதன் மூலம் விழிமியமுறைமையுடன் உறுதிசெய்து பின்வருமாறு

(1) நான் மேலுள்ள தேர்தலுக்கு வேட்புமனுவை (மனுக்களை) தாக்கல் செய்திருக்கிறேன் என்றும்,

(2) மேலுள்ள தேர்தலில் எனது வேட்புநிலை தொடர்பாக, புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையத்தின், புதுச்சேரி உள்ளடாட்சி அமைப்புத் தேர்தல்கள் (வேட்புநிலையின் வேட்புமனு வகையில் துணையமைவான மற்றும் இடையமைவான வகைமுறைகள்) ஆணை, 2001 மூலம் வேண்டுறுத்தியவாறு, வகுத்துரைத்த படிவமுறையில் இத்துடன் நான் தகவலைப் பணிந்து முன்வைக்கிறேன் என்றும்,

(3) முறை படிவத்தில் அளிக்கப்பட்ட தகவல் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானது. மற்றும் பொருட்படுத்தத் தக்க எதுவும் அதிலிருந்து மறைக்கப்பட்டிருக்கவில்லை என்றும் விளம்புகை செய்கிறேன்.

இடம்: வேட்பாளர் கையொப்பம்.

தேதி :

என் முன்பு சரிபார்க்கப்பட்டது
(தேர்தல் நடத்தும் அலுவலர் / தேர்தல்
நடத்தும் உதவி அலுவலர் கையொப்பம்.
முத்திரையுடன்.)

| சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை ஒட்டவும் |
|---|

## பிறசேர்க்கை - II

**வாக்குப்பதிவு அதிகாரி முன்னிலையில் வேட்புமனுவுடன் வேட்பாளர் தாக்கல் செய்ய வேண்டிய பிராமணப் பத்திரம்**

.................................................... கிராமப் பஞ்சாயத்து ......ஆம் எண்
.................................................... தொகுதி உறுப்பனர்
.................................................... கிராமப் பஞ்சாயத்து தலைவர்
............................................ கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பனர்
} தேர்தல்

.................................................... நகராட்சி மன்றம் ......ஆம் எண்
.................................................... தொகுதி மன்ற உறுப்பனர்
.................................................... நகராசட்சி மனற்த் தலைவர்
} தேர்தல்

* தேவையற்றதை அடித்து விடவும்

மேற்கண்ட தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் .................................................... ஆகிய நான்.................................................... ** மகன்/மகள்/மனைவி ............................. வயதுடையவர் .................................................................. என்ற முகவரியில் வசித்துவரும் நான் இதன்மூலம் உறுதிமொழி அளித்து கீழ்கண்டவாறு விளம்புகை செய்கிறேன்.

(1) நான் ........................................ (*அரசியல் கட்சியின் பெயர்)/**ஒரு சுயேட்சை) வேட்பாளராக போட்டியிடுகிறேன். (**பொருந்தாததை அடித்து விடவும்)

(2) என் பெயர் .................................................................. (வார்டு / கம்யூன் பஞ்சாயத்து / நகராட்சி மற்றும் மாநிலத்தின் பெயர்) வரிசை எண் ............ பகுதி எண் ..............இல் இடம்பெற்றுள்ளது.

(3) என்னுடைய தொலைபேசி எண்கள் ..................................., ................................... என்னுடைய மின்னஞ்சல் முகவரி ......................................., என்னுடைய சமூக ஊடக விபரங்கள்

(i) ........................................
(ii) ........................................
(iii) ........................................

**4. நிரந்தர கணக்கு எண் (PAN)* மற்றும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யும் நிலை பற்றிய விவரங்கள்:**

| வ. எண். | பெயர்கள் | நிரந்தர கணக்கு எண் | இறுதியாக வருமான வரி கணக்கு செலுத்திய நிதியாண்டு விவரம் விவரவம் | கடந்த ஐந்து நிதியாண்டுகளில் (மார்ச் 31 வரை) வருமான வரி வருமானத்தில் (ரூபாய் மதிப்பில்) காட்டப்பட்டுள்ள மொத்த வருமானம் | |
|---|---|---|---|---|---|
| 1. | தன்னுடையது | | | (i) | |
| | | | | (ii) | |
| | | | | (iii) | |
| | | | | (iv) | |
| | | | | (v) | |
| 2. | துணைவர் | | | (i) | |
| | | | | (ii) | |
| | | | | (iii) | |
| | | | | (iv) | |
| | | | | (v) | |
| 3. | இந்துக் கூட்டுக் குடும்பம் (HUF) (வேட்பாளார் கர்தா அல்லது கோபசென்சராக இருந்தால்) | | | (i) | |
| | | | | (ii) | |
| | | | | (iii) | |
| | | | | (iv) | |
| | | | | (v) | |
| 4. | சார்பினர் - 1 | | | (i) | |
| | | | | (ii) | |
| | | | | (iii) | |
| | | | | (iv) | |
| | | | | (v) | |
| 5. | சார்பினர் - 2 | | | (i) | |
| | | | | (ii) | |
| | | | | (iii) | |
| | | | | (iv) | |
| | | | | (v) | |
| 6. | சார்பினர் - 3 | | | (i) | |
| | | | | (ii) | |
| | | | | (iii) | |
| | | | | (iv) | |
| | | | | (v) | |

**குறிப்பு: நிரந்தர கணக்கு எண் வைத்திருப்பவர் நிரந்தர கணக்கு எண்ணை குறிப்பிடுவது கட்டாயமாகும் மற்றும் நிரந்தர கணக்கு எண் இல்லாவிட்டால் அது "நிரந்தர கணக்கு எண் ஒதுக்கப்படவில்லை" என்று தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.**

**(4) நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகள்**

**(i) என் மீது குற்றவியல் வழக்குகள் நிலுவையில் இல்லை என்று அறிவிக்கிறேன்.**

*(வேட்பாளர் மீது குற்றவியல் வழக்கு நிலுவையில் இல்லை என்றால் இந்த மாற்றீட்டை குறியிடவும் மற்றும் மாற்று (ii) க்கு எதிராக பொருந்தாது என்று எழுதவும்)*

**அல்லது**

**(ii) கீழ்க்காணும் குற்றவியல் வழக்குகள் என் மீது நிலுவையில் உள்ளன.**

*(வேட்பாளர் மீது நிலுவையில் குற்றவியல் வழக்குகள் இருந்தால், இந்த மாற்றீட்டை குறியீடு செய்து மேலே உள்ள மாற்று (i)க்கு எதிராக பொருந்தாது என்று எழுதி, கீழே உள்ள அட்டவணையில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளின் விவரங்களையும் கொடுக்கவும்)*

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | தொடர்புடைய காவல் நிலையத்தின் பெயர் மற்றும் முகவரியுடன் முதல் தகவல் அறிக்கை எண் | | | |
| (ஆ) | நீதிமனற பெயருடன் வழக்கு எண் | | | |
| (இ) | தொடர்புடைய சட்டப் பிரிவுகள் (பிரிவு எண் ...... கொடுக்கவும் *(எடுத்துக் காட்டு இந்திய குற்றவியல் சட்டப் பிரிவு ........ முதலான)* | | | |
| (ஈ) | குற்றம் தொடர்பான சுருக்கமான விவரங்கள் | | | |
| (உ) | குற்றப்பதிவு செய்யப்பட்டுள்ளனவா? (ஆம் அல்லது இல்லை என்று குறிப்பிடவும்) | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | கேள்வி (உ)ல் பதில் ஆம் எனில், குற்றப்பதிவு செய்யபட்ட தேதியை குறிப்பிடவும் | | | |
| (எ) | சட்ட நடைமுறைகளுக்கு எதிராக ஏதேனும் மேல்முறையீடு / விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா (ஆம் அல்லது இல்லை என்று குறிப்பிடவும்) | | | |

(5) **தண்டனைக்குரிய வழக்குகள்**

a. **நான் எந்த ஒரு குற்றவியல் வழக்குகள் அல்லது குற்ற நடவடிக்கைக்காக தண்டனை பெறவில்லை என விளம்புகை செய்கிறேன்.**

*(வேட்பாளர் தண்டனை பெறவில்லை என்றால் இந்த மாற்றீட்டை குறியிடவும் மற்றும் மாற்று (ii) க்கு எதிராக பொருந்தாது என்று எழுதவும்)*

**அல்லது**

b. **நான் கீழ்க்காணும் குற்றவியல் வழக்குகள் மீது தண்டனை பெற்றுள்ளேன்.**

*(வேட்பாளர் தண்டனை பெற்று இருந்தால், இந்த மாற்றீட்டை குறியீடு செய்து மேலே உள்ள மாற்று (i)க்கு எதிராக பொருந்தாது என்று எழுதி, கீழே உள்ள அட்டவணையில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளின் விவரங்களையும் கொடுக்கவும்)*

**அட்டவணை**

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | வழக்கு எண் | | | |
| (ஆ) | நீதிமன்றத்தின் பெயர் | | | |
| (இ) | தொடர்புடைய சட்டப் பிரிவுகள் (பிரிவு எண் ...... கொடுக்கவும் (எடுத்துக் காட்டு இந்திய குற்றவியல் சட்டப் | | | |
| (ஈ) | தண்டனை பெற்ற குற்றம் தொடர்பான சுருக்கமான விவரங்கள் | | | |
| (உ) | தண்டனை பெற்ற ஆணையின் நாள்கள் | | | |
| (ஊ) | விதிக்கப்பட்ட தண்டனைகள் | | | |
| (எ) | தண்டனைக்கு எதிராக ஏதேனும் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா (ஆம் அல்லது இல்லை என்று குறிப்பிடவும்) | | | |
| (ஏ) | மேலே உள்ள (ஏ) க்கு பதில் ஆம் எனில், மேல்முறையீட்டின் விவரங்களையும் தற்போதைய நிலையையும் கொடுக்கவும் | | | |

(6 அ )நிலுவையில் உள்ள அனைத்து குற்றங்ககள் பற்றி எனது அரசியல் கட்சிக்கு முழுமையான மற்றும் தற்போதைய தகவல்களையும் மற்றும் பத்திகள் (5) மற்றும் (6) இல் கொடுக்கப்பட்டுள்ள தண்டனைகள் பெற்ற வழக்குகள் அனைத்தையும் அளித்துள்ளேன்.

[5 (i) மற்றும் 6 (i) இவை, பொருந்தவில்லையெனில் வேட்பாளர்கள் தெளிவாக பொருந்தாது என்று எழுத வேண்டும்]

குறிப்பு:

(1) விவரங்கள் தெளிவாகவும் தெளிவாகவும் மொத்த எழுத்துக்களில் உள்ளிடப்பட வேண்டும்.
(2) ஒவ்வொரு பொருளுக்கும் எதிராக வெவ்வேறு நெடுவரிசைகளின் கீழ் ஒவ்வொரு வழக்கிற்கும் தனித்தனியாக கொடுக்கப்பட வேண்டிய விவரங்கள்.
(3) விவரங்கள் தலைகீழ் காலவரிசைப்படி கொடுக்கப்பட வேண்டும், அதாவது, மற்ற வழக்குகளுக்கான தேதி வரிசையில் முதலில் குறிப்பிடப்பட வேண்டிய சமீபத்திய வழக்கு
(4) தேவைப்பட்டால் கூடுதல் தாள் சேர்த்துக்கொள்ளலாம்.
(5) மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் ரிட் மனு (சி) 2011 இன் எண்.536 (W.P. (C) No.536 of 2011) தீர்ப்புக்கு இணங்க, அனைத்து தகவல்களையும் வழங்குவதற்கான பொறுப்பு வேட்பாளருக்கு உள்ளது.

(6) என்னுடைய, என் துணைவியார் மற்றும் என்னைச் சார்ந்துள்ள அனைத்து சொத்துக்களின் (அசையும் மற்றும் அசையா சொத்துக்கள்) விவரங்களை நான் கீழே கொடுக்கிறேன்:

(அ) அசையும் சொத்துக்களின் விவரங்கள்

குறிப்பு 1. கூட்டு உரிமையின் அளவைக் குறிக்கும் கூட்டுப் பெயரில் உள்ள சொத்துகளும் கொடுக்கப்பட வேண்டும்

குறிப்பு 2. வைப்பு/முதலீடு தொடர்பாக அவை குறித்த எண், தொகை, வைப்புத்தொகை தேதி, திட்டம், வங்கியின் பெயர்/நிறுவனம் மற்றும் கிளை உள்ளிட்ட விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பு 3. பட்டியலிடப்பட்ட நிறுவனங்களைப் பொறுத்தவரை பங்குச் சந்தையில் தற்போதைய சந்தை மதிப்பின் படி மற்றும் பட்டியலிடப்படாத நிறுவனங்களின் புத்தகங்களின்படி பத்திரங்கள்/பங்கு பத்திரங்களின் மதிப்பு கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பு 4. 'சார்ந்திருப்பவர்' என்றால் பெற்றோர், மகன் (கள்), மகள் (கள்) அல்லது வேட்பாளர் அல்லது மனைவி அல்லது வேறு எந்த நபரும் இரத்தம் அல்லது திருமணம் மூலம் வேட்பாளராக இருக்க வேண்டும், அவர்களின் வாழ்வாதாரத்திற்காக தனி வருமானம் இல்லாத மற்றும் வேட்பாளரை சார்ந்துள்ளவர்கள்.

குறிப்பு 5. ஒவ்வொரு முதலீட்டிற்கும் தனித்தனியாக தொகை உள்ளிட்ட விவரங்கள் கொடுக்கப்பட வேண்டும்

**குறிப்பு 6. அயல்நாடுகளில் உள்ள சொத்துக்களின் வருமானம் மற்றும் உரிமை ஆகிய விவரங்களில் இருக்க வேண்டும்**

**விளக்கம் - இந்த படிவத்தின் நோக்கத்திற்காக, "அயல் நாட்டிலுள்ள சொத்துக்கள்" என்ற வெளிப்பாடானது, வெளிநாட்டு வங்கிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள வேறு எந்த அமைப்பு அல்லது நிறுவனத்தில் உள்ள அனைத்து வைப்புத்தொகைகள் அல்லது முதலீடுகளின் விவரங்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியது.**

| வ. எண் | விவரங்கள் | தன்னுடையது | துணைவர் | இந்துக் கூட்டுக் குடும்பம் | சார்ந்திருப்பவர் 1 | சார்ந்திருப்பவர் - 2 | சார்ந்திருப்பவர் - 3 |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | ரொக்கக் கையிருப்பு | | | | | | |
| (ii) | வங்கி கணக்குகளில் உள்ள வைப்புத்தொகை விவரங்கள் (FDRகள், கால டிபாசிட்கள் மற்றும் சேமிப்பு கணக்குகள் உட்பட மற்ற அனைத்து வகையான வைப்புத்தொகைகள்), நிதி நிறுவனங்களுக்கான வைப்புத்தொகை, வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அத்தகைய ஒவ்வொரு வைப்புத்தொகையிலும் உள்ள தொகை | | | | | | |
| (iii) | பத்திரங்கள், கடன் பத்திரங்கள்/ பங்குகள் மற்றும் நிறுவனங்கள்/ பரஸ்பர நிதிகள் மற்றும் பிறவற்றில் உள்ள முதலீட்டின் விவரங்கள் மற்றும் தொகை. | | | | | | |
| (iv) | தேசிய சிறு சேமிப்பு, தபால் சேமிப்பு, காப்பீடுகள் மற்றும் தபால் அலுவலகம் அல்லது காப்பீட்டு நிறுவனத்தில் உள்ள எந்த நிதி கருவிகளிலும் முதலீடு மற்றும் தொகை பற்றிய விவரங்கள் | | | | | | |
| (v) | நிறுவனம், நிறுவனம், அறக்கட்டளை போன்ற எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் முன்கூட்டியே வழங்கப்பட்டது மற்றும் கடனாளிகளிடமிருந்து பெறத்தக்கவை மற்றும் தொகை | | | | | | |
| (vi) | மோட்டார் வாகனங்கள்/ விமானங்கள்/படகுகள்/கப்பல்கள் (பதிவு விவரங்களின் விவரங்கள் | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | முதலியன வாங்கிய ஆண்டு மற்றும் தொகை) | | | | | | |
| (vii) | நகை, பொன் மற்றும் மதிப்புமிக்க பொருள் (கள்) (எடை மற்றும் மதிப்பு விவரங்களை கொடுக்கவும்) | | | | | | |
| (viii) | உரிமைகோரல்களின் மதிப்பு போன்ற வேறு ஏதேனும் சொத்துக்கள் / வட்டி | | | | | | |
| (ix) | மொத்த மதிப்பு | | | | | | |

**ஆ. அசையாச் சொத்துகளின் விவரங்கள்**

**குறிப்பு 1. கூட்டு உடைமையில் உள்ள சொத்துக்கள் கூட்டு உரிமையின் அளவைக் குறிக்க வேண்டும்.**

**குறிப்பு 2. ஒவ்வொரு நிலம் அல்லது கட்டிடம் அல்லது அடுக்ககம் இந்த வடிவத்தில் தனித்தனியாக குறிப்பிடப்பட வேண்டும்.**

**குறிப்பு 3. அயல்நாடுகளில் உள்ள சொத்துக்களின் வருமானம் மற்றும் உரிமை ஆகிய விவரங்களில் இருக்க வேண்டும்**

| வ. எண். | விவரங்கள் | தன்-னுடையது | துணைவர் | இந்துக் கூட்டுக் குடும்பம் | சார்ந்-திருப்பவர்-1 | சார்ந்-திருப்பவர்-2 | சார்ந்-திருப்பவர்-3 |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | வேளாண்மை நிலங்கள்<br><br>இடங்கள்<br><br>நிலஅளவை எண்கள் | | | | | | |
| | பரப்பளவு<br>(மொத்தமாக ஏக்கரில்) | | | | | | |
| | மரபுரிமை சொத்தா இல்லையா (ஆம் இல்லை) | | | | | | |
| | சுயமாக வாங்கியது என்றால், வாங்கிய தேதி | | | | | | |
| | வாங்கியது என்றால், வாங்கிய போது நிலமதிப்பு | | | | | | |
| | நில மேம்பாடு, கட்டுமானம் மூலம் செய்யப்பட்ட முதலீடுகள் | | | | | | |
| | தற்போதைய உத்தேச மதிப்பு | | | | | | |
| (ii) | வேளாண்மை சார்பற்ற நிலங்கள்<br><br>இடங்கள்<br><br>நிலஅளவை எண்கள்<br><br>பரப்பளவு | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | (மொத்தமாக ஏக்கரில்) | | | | | | |
| | மரபுரிமை சொத்தா இல்லையா (ஆம் இல்லை) | | | | | | |
| | சுயமாக வாங்கியது என்றால், வாங்கிய தேதி | | | | | | |
| | வாங்கியது என்றால், வாங்கிய போது நிலமதிப்பு | | | | | | |
| | நில மேம்பாடு, கட்டுமானம் மூலம் செய்யப்பட்ட முதலீடுகள் | | | | | | |
| | தற்போதைய உத்தேச மதிப்பு | | | | | | |
| (iii) | வணிகக் கட்டடிங்கள்<br><br>இடங்கள்<br><br>நிலஅளவை எண்கள் | | | | | | |
| | பரப்பளவு (மொத்தமாக சதுரஅடியில்) | | | | | | |
| | கட்டப்பட்டுள்ள மொத்த பரப்பளவு (மொத்தமாக சதுரஅடியில்) | | | | | | |
| | மரபுரிமை சொத்தா இல்லையா (ஆம் இல்லை) | | | | | | |
| | சுயமாக வாங்கியது என்றால், வாங்கிய தேதி | | | | | | |
| | வாங்கியது என்றால், வாங்கிய போது நிலமதிப்பு | | | | | | |
| | நில மேம்பாடு, கட்டுமானம் மூலம் செய்யப்பட்ட முதலீடுகள் | | | | | | |
| | தற்போதைய உத்தேச மதிப்பு | | | | | | |
| (iv) | குடியிருப்பு கட்டடிங்கள் (அடுக்கங்கள் உட்பட)<br><br>இடங்கள்<br><br>நிலஅளவை எண்கள் | | | | | | |
| | பரப்பளவு (மொத்தமாக சதுரஅடியில்) | | | | | | |
| | கட்டப்பட்டுள்ள மொத்த பரப்பளவு (மொத்தமாக சதுரஅடியில்) | | | | | | |
| | மரபுரிமை சொத்தா இல்லையா (ஆம் இல்லை) | | | | | | |
| | சுயமாக வாங்கியது என்றால், வாங்கிய தேதி | | | | | | |
| | வாங்கியது என்றால், வாங்கிய போது நிலமதிப்பு | | | | | | |
| | நில மேம்பாடு, கட்டுமானம் மூலம் செய்யப்பட்ட முதலீடுகள் | | | | | | |
| | தற்போதைய உத்தேச மதிப்பு | | | | | | |
| (v) | மற்றவை (சொத்தின் மூலம் கிடைக்கும் வட்டி) | | | | | | |
| (vi) | மேற்கண்டவற்றின் மொத்த சந்தை மதிப்பு (i) முதல் (v) வரை | | | | | | |

**(8) பொது நிதி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு கொடுபட வேண்டிய பொறுப்புகள்/பாக்கிகள் பற்றிய விவரங்களை நான் கீழே கொடுக்கிறேன்:-**

**(குறிப்பு: தயவுசெய்து வங்கி, நிறுவனம், நிறுவனம் அல்லது தனிநபரின் பெயர் மற்றும் ஒவ்வொரு உருப்படியின் முன்பும் தனித்தனியாக விவரங்களை கொடுக்கவும்)**

| வ. எண் | விவரங்கள் | தன்னுடையது | துணைவர் | இந்துக் கூட்டுக் குடும்பம் | சார்ந்திருப்பவர் 1 | சார்ந்திருப்பவர் - 2 | சார்ந்திருப்பவர் - 3 |
|---|---|---|---|---|---|---|---|
| (i) | கடன்கள் அல்லது செலுத்தப்பட வேண்டியவை<br><br>வங்கி/நிதி நிறுவனங்கள்<br><br>வங்கியின் பெயர் அல்லது நிதி நிறுவனத்தின் பெயர், செலுத்தப்பட வேண்டிய தொகை, கடன் வகை | | | | | | |
| | ஏதேனும் கடன் அல்லது செலுத்தப்பட வேண்டிய<br><br>மேற்குறிப்பிட்டவை தவிர மற்ற நபர்கள் / நிறுவனங்கள்<br><br>பெயர்(கள்), செலுத்தப்பட தொகை மற்றும் கடன் வகை | | | | | | |
| | வேறு ஏதேனும் பொறுப்புகள் | | | | | | |
| | மொத்தப் பொறுப்புகளின் தொகை | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (ii) | அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகைகள்<br><br>அரசு விடுதிகளைக் கையாளும் துறைக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் | (அ) உறுதிமொழி அளிப்பவர் தற்போதைய தேர்தல் அறிவிப்பு தேதிக்கு முந்தைய கடந்த பத்து ஆண்டுகளில் எந்த நேரத்திலும் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தங்குமிடத்தை பயன்படுத்தி உள்ளாரா?<br>(ஆ) வினா (அ)-விற்கு பதில் ஆம் என்றால், கீழ்கண்ட பிரகடனத்தை அளிக்க வேண்டும்<br>(i) அரசு விடுதியின் முகவரி:<br><br>(ஆ) அரசு விடுதிக்காக கீழ்கண்டவற்றிற்கு தொகை எதுவும் நிலுவையில் இல்லை-<br>(அ) வாடகை;<br>(ஆ) மின்சாரக் கட்டணம்;<br>(இ) தண்ணீர் கட்டணம்; and<br>(ஈ) தொலைபேசி கட்டணம் நாள் .............. அன்று (தேதி)<br>(மேற்குறிபிட்ட தேதியானது தேர்தல் அறிவிக்கப்படும் மாதத்திற்கு முந்தைய மூன்றாவது மாதத்தின் கடைசி தேதியாக இருக்க வேண்டும் அல்லது அதற்குப் பிந்திய தேதியாக இருக்க வேண்டும் ].<br><br>குறிப்பு :- ”நிலுவையில்லை சான்றிதழ்” ஆனது மேற்குறிப்பிட்ட வாடகை, மின்சாரக் கட்டணம், தண்ணீர் கட்டணம் மற்றும் தொலைப்பேசி கட்டணம் போன்றவற்றிற்கு சம்பந்த பட்ட அரசு விடுதியிலுந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்) | | | | | ஆம் / இல்லை (*உரியவற்றின் மீது குறியிடவும்*) |
| (iii) | அரசுப் போக்குவரத்து துறைக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைகள் (விமானங்கள் மற்றும் வானுர்தி உட்பட) | | | | | | |
| | | **தன்னுடையது** | **துணைவர்** | **இந்துக் கூட்டுக்** | **சார்ந்திருப்பவர் 1** | **சார்ந்திருப்பவர் - 2** | **சார்ந்திருப்பவர் - 3** |
| (iv) | வருமான வரி நிலுவைகள் | | | | | | |
| (v) | சரக்கு மற்றும் சேவை வரி நிலுவைகள் | | | | | | |
| (vi) | நகராட்சி/சொத்து வரி நிலுவைகள் | | | | | | |
| (vii) | மற்ற நிலுவைகள் | | | | | | |
| (viii) | அரசுக்கு செலுத்த வேண்டிய மொத்த நிலுவைத் தொகை | | | | | | |
| (ix) | வேறு ஏதேனும் சர்ச்சைக்குரிய பொறுப்புகள் இருந்தாலும், அப்படிப்பட்ட தொகை மற்றும் எவர் முன் அது சர்ச்சைக்குள்ளாகி உள்ளது என்பதை குறிப்பிடவும் | | | | | | |

(9) வேலை / தொழில் பற்றிய விவரங்கள்

(அ) தன்னுடையது ..............................................

(ஆ) துணைவர் ..............................................

(9அ) வருவாய் ஆதாரம்

(அ) தன்னுடையது ..............................................

(ஆ) துணைவர் ..............................................

(இ) சார்புடையவர்கள் ஈட்டும் வருமானம் ஏதேனும் இருந்தால்...............................

(9ஆ) குறிப்பிட்ட அரசு மற்றும் எந்தவொரு பொது நிறுவனம் அல்லது நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள்

(அ) வேட்பாளர் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்த விவரங்கள்

(ஆ) துணைவியர் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்த விவரங்கள்

(இ) சார்புடையவர்கள் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்த விவரங்கள்

(ஈ) இந்துக் கூட்டுக்குடும்பம் அல்லது ட்ரஸ்ட் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களில் வேட்பாளர் அல்லது துணைவர்க்கு உள்ள விருப்பங்கள்

(உ) வேட்பாளர் அல்லது வாழ்க்கைத் துணைவர் அல்லது சார்புடையவர்கள் கூட்டாளிகளாக இருக்கும் கூட்டாண்மை நிறுவனங்களால் ஒப்பந்தங்களின் விவரங்கள்

(ஊ) வேட்பாளர் அல்லது வாழ்க்கைத் துணைவர் அல்லது சார்புடையவர்கள் பங்கு கொண்டுள்ள தனியார் நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்த விவரங்கள்

(10) என்னுடையக் கல்வித் தகுதி

(சான்றிதழ் /டிப்ளோமா / பட்டப்படிப்பின் முழு வடிவம், பள்ளி / கல்லூரி / பல்கலைக்கழகத்தின் பெயர் மற்றும் பாடநெறி முடிந்த ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிடும் உயர்கல்வி பெற்ற பள்ளி / பல்கலைக்கழக கல்வி விவரங்களைக் கொடுங்கள்.)

## பகுதி - ஆ

### (11) பகுதி (அ)-வில் கொடுக்கபட்ட விவரங்களின் சுருக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1. | | வேட்பாளரின் பெயர் | திரு/திருமதி/செல்வி |
| 2. | | முழு அஞ்சல் முகவரி | |
| 3. | | தொகுதி மற்றும் மாநிலத்தின் எண் மற்றும் பெயர் | |
| 4. | | வேட்பாளர் சார்ந்த கட்சியின் பெயர் (கட்சி இல்லையெனில் சுயேட்சை என்று குறிப்பிடவும்) | |
| 5. | | மொத்தமுள்ள குற்றவியல் வழக்குகள் | |
| 6. | | குற்றம் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | | | நிரந்தர கணக்கு எண் | கடைசியாக வருமான வரி தாக்கல் செய்த நிதியாண்டு | காட்டிய மொத்த வருமானம் |
| | (a) வேட்பாளர் | | | | |
| | (b)துணைவர் | | | | |
| | (c) இந்துக் கூட்டுக் குடும்பம் | | | | |
| | (c) சார்புடையவர் | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | | | சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளின் விவரங்கள் (அயல்நாட்டிலுள்ள சொத்துக்கள் உட்பட) (ரூபாயில்) | | | | | |
| | | விவரம் | தன்னுடையது | துணைவர் | இந்துக் கூட்டுக் | சார்ந்திருப்பவர் 1 | சார்ந்திருப்பவர் - 2 | சார்ந்திருப்பவர் - 3 |
| A. | | அசையும் சொத்துக்கள் (மொத்த மதிப்பு) | | | | | | |
| B. | | அசையாச் சொத்துக்கள் | | | | | | |
| | I. | சுயமாக வாங்கிய அசையாச் சொத்தின் விலை | | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | II. | அசையாச் சொத்துக்களை வாங்கியபின் மேம்பாடு/கட்டு மானம் செய்திருந்தால் அதன் மதிப்பு | | | | | | |
| | | தோராய சந்தை மதிப்பு (அ) சுயமாக வாங்கிய சொத்துக்கள் (மொத்த மதிப்பு) (ஆ) மரபுரிமை சொத்துக்கள் (மொத்த மதிப்பு) | | | | | | |
| 9. | | | பொறுப்புகள் | | | | | |
| | (i) | அரசுக்கான நிலுவைகள் (மொத்தம்) | | | | | | |
| | (ii) | வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் பிறவகைகளில் பெற்றக் கடன்கள் (மொத்தம்) | | | | | | |
| 10. | | | சர்ச்சையில் இருக்கும் பொறுப்புகள் | | | | | |
| | (i) | அரசுக்கான நிலுவைகள் (மொத்தம்) | | | | | | |
| | (ii) | வங்கிகள், நிதிநிறுவனங்கள் மற்றும் பிறவகைகளில் பெற்றக் கடன்கள் (மொத்தம்) | | | | | | |
| 11. | | | உயர்கல்வித் தகுதி<br>(சான்றிதழ் / டிப்ளோமா / பட்டப்படிப்பின் முழு வடிவம், பள்ளி / கல்லூரி / பல்கலைக்கழகத்தின் பெயர் மற்றும் பாடநெறி முடிந்த ஆண்டு ஆகியவற்றைக் குறிப்பிடும் உயர்கல்வி பெற்ற பள்ளி / பல்கலைக்கழக கல்வி விவரங்களைக் கொடுங்கள்.) | | | | | |

## சரிபார்த்தல்

1, மேலே பெயரிடப்பட்ட உறுதிமொழி அளிப்பவர், இந்த உறுதிமொழியின் உள்ளடக்கங்கள் யாவும் நான் அறிந்த வரையில் உண்மை மற்றும் சரியானது என்பதை உறுதிசெய்து, அதன் எந்தப் பகுதியும் பொய்யானது மற்றும் எந்தப் பொருளும் மறைக்கப்படவில்லை. நான் மேலும் அறிவிக்கிறேன்:-

(அ) மேலே உள்ள பகுதி A மற்றும் B இன் 5 மற்றும் 6 வது இனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, என் மீது தண்டனை அல்லது நிலுவையில் உள்ள வழக்கு எதுவும் இல்லை;

(ஆ) பாகம் A இன் பகுதி 7 மற்றும் 8 மற்றும் மேலே உள்ள பகுதி B யின் 8, 9 மற்றும் 10 ஆகிய இனங்களைத் தவிர, எனக்கு, என் மனைவிக்கு அல்லது என்னைச் சார்ந்திருப்பவர்களுக்கு எந்த சொத்து அல்லது பொறுப்பும் இல்லை.

……………………….இடதில் …………………..ஆம் தேதியில் சரிபார்க்கப்பட்டது.

---

<u>உறுதிமொழி அளிப்பவர்</u>

குறிப்பு: 1. வேட்புமனு தாக்கல் செய்யும் கடைசி நாளன்று மாலை 3.00 மணிக்குள் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

குறிப்பு: 2. உறுதிமொழி ஆணையர் அல்லது முதல்நிலை செயலாக்க நடுவர் அல்லது ஒரு பொதுச் சான்றுரைஞர் (நோட்டரி) ஆகியோர் முன்னிலையில் உறுதிமொழி எடுக்க வேண்டும்.

குறிப்பு: 3. அனைத்து நெடுவரிசைகளும் நிரப்பப்பட வேண்டும் மற்றும் எந்த நெடுவரிசையும் காலியாக இருக்கக்கூடாது. எந்தவொரு இனத்திற்கு வழங்குவதற்கு எந்த தகவலும் இல்லை என்றால், "இல்லை" அல்லது "பொருந்தாது", வழக்கில் குறிப்பிடப்பட வேண்டும்.

குறிப்பு: 4. உறுதிமொழிப்பத்திரம் தட்டச்சு செய்யப்பட வேண்டும் அல்லது தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதப்பட வேண்டும்.

குறிப்பு: 5. உறுதிமொழிப் பத்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் உறுதிமொழி அளிப்பவர் கையொப்பமிட வேண்டும் மற்றும் உறுதிமொழிப்பத்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் உறுதிமொழி ஏற்கப்பட்ட பொதுச் சான்றுரைஞரின் (நோட்டரி) அல்லது உறுதிமொழி ஆணையர் அல்லது முதல்நிலை செயலாக்க நடுவரின் முத்திரைப் பதிக்கப்பட வேண்டும்.

………………………………………. இடத்தில் ……………………………………………………… குறித்த தேதியில் சரிப்பார்க்கப்பட்டது.

உறுதிமொழி அளிப்பவர்

## பின்னிணைப்பு - III

### உறுதிமொழி

நகராட்சித் தலைவர்/உறுப்பினர்/கொம்யூன் பஞ்சாயத்து உறுப்பினர்/கிராமப் பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலுக்காக ........................................... நகராட்சி/கொம்யூன் பஞ்சாயத்திலிருந்து போட்டியிடும் வேட்பாளர், தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பு, வேட்புமனு தாக்கல் செய்யும்போது, அதனுடன் உறுதிமொழியையும் சேர்த்துத் தாக்கல் செய்யவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் ................................................ என்னும் முகவரியில் வசிக்கும் ......................................... என்பவரின் **மகன்/மகள்/மனைவி .............................. வயதுடைய ...................................... ...........................................நான், இதன்மூலம் பின்வருமாறு உறுதியளிக்கிறேன்.

(1) ...................................................... ஆல் நான் ஒரு வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளேன்.

(**அரசியல் கட்சியின் பெயர்/தனி (சுயேட்சை) வேட்பாளர்)
(** பொருந்தாதவற்றை அடித்துவிடவும்)

(2). என்னுடைய பெயர் ....................................இல் (பகுதி மற்றும் நகராட்சி/கொம்யூன் பஞ்சாயத்தின் பெயர்) ...................... பகுதி எண்ணின் .......................வரிசை எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(3) ......................................... என்னுடைய தொலைபேசி எண்(கள்) மற்றும் ......................................... என்னுடைய மின்னஞ்சல் முகவரி (இருந்தால்) மற்றும்

(i) ...........................................
(i) ...........................................
(i) ...........................................

ஆகியவை என்னுடைய சமூக ஊடகக் கணக்குகள்

**சரிபார்த்தல்**

நான், மேலே பெயரிடப்பட்ட உறுதிமொழி அளிப்பவர், இந்த பணிப்பொறுப்பு உள்ளடக்கங்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கையின் படி உண்மை மற்றும் சரியானது என்பதை உறுதிசெய்து, அதன் எந்தப் பகுதியும் பொய்யாக இல்லை, மேலும் பொருள் எதுவும் அங்கு மறைக்கப்படவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

(அ) தற்பொழுது எந்த வகையான ஒப்பந்த உடன்படிக்கைகளும் ................................................ நகர்மன்றம் / கிராமப் பஞ்சாயத்துடன் இல்லை.

(ஆ) எனக்கோ, எனது துணைவியர் அல்லது என்னை சார்ந்தோர் எவருக்கும் தற்பொழுது எந்த வகையான ஒப்பந்த உடன்படிக்கைகளும் ................................................ நகர்மன்றம் / கிராமப் பஞ்சாயத்துடன் இல்லை.

................................................ இடத்தில் ........................................................................ குறித்த தேதியில் சரிப்பார்க்கப்பட்டது.

உறுதிமொழி அளிப்பவர்

---

குறிப்பு 1 இவ்வுறுதிமொழியானது வேட்புமனுத்தாக்கலுக்கான இறுதிநாளன்று மதியம் 3.00 மணிக்குள் நிரப்பப்படவேண்டும்.

குறிப்பு 2. இவ்வுறுதிமொழியானது சத்தியப் பிரமாண ஆணையர் அல்லது முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் அல்லது ஒரு பொது நோட்டரி முன்னிலையில் செய்யப்பட வேண்டும்.

குறிப்பு 3. அனைத்து நெடுவரிசைகளும் நிரப்பப்பட வேண்டும் மற்றும் எதையும் நிரப்பாமல் விடக்கூடாது. ஏதேனும் சிலவற்றிற்கு அளிக்கப்பட வேண்டிய தகவல் இல்லையெனில் "இல்லை" அல்லது "பொருந்தாது" என்று நிரப்பப்பட வேண்டும்.

குறிப்பு 4. உறுதிமொழியானது தெளிவாக எழுதப்படவோ அல்லது தட்டச்சு செய்யப்படவோ வேண்டும்.

## வேட்புமனுவுடன் இணைக்கப்பட வேண்டியவை

புதுவை ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்புமனுவுடன் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள்.

(1) வைப்பு செலுத்தியதற்கான ரசீது

(2) ரூ.20 மதிப்புள்ள முத்திரைத்தாளில் நோட்டரி மூலம் பெறப்பட்ட பிரமாணப் பத்திரம்.

(3) நகராட்சி / கிராமப் பஞ்சாயத்து ஆணையரிடம் "நிலுவை ஏதும் இல்லை" எனப் பெறப்பட்ட சான்றிதழ்

(4) வாக்காளர் பட்டியல் ஆவணத்தில் சான்றளிக்கப்பட்ட நகல், போட்டியிடும் வேட்பாளரின் பெயரும் நகராட்சியில் உள்ள வார்டு கவுன்சிலர் பதவிக்கு ஒரு வார்டில் இருந்து மற்றொரு வார்டுக்கு போட்டியிடும் வேட்பாளருக்கான வேட்பு மனுவுடன் இணைக்கப்பட வேண்டும். வார்டு மற்றொரு கிராம பஞ்சாயத்து வார்டு மற்றும் ஒரு கிராமப் பஞ்சாயத்து வார்டில் இருந்து மற்றொரு கிராமப் பஞ்சாயத்து வார்டுக்கு முறையே கிராம பஞ்சாயத்து உறுப்பினர் /கிராமப் பஞ்சாயத்து வார்டு கவுன்சிலர் பதவிக்கு.

**பின்னிணைப்பு - IV**

**குறிப்பாணை எண் :** **தேதி :**

**அனுப்புநர்,**

**தேர்தல் நடத்தும் அலுவலர் / தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்**
……………………………………………

**பெறுநர்,**
……………………………………………
……………………………………………
……………………………………………
**(வேட்பாளரின் பெயரும் முகவரியும்)**

……………………………………………… **கிராமப் பஞ்சாயத்து ……ஆம் எண்**
……………………………………………… **தொகுதி உறுப்பினர்** } **தேர்தல்**
……………………………………………… **கிராமப் பஞ்சாயத்து தலைவர்**
……………………………………… **கொம்யூன் பஞ்சாயத்து மன்ற உறுப்பினர்**

……………………………………………… **நகராட்சி மன்றம் ……ஆம் எண்**
……………………………………………… **தொகுதி மன்ற உறுப்பினர்** } **தேர்தல்**
……………………………………………… **நகராசட்சி மனற்த் தலைவர்**

**உங்களுடைய கவனம், புதுச்சேரி உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்கள் வேட்புநிலையின் வேட்புமனு வகையில் துணையமைவான மற்றும் இடையமைவான வகைமுறைகள்) ஆணை, 2021க்கு ஈர்க்கப்படுகிறது.**

**(2) மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951, பிரிவு 8இன் கீழும், தொடர்புற்ற சட்டங்களின் வகைமுறைகளில் ஏதொன்றின்கீழும், நீங்கள் தகுதிக்கேட்டினால் பாதிக்கப்படவில்லை என்று மனநிறைவு கொள்ளும் பொருட்டு, தங்கள் கையொப்பமுள்ள ஒரு விளம்புகை மூலம் நிலைக்கக்கூடிய, இத்துடனுள்ள முறைமைப் படிவத்தில் கேட்டுள்ளபடி தகவலளிக்குமாறு இதன் மூலம் நீங்கள் வேண்டுறுத்தப்படுகிறீர்கள்.**

**(3) உங்களின் தவறான தகவலளிப்பு எதுவும், சட்டப் படியான நடவடிக்கைக்கு உங்களை உள்ளாக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**(4) வேண்டுறுத்தப்பட்ட தகவல், வேட்பு மனுவுடன் சேர்த்து. அல்லது எந்த நேர்விலும் வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வு தொடங்குவதற்கு முன்பு அளிக்கப்பட வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

**தேர்தல் நடத்தும் அலுவலர்.**

# இயல் - III

## வேட்புமனுக்கள் மற்றும் சின்னங்கள் ஒதுக்குகை

3.1 ஒரு வேட்பாளராக நிற்பதற்கும் ஓர் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் வேண்டிய தேவைப்படும் அனைத்துத் தகுதிகளையும் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்றும், அத்தகைய உறுப்பினர் நிலைக்கான தகுதிக்கேடுகளில் ஏதொன்றாலும் பாதிக்கப்படவில்லை, ஆதலால் தேர்தலில் ஒரு வேட்பாளராக நீங்கள் நிற்க விரும்புகிறீர்கள் என்றும், ஒருகால், நீங்கள் கண்டு கொண்டிருப்பீர்கள். நீங்கள் இதனை இருநிகழ்வுகளில் கொள்ளக்கூடும். நீங்கள் ஒரு பொதுத் தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்கக்கூடும் அல்லது தற்செயல் ஒழிவிடம் எதையும் நிரப்பும் நோக்கத்திற்காக நடத்தப்படும் ஓர் இடைத்தேர்தலில் ஒரு வேட்பாளராகவும் நீங்கள் நிற்கலாம்.

3.2(அ) நீங்கள் நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்தலில் நிற்கிறீர்கள் என்றால், தலைவராகத் தேர்தலில் போட்டியிட உங்களுக்கு உரிமைப்பாடு கிடையாது.

3.2(ஆ) மன்ற உறுப்பினர் எவரும் தலைவராகத் தேர்தலில் நிற்கும் தகுதிப்பாடு உடையவர் ஆகார்.

3.3 ஒரு தேர்தலுக்கான செயற்படிகள், நகராட்சித் தொகுதியினரை மன்ற உறுப்பினர்களையும், தலைவரையும் தோந்தெடுக்குமாறு கோரி, அதற்கிணங்க நிகழ்வுத்திட்டத்தை நிருணயித்து, மாநிலத்தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கை வெளியிடப்படுவதன் மூலம் தொடங்கிவைக்கப்படுகின்றன. இந்த அறிவிக்கை அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும்.

3.4 மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கட்டளையை அடியொற்றி, தேர்தல் நடத்தும் அலுவலர், தேர்தல் நடத்தப்படவேண்டிய தொகுதி ஒவ்வொன்றிலும் வேட்புமனுக்களை முன்னிடுவதற்கான கடைசித் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்பு, ஆங்கிலம், தமிழ், மலையாளம், தெலுங்கு ஆகிய ழிகளில் படிவம் 1-இல் (பின்னிணைப்பு 3.1) கருதப்படும் தேர்தல் பற்றிய ஓர் அறிவிப்பை வெளியிடுவார். அத்தகைய அறிவிப்புப் பின்வரும் விவரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) வேட்புமனுக்கள் எந்தத் தேதிகளில் எந்த ஆளிடம் எந்த மணிநேரங்களுக்கு இடையே முன்னிடப்பட வேண்டும்;
(ii) வேட்புமனுக்கள் எந்த இடத்தில் எந்த நேரத்தின்போது பெற்றுக்கொள்ளப்படும்;
(iii) வேட்புமனுக்கள் எந்தத் தேதியில் எந்த மணியில் எந்த நேரத்தில் கூர்ந்தாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படும்.
(iv) எந்தக் தேதியன்று, எந்த மணிநேரம் வரை எந்த அலுவலரிடம் வேட்பு மனுவைத் திரும்பப் பெறுதல்ஒப்படைக்கப்படலாம்;

(v) தேர்தலில் போட்டியிடுவது இருக்கும் நிகழ்வில், எந்தத் தேதியன்று. எந்த மணிநேரங்களுக்கு இடையே வாக்குப்பதிவு நடத்தப்படும்.

3.5. வேட்புமனுவின் காலம், அறிவிப்பு வெளியிடப்படுகிற தேதி உள்ளடங்க எட்டு நாட்கள் மட்டுமே வேட்புமனுவைச் செய்வதற்குக் கிடைக்கத்தக்கவையாக இருக்கின்றன.

3.6. வேட்புமனுப் படிவம்:

வேட்புமனு வகுத்துரைக்கப்பட்ட படிவம் 1 (பின்னிணைப்பு 3.2) இல் இருக்க வேண்டும்.

3.7. உங்கள் வேட்புமனுத்தொடர்பான பின்வரும் விவரக் கூறுகளைக் கவனமாக நீங்கள் படிக்கவேண்டும் :

3.7.1 தகுதிகளும் தகுதிக்கேடுகளும்

நீங்கள் வேண்டுறுத்தப்படும் அனைத்துத் தகுதிகளையும் உடையவராதல் வேண்டும் மற்றும் தகுதிக்கேடுகளில் ஏதொன்றாலும் பாதிக்கப்படாதிருத்தல் வேண்டும். முந்திய இயலில், உங்களுக்கு மிக விரிவான வழிகாட்டுதல் இதைப் பொறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

3.7.2 குற்றத்தீர்ப்புகள் எவையேனும் இருப்பின், அவை பற்றிய தகவல்:

முந்திய இயலில் ஏற்கனவே அறிவுறுத்தியவாறு வேண்டுறுத்தப்பட்ட ஆணையுறுதியாவணத்துடன் (காண்க, பின்னிணைப்பு 2.9) சேர்த்து வகுத்துரைத்த படிவ அமைப்பில், மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951 இன் பிரிவு 8இன் கீழ், குற்றத்தீர்ப்புகள் எவையேனுமிருப்பின், அவை தொடர்பான விவரங்களை, உங்களுடைய வேட்புமனுவுடன் சேர்த்து நீங்கள் அளிக்கவேண்டும். வேட்புமனுவுடன் சேர்த்து இத்தகவல் எந்தக் காரணத்தினாலும் அளிக்கப்படவில்லை என்றால், எந்த நேர்விலும், வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வுக்காக நிருணயிக்கப்பட்ட தேதிக்கும் நேரத்திற்கும் முன்பு, அது மேலனுப்பப்பட வேண்டும் இதில் தவறினால், உங்களது வேட்புமனு தேர்தல் நடத்தும் அலுவலரால் மறுத்தொதுக்கப்படுவதற்கு உள்ளாக்கப்படும்.

3.7.3 வேட்புமனுவில் வேட்பாளரின் பெயர் :

நீங்கள் உங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் அது பதிவு செய்யப்பட்டவாறே வேட்புமனுவில் கொடுக்க வேண்டும். எனினும், வாக்காளர் பட்டியலில் உங்களது பெயர் தவறாக உச்சரிக்கப்பட்டாலோ அல்லது சரியில்லாமல் காட்டப்பட்டிருந்தாலோ, நீங்கள் உங்களது சரியான பெயரை வேட்புமனுவில்

கொடுக்க வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்காளர்ப்பட்டியலிலுள்ள அத்தகைய தவற்றைப் புறக்கணிப்பார். அத்தகையதொரு நேர்வில், உங்களது வேட்புமனுவுடன் சேர்த்து வாக்காளர் பட்டியலில் உங்களது பெயரின் தவறு பற்றி, மேலுள்ள உண்மை விவரத்தை உரைக்கும் ஒரு விண்ணப்பத்தையும் நீங்கள் தேர்தல் நடத்தும் அலுவலருக்குப் பணிந்தனுப்பது உங்களுக்குரிய அறிவுரையாகும்.

3.7.4 வகுத்துரைத்த படிவத்தில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட வேண்டிய தேதி:

வகுத்துரைத்த படிவத்தில் வேட்புமனு, 10ஆம் விதியின் கீழ் தேர்தல் அட்டவணையை நிருணயிக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்பு, இயன்ற அளவு விரைவில் அல்லது வேட்புமனு செய்யும் கடைசித் தேதி உள்ளடங்கலாக, அதன்பின்பு எந்தத் தேதியிலும் இணையதள வாயிலாவோ அல்லது நேரிலோ தாக்கல் செய்யப்படலாம்.

பின்குறிப்பு : மாற்று முறையாவணச் சட்டம் 1881இன் கீழ் வரும் பொது விடுமுறை நாளாக அது இருக்கிறது என்றால், வேட்புமனு எதுவும் அத்தகைய நாள் எதிலும் தாக்கல் செய்யப்பட முடியாது.

3.7.5 வேட்புமனு தாக்கல் செய்யும் நேரம்:

வேட்புமனுவானது மேலே சொல்லப்பட்ட நாட்களில் ஏதொன்றிலும் முற்பகல் 11.00 மணிக்கும் பிற்பகல் 3.00 மணிக்கும் இடையில் மட்டுமே இரண்டு வழிகளிலும் தாக்கல் செய்யப்பட முடியும். ஆனால், இணையதள வாயிலாவோ தாக்கல் செய்யும்போது, வேட்பு மனுவை வேட்பாளர்கள் வரைவு செய்தல், திருத்தம் செய்தல் போன்றவற்றை எப்போது வேண்டுமானலும் செய்து கொள்ளலாம். ஆனால், குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே அதனை சமர்ப்பிக்க இயலும்.

3.7.6 ஒரு வேட்புமனு யாரால் முன்னிடப்படக் கூடும் :

உங்களது வேட்புமனு நேர்முகமாக உங்களாலோ அல்லது உங்களை முன்மொழிபவர்களில் எவரொருவராலுமோ முன்னிடப்படலாம். வேறு எவரொருவராலும் அன்று. இதை மிகவும் குறிப்பாக நீங்கள் கவனம் கொள்ளலாம். எதிர்பாராத இடைச்சிக்கல் அல்லது இடர்பாடு எதுவும் எழுதலும், உங்களது வேட்புநிலை இடருக்குள்ளாதலும் கூடாது என்பதை எதிர்நோக்கி, நீங்கள் வேட்புமனுவை நேர்முகமாக முன்னிடவேண்டும் என்பதை உங்களுக்குரிய அறிவுரையாகும். நீங்களோ, உங்களை முன்மொழிபவரோ அஞ்சல் மூலம் வேட்புமனுவை அனுப்பமுடியாது.

3.6a வேட்புமனுக்களின் எண்ணிக்கை

விதி 11 ன் துணை விதி 6 ன் விதியின் கீழ், "நேரிலோ அல்லது இணையதள வாயிலாக" உட்பட அதிகபட்சமாக நான்கு வேட்பு மனுக்கள் மட்டுமே எந்தவொரு வேட்பாளராலும் அல்லது சார்பாகவும் வழங்கப்படலாம் அல்லது அதே வார்டு /

நகராட்சியில் தேர்தலுக்கு ஏற்றுக்கொள்ளப்படலாம். இந்த எண்ணிக்கைக்கு மேல், அதே வார்டுக்கு நீங்கள் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். இந்த எண்ணிக்கைக்கு மேல் ஏதேனும் வேட்பு மனு அல்லது ஆவணங்களை சமர்ப்பிக்க முற்பட்டால், நான்குக்கு அதிகமாக எந்த வேட்பு மனு அல்லது ஆவணங்களையும் சமர்ப்பிக்க உங்களுக்கு உரிமை இல்லை.

3.7.7 ஒரு வேட்புமனு யாருக்கு முன்னிடப்பட வேண்டும் (நேரில்):

உங்கள் வேட்பு மனுவை தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் அலுவலரால் அங்கீகரிக்கப்பட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்க வேண்டும். இந்த அங்கீகரிக்கப்பட்ட உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் படிவம் 1-ல் விதி 10-ன் கீழ் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.7.8 ஒரு வேட்புமனு எவ்விடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் :

வேட்புமனுவானது மேற்கூறிய படிவம் I இல் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தைத் தவிர வேறு எந்த இடத்திலும் வழங்கப்படக்கூடாது. படிவம்-1 இல் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு வெளியே அல்லது குறிப்பிடப்பட்ட அதிகாரியின் இல்லத்தில் வேட்புமனுவை வழங்க முடியாது. வேறு எந்த இடத்திலும் வழங்கப்பட்டால், அது மறுத்தொதுக்கப்படும்.

3.7.9 உங்களது வேட்புமனு யாரால் கையொப்பமிடப்பட வேண்டும் :

நீங்கள் வேட்புமனுப் படிவத்தைப் பார்த்தீர்கள் என்றால், அது உங்களை முன்மொழிபவர் (கள்) கையொப்பத்தையும் அத்துடன் உங்களது சொந்தக் கையொப்பத்தையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை நீங்கள் காண்பீர்கள். உங்களை முன்மொழிபவர்(கள்) கையொப்பமும் உங்களது சொந்தக் கையொப்பமும், அத்தகைய கையொப்பத்திற்காக வேட்புமனுப் படிவத்தில் காட்டப்பட்ட முறையான இடங்களில் இருக்கவேண்டும். முன்மொழிபவர்களின் கையொப்பத்திற்காகச் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் உங்களது கையொப்பத்தை இடுவது அல்லது வேட்பாளரின் கையொப்பத்திற்காகச் கட்டிக்காட்டப்பட்ட இடத்தில் முன்மொழிபவர்(கள்) கையொப்பமிடுவது பற்றிக் கவனத்துடன் இருந்திடுக. ஒரு வேட்புமனு மிகவும் முக்கியமான ஓர் ஆவணம் என்பதையும், மிக உன்னிப்பான கவனம், இயன்ற அளவு துல்லியமாக அதை நிரப்புவதில் கொள்ள வேண்டும் என்பதையும் எப்போதும் நினைவில் கொள்க,

முன்மொழிபவர் ஒருவர், ஒரு வேட்பாளரின் ஒரே ஒரு வேட்புமனுவில் மட்டுமே கையொப்பமிடமுடியும். அவர் தாமே ஒரு வேட்பாளர் என்றால், வேட்புமனு எதிலும் முன்மொழிபவராகக் கையொப்பமிடுதல் ஆகாது.

3.8. உங்களை முன்மொழிபவர்(கள்), நீங்கள் எந்தத் தொகுதியிலிருந்து தேர்தலை நாடுகிறீர்களோ அந்தத் தொகுதியின் ஒரு வாக்காளராக இருக்கவேண்டும். நீங்கள் தேர்தலை நாடுகிற தொகுதியின் வாக்காளர் பட்டியலில் உங்களை முன்மொழிபவர்(கள்) பெயர் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது என்பதை உறுதிசெய்துகொள்க. அவர் பெயர் அதில் இல்லை என்றால், வாக்காளர் பட்டியலில் எவருடைய பெயர் இடம்பெற்றுள்ளதோ, அவர் உங்களை முன்மொழிபவராக இருத்தலும், உங்களது வேட்டபுமனுவில் முன்மொழிபவராகக் கையொப்பமிடுதலும் வேண்டும்.

3.9 வேட்புமனுவில் உங்களால் செய்யப்படவேண்டிய விளம்புகைகள் :

உங்களை முன்மொழிபவரால் செய்யப்பட்ட உங்களது வேட்புமனுவுக்கு ஏற்பிசைவு அளிக்கையில், அந்த வேட்புமனுவிலேயே ஒரு விளம்புகையைச் செய்யுமாறு நீங்கள் வேண்டுறுத்தப்படுகிறீர்கள்.

(அ) முதலாவதாக, உங்களது வயது குறித்து, தலைவருக்கான தேர்தலில் நீங்கள் இருபத்தைந்து வயதுக்குக் குறையாதவராகவும் மன்ற உறுப்பினருக்கான தேர்தலில் இருபத்தோரு வயதுக்கும் குறையாதவராகவும் இருக்க வேண்டும் என்று ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

நீங்கள் உங்களது சரியான வயதை வேட்புமனுவில் கொடுக்கவேண்டும். உங்களது வயது வாக்காளர் பட்டியலில் சரியாகக் குறிக்கப்படவில்லை என நீங்கள் கண்டறிந்தால், வேட்புமனுவில் நீங்கள் உங்களது தற்போதைய வயதை மட்டுமே கொடுக்க வேண்டும், வாக்காளர் பட்டியலில் காட்டப்பட்ட தவறான வயதை அன்று.

பின்குறிப்பு: உங்களது வயது சட்டமுறையான குறைந்த அளவு வயதுடன் நெருங்கி இருக்கிறது என்றால், அதாவது நீங்கள் இருபத்தோரு வயது மட்டும் அல்லது அதைவிடச் சிறிதே கூடுதலாக உடையவர்கள் என்றாலும், தங்களது வயது பற்றிப் போட்டி வேட்பாளரால் ஒரு மறுப்புரை எழலாம் என்னும் ஓர் அச்சம் இருக்கிறது என்றாலும், உங்களது வயது பற்றிப் போதுமான மெய்ப்பிக்கும் சான்றுடன் நீங்கள் கவசம்பூணுக.

(ஆ) இரண்டாவதாக, படிவம் - இ.யில் (பின்னிணைப்பு 3.3) உங்களது அரசியல் கட்சி குறித்து, புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் தேர்தல் விதிகள், 2002 (பின்னிணைப்பு 3.4) விதி 2இன்கீழ் நீங்கள் அரசியல் கட்சி எதனாலும் நிறுத்திவைக்கப்படுகிற நேர்வில், மாநிலத்தேர்தல் ஆணையம். கட்சி அடிப்படயிைல் நடத்தப்படும் என அறிவிக்கைசெய்தல் வேண்டும், அதற்கிணங்க, ஆணையம் 6-3-2002 தேதியிட்டும் (பின்னிணைப்பு 3.3), 6-3-2002 தேதியிட்டும் (பின்னிணைப்பு 3.5) அறிவிக்கை வெளியிட்டிருக்கிறது. அவை கவனத்துடன் முழுமையாகப் படிக்கப்பட வேண்டும்.

பின்குறிப்பு: ஆனால், ஓர் அரசியல் கட்சியால் நீங்கள் நிறுத்தி வைக்கப்படுவது குறித்த விளம்புகை, நீங்கள் ஒரு சுயேட்சை வேட்பாளராக நிற்கிறீர்கள் என்றால், எழுதல் இல்லை.

(இ) மூன்றாவதாக, வேட்புமனுவில் கொடுக்கப்பட்டவாறு உங்கள் பெயர் உங்கள் தந்தை கணவர் பெயரின் சரியான எழுத்துக்கூட்டி உச்சரிப்பது பற்றியது.

(ஈ) நான்காவதாக, மேலே சொல்லப்பட்ட பொருட்பாடுகளைப் பொறுத்தமட்டில், விளம்புகையிலிருந்து வேறாக, பட்டியல் சாதியினருக்காக ஒதுக்கீடு செய்த ஒரு தொகுதியிலிருந்து தேர்தலுக்கான ஒரு வேட்பாளராக நீங்கள் நிற்கிறீர்கள் என்றால், வேட்புமனுவில் மேற்கொண்டும் ஒரு விளம்புகையை நீங்கள் செய்ய வேண்டியவராகிறீர்கள். நீங்கள் ஒரு பட்டியல் சாதியைச் சேர்ந்தவர் என்றால், பொதுத் தொகுதியிலும் கூட காப்புறுதிப் பிணை வைப்புத்தொகைச் சலுகைக்கு உங்களை உரிமைப்பாடுள்ளவராக்கும் என்பதால், நீங்கள் பொதுத்தொகுதியிலிருந்து ஒரு தேர்தலில் போட்டியிடுகிறீர்கள் என்றாலும்கூட, நீங்கள் அந்நிலைகுறித்து ஒரு விளம்புகையைச் செய்யவேண்டும். விளம்புகையை இயன்ற அளவு துல்லியமாகச் செய்வதில் மிகவும் தனிக்கவனத்துடன் இருந்திடுக. நீங்கள் ஒரு பட்டியல் சாதியைச் சேர்ந்தவர் என்பதை மெய்ப்பிக்கும் (மூல மற்றும் பிறவாறுள்ள) சான்றிதழை வேட்புமனுவுடன் சேர்த்து அளிக்கத் தேவை இல்லை. ஆனால், கூர்ந்தாய்வுக்காகக் குறித்திட்ட தேதிக்கும் நேரத்திற்கும் முன்பு அதை முன்னிலைப்படுத்துவது தேவையாகிறது.

3.10 நீங்கள் வேறொரு தொகுதியின் வாக்காளராக இருக்கிறீர்கள் என்றால், வாக்காளர் பட்டியலின் படியம் ஒன்றை முன்னிலைப்படுத்துதல் :

நீங்கள் வேட்பாளராக நிற்கும் அதே நகராட்சிமன்றத் தொகுதியிருந்து வேறொரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயர் ஒரு வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால், அப்போது, முந்திய தொகுதியின் முழு வாக்காளர் பட்டியலின் படியம் ஒன்றையோ, அல்லது அது இயலாது என்றால், வாக்காளர்பட்டியலின் தொடர்புற்ற பகுதியின் (அதாவது தொடர்புற்ற பகுதி என்பது உங்கள் பெயர் பதியப்பட்டுள்ள வாக்காளர் பட்டியலின் பகுதி எனப்பொருள்படுகிறது) படியம் ஒன்றையோ அல்லது அதுவும் இயலவில்லை என்றால், அப்போது, அத்தகைய பட்டியலில் உங்கள் பெயருக்குத் தொடர்பான உரிய பதிவுகளின் சான்றிதழ்ப் படியம் ஒன்றையோ, உங்களது வேட்புமனுவுடன் சேர்த்து நீங்கள் தாக்கல் செய்யவேண்டும். உங்களது வேட்புமனுவுடன் சேர்த்து இத்தகைய ஆவணங்களில் எதையும், ஏதேனும் காரணம் பொருட்டுத் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால், அப்போது, வேட்புமனுவை கூர்ந்தாய்வு நேரத்தில் இத்தகைய ஆவணங்களில் எதையும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் நீங்கள்

முன்னிலைப் படுத்தவேண்டும், இல்லையெனில், உங்களது வேட்புமனு மறுத்தொதுக்கப்படும்.

3.11 எத்தனை வேட்புமனுக்கள் ஒரே தொகுதியிலிருந்து ஒரு வேட்பாளராக நிற்க உங்களால் தாக்கல் செய்யப்படக்கூடும்-

நீங்கள் ஒரே தொகுதியில் ஒரு வேட்பாளராக நிற்க நான்கு வேட்புமனுக்கள் வரையிலும் தாக்கல் செய்யமுடியும். பிற சொற்களில் கூறுவதென்றால், ஒரே தொகுதியைப் பொறுத்தமட்டில் நீங்கள் நான்கு மனுக்களுக்கு மேல் தாக்கல் செய்யமுடியாது.

3.12 காப்புறுதிப் பிணை வைப்பீடுகள் மற்றும் எப்போது அத்தகைய வைப்பீடுகள் செய்யப்படவேண்டும் :

1. ஒரு வேட்பாளர் ஒரு தேர்தலில் வகுத்துரைத்த காப்புறுதிப்பிணை வைப்பீட்டைச்செலுத்தவேண்டும் எனச் சட்டம் வேண்டுறுத்துகிறது. வைப்பீடு செய்யத்தவறுகை உங்களது வேட்புமனுவைச் செல்லாநிலையது ஆக்கிவிடும். நீங்கள்
தலைவர் தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்க விரும்புகிறீர்கள் என்றால், உங்களால் வைப்பீடாகச் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபாய் பத்தாயிரம் (ரூ.10000) ஆகும். ஆனால், பட்டியல் சாதியின் உறுப்பினராகவுள்ள ஒரு வேட்பாளருக்குச் சலுகை கொடுக்கப்படுகிறது. பட்டியல் சாதி உறுப்பினராகவுள்ள ஆள் ஒரு தலைவர் நிலைக்கு ஒரு வேட்பாளராக நிற்க விரும்புகிறார் என்றால், அவர் ரூபாய் ஐயாயிரம் (ரூ.5000) வைப்பீடாகச் செலுத்த வேண்டும்.

நீங்கள் மன்ற உறுப்பினர்நிலைக்கான வேட்பாளராக இருக்கிறீர்கள் என்றால், நீங்கள் ரூபாய் ஐயாயிரம் (ரூ.5000) மட்டும்) வைப்பீடாகச் செலுத்த வேண்டும். மேலும் நீங்கள் ஒரு பட்டியல் சாதி உறுப்பினர் என்றால் நீங்கள் ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு (ரூ. 2500) வைப்பீடாகச் செலுத்தல் வேண்டும்.

பட்டியல் சாதி வேட்பாளர், பட்டியல் சாதிக்காக ஒதுக்கீடு செய்யப்படாத ஓர் இடத்திற்கு. அதாவது ஒரு பொதுத்தொகுதி இடத்திற்கு, அவர் போட்டியிடுகிறார் என்றாலும்கூட, குறைந்த தொகை வைப்பீடு மட்டுமே தேவைப்படுகிறது என்பதை அருள்கூர்ந்து கவனத்தில் கொள்க.

2. நீங்கள் ஒரே தொகுதியிலிருந்து நான்கு வேட்புமனுக்கள் வரையில் தாக்கல் செய்யக்கூடும் என்று ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அத்தகைய ஒரு நேர்வில், நீங்கள் நான்கு வெவ்வேறு வைப்பீடுகள் செய்யவேண்டியதில்லை. முதல் வேட்புமனுவைப் பொறுத்தமட்டில் நீங்கள் ஒரே ஒரு வைப்பீடு செய்தால். அதுவே போதுமானது மற்ற வேட்புமனுக்களைப் பொறுத்து வைப்பீடு எதுவும் தேவையில்லை. வைப்பீட்டுக்கான மூலக் கருவூலப் பற்றுச்சீட்டை அல்லது

செலுத்துச் சீட்டை, நீங்கள் தாக்கல் செய்த முதல் வேட்புமனுவுடன் நீங்கள் இணைக்க வேண்டும். வைப்பீட்டுக்கான மூலப் பற்றுச்சீட்டின் அல்லது செலுத்துச் சீட்டின் உண்மையான ஒரு படியம் (Copy), உங்களால் தாக்கல் செய்யப்பட்ட பிந்திய வேட்புமனு ஒவ்வொன்றுடனும் இணைக்கப்படலாம். உங்களது எதிர்காலச் சுட்டுகைக்கும் பயன்பாட்டுக்குமாக, அரசு கணக்கைச் செயற்படுத்தும் வங்கியிலிருந்து நீங்கள் பெற்ற கருவூலப் பற்றுச்சீட்டின் அல்லது செலுத்துச் சீட்டின் அலுவல்முறை இரட்டைப்படியத்தை உங்களுடன் எப்போதும் இருத்திவைத்துக் கொள்க.

3. வைப்பீடு இரு வழிகளில் செய்யப்படலாம் என்பதைக் குறிப்பாக நீங்கள் கவனிக்க வேண்டும். உங்களது வேட்புமனுவை தாக்கல் செய்யும் நேரத்தில் கைப்பணமாகத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தொகை வைப்பீடு செய்யப்படலாம். அல்லது அரசு கணக்கைச் செயற்படுத்தும் வங்கியில் நீங்கள் தொகையை வைப்பீடு செய்யலாம். நீங்கள் உங்களது வேட்புமனுவைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் தாக்கல் செய்யும் முன்பு நீங்கள் அவ்வாறு செய்யவேண்டும். ஏற்கனவே சுட்டிக்காட்டியவாறு, நீங்கள் அரசு கணக்கைச் செயற்படுத்தும் வங்கியிலிருந்து இரட்டைப் படியத்தில் நீங்கள் பெற்ற கருவூலப் பற்றுச்சீட்டை அல்லது செலுத்துச் சீட்டை, உங்களது வேட்புமனுவுடன் இணைக்க வேண்டும். உங்களது வேட்புமனுவைத் தாக்கல் செய்யும் நேரத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் கைப்பணமாகத் தொகையை நீங்கள் வைப்பீடு செய்யவில்லை என்றால், அல்லது நீங்கள் உங்களது வேட்புமனுவுடன் கருவூலப் பற்றுச்சீட்டு அல்லது செலுத்துச் சீட்டை இணைக்கவில்லை என்றால், உங்களது வேட்புமனு மறுத்தொதுக்கப்படும்.

4. வைப்பீடு பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் செய்யப்பட வேண்டும்:

"8443- குடியியல் வைப்பீடுகள் -121 தேர்தல் தொடர்பான வைப்பீடுகள் - 1 உள்ளாட்சி அமைப்புத் தேர்தல் தொடர்பான வைப்பீடுகள்'

(5) தண்ட இழப்பாக்கப்பட்டாலன்றி, வைப்பீடு :

(அ) ஒரு வேட்பாளர் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் காட்டப்படவில்லை என்றால், பட்டியல் வெளியிட்ட பின்பு.

(ஆ) ஒரு வேட்பாளர் தேர்தலுக்கு முன்பு இறக்கிறார் என்றால் அவரது இறப்புக்குப் பின்பு,

(இ) ஒரு வேட்பாளர், தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையால்வகுக்கப்பட்ட, வேட்பாளர்கள் அனைவராலும் பதிவு செய்யப்பட்ட செல்லுநிலை வாக்குகளின் மொத்த எண்ணிக்கையில் ஆறில் ஒரு பங்கு வாக்குகளைப் பெறுகிறார் என்றால்,

(ஈ) அவர் , ஒரே ஒரு வைப்பீடு அளவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதியில் போட்டியிடுகிறார் என்றால்,

நடைமுறையில் இயன்ற அளவு விரைவில் திருப்பிக் கொடுக்கப்படும்.

3.13 தேர்தல் சின்னங்கள் :

.

1. வேட்புமனுப் படிவத்தைப் பார்வையிடுகையில் மன்ற உறுப்பினர் நிலைக்குச் சின்னத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பு எதுவுமில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். தலைவர் நிலைக்கு பின்னிணைப்பு 3.5 இல் குறித்துரைக்கப்பட்ட மூன்று சின்னங்களில் ஒன்றைத் தெரிவுசெய்யும் வாய்ப்பு உங்களுக்கு உண்டு. ஏற்பிசைவு அளிக்கப்பட்ட {அங்கீகரிக்கப்பட்ட) அரசியல் கட்சிகளால் நிறுத்தப்பெற்ற வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடுசெய்த சின்னங்களும், ஏனையோருக்குத் திருவுளச்சீட்டுக் குலுக்கல் மூலம் தடையிலாச் சின்னங்களும் ஒதுக்குகை செய்யப்படும்.

2. நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால், அப்போது, முதலில் தாக்கல் செய்த வேட்புமனுவில் குறிப்பிட்ட சின்னம் பற்றிய விளம்புகையானது, போட்டியிடும் வேட்பாளர்களுக்குத் தேர்தல் நடத்தும் அலுவலரால் சின்னங்கள் ஒதுக்குகை செய்யப்படும் நேரத்தில் முதலில் தாக்கல் செய்த வேட்புமனு தேர்தல் நடத்தும் அலுவலரால் மறுத்தொதுக்கப்பட்ட இருந்தாலும்கூட, கருதுகைக்கு எடுத்துக் கொள்ளப்படும். சின்னங்கள் குறித்து வேறு விளம்புகை எதுவும் கருதுகை செய்யப்பட மாட்டாது. பிற சொற்களில் சொல்வதென்றால் உங்களது முதல் வேட்புமனு மறுத்தொகுக்கப்பட்டு, ஆனால், உங்களது இரண்டாவது, அல்லது மூன்றாவது அல்லது நான்காவது வேட்புமனு செல்லுநிலையுள்ளது என்று தேர்தல் நடத்தும் அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது என்றாலும்கூட, அப்போதும், உங்களது முதல் வேட்புமனுவில் உங்களால் குறிக்கப்பட்ட சின்னங்களின் தெரிவு. சின்னங்களை ஒதுக்கிக் கொடுக்கும் நேரத்தில் கருதுகைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

3. வேட்புநிலையைத் திரும்பப்பெறுவதற்கான நேரத்திற்குப் பின்பு, ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் களத்தில் இருந்து அவர்களுடைய வேட்புமனுக்கள் செல்லுநிலையிலுள்ளதாகக் காணப்படுகிற விடத்து, தேர்தல் நடத்தும் அலுவலர் திரும்பப்பெறுவதற்கான நேரம் முடிவுற்ற பின் உடனடியாக போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை ஆயத்தம் செய்வார். மேலும் தேர்தல் ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதற்கும் உட்பட்டு, போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சின்னம் ஒன்றை ஒதுக்கிக் கொடுப்பார்.

4. மாநிலத் தேர்தல் ஆணையம் புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் தலைவர் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் கொடுத்தல்) ஆணை, 2002 (பின்னிணைப்பு 3.3),

மற்றும் 6-3-2002 தேதியிட்ட அறிவிக்கை (பின்னிணைப்பு 3.5) ஆகியவற்றைப் பிறப்பித்துள்ளது. அவற்றிலிருந்து -

(அ) முதல் நிலையில், சின்னங்களில் இரண்டு வகையினங்கள், அதாவது (i) ஒதுக்கீட்டு சின்னங்கள் மற்றும் (ii) தடையிலாச் சின்னங்கள் இருக்கின்றன.

(ஆ) இரண்டாம் நிலையின், ஓர் ஒதுக்கீட்டுச் சின்னம் என்பது, ஏற்பிசைவு அளிக்கப்பட்ட ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப்பெற்ற போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்குத் தனிப்பட ஒதுக்கிக்கொடுப்பதற்காகத் தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற ஒரு சின்னம் என்றும், ஒரு தடையிலாச் சின்னம் என்பது ஓர் ஒதுக்கீட்டுச் சின்னம் அல்லாத வேறு ஒரு சின்னம் என்றும் பொருள்படும்.

(இ) மூன்றாம் நிலையில், அரசியல் கட்சிகளில் மூன்று வகையினங்கள் உள்ளன அவையாவன -

(1) தேசிய கட்சிகள் (தேர்தல் ஆணையத்தால் ஏற்பிசைவளிக்கப்பட்டவை)
(2) மாநிலக் கட்சிகள் (தேர்தல் ஆணையத்தால் ஏற்பிசைவளிக்கப்பட்டவை)
(3) பதிவு செய்யப்பட்ட - ஏற்பிசைவளிக்கப்படாத கட்சிகள்

என்பது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் அவற்றின் தலைமை அலுவலகங்களைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் ஆகும்; அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், இந்தியத் தேர்தல் ஆணையத்தால், தேசியக்கட்சியாகவோ அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள மாநிலக் கட்சியாகவோ ஏற்பிசைவளிக்கப்படவில்லை.

.

(ஈ) நான்காம் நிலையில், ஒரு மாநிலக் கட்சியால் நிறுத்தப்பட்ட ஒரு வேட்பாளர் தமது வேட்புமனுவில் அந்தக் கட்சியின் ஒதுக்கீடுசெய்யப்பட்ட சின்னத்தைமட்டுமே தேர்வுசெய்யவேண்டும் மற்றும் அது மட்டுமே தேர்தல் நடத்தும் அலுவலரால் ஒதுக்கிக்கொடுக்கப்படும்; வேறு சின்னம் எதுவும் ஒதுக்கப்படமாட்டாது. நீங்கள் ஒரு மாநிலக் கட்சியினால் நிறுத்தப்பட்டிருக்கிறீர்கள் என்றால் அப்போது, உங்களுடைய வேட்புமனுவில் நீங்கள் அந்தக் கட்சிக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட சின்னத்தை மட்டுமே தெரிவு செய்ய முடியும். வேறு சின்னம் எதையும் அன்று என்பது இதன் பொருளாகும். மேலும், தொகுதி எதிலும் ஒரு வேட்பாளரை மட்டுமே ஒரு மாநிலக்கட்சி நிறுத்த முடியும் என்பதையும் இது குறிப்பாகத் தெரிவிக்கிறது.

(உ) ஐந்தாம் நிலையில், தொகுதி எதிலும் ஒரு தேசியக்கட்சியினால் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர் ஒருவர். அந்தத் தேசியக் கட்சிக்காக ஒதுக்கீடு செய்த சின்னத்தையே தெரிவுசெய்யவேண்டும் மற்றும் அந்தச் சின்னமே ஒதுக்கிக்கொடுக்கப்படும்.

(ஊ) ஆறாம் நிலையில், ஒரு தொகுதியில் தேசிய அல்லது மாநிலக் கட்சியால் வேட்பாளர் எவரும் நிறுத்திவைக்கப்படவில்லை என்றாலும்கூட, தேசியக் கட்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அக்கட்சியால் நிறுத்தப்பட்ட வேட்பாளர், அல்லது ஒரு மாநிலக்கட்சிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு அக்கட்சியால் நிறுத்தப்பட்ட வேட்பாளர் அல்லாமல், தொகுதி எதிலுமுள்ள வேறு வேட்பாளர் எவராலும் அவ்வாறு ஒதுக்கீடுசெய்யப்பட்ட ஒரு சின்னம் தெரிவுசெய்யப்படுதலோ, அல்லது அவருக்கு ஒதுக்கிக்கொடுக்கப்படுதலோ கூடாது.

3.14. தன்னை ஒர் அரசியல் கட்சி எனக் கூறிக்கொண்டு, மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951இன் வகைமுறையைத் தனக்குப் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் சங்கம் அல்லது இந்தியக் குடிமக்களின் தனிப்பட்டவர்களின் கூட்டமைப்பு எதுவும், அந்தச் சட்டத்தின் 29-A பிரிவின் கீழும், 23-3-92 அன்று ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பதிவு (கூடுதல் விவரங்களை அளித்தல்) ஆணை. 1992 இன் கீழும், வேண்டுறுத்தப்பட்டவாறான தகவலைக் கொடுப்பதன் மூலம், ஓர் அரசியல் கட்சி என்று பதிவுசெய்யப்படுவதற்காகத் தேர்தல் ஆணையத்திற்கு விண்ணப்பம் செய்யலாம். ஆணையம் மேற்சொன்ன வேண்டுறுத்தங்கள் பற்றி மனநிறைவு கொள்வதன் மேல் அதை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யலாம்....... மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951இன் 29-A பிரிவின் கீழ் அவ்வாறு பதிவு செய்யப்பட்ட கட்சி, தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை, 1968இன் நோக்கங்களுக்காக, பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சி எனக் கொள்ளப்படுதல் வேண்டும். அத்தகைய பதிவு செய்யப்பட்ட கட்சியானது ஒரு பொதுத்தேர்தலில் வாக்குப் பெறும் செயல்திறனைச் சார்ந்து, தேசிய அல்லது மாநிலக் கட்சி அல்லது பதிவு செய்யப்பட்டு ஏற்பிசைவு பெறாத கட்சி என்பது அங்கீகரிக்கப்படலாம்.

3.15 ஒரு தேசிய அல்லது மாநிலக் கட்சியினால் நிறுத்தப் பெற்றிராத வேட்பாளர்கள். அதாவது, பதிவு செய்யப்பட்டு ஏற்பிசைவு பெறாத அரசியல் கட்சிகளால் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள், தங்களுடைய வேட்புமனுக்களின் தடையிலாச் சின்னங்களிலிருந்து மட்டுமே சின்னங்களைத் தெரிவுசெய்தல்கூடும்; வேறு சின்னங்கள் எவற்றையும் அல்ல. அத்தகைய தேர்தலில் தடையிலாச் சின்னம் எதுவும் ஒரு வேட்பாளரால் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறவிடத்து, தேர்தல் நடத்தும் அலுவலர் அந்தச் சின்னத்தை அந்த வேட்பாளருக்கு ஒதுக்கிக் கொடுத்தல் வேண்டும்; வேறு எவர் ஒருவருக்கும் அன்று.

3.16 ஒரே தடையிலாச் சின்னம் பற்பல வேட்பாளர்களால் அத்தகைய தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருக்கிறவிடத்து, அப்போது -

(அ) அத்தகைய பற்பல வேட்பாளர்களில் ஒரு வேட்பாளர் மட்டுமே ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகளால் நிறுத்தி வைக்கப்பட்டும் பிறர்

அனைவரும் சுயேட்சை வேட்பாளராகவும் இருக்கிறார்கள் என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் ஏற்பிசைவு பெறாத அரசியல் கட்சியால் நிறுத்தப்பெற்ற வேட்பாளருக்கு அந்தத் தடையிலாச் சின்னத்தை ஒதுக்கிக்கொடுக்கவேண்டும்; வேறு எவர் ஒருவருக்கும் அன்று. மேலும், அத்தகைய பற்பல வேட்பாளர்களில், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் வெவ்வேறு ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகளால் நிறுத்தப்பெற்றும், எஞ்சிய பிறர் சுயேட்சை வேட்பாளர்களாகவும் இருக்கிறார்கள் என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர், வெவ்வேறு ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகளால் நிறுத்தப்பெற்ற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களில் எவருக்கு அந்த தடையிலாச் சின்னம் ஒதுக்கிக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதைத் திருவுளவுச்சீட்டுக் குலுக்கல் மூலம் முடிவு செய்து, அந்தக் குலுக்கல் எந்த வேட்பாளருக்கு விழுகிறதோ அந்த வேட்பாளருக்கு அந்தத் தடையிலாச் சின்னத்தை ஒதுக்கிக்கொடுத்தல் வேண்டும், வேறு எவர் ஒருவருக்கும் அன்று.

அத்தகைய பற்பல வேட்பாளர்களில் அனைவரும் சுயேட்சை வேட்பாளராகவும் இருக்கிறார்கள் என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் அத்தகைய சுயேட்சை வேட்பாளர்களில் எவருக்கு அந்த தடையிலாச் சின்னம் ஒதுக்கிக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதைத் திருவுளச்சீட்டுக் குலுக்கல் மூலம் முடிவுசெய்து, அந்தக் குலுக்கல் எந்த வேட்பாளருக்கு விழுகிறதோ அந்த வேட்பாளருக்கு அந்தத் தடையிலாச் சின்னத்தை ஒதுக்கிக்கொடுத்தல் வேண்டும், வேறு எவர் ஒருவருக்கும் அன்று.

3.17.1 (1) வேட்புமனுப் படிவத்திலிருந்து, நீங்கள் ஒரு கட்சி வேட்பாளராக இருக்கிறீர்கள் என்றால், அது பற்றி அந்த வேட்புமனுவிலேயே ஒரு விளம்புகையைச் செய்யுமாறு நீங்கள் வேண்டுறுத்தப்படுகிறீர்கள் என்பதை நீங்கள் காண்பீர்கள். இப்போது நீங்கள் ஓர் ஏற்பிசைவு பெற்ற கட்சியால், அதாவது, ஒரு தேசியக் கட்சி அல்லது ஒரு மாநிலக்கட்சியால் நிறுத்தப்பெறலாம்; அல்லது நீங்கள் பதிவுசெய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத ஒரு கட்சியால், அதாவது, சின்னம் எதுவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிராத ஒரு கட்சியால் நிறுத்தப்பெறலாம். மாநிலத் தேர்தல் ஆணையத்தின் ஆணை அடியில் சொல்லப்பட்ட வரைக்கட்டு (நிபந்தனை)கள் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே. குறிப்பிட்ட ஒரு கட்சியினால் நீங்கள் நிறுத்தப் பெற்றதாகக் கொள்ளப்படுவீர்கள் என்பதை தெளிவாக விதித்தமைத்திருக்கிறது

(அ) முதல்நிலையில், நீங்கள் உங்களது வேட்புமனுவில் அதன் விளைவு குறித்து ஒரு விளம்புகையைச் செய்யவேண்டும்; அதாவது, வேட்புமனுவிலுள்ள உங்களது விளம்புகையில், நீங்கள் இந்த இந்தக் கட்சியால் நிறுத்தப்பெற்ற ஒரு வேட்பாளராக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் சொல்லுதல் வேண்டும்.

(ஆ) இரண்டாம் நிலையில், ஒரு வேட்பாளராக உங்களை நிறுத்திய கட்சியினால் மேலுள்ள விளைவு குறித்து மாநிலத் தேர்தல் ஆணையத்தால் வகுத்துரைக்கப்பட்ட படிவம் ஆ- இல் எழுத்துருவிலான ஓர் அறிவிப்பு வேட்புமனுத்தாக்கலுக்கான கடைசித் தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். மற்றும்

(இ மூன்றாம் நிலையில், படிவம் ஆ- இல் உள்ள மேற்சொன்ன அறிவிப்பானது அத்தகைய அறிவிப்புகளை அனுப்புவதற்கு கட்சியால் அதிகாரமளிக்கப்பட்ட கட்சியின் தலைவர், செயலாளர் அல்லது வேறு அலுவல்குழு உறுப்பினர்களால் கையொப்பமிடப் படவேண்டும். மற்றும் அவர்களுடைய மாதிரிக் கையொப்பங்கள் படிவம் அ இல், வேட்புமனுத்தாக்கலுக்கான கடைசித்தேதியன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பு தேர்தல் நடத்தும் அலுவலருக்குக் கட்சியால் அனுப்பிவைக்கப்பட வேண்டும்;

2 இத்தகைய மூன்று வரைக்கட்டு (நிபந்தனைகளில் எதுவும், கண்டிப்பான முறையிலும் வகுத்துரைக்கப்பட்ட நேரத்திற்குள்ளும் நிறைவு செய்யப்படவில்லை என்றால், அப்போது, நீங்கள் கட்சியால் நிறுத்தப் பெற்றவர்களாகக் கொள்ளப்படாமல், ஒரு சுயேட்சை வேட்பாளராகப் பாவிக்கப்படுவீர்கள். ஆதலால், இத்தகைய மூன்று வரைக்கட்டுகளைப் பற்றி மிகவும் குறிப்பாக இருந்திடுக. இல்லையேல், நீங்கள் ஏற்பிசைவு பெற்ற தேசிய அல்லது மாநிலக்கட்சியால் நிறுத்தப்பெறுகிறீர்கள் என்றால் ஒதுக்கீட்டுச் சின்னம் பற்றிய எல்லா நன்மைகளையும், அல்லது நீங்கள் பதிவுசெய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத ஒரு கட்சியால் நிறுத்தப் பெறுகிறீர்கள் என்றால் சுயேட்சை வேட்பாளர்களின் மேலுள்ள ஒரு முற்படுவுரிமையை, நீங்கள் இழந்தவராவீர்கள்.

3. மேற்சொன்ன படிவங்கள் அ மற்றும் அ மற்றும் ஆ இரண்டயுைம் (மையினால் உரியவாறு கையொப்பமிட்டு) கடைசிக்கணத்திலெழும் சிக்கல் எதையும் தவிர்க்கும் பொருட்டு, உங்களது வேட்பு மனுவுடனேயே சேர்த்து, தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பிவைக்கும்படி நீங்கள் நன்கு அறிவுரையளிக்கப்படுகிறீர்கள். மையினால் கையொப்பமிட்டிராத, அல்லது தொலைபதிவி (FAX) மூலம் பெறப்பட்ட படிவம் அ அல்லது ஆ எதுவும், தேர்தல் நடத்தும் அலுவலரால் மறுத்தொதுக்கப்படும்.

4. சின்னங்களின் வரிசைமுறை, அரசியல் கட்சிகளால் சிலநேரத்தில் செய்துகொள்ளப்படும் தேர்தல் கூட்டணியை அங்கீகரிக்கவில்லை. ஆதலால், ஒரு தேசிய அல்லது மாநிலக்கட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட. ஒரு சின்னம் அத்தகைய தேசிய அல்லது மாநில கட்சியாலேயே நிறுத்தப்பெற்ற வேட்பாளர் அல்லாமல் வேறு வேட்பாளர் எவருக்கும் ஒதுக்கிக் கொடுக்கப்படுதல் ஆகாது.

5. அதேபோன்று, ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியால் நிறுத்தப் பெற்றிருப்பதாகத் தமது வேட்பு மனுவில் ஒரு விளம்புகையைச் செய்திருக்கிற வேட்பாளர் ஒருவர்,

மற்றொரு அரசியல் கட்சியால் ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு அத்தகைய வேட்பாளர் மற்றொரு வேட்புமனுவில் தாம் பின்னுள்ள கட்சியினால் நிறுத்தப்பட்டிருக்கிறார் என்று குறித்த வகையிலான ஒரு விளம்புகையை அவர் செய்திருக்கிறார் என்றாலன்றி அனுமதிக்கப்படுதல் ஆகாது.

6. எனினும், அரசியல் கட்சிகள், ஒரு வேட்பாளர் சார்பாகப் படிவம் - ஆ இல் கொடுக்கப்பட்ட அதிகாரமளிப்பை அறவுரத்து) செய்வதற்காக, அல்லது அவற்றினுடைய வேட்பாளர்களின் பெயரை மாற்றாக அமைப்பதன் மூலம் அத்தகைய அதிகாரமளிப்பை மாற்றம் செய்யவோ, பின்வரும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு அனுமதிக்கப்படுகின்றன அவையாவன:

(அ) படிவம் ஆ இல் மிகமுந்திய அதிகாரமளிப்பை அறவுரத்து) செய்யும் அல்லது மாற்றாக அமைக்கும் பிந்திய அதிகாரமளிப்பு;

(ஆ) படிவம் ஆ இல் உள்ள அத்தகைய பிந்தி அ8திகாரமளிப்பானது. அதிகாரம் பெற்ற அதே அலுவல் குழுவினரால் கையொப்பமிடப்படுகிறது ; மற்றும் இருபொருளுக்கு இடமளிக்காதிருக்கிறது. மேலும், அது மிகமுந்திய அதிகாரமளிப்பை அறவுசெய்கிறது, அல்லது நேர்வுக்கேற்ப மாற்றாக அமைக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது ;

(இ) தேர்தல் நடத்தும் அலுவலர் பிந்திய அதிகாரமளிப்பின் உண்மைத் தன்மையைப் பற்றி மனநிறைவுகொள்கிறார் ; மற்றும்

(ஈ) பிந்திய அதிகாரமளிப்பு எந்த வேட்பாளர் சார்பாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த வேட்பாளர், ஏற்கனவே தமது வேட்புமனுவில், தாம் மேற்கூறிய அரசியல் கட்சியால் நிறுத்தப்பெற்றிருக்கிறார் என்று ஒரு விளம்புகையைச் செய்திருக்கிறார்.

II. நகரமன்ற உறுப்பினர் பதவிக்கான தேர்தலை பொறுத்தவரை, வேட்பாளர்களுக்கு சின்னங்களைத் தேர்வு செய்யும் வாய்ப்பு இல்லை. மாநில தேர்தல் ஆணையம், 06-03-2002 தேதியிட்ட அறிவிப்பு மூலம் (இணைப்பு-3.5) நகரமன்ற உறுப்பினர் பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்ய 15 தனிச் (சுயேட்சை) சின்னங்களை குறிப்பிட்டுள்ளது. படிவம்-7 இல் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல், சின்னங்கள் ஒதுக்கீடு செய்வதற்காக, தனிச் சின்னங்களின் பட்டியலுடன் பொருந்தும், படிவம்-7 இல் உள்ள பட்டியலில் முதல் வேட்பாளர் தேர்தல் நடத்தும் அலுவரால் ஒதுக்கப்படும். முதல் தனிச் சின்னம் அதாவது அந்த அறிவிப்பில் முதலில் படகு. இரண்டாவது போட்டியிடும் வேட்பாளருக்கு இரண்டாவது தனிச் சின்னம் அதாவது கரும்பலகை மற்றும் பல ஒதுக்கப்படும்.

3.18 முதனிலைக் கூர்ந்தாய்வு:

ஒரு வேட்புமனுவை முன்னிட்டதன் மேல் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்தவாறு வேட்பாளர் மற்றும் அவரை முன்மொழிபவர் பெயரும் வாக்காளர் பட்டியல் எண்ணும், வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்த அவ்வாறே இருக்கின்றன எனத் தேர்தல் நடத்தும் அலுவலர் தாமே மனநிறைவு கொள்வார்.

3.19 வாக்காளர் பட்டியலில் அல்லது வேட்புமனுவில் தவறுகள் அச்சுப்பிழைகள் முதலியன :

வேட்பாளர், அல்லது அவரை முன்மொழிபவர், அல்லது எவரேனும் வேறு ஆளின் பெயர் பற்றிய வகையில், அல்லது வாக்காளர் பட்டியல், அல்லது வேட்புமனுவில் சொல்லப்பட்ட இடம் எதையும் பற்றிய வகையில், தவறான சொல்வழக்கு, அல்லது துல்லியமற்ற விவரிப்பு, அல்லது எழுத்தர், தொழில்நுட்ப அல்லது அச்சுப்பிழை எதுவும், மற்றும் வாக்காளர் பட்டியலில், அல்லது வேட்புமனுவில், வேட்பாளர், அவரை முன்மொழிபவர் அல்லது எவரேனும் வேறு ஆளின் வாக்காளர்பட்டியல் எண்களைப் பற்றிய வகையில், எழுத்தர், தொழில்நுட்ப அல்லது அச்சுப்பிழை எதுவும், வாக்காளர் பட்டியலின் அல்லது வேட்புமனுவின் முழுமையான செயற்பாட்டைப் பாதிக்கக்கூடாது எனச்சட்டம் சொல்கிறது. வாக்காளர் பட்டியலில் அல்லது வேட்புமனுவில் உள்ள அத்தகைய தவறான சொல்வழக்கு , துல்லியமற்ற விவரிப்பு அல்லது பிழை எதுவும், திருத்தப்படுவதற்கு அல்லது அத்தகைய தவறான சொல்வழக்கு , துல்லியமற்ற விவரிப்பு, அல்லது பிழையைத் தேவைப்படும் இடத்தில் புறக்கணிப்பதற்கு இசைவளிக்குமாறும் சட்டம் தேர்தல் நடத்தும் அலுவலரை வேண்டுறுத்துகிறது. இருப்பினும் உங்களது பெயர் அல்லது உங்களை முன்மொழிபவரின் அல்லது எவரேனும் வேறு ஆளின் பெயர் பற்றிய வகையில் அல்லது இடம் எதையும் பற்றிய வகையில் அத்தகைய தவறான சொல்வழக்கு அல்லது துல்லியமற்ற விவரிப்பு அல்லது எழுத்தர், தொழில்நுட்ப அல்லது அச்சுப்பிழை எதுவும் வாக்காளர் பட்டியலின் அல்லது வேட்புமனுவில் எஞ்சிநிற்கவில்லை என்பதற்காகத் தனித்த அக்கறை எடுத்துக்கொள்ளுமாறு உங்களுக்கு இன்னமும் நன்கு அறிவுரையளிக்கப்படுகிறது. உங்களது பெயரும் உங்களை முன்மொழிபவர் பெயரும் இடம்பெற்றுள்ள வாக்காளர் பட்டியல்களை, தேர்தல் அறிவிப்பு வெளியிடும் முன்பு போதிய அளவு முன்னதாகவே பார்வையிடும்படி நீங்கள் நன்கு அறிவுரையளிக்கப் படுகிறீர்கள்; ஏனென்றால், நீங்கள் வேட்பாளராக நிற்க உரிய நேரத்தில் முடிவு எடுத்திருக்கவேண்டும் என்று துணிபுகொள்ளப்படுகிறது. தேர்தல் அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்கூட்டியே வாக்காளர் பட்டியலைப் பார்வையிட்டபின்பு, உங்கள் தொடர்பாக அல்லது உங்களை முன்மொழிபவர் அல்லது எவரேனும் வேறு ஆள் (எ.டு - உங்கள் தந்தையின் பெயர்) அல்லது வேறு ஏதேனும் பொருட்பாடு தொடர்பாக, வாக்காளர் பட்டியலில் தவறான சொல் வழக்கு, துல்லியமற்ற விவரிப்பு அல்லது பிழை ஏதும் இருக்கிறது என்றால் அப்போது பிழை முதலானவற்றைச் சரிசெய்வதற்கான உடனடி செய்கைப்பாடுகளை நீங்கள் எடுக்கவேண்டும்.

3.20 வேட்பு மனுவுக்கான பற்றுச் சீட்டு மற்றும் கூர்ந்தாய்வு, சின்னங்கள் ஒதுக்குகை ஆகியவற்றுக்கான அறிவிப்பு:

வேட்புமனு எந்தத் தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் முன்பு தாக்கல் செய்யப்படுகிறதோ அந்த அலுவலர் அதை நிரப்பி ஒப்படைப்புச் சான்றிதழில் கையொப்பமிடுமாறு வேண்டுறுத்துகிற ஒரு பகுதி வேட்புமனுப் படிவத்தில் இருப்பதை நீங்கள் காண்பீர்கள். வேட்புமனுவைத் தாக்கல் செய்கையில், வேட்புமனு தாக்கல் செய்யப்படுகிற தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் உங்கள் முன்னிலையில் அதன் வரிசை எண்ணைப் பதிவு செய்கிறார் மற்றும் வேட்புமனு ஒப்படைப்புச் சான்றிதழ்ப் படிவத்தை முறையாக நிரப்பிக் கையொப்பமிடுகிறார் என்பதை உறுதி செய்து கொள்க.

3.21 வேட்புமனு தாக்கல் செய்யப்படுகிற தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலர். உங்களிடம் அல்லது வேட்புமனுவை முன்னிடுகிற உங்களுடைய முன்மொழிபவரிடம். அதற்கான ஒரு பற்றுச்சீட்டைக் கையளிக்குமாறு வேண்டுறுத்தப்படுகிறார் மற்றும் வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வுக்காகக் குறித்திட்ட தேதி, நேரம், இடம் ஆகியவை பற்றிய எழுத்துவடிவிலான அறிவிப்பை அது கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் காண்பீர்கள். கூர்ந்தாய்வுக்காகக் குறித்திட்ட நேரம், தேதி, இடம் பற்றிய அறிவிப்பும் அடங்கிய, வேட்புமனுவிற்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள மறவாதீர்கள் அல்லது புறக்கணிக்காதீர்கள்; ஆதலால் வேட்புமனுவில் கொடுக்கப்பட்ட படிவத்தில் ஒப்படைப்புச்சான்றிதழ், வேட்புமனு ஒப்படைக்கப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலரால் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலரால் உங்கள் முன்னிலையில் உரியவாறு நிறைவு செய்யப் படுகிறது என்பதைக் கவனித்துக்கொள்க மற்றும் வேட்புமனுவின் பற்றுச்சீட்டை அவரிடம் கேட்கத் தயங்க வேண்டாம்; அதை உங்களுக்கோ அல்லது உங்களை முன்மொழிபவருக்கோ, வேட்புமனு தாக்கல் செய்யப்படுகிற இடத்தைவிட்டு நீங்கும் முன்பு கொடுப்பதற்கு அவர் கட்டுறுத்தப் பட்டவராகிறார்.

3.22 வேட்புமனுக்களின் அறிவிப்புகளை ஆராய்தல் :

தேர்தல் நடத்தும் அலுவலர், வேட்புமனுக்களைச் செய்வதற்காகக் குறித்திட்ட நாட்கள் ஒவ்வொன்றிலும் அவரால் பெறப்பட்ட வேட்புமனுக்களின் அறிவிப்பு ஒன்றை, அவரது அலுவலகத்திலுள்ள ஏதோ சில எடுப்பான இடத்தில் நிலைநிறுத்துமாறு செய்விக்கும்படி வேண்டுறுத்தப்படுகிறார். இந்த அறிவிப்பு 13(2)ஆம் விதியின்கீழ் படிவம் 3இல் உள்ளது. அத்தகைய வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த பல்வேறு வேட்பாளர்களைப் பொறுத்தமட்டில் உங்கள் போட்டி வேட்பாளர்களின் வேட்புமனுக்களில் குறைபாடு எதுவும் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கு மேற்கூறப்பட்டவாறு சட்டப்படி, தமது அலுவலகத்தின் ஏதோ ஒரு

**எடுப்பான இடத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரால் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலரால் ஒட்டிவைக்கப்பட்ட வேட்புமனுக்களின் அறிவிப்பை நன்கு படித்து ஆராயுமாறு, நீங்கள் நன்கு அறிவுரையளிக்கப்படுகிறீர்கள். அத்தகைய குறைபாடுகளை நீங்கள் கண்டறிந்தால். அப்போது நீங்கள் விரும்பினால், வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வு நேரத்தில், உங்கள் போட்டி வேட்பாளர்களின் எவருக்கும் எதிராக நீங்கள் மறுப்புரை தெரிவிக்கலாம்.**

## பின்னிணைப்பு - 3.1

### படிவம் - 1

## தேர்தல் அறிவிப்பு

[(காண்க,விதி 10 (3)]

1. ____________________ நகராட்சி மன்றத்தின் ஆம் எண்தொகுதிக்கு ஒரு மன்ற உறுப்பினருக்கான தேர்தல் நடத்தப்படுகிறது.

2. வேட்புமனுக்கள் ஒரு வேட்பாளரால் அல்லது அவரை முன்மொழிபவர் ஆல் (பொது விடுமுறை நாள் அல்லாத வேறு) ஏதேனும் நாள் அன்று, முற்பகல் 11 மணி மற்றும் பிற்பகல் 3 மணிக்கும் இடையே அதற்குப் பிற்படாமல் ____________ இடத்திலுள்ள தேர்தல் நடத்தும் அலுவலரிடம், அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலரிடம் ஒப்படைக்க படலாம்.

3. வேட்புமனுப் படிவங்கள் மேற்கூறப்பட்ட இடத்திலும் நேரங்களிலும் பெறப்படலாம்;
4. வேட்புமனுக்கள் கூர்ந்தாய்வுக்காக ________________________ என்னுமிடத்தில் நாளன்று _______________ மணிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
5. வேட்புநிலையைத் திரும்பப்பெறுவது பற்றிய அறிவிப்பு, வேட்பாளரால் அல்லது அவரை முன்மொழிபவரால், மேலுள்ள (2) ஆம் பத்தியில் குறித்துரைக்கப்பட்ட அலுவலர்கள் எவரிடத்திலும், அவரது அலுவலகத்தில் ___________ அன்று பிற்பகல் 3 மணிக்கு முன்பு ஒப்படைக்கலாம்.

6 . தேர்தலில் போட்டியிடுதல் இருக்கும் நிகழ்வில், வாக்குப்பதிவு ___________ அன்று _____ மணிக்கும் ________ இடையே ___________ இடத்தில் நடத்தப்படும்.

என்னும் அறிவிப்பானது இதன் மூலம் கொடுக்கப்படுகின்றது
இடம்
தேதி

தேர்தல் நடத்தும் அலுவலர்

## பின்னிணைப்பு

**படிவம் - 3.2**

## வேட்பு மனு

**[காண்க, விதி 11 ]**

**புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் நகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நான் ______________________ நகராட்சி மன்றத்தின் __________ ஆம் எண் தொகுதிக்கு மன்ற உறுப்பினர் தேர்தலுக்கு ஒரு வேட்பாளராக / நகரமன்றத்தின் தலைவர் பதவிக்கு வேட்பாளராக முன்மொழிகிறேன்.**

***(பொருந்தாதவற்றை அடித்துவிடுக )**
**வேட்பாளரின் பெயர் :**
**அவரது அஞ்சல் முகவரி :**

**அவருடைய பெயர் ____________ நகரமன்றத்தின் ____________________ ஆம் எண் வார்டின் வாக்காளர் பட்டியலின் பகுதி எண் ___ இல் ____ ஆம் வரிசை எண் இடத்தில் பதியப்பட்டிருக்கிறது.**

**என்னுடைய பெயர் ___________ மற்றும் அது ________________நகரமன்றத்தின் ____________________ ஆம் எண் வார்டின் வாக்காளர் பட்டியலின் பகுதி எண் ___ இல் ____ ஆம் வரிசை எண் இடத்தில் பதியப்பட்டிருக்கிறது.**

**தேதி :** **முன்மொழிபவர் கையொப்பம்**

**மேற்கூறப்பட்ட வேட்பாளராகிய நான், இந்த முன்மொழிவை இசைந்து ஏற்கின்றேன், மற்றும்**

**(அ) நான் _______ வயது நிறைவெய்தியிருக்கிறேன் என்றும், நான் ஓர் இந்தியக் குடிமகன் என்றும்,**

***(ஆ ) நான் இந்தத் தேரதலில் _______________ கட்சியால் ஆதரிக்கப்படுகிறேன் என்றும்,**

***(இ) நகர மன்றத் தலைவர் தேர்தலுக்காக நான் தெரிவு செய்திருக்கிற சின்னங்கள், முன்னுரிமை வரிசையில் --**

**(I) ________________________ (ii ) ____________ (iii ) ________________________**
**என்றும் இதன் மூலம் விளம்புகின்றேன்.**

மேலும் நான் ____________ சாதியின் ஓர் உறுப்பினர் என்றும், அது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் பட்டியல் சாதியில் ஒன்று என்றும் விளம்புகின்றேன்.

தேதி : வேட்பாளரின் கையொப்பம்

---

*(பொருந்தாவிடில், இந்த பத்தியை அடித்து விடவும்

குறிப்பு:- 1973ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சியிகள் சட்டத்தின் பிரிவுகள் 12A(1)b ன்படி

(i) நகரமன்ற உறுப்பினராக தேர்தலில் நிற்கும் ஒருவர் நகரமன்ற தலைவர் பதவிக்கு போட்டியில் தகுதியில்லாதவர் ஆகிறார்.

(ii) நகரமன்ற உறுப்பினராக இருப்பவர் நகரமன்ற தலைவர் தேர்தலில் நிற்க தகுதியற்றவர் ஆகிறார் என்பதை புரிந்து கொள்ளல் வேண்டும்.

(தேர்தல் நடத்தும் அலுவலரால் நிரப்பப்படுதல்)

வேட்பு மனுவின் வரிசை எண் : ,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,,

இந்த வேட்புமனு ........................ (தேதி) அன்று ................................................ மணிக்கு எனது

அலுவலகத்தில் என்னிடம் வேட்பாளரால் / முன்மொழிபவரால் ஒப்படைக்கப்பட்டது.

தேதி :

தேர்தல் நடத்தும் அலுவலர் .

*(பொருந்தாவற்றை அடித்து விடுக)

---

வேட்பு மனுவை ஏற்கும் அல்லது ஏற்க மறுக்கும் தேர்தல் நடத்தும் அலுவலரின் முடிபு

நான் புதுச்சேரி நகராட்சி மன்றம் (உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகள் 1974, பிரிவு 14க்கு இணங்கியவாறு இந்த வேட்புமனுவை ஆராய்ந்திருக்கிறேன் மற்றும் பின்வருமாறு முடிபு செய்திருக்கிறேன்.

தேதி : தேர்தல் நடத்தும் அலுவலர்.

---

## வேட்பு மனு மற்றும் கூர்ந்தாய்வு அறிவிப்புக்கான பற்றுச்சீட்டு

.

**(வேட்பு மனுவை முன்னிடும் ஆளிடம் கையளிக்கப்படுதல்)**

**வேட்புமனுவின் வரிசை எண்:**

**………………………………………………… நகராட்சி மன்றத்தின். ………….. ஆம் எண்**

**தொகுதி தேர்தலுக்கான ஒரு வேட்பாளராகிய …………………………………………. என்பவரின் வேட்பு மனு. …………………………. (தேதி) அன்று ………………………………. மணிக்கு எனது அலுவலகத்தில் என்னிடம் வேட்பாளரால் / முன்மொழிபவரால் * ஒப்படைக்கப்பட்டது.**

**அனைத்து வேட்புமனுக்களும் ……………………… (தேதி) அன்று …………………… (மணிக்கு) ……………….. (இடத்தில்) கூர்ந்தாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படும்.**

**தேதி :** **தேர்தல் நடத்தும் அலுவலர்.**

## பிற்சேர்க்கை - 3.3.

## மாநிலத் தேர்தல் ஆணையம்

எண் மாதே ஆ1-9/ உள்ளாட்சி தேர்தல் 2002 புதுச்சேரி, 06-3-2002

### அறிவிக்கை

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள நகராட்சி மன்றங்களுக்கான அனைத்துத் தேர்தல்களின் கண்காணிப்பு, கட்டுப்பாடு ஆகியவை, இந்திய அரசமைப்பு மற்றும் புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973இன் மூலம், மாநிலத்தேர்தல் ஆணையத்திடம் மேவி நிற்கின்றன என்பதாலும்.

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள நகராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களின் தூய்மை நலன் கருதியும் அத்தகைய தேர்தல்களை ஒரு நேரிய மற்றும் திறமான முறையில் நடத்தும் நலன் கருதியும், போட்டியிடும் வேட்பாளர்களுக்குச் சின்னங்களின் தனிக்குறிப்பீடுகள், ஒதுக்கீடு, ஒதுக்கிக்கொடுத்தல் மற்றும் அவை தொடர்பான பொருட்பாடுகளுக்காகவும் வகைசெய்வது தேவையர்கவும் உகந்ததாகவும் இருக்கிறது என்பதாலும்.

அவ்வப்போது, திருத்துகை செய்யப்படுகிறவாறு புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் 15அ பிரிவு, புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் தேர்தல் நடத்துதல்) விதிகள் 1996இன் 2 மற்றும் 4 ஆம் விதிகள் புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (உறுப்பினர்கள் தேர்தல் நடத்துதல்) விதிகள் 1974இன் 18ஆம் விதி ஆகியவற்றுடன் படித்துப்பொருள் கொள்ளவேண்டிய இந்திய அரசமைப்பின் 243.ZA உறுப்பின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும், பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி, புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையம் இதன் மூலம் பின்வரும் ஆணையை இடுகிறது;

### ஆணை

1. குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம் :

(1) இது புதுச்சேரி நகராட்சி மன்றங்களின் தலைவர் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றறும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை,2002 என்று வழங்கப்பெறும்.

(2) கட்சி அடிப்படையில் நடத்தப்படும் தலைவர் தேர்தல் மற்றும் கட்சி சாரா அடிப்படையில் நடத்தப்படும் உறுப்பினர் தேர்தல் தொடர்பாக, இது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதையும் அளாவிநிற்கும்.

(3) இது உடனடியாக செயலாற்றலுக்கு வரும்.

2. பொருள் வரையறைகள் மற்றும் பொருள்கோள்கள் : இந்த ஆணையில், தறுவாய் பிறவாறாக வேண்டுறுத்துகிறது என்றாலன்றி

(அ) “சட்டம்” என்பது அவ்வப்போது திருத்துகை செய்யப்பட்டவாறு புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973 என்று பொருள்படும்;

(ஆ) “போட்டியிடப்படும்” தேர்தல் என்பது ஒரு வாக்குப்பதிவு நடத்தப்படுகிற நகராட்சியில் அல்லது நகராட்சித் தொகுதியில் ஒரு தேர்தல் எனப் பொருள்படும்

(இ) “தேர்தல்" என்பது இந்த ஆணை பொருந்துகிற ஒரு தேர்தல் எனப் பொருள்படும்; அதாவது, ஒரு நகராட்சியில் அல்லது , நகராட்சித் தொகுதியில் கட்சி அடிப்படையில் நடத்தப்படுகிற ஒரு தலைவர் தேர்தல், மற்றும் கட்சி சாரா அடிப்படையில் நடத்தப்படுகிற மன்ற உறுப்பினர் தேர்தல் எனப்பொருள்படும்.

(ஈ) “கட்சி அடிப்படையில் நடைபெறுகிற தேர்தல் “ என்பது. இந்த ஆணையின் வகைமுறைகளுக்கு இணங்கியவாறு, ஏற்பிசைவு பெற்ற ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப் பெற்ற வேட்பாளர் ஒருவர். அக்கட்சிக்கென்றே ஒதுக்கீடு செய்யப்பட்ட சின்னத்தின் தனித்தநிலை ஒதுக்குகையைப் பெற்றிருக்கிற ஒரு தேர்தல் என்று பொருள்படும்;

(உ) "தடையிலாச் சின்னம் " என்பது ஓர் ஒதுக்கீட்டுச் சின்னம் அல்லாத வேறு ஒரு சின்னம் எனப் பொருள்படும்:

(ஊ) “ ஏற்பிசைவு பெற்ற அரசியல் கட்சி” என்பது (இந்தியத்தேர்தல் ஆணையத்தால் ,) தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை. 1968ன் கீழ் ஒரு தேசியக்கட்சியாக அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் ஒரு மாநிலக்கட்சியாகத் ஏற்பிசைவு பெற்றிருக்கிற அரசியல் கட்சி ஒவ்வொன்றும் எனப் பொருள்தந்து உள்ளடக்குகிறது.

(எ ) " பதிவு செய்யப்பட்டு “ ஏற்பிசைவு பெறாத அரசியல் கட்சி என்பது, தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை 1968இன் கீழ் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஒரு தேசியக்கட்சியாக அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் ஒரு மாநிலக்கட்சியாகப் பதிவு செய்யப்பட்டு, ஆனால் ஏற்பிசைவுபெறாது,, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் தனது தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சி ஒவ்வொன்றும் எனப் பொருள் தந்து உள்ளடக்குகிறது.

(ஏ) "ஒதுக்கீட்டு சின்னம் என்பது ஏற்பிசைவுபெற்ற ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப்பெற்று போட்டியிடும் வேட்டாளர் ஒருவருக்குத் தனிநலையில் ஒதுக்கிக்கொடுப்பதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்தால் ஒதுக்கீடு செய்யப்படுகிற ஒரு சின்னம் எனப் பொருள்படும்;

(ஐ) "விதிகள் " என்பது புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் தேர்தல் நடத்துதல்) விதிகள் 1996 எனப் பொருள்படும்;

(ஒ) "மாநிலத் தேர்தல் ஆணையம் " என்பது சட்டத்தின் 15-அ பிரிவுடன் படித்துப் பொருள் கொள்ளவேண்டிய இந்திய அரசமைப்பின் 243- ZA உறுப்பின் கீழ் அமைக்கப்பட்ட புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் மாநிலத் தேர்தல் ஆணையம் எனப் பொருள்படும்.

(2) இந்த ஆணையில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள் வரையறை செய்யப்படாமல், ஆனால் மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1950 அல்லது அதன் கீழ்ச்செய்யப்பட்ட விதிகளில் அல்லது, 1951 அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளில், அல்லது அவ்வப்போது திருத்துகை செய்யப்பட்டவாறு புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973 அல்லது அதன் கீழ்ச் செய்யப்பட்ட விதிகளில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ள சொற்களும் சொல்லமைப்புகளும், அவற்றிற்கு அந்தச் சட்டங்களிலும் விதிகளிலும் குறித்தளிக்கப்பபெற்ற அதே பொருளை முறையே கொண்டிருக்கும்.

(3) புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் தேர்தல்) விதிகள் 1996இன் 2ஆம் விதியின் கீழ், மாநிலத் தேர்தல் ஆணையம், புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள அனைத்து நகராட்சி மன்றங்களின் தலைவர் தேர்தல், கட்சி அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கை செய்கிறது.

4. ஏற்பிசைவுபெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் சின்னங்கள், பதிவுசெய்யப்பட்டு; ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகள் மற்றும் தடையிலாச் சின்னங்கள் ஆகியவை பற்றி மாநிலத் தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கை :

மாநிலத் தேர்தல் ஆணையமானது

(அ) ஏற்பிசைவு பெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் முறையே அவற்றிற்குரிய சின்னங்களின் பட்டியல். பதிவுசெய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகளின் பட்டியல்.

(ஆ) கட்சி அடிப்படையில் நடத்தப்படுகிற ஒரு தேர்தலில் அல்லது தலைவர் தேர்தல்களில், பயன்படுத்துவதற்குரிய ஒதுக்கீட்டுச் சின்னங்களின் பட்டியல் மற்றும் தடையிலாச் சின்னங்களின் பட்டியல்.

(இ )கட்சி அடிப்படையில் நடத்தப்படாத ஒரு தேர்தலில் அல்லது மன்ற உறுப்பினர் தேர்தல்களில், பயன்படுத்துவதற்குரிய தடையிலாச் சின்னங்களின் பட்டியல். அல்லது பட்டியல்கள். ஆகியவற்றை அவ்வப்போது அறிவிக்கை செய்திடும்.

5. சின்னங்கள் ஒதுக்கிக்கொடுத்தல் : போட்டியிடப்படும் தேர்தல் ஒவ்வொன்றிலும், இந்த ஆணையின் வகைமுறைக்கு இணங்கியவாறு, போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கு ஒரு சின்னம் ஒதுக்கிக்கொடுக்கப்படும். மற்றும் அதே தொகுதியிலான தேர்தல் ஒன்றில் போட்டியிடும் வெவ்வேறு வேட்பாளர்களுக்கும் வெவ்வேறு சின்னங்கள்ஒதுக்கிக்கொடுக்கப்படும்.

5.2. வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட சின்னம் பற்றி அவர்களுக்கு அறிவிக்கப்படும். மற்றும் அந்த அறிவிப்பைப் பெற்றுக்கொண்டதன் அடையாளமாக அவரது கையொப்பம் பெறப்படும். அத்தகைய அறிவிப்புடன் சேர்த்து அந்தச் சின்னத்தின் மாதிரிப் படியம் ஒன்றும் அவருக்குக் கொடுக்கப்படும்.

6. கட்சி அடிப்படையில் நடத்தப்பெறாத தேர்தல்களில் சின்னங்களை ஒதுக்கிக்கொடுத்தல் கட்சி அடிப்படையில் நடத்தப்பெறாத மன்ற உறுப்பினர்களின் தேர்தல், ஒன்றில் அந்தத் தேர்தலுக்கென்று குறித்திட்ட தடையிலாச் சின்னங்களின் பட்டியலில் உள்ள சின்னங்களின் வரிசை முறையிலும், போட்டியிடும் வேட்பாளரின் பட்டியலிலுள்ள அவர்களின் பெயர் வரிசைமுறையிலும், வேட்பாளர்களுக்குச் சின்னங்கள் ஒதுக்கிக்கொடுக்கப்பட வேண்டும்.

7. வேட்பாளர் ஒருவர் ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப்படுகிறார் என்று எப்போது கொள்ளப்படுதல் வேண்டும்: இந்த ஆணையின் நோக்கங்களுக்காக,

(அ) வேட்பாளர் படிவம் 3இல் உள்ள வேட்புமனுவுடன் அந்த விளைவு குறித்த ஒரு விளம்புகையை இணைத்திருக்கிறார்,

(ஆ) ஓர் அறிவிப்பானது ஆ படிவத்தில் அந்த விளைவு குறித்து எழுத்துருவில் வேட்புமனுத்தாக்கலுக்கான கடைசித் தேதியன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிற்படாமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது,

(இ) மேற்சொன்ன அறிவிப்பு, கட்சியின் தலைவர், செயலாளர் அல்லது வேறு எவரேனும் அலுவல் குழு உறுப்பினரால் கையொப்பமிடப்பட்டிருக்கிறது மற்றும் அந்தத் தலைவர், செயலாளர் அல்லது வேறு எவரேனும் அலுவலர் குழு உறுப்பினர் அத்தகைய அறிவிப்பை அனுப்பக் கட்சியால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார்,

(ஈ) அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயரும் மாதிரிக் கையொப்பமும் பற்றிய வகையில் அ-படிவத்திலுள்ள அறிவிப்புக் கடிதம்

வேட்புமனுக்களைச் செய்வதற்கான கடைசி நாளன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிற்படாமல், தேர்தல் நடத்தும் அலுவலரிடம், ஒப்படைக்கப்படுகிறது.

என்றால் மட்டும் என்றால் மட்டுமே, ஓர் அரசியல் கட்சியால் வேட்பாளர் ஒருவர் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறார் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

8. கட்சி அடிப்படையிலான தேர்தல்களில் சின்னங்களை ஒதுக்கிக் கொடுத்தல்:-

(1) ஏற்பிசைவுபெற்ற அரசியல் கட்சிகளால் நிறுத்தப் பெறுகிற வேட்பாளர்களுக்கான சின்னங்கள் - கட்சி அடிப்படையில் நடத்தப்படும் ஒரு தேர்லில், ஏற்பிசைவுபெற்ற ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப் பெறுகிற வேட்பாளர் ஒவ்வொருவரும், அந்தக் கட்சிக்காக ஒதுக்கீடு செய்த சின்னத்தை நாடிப் பெறுதல் வேண்டும்; வேறு எந்த சின்னத்தையும் அன்று. அவருக்கு அந்தச் சின்னம்தான் ஒதுக்கிக்கொடுக்கப்படுதல் வேண்டும்; வேறு சின்னம் எதுவும் அன்று ;

ஆனால், தாக்கல் செய்த வேட்புமனுவில், அல்லது ஆ படிவத்தில், அல்லது இ-படிவத்தில் உள்ள பொருட்படுத்தத்தக்க குறைபாடு காரணமாக அத்தகையை ஒதுக்கீட்டுச் சின்னம் குறித்து முரண்பாடான உரிமைக்கோரிக்கைகள் எழுகிறவிடத்து அந்த ஒதுக்கீட்டுச் சின்னம் உரிமை கோருபவர் எவருக்கும் ஒதுக்கிக்கொடுக்கப்படுதல் கூடாது. மேலும், வேட்பாளர்கள் அனைவரும் சுயேச்சை வேட்பாளர்களாகப் பாவிக்கப்பட்டு, பிறவேட்பாளர்கள் அனைவருக்கும் ஒதுக்கிக்கொடுத்த பின்னர் விடப்பட்டுள்ள தடையிலாச் சின்னங்களை ஒதுக்கிக் கொடுத்தல் வேண்டும்;

மேலும், ஒரு தேர்தலில் ஏற்பிசைவுபெற்ற ஓர் அரசியல் கட்சியால் வேட்பாளர் எவரும் நிறுத்தப்படவில்லை என்றபோதிலும்கூட, ஏற்பிசைவு பெற்ற அந்த அரசியல் கட்சிக்கு ஒதுக்கீடு செய்த அந்தச் சின்னம், அக்கட்சியால் நிறுத்தப்பட்ட வேட்பாளர் அல்லாமல் வேறு வேட்பாளர் எவராலும் அந்தச் சின்னம் நாடிப் பெறப்படுதலோ அல்லது அவருக்கு ஒதுக்கிக்கொடுக்கப்படுதலோ கூடாது

(2) வேட்பாளர் ஒருவர், ஒன்றுக்கும் மேற்பட்டு (ஆனால் நான்குக்கும் மேற்படாமல்) வேட்புமனுக்களை, அவற்றுள் சில ஏற்பிசைவு பெற்ற ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப்பெற்ற வேட்பாளராக, அல்லது ஒரு சுயேச்சை வேட்பாளராக தாக்கல் செய்திருக்கிறார் என்றால் - ஏற்பிசைவு பெற்ற ஓர் அரசியல் கட்சியின் வேட்பாளராகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவானது, தொடர்புடைய அரசியல் கட்சியிலிருந்து வேட்புமனுவைச் செய்வதற்கான கடைசித் தேதியன்று பிற்பகல் 3,00 மணிக்கு முன்பு, படிவம் - அ , படிவம் - ஆ ஆகியவற்றில் மேற்சொன்ன அறிவிப்பு பெறப்படவில்லை என்னும் காரணத்தின்மீது மறுத்தொதுக்கப்பட்டு, மற்ற வேட்புமனுக்களின் எதுவும் அல்லது எல்லாம் கூர்ந்தாய்வின்மேல் செல்லுநிலையிலுள்ளன எனக்கண்டறியப்பட்டு அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு நேர்வில், வேட்புமனுக்கள் செய்யப்படுவதற்கான கடைசி நாளன்று பிற்பகல் 3.00

மணிக்கு முன்பு அ மற்றும் ஆ படிவங்களில், பதவி செய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத ஒரு கட்சி அத்தகைய அறிவிப்புகளை அனுப்பியிருக்கிறது என்றால், அவர் அத்தகைய கட்சியினால் நிறுத்தப் பெற்ற ஒரு வேட்பாளராகவும் மற்றப்படியாக, ஒரு சுயேச்சை வேட்பாளராகவும் கொள்ளப்படுவார். அத்தகைய நிகழ்வில், அந்த வேட்பாளரால் அல்லது அவர் சார்பாகத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் முதலில் ஒப்படைக்கப்பட்ட வேட்புமனுவில் தெரிவு செய்யப்பட்ட சின்னங்கள், கூர்ந்தாய்வின் போது அந்த வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படுகிறதா அல்லது மறுத்தொகுக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தே கருதுகை செய்யப்படும்.

(3) ஒரு வேட்பாளரின் வேட்புமனுக்கள் ஏற்பிசைவுபெற்ற ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப் பெற்ற வேட்பாளராக ஒன்றும், சுயேச்சை வேட்பாளராக மற்றொன்றும் ஏற்கப்படுகின்றன என்றால், அவர் ஏற்பிசைவு பெற்ற அரசியல் கட்சியால் நிறுத்தப்பெற்ற ஒரு வேட்பாளராகக் கொள்ளப்படலாம்.

(4) ஏற்பிசைவு பெற்ற ஓர் அரசியல் கட்சியின் ஒப்புதலளிக்கப்பட்ட முக்கிய வேட்பாளரின் வேட்பு மனுக்கள் ஏற்கப்படுகின்றன என்றால், ஏற்பிசைவு பெற்ற அந்த அரசியல் கட்சியினுடைய மாற்று வேட்பாளர் ஒருவரின் வேட்புமனு மறுத்தொதுக்கப்படும். மேலும், அந்தக் கட்சியின் ஒப்புதலளிக்கப்பட்ட முக்கிய வேட்பாளரின் வேட்புமனுக்கள் மறுத்தொதுக்கப்படுகின்றன என்றால், அப்போது வேட்புமனுக்களைச் செய்வதற்கான கடைசித் தேதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்பு, அ-மற்றும் ஆ படிவங்களில் அக்கட்சி அவரது பெயரை அதன் மாற்று வேட்பாளராக தெரிவித்திருக்கிறது என்றால், அந்த மாற்று வேட்பாளரின் வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்படும்.

9. பதிவு செய்யப்பட்ட ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகளால் நிறுத்தப்பெற்ற வேட்பாளர்களுக்கும் சுயேச்சை வேட்பாளர்களுக்கும் சின்னங்களை ஒதுக்கிக்கொடுத்தல் -

(1) ஒரு வேட்பாளரால் அல்லது அவர் சார்பாகத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் முதலில் ஒப்படைக்கப்பட்ட வேட்புமனுவில் (ஒது தேசியக் கட்சியால் அல்லது ஒரு மாநிலக் கட்சியால் நிறுத்தப்படுகிற வேட்பாளர் அல்லாமல் வேறு) ஒரு வேட்பாளரால் தலைவர் தேர்தலுக்காகத் தெரிவு செய்யப்பட்ட சின்னங்களை, கூர்ந்தாய்வின்மேல் அந்த வேட்புமனு ஏற்கப்படுகிறதா அல்லது மறுத்தொதுக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்தே , ஒதுக்கிக்கொடுப்பது பற்றிக் கருதுகை செய்யப்படுதல் வேண்டும்.

(2) தலைவர் தேர்தலில் (ஒரு தேசியக் கட்சியால் அல்லது ஒரு மாநிலக் கட்சியால் நிறுத்தப்படுகிற வேட்பாளர் அல்லாமல் வேறு) வேட்பாளர் ஒருவர், மாநிலத் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட தடை பிலாச் சின்னங்களிலிருந்து மட்டுமே சின்னங்களைத் தெரிந்தெடுக்க முடியும்.

(அ) ஒரு தடையிலாச் சின்னம் ஒரு வேட்பாளரால் மட்டுமே தெரிவு செய்யப்பட்டிருக்கிறபோது, அந்தத் தடையிலாச் சின்னம் அவருக்கு ஒதுக்கிக்கொடுக்கப் படுதல் வேண்டும், வேறு எவருக்கும் அன்று.
(ஆ) அதே தடையிலாச் சின்னம் பற்பல வேட்பாளர்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறபோது-

(i) அந்தப் பற்பல வேட்பாளர்களில் ஒரு வேட்பாளர் மட்டுமே பதிவு செய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத ஓர் அரசியல் கட்சியால் நிறுத்தப்பட்டிருக்கிறார், மற்றவரெல்லாம் சுயேச்சை வேட்பாளர்களாக இருக்கிறார்கள் என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர், பதிவு செய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத அத்தகைய அரசியல் கட்சியால் நிறுத்தப்படுகிற வேட்பாளர்களுக்கு அந்தத் தடையிலாச் சின்னத்தை ஒதுக்கிக்கொடுத்தல் வேண்டும், வேறு எவருக்கும் அன்று.

(ii) அந்தப் பற்பல வேட்பாளர்களில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் பதிவு செய்யப்பட்டு எற்பிசைவு பெறாத அத்தகைய அரசியல் கட்சிளால் நிறுத்தப்படுகிறார்கள் என்றால், மேற்சொன்ன பதிவு செய்யப்பட்டு ஏற்பிசைவு பெறாத அரசியல் கட்சிகளால் நிறுத்தப்படுகிற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களில் எவருக்கு அந்தத் தடையிலாச் சின்னம் ஒதுக்கிக்கொடுக்கப்படுதல் வேண்டும் என்பது குறித்துத் தேர்தல் நடத்தும் அலுவலர் திருவுளச்சீட்டுக் குலுக்கல் மூலம் முடிவு செயதலும், திருவுளச்சீட்டு விழுந்த வேட்பாளர்களுக்கு அந்தத் தடையிலாச் சின்னத்தை ஒதுக்கிக்கொடுத்தலும் வேண்டும். வேறு எவருக்கும் அன்று.

(iii) அந்தப் பற்பல வேட்பாளர்களில் அனைவருமே சுயேச்சை வேட்பாளர்களாக இருக்கிறார்கள் என்றால், அந்த சுயேச்சை வேட்பாளர்களில் எவருக்கு அந்தத் தடையிலாச் சின்னம் ஒதுக்கிக்கொடுத்தல் வேண்டும் என்பது குறித்துத் தேர்தல் நடத்தும் அலுவலர் திருவுளச்சீட்டுக் குலுக்கல் முலம் முடிவு செய்தலும், திருவுளச்சீட்டு விழுந்த வேட்பாளர்களுக்கு அந்தத் தடையிலாச் சின்னத்தை ஒதுக்கிக்கொடுத்தல் வேண்டும், வேறு எவருக்கும் அன்று.

10. நீக்கறவு (ரத்து):- புதுச்சேரி நகராட்சி மன்றங்களின் தலைவர் தேர்தல சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக் கொடுத்தல்) ஆணை, 1996, நீக்கறவு செய்யப்படுகிறது.

## படிவம்-அ

[காண்க, பத்தி 7(இ) மற்றும் (ஈ)]

பெறுநர் : தேர்தல் நடத்தும் அலுவலர்,
..............................................................................நகராட்சி

பொருள் : தலைவர் தேர்தல் - சின்னங்கள் ஒதுக்கிக்கொடுத்தல் வேட்பாளர்களின் பெயர் களைத்தெரிவிக்க அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்.

ஐயா!

புதுச்சேரி நகராட்சி மன்றங்களின் தலைவர் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை, 2002இன் 7ஆம் பத்தியின், (இ) மற்றும் (ஈ) உட்பத்திகளை அடியொற்றி, ஏற்பிசைவு பெற்ற அரசியல் கட்சியாக / பதிவுசெய்யப்பட்டு ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சியாக உள்ள கட்சியால், மேற்குறித்த தேர்தலில் நிறுத்தப்படுவதற்குக் கருதப்படும் வேட்பாளர்களின் பெயர்களை முன்மொழிவதற்குப் பின்வரும் ஆள் (ஆட்கள்) கட்சியால் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார் (கள்) என்பதை நான் இதன் மூலம் தெரிவித்திடுகிறேன்.

| வரிசை எண் | அறிவிப்பு அனுப்பக் கட்சியால் அதிகாரமளிக்கப் பட்ட ஆளின் பெயர் | ஏற்றுள்ள பதவிப்பெயர் | எந்த நகராட்சி மன்றம் பொறுத்து அவர் அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறார் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

2. அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டு மலே சொல்லப்பட்ட ஆட்களின் மாதிரிக் கையொப்பங்கள் கீழே கொடுக்கப்படுன்றன.

**(அ) ………………………………………………………….. இன் மாதிரிக் கையொப்பம்**

(i)
(ii)
(iii)

**(ஆ) …………………………………………………………….இன் மாதிரிக் கையொப்பம்**

(i)
(ii)
(iii)

**(இ) …………………………………………………………..இன் மாதிரிக் கையொப்பம்**

(i)
(ii)
(iii)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

**இடம் :** **தங்கள் உண்மையுள்ள**

**தேதி :**

**தலைவர் | செயலாளர்**
**கட்சியின் பெயர்**

**(கட்சி முத்திரை)**

# படிவம்-ஆ

[(காண்க பத்திகள் 7(ஆ)]

பெறுநர் : தேர்தல் நடத்தும் அலுவலர்,
.............................................................. நகராட்சி

பொருள் : தலைவர் தேர்தல் - சின்னங்கள் ஒதுக்கிக்கொடுத்தல்
ஒப்புதலலிக்கப்பட்ட வேட்பாளரின் பெயர் தெரிவிக்கப்படுதல்.

ஐயா!

புதுச்சேரி நகராட்சி மன்றங்களின் தலைவர் தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை, 2002இன் 7ஆம் பத்தியின், (ஆ) உள்பத்தியை அடியொற்றி, பின்வரும் ஆள் (ஆட்கள் ) ஒவ்வொருவருக்கும் எதிரே குறிக்கப்பட்ட நகராட்சி மன்றத்திற்கு அடுத்து வரும் தலைவர் தேர்தலில், கட்சியினால் அதன் வேட்பாளர்களர் (கள்) ஆக நிறுத்தப் பெற்றிருக்கிறார் (கள்) என்று நான் இதன் மூலம் அறிவிக்கிறேன்.

| நகராட்சியின் பெயர் | ஒப்புதல் பெற்ற வேட்பாளரின் பெயர் | ஒப்புதல் பெற்ற வேட்பாளரின் தந்தை/ கணவர் பெயர் | ஒப்புதல் பெற்ற வேட்பாளரின் அஞ்சல் முகவரி | ஒப்புதல் பெற்ற வேட்பாளரின் வேட்புமனு கூர்ந்தாய்வின் மேல் மறுத்தொதுக்கப்படுகிற , அல்லது போட்டியிலிருந்து அவர் விலகிக் | கொள்கிற நிகழ்வில் மாற்று வேட்பாளரின் தந்தை/ கணவர் பெயர் | மாற்று வேட்பாளரின் அஞ்சல் முகவரி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(பிற்குறிப்பு: இது வேட்புமனுக்களைச் செய்யும் கடைசித் தேதியன்று பிற்பகல் 3.00 மணிக்கு முன்பு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்)

இடம் : தங்கள் உண்மையுள்ள
தேதி :

தலைவர் | செயலாளர்
கட்சியின் பெயர்

(கட்சி முத்திரை)

# படிவம்-இ

**[காண்க பத்தி 7(அ)]**

**..................................................நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் ஒரு வேட்பாளராகிய .................................................... என்னும் நான், ஏற்பிசைவுபெற்ற ஓர் அரசியல் கட்சியான / பதிவு செய்யப்பட்டு - ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சியான கட்சியினால் இந்தத் தேர்தலில் நான் நிறுத்திவைக்கப்பெற்றிருக்கின்றேன் என்பதை இதன் மூலம் விளம்புகின்றேன்.**

**இடம்** :

**தேதி** :

**வேட்பாளரின் கையொப்பம்**

**மாநிலத் தேர்தல் ஆணையாளர்.**

## பின்னிணைப்பு - 3.4
## புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் தலைவர் தேர்தல் விதிகள் 1996

1.1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் : இந்த விதிகள் புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் தேர்தல்) விதிகள் 1996 என வழங்கப்படும்.

1.2. இது உடனடியாகச் செயலாற்றலுக்கு வரும்.

2. கட்சி அடிப்படையில் நடத்தப்படவேண்டித் தேர்தல் ஆணைத்தின் அறிவிக்கை:

இவ்விதியின் நோக்கத்திற்காக, தேர்தல் ஆணையம் அவ்வப்போது, கட்சி அடிப்படையில் நடத்தப்படவேண்டிய தேர்தலை அறிவிக்கை செய்தலும், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை அவரவர்குரிய சின்னங்களுடன் வாக்குச்சீட்டில் அச்சிடுதலும் வேண்டும்.

3. அரசியல் கட்சிகளின் ஏற்பிசைவு: தேர்தல் சின்னங்கள் (ஒதுக்கீடு மற்றும் ஒதுக்கிக்கொடுத்தல்) ஆணை, 1966 இன் கீழ் ஒரு தேசியக் கட்சியாக, அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் ஒரு மாநிலக் கட்சியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தினால் ஏற்பிசைவுபெற்ற அரசியல் கட்சி ஒவ்வொன்றும், நகராட்சிகளின் தேர்தல் நோக்கத்திற்காக, ஓர் ஏற்பிசைவு பெற்ற அரசியல் கட்சியாக அமையும்.

4. ஏற்பிசைவுபெற்ற கட்சிகள் மற்றும் சின்னங்களின் வெளியீடு: இந்த விதிகளின் நோக்கத்திற்காக, தேர்தல் ஆணையம், ஏற்பிசைவுபெற்ற அரசியல் கட்சிகளின் பட்டியலையும் அவற்றிற்குரிய சின்னங்களையும், தடையிலாச் சின்னங்களின் பட்டியலையும் அறிவிக்கை மூலம் வெளியிடுதல் வேண்டும்.

5. புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (மன்ற உறுப்பினர்களின் தேர்தல் நடத்துதல்) விதிகள், 1974இன் பொருந்துகை - புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (மன்ற உறுப்பினர் தேர்தல் நடத்துதல்) விதிகள், 1974 (இதில் இதன்பின்பு மேற்சொன்ன விதிகள் எனச் சுட்டப்படுகிறது), மன்ற உறுப்பினர்களின் தேர்தல் நடத்துவது தொடர்பாக அவை பொருந்துவது போன்றே தலைவரின் தேர்தல் நடத்துவது தொடர்பாகவும், இயன்ற அளவு பொருந்துதல் வேண்டும் :

ஆனால், ஆள் எவரும், அவர் இருபத்தைந்து வயது எய்தியிருக்கிறார் என்றாலன்றி, தலைவர் தேர்தலில் தகுதிப்பாடுள்ளவர் ஆகார்.

மேலும் தலைவர் பதவிக்கான ஒரு வேட்பாளர் மேற்கூறிய விதிகளின் 11ஆம் விதியின் (2)ஆம் உள்விதியின் கீழ் வேட்புமனுவை ஒப்படைக்கும் நேரத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உடனடிப்பணமாக மூவாயிரம் ருபாய்த் தொகையை அல்லது வேட்பாளர் ஒரு பட்டியல் சாதி உறுப்பினராக இருக்குமிடத்து ஆயிரத்து ஐந்நூறு ரூபாய்த் தொகையை வைப்பீடு செய்கிறார் அல்லது வைப்பீடு செய்விக்கிறார்

என்றாலன்றி, அவர் தேர்தலில் உரியவாறு முன்மொழியப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் கூடாது.

6. நீக்கறவு (ரத்து) - புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் விதிகள், 1974, இதன் மூலம் நீக்கறவு செய்யப்படுகின்றன :

ஆனால், அத்தகைய நீக்கறவு, உரியவாறு செய்யப்பட்ட அல்லது அதன்கீழ்ப் பாதிக்கப்பட்ட எதையும் பாதித்தல் ஆகாது.

(துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி)

அரசு செயலாளர்,
உள்ளாட்சித்துறை.

# பின்னிணைப்பு - 3.5

## மாநிலத் தேர்தல் ஆணையம்

*****

எண். மாதேஆ 1-6(M) உள்ளாட்சி தேர்தல்/2021 புதுச்சேரி, தேதி 24.08.2021.

## அறிவிக்கை

புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (தலைவர் தேர்தல்) விதிகள் 1996இன் கீழ் விதி 4, புதுச்சேரி நகராட்சி மன்றங்கள் (உறுப்பினர்களின் தேர்தலை நடத்துதல்) திருத்தப்பட்ட விதிகள் 2004இன் கீழ் விதி 17A, 17B மற்றும் 17C மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கை 61600.56/2011/PPS-II, தேதி 28-12-2011 ஆகியவற்றின் கீழ் அதிகாரங்களைச் செலுத்தியும், அறிவிக்கை எண். SEC/1-15/Civic Elec./2006/254, தேதி 3-5-2006 ஆகியவற்றை மேலறவு (ரத்து) செய்தும், மாநிலத்தேர்தல் ஆணையம் இதன் மூலம் பின்வருமாறு அறிவிக்கை செய்கிறது.

(அ) அட்டவணை I-ல், தேசியக் கட்சிகள் மற்றும் முறையே அவற்றுக்கு ஒதுக்கீடு செய்த சின்னங்களின் பட்டியல்;
(ஆ) அட்டவணை I-ல், மாநிலக் கட்சிகள் மற்றும் முறையே அவற்றுக்கு ஒதுக்கீடு செய்த சின்னங்களின் பட்டியல்;
(இ) அட்டவணை II-ல், பதிவு செய்து ஏற்பிசைவுபெறாத கட்சிகளின் பட்டியல்,
(ஈ). அட்டவணை IV-ல், தலைவர் தேர்தலுக்குரிய தடையிலாச் சின்னங்களின் பட்டியல், மற்றும்
(உ) அட்டவணை V-ல், உறுப்பினர் தேர்தலுக்குரிய தடையிலாச் சின்னங்களின் பட்டியல்.

### .அட்டவணை - I

தேசியக் கட்சிகள் மற்றும் முறையே அவற்றுக்கு ஒதுக்கீடு செய்த சின்னங்களின் பட்டியல்

| வரிசை எண் | தேசியக் கட்சிகள் | ஒதுக்கீடு செய்த சின்னம் | தலைமை அலுவலக அஞ்சல் முகவரி | புதுச்சேரியின் கட்சிகளின் உள்ளூர் முகவரி |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | பகுஜன் சமாஜ் கட்சி | யானை | 12, குருத்வாரா ரகபஞ்ச் சாலை, புதுடில்லி-110001, | 19, முதல் குறுக்கு, அவ்வை நகர், முதலியார்பேட்டை புதுச்சேரி 605004. |
| 2 | பாரதீய ஜனதா கட்சி | தாமரை | 6A, தீன்தயாள் உபாத்தியாயா மார்க், புதுதில்லி | மனை எண்.45-46, மூன்றாம் குறுக்கு, சித்தானந்தா நகர், |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 110002. | புதுச்சேரி 605005 |
| 3 | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி | கதிர்மணி மற்றும் அரிவாள் | அஜய்பவனம், கோட்டா மார்க், புதுடில்லி-110002 | வி.சுப்பையா இல்லம், 66, கடலூர் ரோடு, முதலியார்பேட்டை, புதுச்சேரி. |
| 4 | இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மார்க்சிஸ்ட்) | சுத்தி, அரிவாள் மற்றும் நட்சத்திரம் | ஏ.கே.கோபாலன் பவன், 27-29, பல்வீர் சிங் மார்க், புதுடில்லி-110001. | மூகாம்பிகை நகர், (அசிஸ் நகர்), ரெட்டியார்பாளையம், புதுச்சேரி. |
| 5 | இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி | கை | 24, அக்பர் சாலை, புதுடில்லி-110001. | 169, கலவை சுப்புராயலு செட்டி வீதி, புதுச்சேரி. |
| 6 | இந்திய தேசியவாத காங்கிரஸ் கட்சி | கடிகாரம் | பங்களா எண்.1 கானிங் லேன், (ரவிசங்கர் சுக்லா லேன்), நியு பெரோசா ரோடு, புது தில்லி 110001 | 8, தரைத்தளம், கருவடிக்குப்பம் முதன்மைச்சாலை, முத்தியால்பேட்டை, புதுச்சேரி 605003 |

**அட்டவணை - II**

**மாநிலக் கட்சிகள் மற்றும் முறையே அவற்றுக்கு ஒதுக்கீடு செய்த சின்னங்களின் பட்டியல்**

| வரிசை எண் | மாநிலக் கட்சிகள் | ஒதுக்கீடு செய்த சின்னம் | தலைமை அலுவலக அஞ்சல் முகவரி | புதுச்சேரியின் கட்சிகளின் உள்ளூர் முகவரி |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் | இரட்டை இலை | 275, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600014. | எண். 12. டாக்டர் அம்பேத்கார் சாலை, உப்பளம் முதன்மைச் சாலை, புதுச்சேரி 605001. |
| 2 | அனைத்திந்திய | ஐக்கு | 51 ஜே.ஜே. | 65/6 கிழக்குக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | என்.ஆர்.காங்கிரஸ் | | காம்ப்ளெக்ஸ் 100 அடி ரோடு, எல்ல பிள்ளைச்சாவடி நெல்லித்தோப்பு அஞ்சல், புதுச்சேரி 605005. | கடற்கரைச் சாலை, பாக்கமுடையான்பட்டு, புதுச்சேரி 605008 |
| 3 | திராவிட முன்னேற்றக் கழகம் | உதய சூரியன் | அண்ணா அறிவாலயம், 268-269, அண்ணாசாலை, சென்னை 600018. | 10 - லப்போர்த் சாலை, புதுச்சேரி 605001. . |
| 4 | பாட்டாளி மக்கள் கட்சி | மாம்பழம் | 63, நாட்டு முத்து நாயக்கன் தெரு, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை- 600018. | 1/22, செங்கேணியம்மன் கோயில் தெரு, கொம்பாக்கம், புதுச்சேரி-605110. |

## அட்டவணை- III

### பதிவு செய்து ஏற்பிசைவு பெறாத கட்சிகளின் பட்டியல்

| வரிசை எண் | அரசியல் கட்சிகள் | கட்சிகளின் உள்ளூர் முகவரி |
|---|---|---|
| 1 | அகில இந்திய மக்கள் கழகம் | 3, இரண்டாம் குறுக்கு, வள்ளலார் நகர், பெத்துச்செட்டிப்பேட்டை, இலாசுப்பேட்டை, புதுச்சேரி 605008 |
| 2 | திராவிடப் பேரவை | 69, ரங்கப்பிள்ளை தெரு, புதுச்சேரி 605001 |
| 3 | புதுச்சேரி முன்னேற்றக் கட்சி | 51, இரண்டாம் குறுக்கு, செல்வா நகர், உருவையாறு, புதுச்சேரி 605110 |
| 4 | புதுச்சேரி படைப்பாளி மக்கள் கட்சி | 4, முதல் வீதி, தென்றல் நகர், புதுச்சேரி-605013 |

## அட்டவணை- IV

### தலைவர் தேர்தலுக்குரிய பொதுச் சின்னங்களின் பட்டியல்

| வரிசை எண் | பொதுச் சின்னங்களின் பட்டியல் |
|---|---|
| 1 | அலமாரி |
| 2 | ஆட்டோ ரிக்ஷா |
| 3 | பலூன் |
| 4 | வளையல் |
| 5 | பேட்டரி டார்ச் (Battery torch) |
| 6 | கரும்பலகை |
| 7 | வாளி |
| 8 | கேமரா (Camera) |
| 9 | கணக்கான் (Calculator) |
| 10 | கணிப்பொறி (Computer) |
| 11 | தரைவிரிப்பு (Carpet) |
| 12 | கட்டில் |
| 13 | கோப்பையும், ஏந்து தட்டும் (Cup & Saucer) |
| 14 | ஹார்மோனியம் (Harmonium) |

| | |
|---|---|
| 15 | **தொப்பி** |
| 16 | **உலங்கூர்தி (Helicopter)** |
| 17 | **பலாப்பழம்** |
| 18 | **மடிக்கணினி (Laptop)** |
| 19 | **தையல் இயந்திரம்** |
| 20 | **தட்டச்சுப் பொறி** |

**அட்டவணை -V**

**உறுப்பினர் தேர்தலுக்குரிய பொதுச் சின்னங்களின் பட்டியல்**

| வரிசை எண் | பொதுச் சின்னங்களின் பட்டியல் |
|---|---|
| 1 | குளிரூட்டும் இயந்திரம் (Air conditioner) |
| 2 | இடைவார் (Belt) |
| 3 | கைபெட்டி (Brief Case) |
| 4 | கேக் (Cake) |
| 5 | கேரம் பலகை (Carrom Board) |
| 6 | செஸ் பலகை (Chess Board) |
| 7 | மின் கம்பம் |
| 8 | புல்லாங்குழல் (Flute) |
| 9 | கண்ணாடி டம்ளர் |
| 10 | தலைக்கவசம் (Helmet) |
| 11 | சாப்பாட்டுப்பெட்டி (Lunch Box) |
| 12 | மேசை |
| 13 | தொலைக்காட்சிப் பெட்டி |
| 14 | வயலின் (Violin) |
| 15 | தண்ணீர் குழாய் (Water Tap) |

ராய் பி. தாமஸ்
மாநிலத் தேர்தல் ஆணையர்

# இயல்-IV

## வேட்பு மனுக்களைக் கூர்ந்தாய்வு செய்தல்

4.1. **வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வு (Scrutiny) :** நீங்கள் உங்கள் வேட்பு மனுவைத் தாக்கல் செய்திருக்கிறீர்கள். மற்ற வேட்பாளர்களும் அவ்வாறே செய்திருக்கவும் கூடும். தேர்தல் நடைமுறையில் அடுத்த கட்டம் தேர்தல் நடத்தும் அலுவலரால் வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வு ஆகும். 10ஆம் விதியின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தேர்தல் கால அட்டவணையில் கூர்ந்தாய்வுக்காகக் குறித்திட்ட தேதியன்று தேர்தல் நடத்தும் அலுவலரால் பெறப்பட்ட வேட்பு மனுக்கள் எல்லாவற்றின் கூர்ந்தாய்வினை அவர் மேற்கொள்ள வேண்டும் என்று சட்டத்தால் வேண்டுறுத்தப்படுகிறார்.

4.2. **வேட்புமனுவின் கூர்ந்தாய்வு,** வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாளை அடுத்துப் பின்வரும் நாளன்று மேற்கொள்ளப் படுகிறது. இவ்வாறு, வேட்பு மனுவுக்கான கடைசி தேதி இன்று என்றால், அப்போது, வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வுத் தேதி நாளை ஆகும். ஆனால், நாளை ஒரு பொதுவிடுமுறை நாளாகும் என்றால் அப்போது, வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வு நாளை மறுநாள் ஒரு பொதுவிடுமுறை நாளாக இல்லை என்றால், அன்றைக்கு மேற்கொள்ளப்படும். பிற சொற்களில் சொல்வதென்றால், வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வு, ஏற்கனவே சுட்டியபடி ஒரு பொது விடுமுறை நாளன்று மேற்கொள்ளப்பட முடியாது.

4.3. **வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வு எவரால் மேற்கொள்ளப் படுகிறது :** வேட்பு மனுக்களின் கூர்ந்தாய்வு தேர்தல் நடத்தும் அலுவலரால் மட்டுமே செய்யப்படுகிறது. இந்த அலுவற்பணி தேர்தல் நடத்தும் உதவி அலுவலருக்கு ஒப்படைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

4.4. **வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வுக்கு எவர் வருகைதரலாம்.** கூர்ந்தாய்வு செய்யப்படும் இடத்தில், வேட்பாளர் ஒவ்வொருவரின் சார்பில் சட்டப்படி மூன்று ஆட்கள் மட்டுமே வருகைதாலாம். அந்த மூன்று ஆட்களும் வருமாறு: வேட்பாளர் தாமே, (2) வேட்பாளரை முன்மொழிந்தவரில் ஒருவர், மற்றும் (3) வேட்பாளரால் எழுத்து வழி அதிகாரமளிக்கப்பட்ட மற்றோர் ஆள். நீங்கள் ஒரே தொகுதியிலிருந்து உச்ச அளவு எண்ணிக்கையில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றாலும், அதாவது நான்கு வேட்புமனுக்கள் மற்றும் வெவ்வேறு முன்மொழிபவர்கள், அப்போதும் கூட, ஒரே ஒரு முன்மொழிபவரே கூர்ந்தாய்வில் வருகைதர முடியும். இவ்வாறு, ஒவ்வொரு வேட்பாளருக்கும் மூன்று ஆட்கள் மட்டுமே வருகை தர முடியும். மற்றும் எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட ஒரு தொகுதியிலிருந்து பத்து வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால், அப்போது, மொத்தத்தில் முப்பது ஆட்கள் கூர்ந்தாய்வில் வருகைதரக்கூடும். கூர்ந்தய்வு நேரத்தில் உங்களால் எழுத்து வழி அதிகாரமளிக்கப்பட வேண்டிய மூன்றாம் ஆள், தேர்தல் சட்டத்தில் நன்கு பழகி அறிந்த ஒரு வழக்குரைஞராக இருந்தால், உங்களுக்கு அது மிகவும் நல்லது ஆகும் ;

ஏனென்றால், கூர்ந்தாய்வு நேரத்தில் உங்கள் நலன்களைப் போதுமான அளவு அவர் பாதுகாக்கலாம். நீங்களே கூர்ந்தாய்வில் வருகைதர முடியுமென்றால், அது உங்களுக்கு நலம் பயப்பதாகும்.

4.5. வேட்புமனுக்களின் ஆராய்வு பொறுத்துத் தகவான வசதி நலங்கள் : கூர்ந்தாய்வு நேரத்தில் உங்கள் சார்பாக வருகைதரக்கூடிய (உங்களையும் சேர்த்து) மூன்று ஆட்கள். தேர்தல் நடத்தும் அலுவரால் கூர்ந்தாய்வுக்காக எடுத்துக்கொள்ளப்படுகிற அனைத்து வேட்பாளர்களின் வேட்புமனுக்களை ஆராயும் பொருட்டு, தகவான வசதி நலங்கள் அனைத்தையும் பெறுவதற்கான ஓர் உரிமையைக் கொண்டிருக்கிறார்கள். இது உங்களுக்கும் உங்களுடன் சேர்ந்து வருகைதந்திருக்கலாகும் மற்ற இரண்டு ஆட்கள் அதாவது, உங்களை முன்மொழிந்தவர்களில் ஒருவர். மற்றும் உங்களால் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் - இவர்களுக்கும் உரிய ஒரு மதிப்புமிக்க உரிமையாகும்.

4.6. (1) எழுப்பப்படலாகும் மறுப்புரைகள்(Objections) : நீங்கள் வேட்புமனு எதைப்பற்றியும் அற்பமான அல்லது தொழில் நுட்ப மறுப்புரைகள் எவற்றையும் எழுப்புதல் ஆகாது. அதுபோலவே, நீங்களோ அல்லது உங்களைச் சார்பாண்மை செய்யும் ஆளோ, அற்ப மற்றும் தொழில் நுட்பக் காரணங்கள் மீது உங்கள் வேட்புமனுக்கு எதிராக எழுப்பிய மறுப்புரை எதையும் எதிர்க்க வேண்டும். பொருட்படுத்தும் தன்மை இல்லாத குறைபாடு எதையும் காரணங்காட்டி, தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்புமனு எதையும் மறுத்தொதுக்கக் கூடாது என்று விதி 14(4) தெளிவாக விதித்திருக்கிறது.

உங்களது வேட்புமனுவில் சின்னங்கள் பற்றிய விளம்புகையை நிறைவுசெய்வதில் உள்ள தவறுகை அல்லது குறைபாடு. பொருட்டுப்படுத்த வேண்டிய ஒரு குறைபாடு ஆகாது என்று 14(4) ஆம் விதிக்கான விளக்கம் வதித்தமைத்திருகிறது. அதனால், பொருட்படுத்த வேண்டிய தன்மை இல்லாத ஒரு குறைபாடு பற்றிய மறுப்புரை எதுவும் உங்களை எதிர்க்கும் வேட்பாளர்களில் எவரும் எழுப்புகிறார் என்றால், நீங்களோ அல்லது உங்கள் சார்பாக வருகைதந்திருக்கும் ஆட்களில் எவருமோ அதை எதிர்க்கலாம். ஒரு வேட்பு மனுவை முன்னிடுவதன்மேல், வேட்பு மனுவில் பதிவு செய்யப்பட்டுள்ள வேட்பாளரின் மற்றும் அவரை முன்மொழிபவரின் பெயர்களும் வாக்காளர் பட்டியல் எண்களும் வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்துள்ளவாறு அப்படியே இருக்கின்றன என்று தேர்தல் நடத்தும் அலுவலர் தாமே மனநிறைவு கொள்வார். உங்களது பெயர் அல்லது உங்களை முன் மொழிபவர் பெயர். அல்லது வேறு எவரேனும் ஆளின் பெயர் பற்றிய வகையில், அல்லது வாக்காளர் பட்டியல் அல்லது வேட்புமனு முதலியவற்றில் சொல்லப்பட்ட இடம் எதையும் பற்றிய வகையில், தவறான சொல் வழக்கு அல்லது துல்லியமற்ற விவரிப்பு, அல்லது எழுத்தர், தொழில்நுட்ப, அல்லது அச்சுப்பிழை எதையும் காரணங்காட்டி தேர்தல் நடத்தும் அலுவலர் உங்களது வேட்பு மனுவை மறுத்தொதுக்காமல் இருக்கலாம். ஆனால் பெயரும் இடமும் பற்றிய அத்தகைய விவரிப்பு பொதுவகையில் அறியப்படுவதாக இருக்கவேண்டும் அத்தகைய தவறான சொல்வழக்கு அல்லது துல்லியமற்ற விவரிப்பு முதலியன பற்றிக் கூர்ந்தாய்வு

நேரத்தில் மறுப்புரை எதுவும் எழுப்பப்படுகிறது. என்றால் விதி 11 இன் உள்-விதி (4)க்கான வரம்புரைக்கு நீங்கள் உடனடியாகக் கவனத்தை ஈர்க்கலாம்.

4.7. ஒரு சொல்லில் சொல்வதென்றால், உங்களது வேட்புமனுவுக்கு எதிராக மறுப்புரை எதுவும் எழுப்பப்படுகிறபோது, தேர்தல் நடத்தும் அலுவலர் உங்களது வேட்புமனுவை அற்பமான அல்லது தொழில்நுட்பக் காரணத்தின் மேல் மறுத்தொதுக்க முடியாதவாறு, நீங்கள் அவர்மீது உங்கள் கருத்தைப் பதிக்க முயல வேண்டும். அவர் வேட்பாளரின் மற்றும் முன்மொழிபவரின் அடையாளம் குறித்து மனநிறைவு கொள்கிறார் என்றால், அப்போது வேட்பாளரின் அல்லது முன்மொழிபவரின் பெயரிலுள்ள தொழில்நுட்பக் குறைபாடு அல்லது துல்லியமற்ற விவரிப்பு, அல்லது ஏதேனும் இடத்தின் துல்லியமற்ற விவரிப்பு எதுவும் என்னும் காரணத்தினால் மட்டுமே வேட்புமனுவை அவர் மறுத்தொதுக்கக் கூடாது.

4.8. ஏதேனும் அத்தகைய தொழில்நுட்ப, பொருட்படுத்த வேண்டாத அல்லது அற்பமான காரணத்தின் மேல் வேட்புமனு எதையும் தேர்தல் நடத்தும் அலுவலர் மறுத்தொதுக்குகிறார் என்றால் அப்போது, அது வேட்புமனுவின் முறையற்ற மறுத்தொதுக்குகை எனக்கொள்ளப்படலாம் என்றும் பொதுமக்களின் பணம், பொதுமக்களின் நேரம், பொதுமக்களின் ஆற்றல் ஆகியவற்றின் மிகப்பெரிய வீணடிப்பை உள்ளடக்கி முழுமையாகத் தேர்தலை விழலாகச் செய்யும் (void- ing) செயல் விளைவை அது கொண்டிருக்கும் என்றும் அவரிடம் கூறிடுக.

4.9, வேட்புமனுவில் வேட்பாளரின் வயது விடுபடுகை, பொருட்படுத்தும் தன்மையுள்ள ஒரு குறைபாடாகிறது : வேட்புமனுவில் உங்களது வயதைக் குறித்துரைக்காமல் விடுவது, ஒரு பொருட்படுத்தும் தன்மையுள்ள குறைபாடாகும். மற்றும் அது உங்களது வேட்புமனுவின் மறுத்தொதுக்குகைக்கு வழிவகுப்பது உறுதியாகும் என்பதை நினைவில் கொண்டிடுக.

4.10. வேட்புமனுவை மறுத்தொதுக்குவதற்கான காரணம்: தேர்தல் நடத்தும் அலுவலர். பின்வரும் காரணங்களில் ஏதொன்றின் மீதும், அதாவது,-

(அ) நீங்கள் தேர்தல்களில் போட்டியிடத் தெளிவாகத் தகுதியுள்ளவராக இல்லை என்றால், அல்லது

(ஆ) நீங்கள் தேர்தலில் போட்டியிட, சட்டப்படி தெளிவாகத் தகுதிக்கேடுற்றிருக்கீறீர்கள் என்றால் அல்லது

(இ) உங்களது வேட்புமனு உரிய நேரத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றால். அல்லது.

(ஈ) உங்களது வேட்புமனு தேர்தல் நடத்தும் அலுவலரிடம், அல்லதுதேர்தல் நடத்தும் உதவி அலுவலரிடம் நீங்கள் அல்லது உங்களை முன்மொழிபவர் அல்லாமல் வேறு ஒருவரால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றால், அல்லது

(உ) தேர்தல் நடத்தும் அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட பொது அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட ஓர் இடத்தில் உங்களது வேட்புமனு ஒப்படைக்கப்படவில்லை என்றால், அல்லது

(ஊ) உங்களது வேட்புமனு தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற எவரேனும் தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் அல்லாமல் வேறு ஓர் ஆளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றால், அல்லது.

(எ) உங்களது வேட்புமனு போதிய அளவில் வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் இல்லை என்றால், அல்லது.

(ஏ) உங்களது வேட்புமனு உங்களை முன்மொழிந்தவரால் அடியில் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை என்றால், அல்லது உங்களால் அல்லது உங்களை முன்மொழிபவரால் (ர்களால்) அல்லது இருவராலும், வேட்புமனுவில் அத்தகைய கையொப்பங்களுக்கு என்றுள்ள இடங்களில் கையொப்பமிடப் பட்டிருக்கவில்லை என்றால், அல்லது.

(ஐ) ஏற்கெனவே விளக்கியுரைத்த சட்டத்திற்கு இணங்கியவாறு முறையான காப்புறுதிப் பிணை வைப்பீடு உங்களால் செய்யப்பட்டிருக்கவில்லை என்றால், அல்லது.

(ஒ) வேட்புமனுவிலுள்ள உங்களது கையொப்பம் அல்லது உங்களை முன்மொழிபவர்(கள்) கையொப்பம் (ங்கள்) உண்மையானதாக/வையாக இல்லை என்றால், அல்லது.

(ஓ) நீங்கள் உங்களது தொகுதியில் ஒதுக்கீடு செய்திருக்கிற இடத்திற்குரிய ஆட்களின் வகையினராக இல்லை என்றால் (எ-டு) நீங்கள் பட்டியல் சாதியைச் சேராதவராயிருந்து, பட்டியல் சாதிக்காக ஒதுக்கீடு செய்த ஓர் இடத்திற்குப் போட்டியிட வேட்புமனுவை நீங்கள் தாக்கல் செய்கிறீர்கள் என்றால், அல்லது

(ஔ) முன் மொழிபவர் நகராட்சிக்கான வாக்காளராக இல்லை அல்லது முன்பொழிபவர்க்குரிய தகுதிப்பாடுள்ளவராக இல்லை என்றால், அல்லது

(க) 12«(1) (ஆ) ஆம் பிரிவுக்கான வரம்புரையின் மீறுகையாக வேட்பாளராகவும் தலைவராகவும் ஒரேசமயத்தில் நீங்கள் பெயர் சுட்டி முன்மொழியப் பட்டிருக்கிறீர்கள் என்று தேர்தல் நடத்தும் அலுவலர் மனநிறைவு கொள்கிறார் என்றால், அல்லது

(ங) தேவைப்பட்ட ஆணையுறுதி ஆவணத்துடன் (பின்னிணைப்பு 2.9) சேர்த்து வகுத்துரைக்கப் பட்ட படிவத்தில், குற்றத் தீர்ப்புகள் எவையேனுமிருப்பின், அவை தொடர்பான விவரங்களை உங்களது வேட்புமனுவுடன் சேர்த்து நீங்கள் அளிக்கத் தவறுகிறீர்கள் என்றால் உங்களது வேட்புமனுவை மறுத்தொதுக்கியதில் சரியெனக் கொள்ளப்படுவார்.

(ச) உங்களது வேட்புமனு ஏதேனும் காரணத்திற்காக மறுத்தொதுக்கப்படுகிறது என்றால், அத்தகைய மறுத்தொதுக்குகைக்கான காரணங்கள் அடங்கியிருக்கும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஆணையின் உறுதிச்சான்று படியம் (Certified (opy) ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். உங்களது வேட்புமனுவை மறுத்தொதுக்கும் ஆணையை தேர்தல் நடத்தும் அலுவலர் பிறப்பித்ததை அடுத்துப் பின்பு, அதன் ஒரு படியத்தைப் பெற நீங்கள் உரிமைப்பாடு உடையவர் ஆவீர். அதற்காக நீங்கள் கட்டணம் அல்லது செலவீடு {Charges) எதையும் செலுத்தத் தேவை இல்லை, ஆனால் நீங்கள் ஒரு படியம் வேண்டி எழுத்து வழி விண்ணப்பிக்க வேண்டும்.

((ஞ} நீங்கள் மறுப்புரை எதையும் மறுதலிக்கக் காலம் கேட்டு விண்ணப்பிக்கலாம். உங்கள் வேட்புமனுவுக்கு எதிராக ஒரு வேட்பாளர் என்ற நிலையில் மறுப்புரை எதுவும் எழுப்பப்பட்டிருக்கிறது மற்றும் அந்த மறுப்புரையை மறுதலிக்க சில காலம் வேண்டியிருக்கிறது என நீங்கள் கண்டறிந்தால் நீங்கள் உடனடியாகக் காலம் வேண்டித் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய ஒரு நேர்வில் தேர்தல் நடத்தும் அலுவலர் இரண்டு நாள்கள் வரை ஒத்திவைப்புக்கு அனுமதிக்கலாம். ஏனென்றால் வேட்பாளர் மறுப்புரை எதையும் மறுத்தலிக்க காலம் வேண்டுகிறார் என்றால் அப்போது அவர் அடுத்த நாளுக்குப் பிற்படாமல் ஆனால் கூர்ந்தாய்வுக்குக் குறித்திட்ட தேதியைத் தொடர்ந்து வரும் ஒரு நாள் வரை காலம் அனுமதிக்கப்படலாம் எனச் சட்டம் சொல்கிறது. இவ்வாறு கூர்ந்தாய்வுக்காகக் குறித்திட்ட தேதி இன்று என்றால் அப்போது தேர்தல் நடத்தும் அலுவலர் நாளை மறுநாள் வரை உங்களுக்குக் காலம் வழங்க அதிகாரம் கொண்டிருக்கிறார்.

4.11. ஒரு வேட்பு மனுவை மறுத்தொதுக்குகை, மற்ற வேட்புமனு எதுவும் செல்லுநிலையதாகக் காணப்பட்டால், உங்களது வேட்புமனு பாதிக்கப்படுதல் இல்லை: நீங்கள் ஒரே தொகுதியிலிருந்து நான்கு வேட்புமனுக்கள் வரையில் தாக்கல் செய்யக்கூடும் என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய நான்கு மனுக்களில் ஏதொன்றும் செல்லுநிலையதாகக் காணப்பட்டால், மற்ற மூன்றும் மறுத்தொதுக்கப்பட்ட போதிலும் அப்போது, அதுவே செல்லுநிலை வேட்புமனுவுக்குப் போதுமானதாகும். ஆதலால், உச்ச அளவு எண்ணிக்கை. அதாவது நான்கு வேட்புமனுக்களைத் தாக்கல் செய்க என்பதே உங்களுக்குரிய அறிவுரையாகும்.

4.12. எந்த ஆவணங்கள் மற்றும் வேறு சான்றுப் பொருட்களுடன் கூர்ந்தாய்வு நேரத்தில் நீங்கள் வருகைதர வேண்டும்: உங்களது வேட்புமனுவுக்கு எதிராக நிகழ்தற்குரிய மறுப்புரைகளை எதிரேற்பதற்காக கூர்ந்தாய்வு இடத்திற்குப் பின்வரும் ஆவணங்களை உங்களுடன் எடுத்துச் செல்க, அவையாவன-

(அ) நடப்பு வாக்காளர் பட்டியலின் ஒரு படியம் (Copy) அல்லது தொடர்புற்ற வாக்காளர் பட்டியலின் பகுதி, அல்லது உங்கள் பெயரும் உங்களை முன்மொழிபவர் பெயரும் உள்ள அந்த வாக்காளர் பட்டியலில் பதிவின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட ஒரு படியம்.

(ஆ) உங்களது வயது பற்றி நிறைவளிக்கத்தக்க சான்று,

(இ) கைப்பணமாக வைப்பீடு செய்யப்பட்டிருக்கிற இடத்து தேர்தல் நடத்தும் அலுவலரால் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலரால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் அரசு கணக்கைச் செயற்படுத்தும் ஒரு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டிருக்கிறவிடத்து செலுத்துச் சீட்டின் இரட்டைப் படியம்,

(ஈ) வேட்புமனுவை நீங்கள் முன்னிட்டதன் மேல், தேர்தல் நடத்தும் அலுவலரால் அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற தேர்தல் நடத்தும் உதவி அலுவலரால் உங்களிடம் கையளிக்கப்பட்ட வேட்புமனு மற்றும் கூர்ந்தாய்வு அறிவிப்புக்கான பற்றுச்சீட்டு மற்றும்,

(உ) குற்றத் தீர்ப்புகளின் விவரங்கள் பற்றி வகுத்துரைத்த படிவ உங்களால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதியாவணத்தின் ஒரு படியம், மற்றும்

(ஊ) உங்களது வேட்புமனுவுக்கு எதிராக இருந்து வருகிற அல்லது எழுப்பப்படலாகும் மறுப்புரை எதனையும் விலக்கித்தள்ளவும், மறுத்தலிக்கவும் தேவைப்படலாகும் வேறு ஏதேனும் சான்று அல்லது சான்றுப்பொருட்கூறு.

4.13. செல்லுநிலை வேட்புமனு செய்த வேட்பாளர்களின் பட்டியல்: அனைத்து வேட்புமனுக்களும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டிருப்பதை ஒட்டிப் பின்பு தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்புமனுக்கள் செல்லு நிலையில் காணப்பட்டிருக்கிற வேட்பாளர்களின் பட்டியல் ஒன்றை ஆயத்தம் செய்வார். வேட்பாளர்களின் பெயர்கள் அவை வேட்புமனுக்களில் உள்ளவாறே படிவம் 4-ல் (பின்னிணைப்பு 4.1) இந்தப் பட்டியலில் காட்டப்படும் எனினும் ஒரு வேட்பாளர் தம்முடைய பெயர் தவறாக எழுத்துக்கூட்டப்பட்டிருக்கிறது அல்லது தமது வேட்புமனுவில் தவறாகப் பிறவாறு காட்டப்படுகிறது அல்லது அவர் பலருக்கும் அறிமுகமான பெயரிலிருந்து வேறுபட்டிருக்கிறது எனக் கருதுகிறார் என்றால் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் ஆயத்தம் செய்யயப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும் அவர் தமது

பெயரின் முறையான வடிவையும் எழுத்துக்கூட்டி உச்சரிப்பையும் எழுத்து வழித் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அளிக்கலாம். தேர்தல் நடத்தும் அலுவலர் வேண்டுகோளின் உண்மைத் தன்மை குறித்து மனநிறைவு கொண்டதன் மேல், செல்லுநிலையுடன் பெயர் சுட்டி முன்மொழியப் பெற்ற வேட்பாளர்களின் பட்டியலில் தேவையான திருத்தத்தைச் செய்வதுடன், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலிலும் அந்த வடிவத்தையும் எழுத்துக் கூட்டலையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4.14. மாதிரி நடத்தை விதித்தொகுப்பு (பின்னிணைப்பு 4.2) இன் கீழ், விதிமுறைகள் வகுத்துறைக்கப் பட்டிருக்கின்றன. நீங்களோ, அல்லது உங்களை நிறுத்தியுள்ள அரசியல் கட்சி அல்லது உங்கள் முகவர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள். அனுதாபிகள் ஆகியோரோ, மேற்சொன்ன விதித்தொகுப்பு, என்பதை மீறி நடத்தல் என அமையலாகும் செய்கை அல்லது விடுகைச் செயல்கள் எவற்றிலும் ஈடுபடக்கூடாது என்பதை உறுதி செய்வது உங்களது பொறுப்பாகும்.

## பின்னிணைப்பு 4.1

### படிவம்-4
### செல்லும் நிலையில் முன்மொழியப் பெற்ற வேட்பாளர்களின் பட்டியல்
(காண்க, விதி 15]

..............................................................................................................................................................க்குத் தேர்தல்*

| வரிசை எண் | வேட்பாளர் பெயர் | தந்தை /கணவர் பெயர் | வேட்பாளர் முகவரி |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

இடம் :

தேதி : தேர்தல் நடத்தும் அலுவலர்

*தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்குப் புகுத்தப்படவேண்டும்.

**உரியதல்லாத மாற்றுச் சொல்லை அடித்துவிடுக.

# பின்னிணைப்பு 4.2
## மாநிலத் தேர்தல் ஆணையம்
### புதுச்சேரி

எண்.: 1-5/மாதேஆ/1உள்ளாட்சித் தேர்தல்கள்/செலவுகள்/2021 புதுச்சேரி, 12 ஆகஸ்டு 2021

## ஆணை

ஒரு மக்களாட்சி அரசில், எந்த வாயில் வழியாக நாடு அதனுடைய சட்டமன்றத்தினரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மட்டுமல்லாமல், உள்ளாட்சி அமைப்புகளாகிய கிராமப் பஞ்சாயத்துக்கள், கொம்யூன் பஞ்சாயத்துக்கள் நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும் அதனுடைய சார்பாளர்களைத் தேர்ந்தெடுக்கிறதோ அந்த வாயில் தேர்தல்கள் ஆகும் என்பதாலும்,

வாக்காளர்கள், தேர்தல் முகவர்கள், பல்வேறு திறப்பாடுகளில் தேர்தல் கடமையாற்றும் அலுவலர்கள், பல்வேறுநிலைகளில் தேர்தல் நடத்துவதைக் கட்டுப்படுத்தும் அலுவலர்கள் ஆகிய குடிமக்களின் ஒத்துழைப்பானது, அவர்களை ஆளுகை செய்யும் சட்டத்திற்கும் தேர்தல்களில் பேணிவரப்பட வேண்டிய தூய்மையுடனும் இணங்கியவாறு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றால், முற்றிலும் தவிர்க்க முடியாததாகிறது என்பதாலும்,

இத்தகைய தேர்தல்களில் தூய்மையைப் பேணிவரும் நோக்கில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு நேர்மையும் விரும்பத்தக்க பண்பு நலனும் கொண்ட ஆட்கள் மட்டுமே சார்பாளர்களாகப் போட்டியிடுதலும் தேர்ந்தேடுக்கப்படுதலும் இன்றியமையாதன என்பதாலும்,

தேர்தல் களத்தில் பண பலம் எந்தத் தீங்கையும் விளைவிக்காது என்பதையும், பெரும் நிதி ஆதாரங்களைக் கொண்ட வேட்பாளர்கள் தங்களுடைய பணபலத்தால் சாதாரண வாக்காளர்களின் தீர்ப்பையும், அவர்களுடைய சிந்தித்து வாக்களிக்கும் தன்மையையும் ஆளுமை செய்யவோ அல்லது திசைதிருப்பவோ செய்யாது என்பதையும், இதுபோன்ற ஆடம்பரமான செலவினம், பணபலமற்ற பிற வேட்பாளர்களை இழப்புக்கு உள்ளாக்காது என்பதையும் உறுதிசெய்வதை நோக்கமாக்க் கொண்டுள்ளது என்பதாலும்,

இப்போது. 1973ஆம் ஆண்டு புதுச்சேரி கிராம மற்றும் கொம்யூன் பஞ்சாயத்துச் சட்டத்தின் அ-பிரிவடனும், 1973ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் 15ஆம் பிரிவுடனும், படித்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய இந்திய அரசமைப்பின் 243-K, உறுப்பு, 243-ZA உறுப்பு ஆகியவற்றால் வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களையும். மற்றும் இதன் பொருட்டு மாநிலத் தேர்தல் ஆணையத்தை இயல்விக்கும் அனைத்து அதிகாரத்தையும் செலுத்தி அதன் கண்காணிப்பு, வழிகாட்டுதல், கட்டுப்பாடு

ஆகியவற்றின் கீழ் இத்தகைய வகைமுறைகளின்படி தேர்தல்களை நடத்துவது தொடர்பாகப் புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையம் பின்வரும் ஆணையைப் பிறப்பிக்கிறது.

1. குறுந்தலைப்பு, அளாவுகை, பொருந்துகை மற்றும் தொடக்கம்

(அ) இந்த ஆணை, புதுச்சேரி உள்ளாட்சி அமைப்பு தேர்தல்கள் (தேர்தல் செலவின உச்சவரம்பை நிருணயித்தல்) ஆணை, 2001 என்று வழங்கப்பெறும்.

(ஆ) இது புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கண்காணிப்பு வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நடத்தப்படும் அனைத்துத் தேர்தல்களுக்கும் பொருந்தத்தக்கதாகும்.

(இ) இது உடனடியாகச் செயலாற்றலுக்கு வரும்

2. தேர்தல் செலவுகள். - (அ) ஒரு தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளரும், வேட்புமனு தாக்கல் செய்த நாள் மற்றும் தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் நாள் வரையிலான, அந்த இரண்டு நாள்களும் உள்ளடங்கிய இடைப்பட்ட காலத்தில் அவரால் செய்யப்பட்ட அல்லது அவரால் அனுமதிக்கப்பட்டு செய்யப்பட்ட செலவுகள் அனைத்தும் எழுதப்பட்டுச் சரியான கணக்கு பராமரிக்கப்பட்டு வரவேண்டும்.

(ஆ) தேர்தல் செலவினக் கணக்கு அதற்குரிய படிவம் பின்னிணைப்பு-Iஇல் வேட்பாளரால் அல்லது அவருடைய தேர்தல் முகவரால் வைத்திருக்கப்பட வேண்டும்.

(இ) தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு வேட்பாளரும், தேர்தல் அறிவிக்கப்பட்ட தேதி முதல், முப்பது நாட்களுக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம், தேர்தல் செலவுகளின் கணக்கு, அவர் வைத்திருக்கும் கணக்கின் மூலப்படிகளுடன் அளிக்கப்பட வேண்டும்.

(ஈ) அளிக்கப்பட்ட கணக்கின் நம்பகத்தன்மை குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர் விசாரிக்க வேண்டும், அதன்பிறகு, அவரது அலுவலகத்தின் அறிவிப்புப் பலகையில் அதுகுறித்த ஓர் அறிவிப்பு ஒட்டப்பட வேண்டும்-

(i) கணக்கு ஒப்படைவு செய்யப்பட்ட தேதி
(ii) வேட்பாளரின் பெயர் மற்றும்
(iii) ஒப்படைவு செய்யப்பட்ட கணக்கு எந்த நேரத்தில் எந்த இடத்தில் ஆய்வு செய்யப்படும்.

கணக்கு அளிக்கப்பட்ட 10 நாள்களுக்குள் விசாரணை முடிக்கப்பட வேண்டும்.

(உ) இதுபோன்ற கணக்குகளை எவரும் ரூ.10 செலுத்தி ஆய்வு செய்யலாம். மற்றும், பக்கம் ஒன்றுக்கு ரூ.2 செலுத்தி அத்தகைய கணக்கு அல்லது கணக்கின் எந்தப் பகுதியையும் சான்றொப்பமிடப்பட்ட படியங்களாகப் பெறலாம்.

தேர்தல் செலவின் உச்சவரம்பு.- (1) தேர்தல் தொடர்பாக வேட்பாளரால் செய்யப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட செலவுக் கணக்கு பின்வரும் தொகைக்கு அதிகப்படாமல் இருக்கவேண்டும் :

அ) ஊராட்சிமன்ற (கிராமப் பஞ்சாயத்து) உறுப்பினருக்கான தேர்தல் ரூ.25.000

ஆ) ஊராட்சிமன்றத் (கிராமப் பஞ்சாயத்துத்) தலைவருக்கான தேர்தல் ரூ.2,50.000

இ) கொம்யூன் பஞ்சாயத்து உறுப்பினருக்கான தேர்தல் ரூ.3,20.000

ஈ) நகரமன்ற உறுப்பினருக்கான தேர்தல் ரூ.3,20.000

நகராட்சிகளுக்கான தலைவருக்கான தேர்தல் :

| | | |
|---|---|---|
| (i) | புதுச்சேரி நகராட்சி | ரூ. 30,00,000 |
| (ii) | உழவர்கரை நகராட்சி | ரூ. 35,00,000 |
| (iii) | காரைக்கால் நகராட்சி | ரூ. 14, 00,000 |
| (iv) | மாகி நகராட்சி | ரூ. 10.00,000 |
| (v) | ஏனாம் நகராட்சி | ரூ. 10,00,000 |

(2) எந்தவொரு வேட்பாளரும், அவரால் அல்லது அவரது தேர்தல் முகவரும், மேலே குறிப்பிட்டுள்ள தொகையை மீறினால் மற்றும் தேர்தல் தொடர்பாக செலவழிக்கப்பட்ட அனைத்து செலவுகளுக்கும் தனி மற்றும் சரியான கணக்கை வைத்திருக்கவில்லை அல்லது தேர்தல் செலவுகளுக்கான கணக்கைத் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டு நாள் முதல், 30 நாள்களுக்குள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அளிக்கத் தவறினால், சட்டப்படித் தண்டிக்கப்பட வேண்டும்.

(3) நீக்கறவு (*Repeal*) - புதுச்சேரி உள்ளாட்சித் தேர்தல் (தேர்தல் செலவின உச்சவரம்பு நிர்ணயித்தல்) ஆணை, 2012 நீக்கறவு செய்யப்பட்டது.

ராய் பி. தாமஸ்
மாநிலத் தேர்தல் ஆணையாளர்.

**இணைப்பு- I**

**தேர்தல் செலவுக் கணக்குப் பதிவேடு**

1. **வேட்பாளரின் பெயர்**
2. **கிராமத்து மன்ற (வார்டு) எண் மற்றும் பஞ்சாயத்து/மன்ற பெயர்**
3. **வேட்பாளர் கட்சி வேட்பாளராக இருந்தால் அரசியல் கட்சியின் பெயர்**
4. **வேட்புமனு தாக்கல் செய்யும் தேதி**
5. **முடிவு அறிவிக்கப்பட்ட தேதி**

**விளம்புகை**

**நான் ............................ மேலே உள்ள தேர்தலில் ஒரு வேட்பாளர் என்ற முறையில்,**

**(1) வேட்புமனு தாக்கல் செய்த நாள் முதல் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாள், ஆகிய இவ்விரண்டு நாள்களும் உள்ளடங்கிய வரையிலான நாள் வரை என்னால் அல்லது/ என்னால் அதிகாரமளிக்கப்பட்ட என் தேர்தல் முகவரால், மேற்கண்ட தேர்தல் தொடர்பாக செய்யப்பட்ட அனைத்து செலவினங்களுக்குமான தனி மற்றும் சரியான கணக்கை வைத்திருந்தேன்.**

**(2) அந்த நோக்கத்திற்காக தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்கிய பதிவேட்டில் அந்தக் கணக்குப் பேணப்பட்டு, அந்த கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள துணைமைச் சீட்டுகள்/பற்றுச் சீட்டுக்கள் ஆகியவை இந்தப் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளன;**

**(3) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எனது தேர்தல் செலவினக் கணக்கு, நான் அல்லது எனது தேர்தல் முகவரால் செய்யப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பட்ட அனைத்துத் தேர்தல் செலவுகளையும் உள்ளடக்கியது மற்றும் அதில் இருந்து எதையும் மறைக்கவோ அல்லது காட்டாமல் வைத்திருக்கவோ/அழிக்கவோ இல்லை.**

**என்று விளம்புகை செய்கிறேன்.**

---

*இணைப்பு:* செலவுச் சீட்டுகள்/பற்றுமுறிச் சீட்டுகளுடன் செலவுப் பதிவேடு

**வேட்பாளரின் கையொப்பம்**

**ஒப்புகை**

**……………………………………………………………………. (தேதி) அன்று முடிவு அறிவிக்கப்பட்ட ……………………………………. (நகர மன்றத்தின் பெயர் மற்றும் உள்ளாட்சி மன்றத்தின் பெயர்) தேர்தல் தொடர்பாக, அவரால் / அவரது சார்பாக --------- (தேதி) அன்று தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் செலவுகளின் கணக்கு ---------------------- (தேதி) ……………… (மாதம் வருடம்) ……………… ஆண்டு இன்று என்னால் பெறப்பட்டது.**

**தேர்தல் நடத்தும் அலுவலர்.**

**பிற்சேர்க்கை** - II

**தேர்தல் செலவுகளின் கணக்குப் பதிவேடு**

<table>
<tr><th rowspan="2">தேதி</th><th rowspan="2">தேர்தல் செலவின விபரம்</th><th colspan="4">செலவு செய்தவரின் விபரம்</th><th rowspan="2">வேட்பாளரின் கையொப்பம்</th><th rowspan="2">குறிப்புரை</th></tr>
<tr><th>வேட்பாளர்/ தேர்தல் முகவர்</th><th>அரசியல் கட்சி</th><th>உதவியர்</th><th>மொத்தம்</th></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

**மொத்தம் ரூ ..................................... .**

**வேட்பாளரின் கையொப்பம்**

# இயல்-V

## வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுதல்

5.1. வேட்பு மனுவைத் திரும்பப் பெறுதல் : உங்களது வேட்புமனு ஏற்கப்படுகிறது என்றால், நீங்கள் செல்லுநிலை முன்மொழிவுப்பெற்ற ஒரு வேட்பாளராக ஆகிறீர்கள். ஆனால் அப்போதுங்கூட, பற்பல காரணங்களால் போட்டியிலிருந்து விலகிக்கொள்ள நீங்கள் விரும்பலாம். அத்தகைய காரணங்கள் தனிப்பட்டவையாகவோ அல்லது அரசியல் சார்புடையவையாகவோ இருக்கலாம். அவற்றைப்பற்றி விசாரிப்பது தேவையானதாகவோ நிகழக்கூடியதாகவோ இல்லை. உங்களது வேட்புநிலையைத் திரும்பப் பெறுதல் வேட்புமனுக்களின் கூர்ந்தாய்வுக்குப் பின்பே செய்யமுடியும், அதற்கு முந்திய கட்டம் எதிலும் அன்று.

5.2. திரும்பப்பெறுதல் பற்றிய அறிவிப்பு: தேர்தல் நடத்தும் அலுவலரின் கூர்ந்தாய்வுச் சோதனையில் உங்களது வேட்புமனு நிலைநின்ற பின்பும் கூட, உங்களது வேட்புநிலையை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள முடிவு செய்திருக்கிறீர்கள் என்றால், அப்போது, எழுத்துவழியான ஓர் அறிவிப்பின் மூலம் நீங்கள் அவ்வாறு செய்யலாம். அத்தகைய அறிவிப்பு படிவம் 5 (பிற்சேர்க்கை 5.1) இல் இருக்க வேண்டும். நீங்கள் மிகுந்த கவனத்துடன் இந்தப் படிவத்தை நிரப்பவேண்டும். மற்றும் நீங்கள் கையொப்பமிட்ட பின்பு, நீங்கள் நேர்முகமாகவோ அல்லது உங்களை முன்மொழிந்தவர்களில் எவரொருவராலுமோ வேட்புநிலையைத் திரும்பப்பெறுவதற்காக, 10ஆம் விதியின் கீழ் குறித்திட்ட கடைசித் தேதியன்று பிற்பகல் 3 மணிக்குப் பிற்படாமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அது ஒப்படைக்கப்பட வேண்டும். உங்களது திரும்பப் பெறும் அறிவிப்பை முன்னிடுகிற அத்தகைய முன்மொழிந்தவர் இதன் பொருட்டு உங்களால் எழுத்து வழி அதிகாரமளிக்கப்பெற்றிறுத்தல் வேண்டும். இல்லையேல், அத்தகைய அறிவிப்பு தேர்தல் நடத்தும் அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எந்த நேர்விலும், திரும்பப் பெறும் அறிவிப்பு அஞ்சல் வழி அனுப்பப்படக் கூடாது.

5.3. செல்லுநிலையில் திரும்பப்பெறுகைக்கான வேண்டுறுத்தங்கள் (Requirements) : இதன் தொடர்பாகக் கவனிக்கப்பட வேண்டிய விவரக்கூறுகள் உங்கள் வசதிக்காகத் திருப்பிச் சொல்லப்படுகின்றன-

(அ) திரும்பப்பெறும் அறிவிப்பு வகுத்துறைத்த படிவத்தில் (படிவம் 5) இருக்க வேண்டும்.

(ஆ) அது உங்களால் மட்டுமே கையொப்பமிடப்பட வேண்டும்; உங்கள் சார்பாக வேறு எவர் ஒருவராலும் அன்று.

(இ) வேட்புநிலைகளைத் திரும்பப் பெறுவதற்கான கடைசி தேதியன்று பிற்பகல் 3 மணிக்குப் பிற்படாமல் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அது ஒப்படைக்கப்பட வேண்டும்.

(ஈ) அத்தகைய ஒப்படைப்பானது. நேர்முகமாக உங்களாலோ அல்லது முன்மொழிபவராக உங்களது வேட்புமனுவில் கையொப்பமிட்ட முன்மொழிந்தவர்களில் எவர் ஒருவராலுமோ செய்யப்பட வேண்டும் உங்களை முன்மொழிந்தவரால் அது ஒப்படைக்கப்படுகிறது என்றால், அப்போது அத்தகைய முன்மொழிந்தவர் இதன் பொருட்டு எழுத்து வழி உங்களால் அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

5.4. திரும்பப்பெறும் அறிவிப்பு அறுதியானதாக இருத்தல் : தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உங்களது வேட்பு நிலையைத் திரும்பப் பெறும் ஓர் அறிவிப்பு ஒருதடவை கொடுக்கப்படுகிறது என்றால், விதி 16(2) இன்கீழ் அது அறுதியானதாக ஆகிறது என்பதையும், அந்த அறிவிப்பை அறவு (ரத்து) செய்ய எந்தச் சூழ்நிலைகளின்கீழும் நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள் என்பதையும், மிகவும் கவனத்துடன் நீங்கள் குறித்துக்கொள்ள வேண்டும். ஆதலால், திரும்பப் பெறும் அறிவிப்பை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உள்ளபடியே ஒப்படைக்கப்படுவதன் முன்பு மிகவும் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருந்திடுக.

5.5. ஆனால். நீங்கள் போட்டியிருந்து விலகிக்கொள்ள முடிவு செய்திருக்கிறீர்கள் என்றால், மேலே சொல்லிய அனைத்து நிபந்தனைகளும் நிறைவு செய்யப்படுகின்றன என்பதில் நீங்கள் தனிப்பட்ட கவனம் கொள்ள வேண்டும். இல்லையேல், உங்களது வேட்புநிலையைத் திரும்பப் பெறுதலானது சட்டத்தின் கண்களில் திரும்பப் பெறுதலாகக் கொள்ளப்படுவதில்லை. எனவே, உங்களது பெயர் விதி 19இன் கீழ் தேர்தல் நடத்தும் அலுவலரால் ஆயத்தம் செய்யப்படுகிற போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் சேர்க்கப்படும். நீங்கள் உள்ளபடியே போட்டியிடவில்லை என்றாலுங்கூட, உங்களது வேட்புமனுவுடன் சேர்த்து நீங்கள் வைப்பீடு செய்த பணத்தைத் திரும்பப்பெற முடியாது மேலும் நீங்கள் தேர்தல் செலவுக் கணக்கைத் தாக்கல் செய்யுமாறு வேண்டுறுத்தப்படுவீர்கள். ஆனால், திரும்பப் பெறும் அறிவிப்பு நல்லதாகவும் செல்லு நிலையதாகவும் தேர்தல் நடத்தும் அலுவலரால் ஏற்கப்பட்டதாகவும் இருக்கிறது என்றால், அப்போது, வேட்புமனுவடன் சேர்த்து நீங்கள் வைப்பீடு செய்த பணத்தைத் திரும்பப் பெறுவதற்கு நீங்கள் உரிமைப்பாடு டையவர் ஆவீர். மற்றும் உங்களது தேர்தல் செலவுக் கணக்கை நீங்கள் தாக்கல் செய்யத் தேவை இல்லை.

5.6. திரும்பப்பெறும் அறிவிப்புக்கான பற்றுச் சீட்டு : உங்களால் அல்லது எழுத்துவழி உங்களால் அதிகாரமளிக்கப்பட்ட உங்களை முன் மொழிந்தவரால் உங்கள் சார்பாகத் திரும்பப்பெரும் அறிவிப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிற பின்பு, அந்தத் திரும்பப் பெரும் அறிவிப்புக்கான பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளச் சிறிது நேரம் பொறுத்திடுக. இந்தப்பற்றுச்சீட்டுத் தேர்தல் நடத்தும் அலுவலரால் உங்களிடம் கையளிக்கப்படும். இந்தப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளாமல் தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்தைவிட்டு அகலாதிருந்திடுக. ஏனென்றால் இந்தப் பற்றுச்சீட்டு உங்களது வைப்பீட்டுப் பணத்தைத் திரும்பப் பெறுவதில் உங்களுக்கு உதவும்.

5.7. இதன் தொடர்பாக, ஊழலாக வேட்புநிலையைத் திரும்பப்பெறுகை எதுவும், தேர்தல் சட்டத்தின்கீழ் ஓர் ஊழல் பழக்கமுறை ஆகும் என்பது சுட்டிக் காட்டப்படுகிறது. இதன் பொருட்டு, உங்களது கவனம் மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951 பிரிவு 123(1) - க்கு ஈர்க்கப்படுகிறது.

5.8. போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல்: நீங்கள் தேர்தலில் போட்டியிட முடிவு செய்து, உங்களது வேட்புநிலையைத் திரும்பப் பெறவில்லை என்றால், நீங்கள் போட்டியிடும் ஒரு வேட்பாளராகக்கொள்ளப்படுவீர்கள். வேட்புநிலையைத் திரும்பப் பெறுவதற்கான கடைசித் தேதியன்று பிற்பகல் 3 மணியை ஒட்டிப் பின்பு, தேர்தல் நடத்தும் அலுவலர், இயல் III இன் பத்தி 3.13இல் விரிவாக விளக்கிய முறையில் போட்டியிடும் வேட்பாளர் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு சின்னங்களை ஒதுக்கிக்கொடுக்க முற்படுவார். தேர்தல் நடத்தும் அலுவலர் அதன்பின்பு படிவம் 7 (பின்னிணைப்பு 5.2)இல் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் ஒன்றை வரைவார். வேட்புமனுவில் கொடுக்கப்பட்டவாறு போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களும், அவர்களுடைய முகவரிகளும் அவர்களுக்கு ஒதுக்கி கொடுத்த சின்னங்களும், அதில் காட்டப்பட்டிருக்கும். தேர்தல் நடத்தும் அலுவலர், போட்டியிடும் வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் ஒவ்வொருவருக்கும் அத்தகைய பட்டியலின் ஒரு படியத்தைக் கொடுக்கப்பதுடன், அதன் ஒரு படியத்தைத் தமது அலுவலக அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறும் செய்விப்பார். அந்தப் பட்டியல் நகராட்சி அறிவிப்புப் பலகையிலும், தேர்தல் நடைபெறவேண்டிய தொகுதி ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது மேற்பட்ட எடுப்பான இடங்களிலும், அதிகாரமுறை அரசிதழிலும் கூட வெளியிடப்படும்.

5.9(1) போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலில் பெயர்களின் வரிசைமுறை: செல்லுநிலையில் முன்மொழியப்பெற்ற வேட்பாளர்களின் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்களின் மேற்கூறிய பட்டியலிலும் வாக்குச் சீட்டிலும் வேட்பாளர்களின் பெயர்கள், மூன்று வகையினங்களின் கீழ் வரிமுறைப்படுத்துமாறு வேண்டுறுத்தப்படுகின்றன. அதாவது, ஏற்பிசைவுபெற்ற (i) தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சியின் வேட்பாளர்கள் (ii) பதிவு செய்யப்பட்டு ஆனால் ஏற்பிசைவுபெறாத அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் (அதாவது.ஏற்பிசைவு பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளாக அல்லாதவை) மற்றும் (iii) தலைவர் தேர்தல் ஆகும் நேர்வில் பிற (சுயேட்சை வேட்பாளர்கள்.

5.9(2) கொடுக்கப்பட்ட பெயர் முறையான பெயராக அல்லது குடுப்பப் பெயராக இருக்கிறதா என்பதைப் பொருட்படுத்தாமலேயே, தேர்தல் நடத்தும் அலுவலர், பெயரின் முதல் எழுத்து அடிப்படையில் செல்லுநிலை முன்மொழிவுபெற்ற வேட்பாளர்களின் பட்டியல், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல், வாக்குச்சீட்டுகள் ஆகியவற்றில் மூன்று வகையினங்களில் ஒவ்வொன்றிலும் அகரவரிசை முறையில் வேட்பாளர்களின் பெயர்களின் வரிசை முறையைத் தீர்மானிப்பார். மேற்கூறிய நோக்கத்திற்காக, ஒரு வேட்பாளரின் பெயருக்கு முன்னொட்டாகவுள்ள தலைப்பெழுத்துக்கள் எவையேனுமிருப்பின் அவை

புறக்கணிக்கப்பட வேண்டும். டி.கே. ரெட்டி " என்று தமது பெயரைக் கொடுத்திருக்கும் ஒரு வேட்பாளர் ஆகும் நேர்வில், அகரவரிசைக்கிணங்க அந்த வேட்பாளரின் இடம் ரெ " என்னும் எழுத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்பட வேண்டும்; “டி " என்னும் எழுத்தைப் பொறுத்து அன்று. எனினும் ஒரேவகையினத்தில் இரண்டு வேட்பாளர்கள் ஒரே பெயரையும் வெவ்வேறு தலைப்பெழுத்தையும் கொண்டி டிருக்கிறார்கள் என்றால் - எடுத்துக்காட்டு : பி.எஸ். ரெட்டி மற்றும் டி.கே.ரெட்டி - அப்போது இரண்டு பெயர்களும் அவற்றிற்கு இடையில் உள்ள தலைப்பெழுத்துக்களின் முதல் எழுத்தைப் பொறுத்து வரிசைப்படுத்தப்படும். மேலும், அவ்வாறு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் ஒரே குடும்பப் பெயரையும் வெவ்வேறு தலைப்பெழுத்துக்களையும் கொண்டிருக்கிறார்கள் என்றால், அப்போது அவர்களுடைய பெயர்கள், அவற்றிற்கு இடையில் உள்ள குடும்பப் பெயரைப் பொறுத்து அகரவரிசை முறையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

5.9(3) இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் ஒரே பெயரை உடையவர்கள் என்றால், அவர்களது வாழ்க்கைத் தொழில், அல்லது குடியிருப்பைச் சேர்ப்பதன் மூலம், அல்லது வேறு சிலமுறையில், அவர்கள் வேறுபடுத்திக் காட்டப்பட வேண்டும். அத்தகைய நேர்வில், செல்லுநிலை முன்மொழிவு பெற்ற வேட்பாளர்கள் போட்டியிடும் வேட்பாளர்கள் வாக்குச்சீட்டு ஆகியவற்றின் பட்டியலில் ஒரே வகையினத்தின் கீழ்வரும் அத்தகைய வேட்பாளர்களின் பெயர் வரிசை முறையானது. வேட்பாளர்களைப் வேறுபடுத்திக் காட்டும் பெயர்களையும் பொறுத்து அமையும்.

5.9(4) மதிப்ப, கல்வி, மரபு, தொழில் அல்லது வேறு ஏதேனும் விருது வேட்பாளரின் பெயருடன் சேர்ப்பதற்கு மறுப்புரை எதுவும் இல்லை. ஆனால், செல்லுநிலை முன்மொழிவு பெற்ற வேட்பாளர்கள் அல்லது போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலிலும் வாக்குச் சீட்டிலும் அகரவரிசையில் பெயர்களை ஏற்பாடு செய்வதில், அத்தகைய விருது கருதுகைக்காக எக்காரணம் பற்றியும் எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

5.9(5) கட்சிச் சார்புற்ற முறையில் நடைபெறும் நகரமன்ற உறுப்பினர் தேர்தலில் எல்லா வேட்பாளர்கள் களு மே, சுயேச்சைகள், ஆதலால் அவர்களின் பெயர்கள் ஒரே வகையினத்தின் கீழ் வரிசை முறைப்படுத்தப்படும். 5.9(6) புதுச்சேரி மற்றும் காரைக்கால் வட்டாரங்களில் தமிழ், மாஹே வட்டாரத்தில் மலையாளம், ஏனாம் வட்டாரத்தில் தெலுங்கு ஆகிய மொழிகள் அகரவரிசை எழுத்துக்கு இணங்க, தேர்தல் நடத்தும் அலுவலர், செல்லுநிலையில் முன்மொழியப் பெற்ற வேட்பாளர்களின் பட்டியலில் வேட்பாளர்களின் பெயர்களை வரிசைமுறைப்படுத்துவார்.

5.10 போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல்:(1) போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை அறுதி செய்த பின்பு, தேர்தல் நடத்தும்

அலுவலர், அடியில் கொடுக்கப்பட்ட படிவத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாள அட்டையை வழங்குவார்:

**வேட்பாளரின் அடையாள அட்டை**

நிழற்படம்

திரு.......................................................................................... என்பவர்,........................................................ நகராட்சி மன்றத்தின் உறுப்பினர்/ தலைவருக்கான, தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் ஆவார் மற்றும்......................................................கட்சியால் நிறுத்தப் பெற்றிருக்கிறார்.

(வேட்பாளர் கையொப்பம்)

சான்றொப்பமிடப்பட்டது

இடம். -
தேதி.

..........................................................................

(தேர்தல் நடத்தும் அலுவலர்)

பி.கு : ஒரு மாநில கட்சியால் அல்லது தேசியக் கட்சியால் அல்லது ஆணையத்துடன் பதிவு செய்துள்ள, பதிவு செய்யப்பட்டு ஏற்பிசை பெறாத கட்சியால் வேட்பாளர் நிறுத்தப்படுகிறார் என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் கட்சியின் பெயரைப் பதிவு செய்வார் : மற்றபடி, படிவத்தில் தொடாபுற்ற பகுதி அடித்து நீக்கப்பட்டுவிடும்.

(2) அனைத்துத் தேர்தல்களிலும், போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டைகள், அவர்களுடைய நிழற்படங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். வேட்புநிலையைத் திரும்பப் பெறுவதற்கான கடைசித் தேதியன்று போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் அறுதி செய்யப்பட்ட உடனேயே, அண்மையில் எடுத்த உங்களின் இரண்டு நிழற்படப் பட்டியங்களை நீங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் கொடுக்க வேண்டும். அடையாள அட்டை தேர்தல் நடத்தும் அலுவலரால் இரட்டைப் படியங்களில் ஆயத்தஞ்செய்யப்பட்டு, அவற்றுள் இரண்டாம் படியம், ஆவணயேட்டு நோக்கத்திற்காக அலுவலகப் படியமாகப் பேணி வைக்கப்படும்; உரியவாறு சான்றொப்பமிடப்பட்ட அதன் ஒரு படியம் உங்களுக்கு வழங்கப்படும்.

(3) அடையாள அட்டைகள் தேர்தல் முகவர்களுக்கும் வழங்கப்படும், படிவம் 8 இல் தேர்தல் முகவரின் பணியமர்த்துகைக் கடிதமே, அத்தகைய அடையாள அட்டை நோக்கத்திற்காகப் பயனறும். படிவம் 8 இல் (பின்னிணைப்பு 5.3) தேர்தல் முகவர், பணியமர்த்துகையின் இணைடு படியங்களின் வலது உச்சிப்பகுதியில் உங்களுடைய தேர்தல் முகவரின் நிழற்படங்களையும் நீங்கள் ஒட்டிவைக்க வேண்டும். மேலுள்ள

உள் - பத்தி - 2 இல் உங்களது நிழற்படத்தில் சான்றொப்பமிட்ட நேர்வில் அறிவுறுத்தப்பட்டிருப்பதைப் போன்ற அதே முறையில், தேர்வு நடத்தும் அலுவலரால் இத்தகைய நிழற்படங்கள் சான்றொப்பமிடப்படும்.

(4) நீங்கள் உங்களது அடையாள அட்டையைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளத் தவறக்கூடாது. மேலும் நீங்கள் அதை உங்களுடன் எப்போதும் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். தேர்தல் செயலியக்கத்தின் போது, வாக்குப்பதிவு நாளன்று, மற்றும் வாக்கெண்ணும் தேதியன்று, ஒரு வேட்பாளராக உங்களது அடையாளம் தேவைப்படுகிற பல்வேறு நிகழ்வுகள் எழலாம்; அப்போது இந்த அடையாள அட்டை, ஒரு வேட்பாளராக உங்களது அடையாளத்தை உடனடியாக நிறுவும்.

## பிற்சேர்க்கை 5.1

### படிவம் - 6

### வேட்பு மனுவை திரும்பப்பெறுதல் பற்றிய அறிவிப்பு

[காண்க, விதி 16(3)]

....................................................................................................க்கு தேர்தல்*

பெறுநர் தேர்தல் நடத்தும் அலுவலர் ..........................................................

மேற்படி தேர்தலுக்கு வேட்பாளராக முன்மொழியப்பட்ட ..................................என்னும் நான் எனது வேட்பு மனுவை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என ஈங்கிதனால் அறிவிப்பு கொடுக்கின்றேன்,

இடம் : வேட்பாளரின் கையொப்பம்

தேதி :

இந்த அறிவிப்பு ...................................................... அன்று ........................ மணிக்கு ................ .................................... அவர்களால் (வேட்பாளர் முன்மொழிந்தவர்** பெயர்) எனது அலுவலகத்தில் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

தேதி : தேர்தல் நடத்தும் அலுவலர்

....................................................................................................................தேர்தல்

மனுவை திரும்ப பெறுதல் பற்றிய அறிவிப்பிற்கான பற்றொப்பம் (அறிவிப்பினை ஒப்படைப்பவரிடம் கொடுக்கப்படவேண்டும்)

..............................................................................க்கான தேர்தலில்* ஒரு வேட்பாளராக முன்மொழியப்பட்ட என்பவர்* அவரது வேட்பு மனுவை திரும்பப் பெற்றுக் கொள்ளுவதற்கான அறிவிப்பு ....................................................... அன்று .................................... மணியளவில், எனது அலுவலகத்தில் வேட்பாளரால் / வேட்பாளரை முன்மொழிந்தவரால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

தேதி : தேர்தல் நடத்தும் அலுவலர்

*தேர்தலின் உரிய விபரங்கள் இங்கே புகுத்தப்பட வேண்டும்.

**பொருந்தாவற்றை அடித்துவிடுக.

இடம் :

தேதி :

## பின்னிணைப்பு - 5.2

### படிவம் - 7
### போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல்
[காண்க, விதி 19(1)]

……………………………………………………………………………………………………………………………..க்குத்தேர்தல்*

| வரிசை எண் | வேட்பாளர் பெயர் | வேட்பாளர் முகவரி | ஒதுக்கிக் கொடுத்த சின்னம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| 8 | | | |

*தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்குப் புகுத்தப்படவேண்டும்.

இடம் :
தேதி : தேர்தல் நடத்தும் அலுவலர்

## பிற்சேர்க்கை 5.3

**படிவம்-8**

**தேர்தல் முகவரின் பணியமர்த்துகை**

**[காண்க விதி 24(1)]**

**................................................................................................................................................க்குத் தேர்தல்**

**பெறுநர் :**

**தேர்தல் நடத்தும் அலுவலர்.**

**மேலுள்ள தேர்தலில் ஒரு வேட்பாளராகிய ........................................என்னும் நான் ..................................................இல் உள்ள என்பவரை மேலுள்ள தேர்தலில் என்னுடைய தேர்தல் முகவராக இந்த நாளிலிருந்து இதன் மூலம் பணியமர்த்துகிறேன்.**

**இடம் :**
**தேதி :**

**வேட்பாளர் கையொப்பம்.**

---

***நான் மேலுள்ள பணியமர்த்துகையை ஏற்றுக்கொள்கிறேன்.***

**இடம் :**
**தேதி :**

**தேர்தல் முகவர் கையொப்பம்.**

****தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்குப் புகுத்தப்படவேண்டும்.***

# இயல்-VI

## தேர்தல் முகவர்கள்

6.1. ஒரு வேட்பாளர் என்ற நிலையில், உங்களைத் தவிர வேறு எந்த ஆளையும் உங்களுடைய தேர்தல் முகவராக இருப்பதற்குப் பணியமர்த்தலாம். எனினும், ஒரு தேர்தல் முகவரைப் பணியமர்த்தும் கட்டாயம் உங்கள் மீது சுமத்தப்படவில்லை. நீங்கள் விரும்பினால், அத்தகைய பணியமர்த்துகை, நீங்கள் ஒரு வேட்பாளராக முன்மொழியப்பெற்ற பின்பு எந்த நேரத்திலும் செய்யப்படலாம் அல்லது செய்யப்படாமலேயே விடப்படலாம். அத்தகைய பணியமர்த்துகை ஒவ்வொன்றும், உங்களால் இரட்டைப் படிவத்தில் படிவம் 8 இல் (பின்னிணைப்பு 5.3) முறைப்படியாகச் செய்தி தெரிவித்து, தேர்தல் நடத்தும் அலுவலருக்கு மேலனுப்புவதன் மூலம் செய்யப்படவேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர் அவற்றுள் ஒரு படியத்தை இருத்திவைத்துக்கொண்டு, இரண்டாம் படியத்தில் பணியமர்த்துகைக்குத் தமது ஒப்புதலளிப்பின் அடையாளமாகத் தமது கையொப்பமிட்டு அதைத் தேர்தல் முகவரிடம் திருப்பிக் கொடுப்பார்.

6.2. நகராட்சி மன்றத்தின் ஓர் உறுப்பினர்/தலைவராக, இருந்து வருவதற்கு அல்லது தேர்தலில் வாக்களிப்பதற்கு அரசமைப்பின் கீழ் அல்லது மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951, அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள் அரசு சட்டம் 1963, அல்லது புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973, முதலியவற்றின் கீழ் அப்போதைக்குத் தகுதிக்கேற்றவறாக இருக்கிற ஆள் எவரும் அத்தகுதிக்கேடு உயிர்ப்புள்ளதாக இருக்கும் காலம் வரை, எந்தத் தேர்தலிலும் ஒரு தேர்தல் முகவராக இருப்பதற்கும் தகுதிக்கேடற்றவர் ஆவார். மேலும், ஓர் அமைச்சரைத் தேர்தல் முகவராகப் பணியமர்த்துகை அவரது சொந்தப் பாதுகாப்புக்குப் பேரிடர் விளைவிக்கும் என்பதால் அவரை தேர்தல் முகவராகப் பணியமர்த்த முடியாது. ஏனென்றால் அவருடைய பாதுகாப்புப் பணியாளர்கள் வாக்குச்சாவடிகள் வாக்கெண்ணும் கூடம் முதலியவற்றுள் அவருடன் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை.

6.3. நீங்கள் உங்கள் தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை முறித்தறவு ரத்து) செய்வதை பின்னிணைப்பு 6.1 இல் உள்ள படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டு அதனைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் பதிந்து வைப்பதன் மூலம் முறித்தறவு (Revocation) செய்யலாம். அது தேர்தல் அலுவலரிடம் பதிந்து வைத்த தேதி முதல் செயற்பாட்டுக்கு வரும். அத்தகைய பணி முறித்தம் அல்லது தேர்தல் முகவரின் இறப்பு நிகழுகையில்

அவரிடத்தில் மற்றொரு தேர்தல் முகவரை நீங்கள் பணியமர்த்தலாம். நீங்கள் படிவம் 8 இல் அத்தகைய பணியமர்த்துகையின் அறிவிப்பைத் தேர்தல் நடத்தும் அலுவலருக்குக் கொடுப்பதுடன், அதில் உண்மை விவரங்களையும் உரைத்தல் வேண்டும்.

6.4. புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973 மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகள் மூலம் அதிகாரமளிக்கப்பட்டவாறு ஒரு தேர்தல் முகவர் உங்களது தேர்தலுடன் தொடர்புள்ள அத்தகைய அலுவற்பணிகளை ஆற்றலாம். குறிப்பாக, நீங்களோ அல்லது உங்கள் தேர்தல் முகவரோ, தேர்தல் செலவுக் கணக்குகளுடன் சேர்த்து முன்வைக்கப்பட வேண்டிய சான்றுச் சீட்டுகளின் உரிய ஆதாரங்களுடன், நாளுக்கு நாள் ஒவ்வோர் இனத்தின் மீதும் செய்ய நேரிட்ட உங்கள் தேர்தல் செலவுகளின் முழுக்கணக்கையும் வைத்துவர வேண்டும். உங்கள் தேர்தல் முகவரால் செய்யப்பட்ட (மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951 இன் பிரிவு 123இல் சொல்லப்பட்ட) ஊழல் பழக்கமுறை எதுவும், உங்களால் செய்யப்பட்டிருப்பதாகவே சட்டத்தில் கொள்ளப்பட்டு, உங்கள் தேர்தலைச் சீர்குலைக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. ஆதலால், உங்கள் தேர்தல் முகவரைத் தெரிந்தெடுப்பதில் முறையான கவனம் கொள்க. ஊழல் பழக்க முறைகள் பற்றிச் சட்டத்தின் 123ஆம் வகை முறைகளைக் கவனமாகப் படித்துப் பார்க்கும்படி உங்கள் தேர்தல் முகவரைக் கேட்டுக் கொள்க. உங்கள் சார்பாக அவரால் செய்யப்பட்ட செய்கைகளுக்கு நீங்களே பொறுப்பாகிறீர்கள்.

6.5. அடையாள அட்டைகளும் தேர்தல் முகவர்களுக்கு வழங்கப்படும். படிவம் 8-இல் தேர்தல் முகவரின் பணியமர்த்துகைக் கடிதமே, அத்தகைய அடையாள அட்டையின் பொருட்டுப் பயனுறுவதாகும். படிவம் 8-இல் அவரது பணியமர்த்துகைக் கடிதத்தின் இரண்டு படியங்களிலும் வலப்புற உச்சிப் பகுதியில் உங்கள் தேர்தல் முகவரின் நிழற்படங்களை நீங்கள் ஒட்டி வைக்க வேண்டும். இயல் Vஇன் 5.10.2ஆம் பத்தியில், உங்கள் நிழற்படங்களின் சான்றொப்பம் பற்றிய நேர்வில் அறிவுறுத்தப்பட்டவாறு அதே முறையில், இத்தகைய நிழற்படங்களும் தேர்தல் நடத்தும் அலுவரால் சான்றொப்பமிடப்படும்.

## பின்னிணைப்பு 6.1

**படிவம் - 9**

## தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை முறித்தம் (ரத்து) செய்தல்

**(காண்க, விதி 24(3) ]**

**..................................................................................................................................................க்குத்**
**தேர்தல்***
**பெறுநர் :**
**தலைமை அலுவலர்**

**..........................................................................என்னும் நான் திரு திருமதி,....................................**
**............................என்னும் என்னுடைய தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை இதன் மூலம் முறித்தம் செய்கிறேன்.**

**இடம் :**
**தேதி :**

**வேட்பாளரின் கையொப்பம்**

---

*தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்கே புகுத்தப்படுதல் வேண்டும்.*

# இயல் -VII

## தேர்தல் செயலியக்கக் கால அளவு

**(Campaign period)**

**முன்னுரை:**

**7.1. தேர்தல் சட்டமானது வேட்புநிலைகளைத் திரும்பப் பெறக் குறித்திட்ட கடைசித் தேதிக்கும் வாக்குப் பதிவுக்கும் இடையே பத்து தெளிவான நாள்களுக்குக் குறையாத ஓர் இடைவெளிக்கு வகை செய்கிறது. இந்தக் கால அளவு, ஆதரவு திரட்டுதலுக்கும் வாக்காளர்களுக்கு கோவிட் பொருத்தமான நடத்தையுடன் தேர்தல் கல்வியளிப்பதற்கும், முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.**

**2. நீங்கள் போட்டியிடும் ஒரு வேட்பாளராக இருக்கிறீர்கள் என்பதால்,வாக்காளர்கள் தங்களுடைய வாக்குகளை எவ்வாறு பதிவு செய்ய வேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்குக் கல்வியளிக்கும் பொருட்டு நீங்கள் இந்தக் காலத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோன்று, உங்களுடைய வாக்குச்சாவடி முகவர்களாகவும் வாக்கெண்ணும் முகவர்களாகவும் உங்களால் பணியமர்த்தக் கருதுகை செய்யப்பட்ட ஆட்கள், பின்பற்றப்பட வேண்டிய வாக்குப்பதிவு மற்றும் வாக்கெண்ணும் நடைமுறைகளுடன் அவர்களை முழுவதும் அறிமுகம் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படவும் வேண்டும். அவர்களுடைய வழிகாட்டுதலுக்காக. அவர்களுக்கென்று தனித்தனியே கைச் சுவடிகளை வெளிக்கொணர்ந்திருக்கிறது. அவற்றை அவர்கள் நன்கு படிக்க வேண்டும்.**

**7.2.1. ஊழல் பழக்க முறைகள் மற்றும் தேர்தல் குற்றச்செயல்கள். உங்களது தேர்தல் செயலியக்கத்தை மேற்கொள்ளுகையில், மிகவும் உயர்ந்த ஒழுக்கநெறித் தரங்களும் தூய்மையும் பேணப்படுகின்றன என்பதை நீங்கள் உறுதி செய்யவேண்டும். அது முறைப்படி தடையில்லாத மற்றும் நேரிய தேர்தலை உறுதி செய்யும். தேர்தல் அமைதியாக நடப்பதைத் தடுக்கவும், தேர்தலின் போது மேலோங்கியிருக்கவேண்டிய நட்பு முறைப் போட்டிச் சூழலைக் குலைக்கவும் முனைகிற மிக்க ஆற்றலுள்ள காரணம், ஊழல் பழக்க முறைகளுக்கும் தேர்தல் குற்றச் செயல்களுக்கும் தொடர்பான. தேர்தல் சட்டங்களின் கட்டளை வகை முறைகளை மீறி நடத்தலாகும். புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் 25 முதல் 39 வரையுள்ள பிரிவுகளில், பல்வேறு ஊழல் பழக்கமுறைகளையும் தேர்தல் குற்ற செயல்களையும்**

தேர்தல் சட்டம் எண்ணிட்டுத் தொகுத்திருக்கிறது. உங்களது வசதிக்காக, மேலே சொல்லப்பட்ட வகைமுறைகள் பின்னிணைப்பு 7.1 இல் மீண்டும் எடுத்து வழங்கப்படுகின்றன. உங்களுடைய முகவர்களாலும் தொண்டர்களாலும் அத்தகைய ஊழல் பழக்க முறைகளும் குற்றச்செயல்களும் செய்யப்படுவதாவது, உங்களது தேர்தலைச் சீர்குலைத்துவிடும். ஆதலால், மறுப்புரைக்கத்தக்க செய்கைப்பாடுகள் எவற்றிலும் ஈடுபடுவதிலிருந்து உங்களுடைய மிகையார்வமுள்ள முகவர்களையும் தொண்டர்களையும் நீங்கள் தடைபோட்டு வைக்கவேண்டும். ஊழல் பழக்கமுறை என மெய்ப்பிக்கப்பட்ட ஓர் ஒற்றை நிகழ்வுகூட, நீங்கள் தேர்தலில் வெற்றி பெற்றீர்கள் என்றால், உங்களைப் பதவியிறக்கம் செய்யப் போதுமானது.

2. குறிப்பாக, உங்கள் சார்பாக, அனுமதிக்காதீர்கள்

(i) ஏதேனும் கைக்கூலி கொடுத்தல், வாக்காளர்களை வலுக்கட்டாயப்படுத்தல் அல்லது அச்சுறுத்தல் வழியாக அல்லது பிறவாறாக தகாத செல்வாக்கு அல்லது ஆள்மாறாட்டம்

(ii) போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் எவ்வகையான ஊர்தி மூலமும் வாக்காளர் எவரையும் வாக்குச் சாவடிக்கு அல்லது அதிலிருந்து கொண்டு செல்ல நேர்முகமான அல்லது மறைமுகமான ஏற்பாடு எதுவும் (இதுவும் ஒரு குற்றவியல் குற்றச்செயலாகும்,

பி.கு . : உங்கள் கட்சி கூட அத்தகைய உத்திகளை செய்யக்கூடும்

(iii) சமயம். சாதி, சமூகம் அல்லது மொழிகாரணமாக இந்திய குடிமக்களின் வெவ்வேறு வகையினருக்கிடையே பகைமை அல்லது வெறுப்புணர்ச்சியை வளர்க்க அல்லது வளர்க்க முயலுகிற செயல் எதுவும். ஓர் ஊழல் பழக்கமுறையாகும்; அது உங்களது தேர்தலை விழல் (Void) ஆக்கலாம் மற்றும் தகுதிக்கேட்டை ஏற்படுத்தலாம். மேலும், மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனையோ அல்லது பணத்தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்க ஒரு தேர்தல் குற்றச்செயலாகவும் அது அமைகிறது.

(iv) ஓர் அரசு பணியாளர், அவர் விரும்புகிறார் என்றால், அவரது வாக்கை உங்களுக்காகப் பதிவுசெய்தலைத் தவிர, தேர்தலில் உங்களது

வெற்றிவாய்ப்புக்கு உதவுவதற்கு, அந்த அரசு பணியாளரிடமிருந்து பெறப்படும் உதவி எதுவும்.

(v) கோவிட் பொருத்தமற்ற நடத்தை

பிற்குறிப்பு : அரசு பணியாளர் ஒருவர்பாலமைந்த அத்தகைய உதவி ஓர் ஊழல் பழக்கமுறையாகவும், அத்துடன் ஒரு குற்றச் செயலாகவும் அமைகிறது. நீங்கள் அவரை அவ்வாறு செய்யத் தூண்டுகிறீர்கள் என்றால், நீங்கள் உடந்தைக் குற்றத்திற்கு உள்ளாக்கப்படுவீர்கள். ஆனால், அரசு பணியிலும் அலுவல் முறைக் கடமை ஆற்றுகிற அல்லது ஆற்றுவதாகப் புலப்படுகிற குறித்துரைக்கப்பட்ட வகைப்பரிவுகளில் ஏதொன்றையும் சேர்ந்தவராகவும் உள்ள ஆள் எவரும், வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல் முகவர் அல்லது வேட்பாளரின் இசைவுடன் செயலாற்றுகிற வேறு எவரேனும் ஆள் அல்லது (வேட்பாளர் ஏற்றுள்ள பதவி காரணமாகவேனும் அல்லது வேறு ஏதேனும் காரணமாகவேனும்) அவருடைய தேர்தல் முகவர் ஆகிய இவர்களுக்காக, இவர்களுக்கு அல்லது இவர்கள் தொடர்பாக ஏற்பாடுகள் எவற்றையும் செய்கிறார் அல்லது வசதி நலன்கள் எவற்றையும் வழங்குகிறார். அல்லது வேறு ஏதேனும் செயலை அல்லது ஏதொன்றையும் செய்கிறார் என்றவிடத்து, அத்தகைய ஏற்பாடுகள், வசதி நலங்கள் அல்லது செயல் அல்லது ஏதோ ஒன்று அந்த வேட்பாளரின் தேர்தல் வெற்றி வாய்ப்பை மிகுவிப்பதற்கான உதவி எனக்கொள்ளப்படுதல் ஆகாது.

(v) உங்கள் தேர்தல் செலவுகள் சட்டமுறையான உச்ச அளவுக்கு மேற்படுதல்
பிற்குறிப்பு : (வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல் முகவர் அல்லாமல் வேறு) சங்கம் அல்லது ஆட்களின் குழுமம் அல்லது தனிப்பட்டவர் எவராலும், வேட்பாளரின் தேர்தல் தொடர்பாக செய்ய நேரிட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட செலவினம் எதுவும், வேட்பாளரால் அல்லது அவருடைய தேர்தல் முகவரால் செய்ய நேரிட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட, தேர்தல் தொடர்பான செலவினம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.

(vi) வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலம் அல்லது பிறவாறாக,வாக்குச்சாவடியிலிருந்து வாக்குச்சீட்டை அகற்றுதல் அல்லது வாக்குப் பெட்டியைக் குலைவு செய்தல்.

(vii) ஆள் ஒருவரின் சமயம், இனம், சாதி, சமூகம் அல்லது மொழியைக் காரணங்காட்டி, அவருக்கு வாக்களிக்குமாறு அல்லது வாக்களிப்பிலிருந்து

விலகியிருக்குமாறு உங்களால் அல்லது உங்கள் முகவரால், உங்களுடைய இசைவுடன் அல்லது உங்கள் தேர்தல் முகவரின் இசைவுடன் வேறு ஆள் செய்யும் முறையீடு அல்லது சமயச்சின்னஙகளைப்பயன்படுத்துதல் அல்லது அது பற்றிய முறையீடு; அல்லது தேசியக்கொடி அல்லது தேசிய இலச்சினை போன்ற தேசியச் சின்னங்களைப் பயன்படுத்துதல் அல்லது அதுபற்றிய முறையீடு இது சட்டத்தின்கீழ் ஊழல் பழக்க முறை ஆகிறது. (எனினும் ஒரு வேட்பாளருக்கு ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட சின்னம் எதுவும் ஒரு சமயச் சின்னமாகவோ அல்லது ஒரு தேசியச் சின்னமாகவோ கொள்ளப்படுதல் ஆகாது.)

(viii) எவரேனும் வேட்பாளரின் சொந்தப் பண்புநலன் அல்லது நடத்தை தொடர்பாகப் பொய்யாகவுள்ள விவர உரை எதையும் வெளியிடுதல் .

(ix) மக்கள் சார்பாண்மைச் சட்டம் 1951இன் பிரிவு 135அ-இல் பொருள் வரையறை செய்தவாறு வாக்குச்சாவடியைக் கைப்பற்றுதல் வாக்குச்சாவடியைக் கைப்பற்றுவது என்பது ஓர் ஊழல் பழக்கமுறை. அத்துடன் ஆறுமாதங்களுக்குக் குறையாமல் இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையும் பணத்தண்டமும் விதித்துத் தண்டிக்கத்தக்க ஒரு தேர்தல் குற்றச்செயலும் ஆகும்.

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் வழிகாட்டுதலுக்கான மாதிரி நடத்தை விதித்தொகுப்பு :

7.3.1. மேற்சொன்ன ஊழல் பழக்கமுறைகள் மற்றும் தேர்தல் குற்றச்செயல்களும் தவிர, வேட்பாளர்களுக்கிடையே கடுமை, உளைச்சல், பகைமை, வெறுப்பு முதலிய உணர்ச்சிகளை உருவாக்கலாகும் வெவ்வேறு வடிவுகளை, தேர்தல் செயலியக்கங்கள் தோற்றுவித்துச் சூழலைச் சீர்குலைத்துவிடலாம். தடையில்லாமல் தேர்தலை நடத்துவதற்கு உகந்த நலமார்ந்த மற்றும் அமைதியான சூழலைப் பேணிவருவதற்காக. ஆணையம், அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் வழிகாட்டுதலுக்காக மாதிரி நடத்தை விதித்தொகுப்பு ஒன்றைத் திட்டமிட்டு உருவாக்கியிருக்கிறது.

2. மாதிரி நடத்தை விதித்தொகுப்பு, உங்கள் தொகுதியில் தேர்தலுக்கான நிகழ்வத்திட்டத்தை ஆணையம் அறிவிக்கின்ற தேதியிலிருந்து செயற்பாட்டுக்கு வருகிறது. இவ்விதித்தொகுப்பு பின்னிணைப்பு 4.2 இல் எடுத்து வழங்கப்படுகிறது.

3. இவ்விதித்தொகுப்பு, போட்டியிடும் வேட்பாளர்களாலும் அவர்களுடைய தொண்டர்களாலும் விவேகத்துடன் பின்பற்றப்படுகிறது என்றால், அவர்களுக்கிடையே வெறுப்புணர்வு அல்லது மோதலுக்கான காரணம் எதுவும் பெரும்பாலும் அரிதாக இருக்கும். மேலும், தேர்தல் என்னும் கடும்பணியை நடத்தப் பொறுப்பாக்கப்பட்டுள்ள அலுவலர்களால் அது அமைதி நலத்துடனும் நேரியதாகவும் நடத்தப்படக்கூடும். இத்தகைய அலுவலர்கள் இவ்வாறு இந்தச் சிறப்புமிக்க கடும்பணியில் உங்களது ஒத்துழைப்பை வேண்டுகிறார்கள்.

மாதிரி நடத்தை விதித்தொகுப்பைக் கடைப்பிடித்தலுக்கான குழுக்கள்:

7.4. மேற்கூரிய மாதிரி நடத்தை விதித்தொகுப்பை உரியவாறு கடைப்பிடித்தலுக்காக, தேர்தல் நடத்தும் அலுவலரின் தலைமையின் கீழ் ஒவ்வொரு நகராட்சியிலும் நிலைக் குழு இருக்கவேண்டும். அது காவல் நிலைய அலுவலர்களோடும் கூட, போட்டியிடும் வேட்பாளர்கள் அல்லது அவர்களுடைய அதிகாரம் பெற்ற சார்பாளர்கள் அனைவரையும் கொண்டிருக்கும். இக்குழு அடிக்கடி, இயலுமேல் நாள்தோறும் சந்திக்கும். மாதிரிநடத்தை விதித்தொகுப்பு பின்பற்றப்படுவதைக் கண்காணிக்கும் ஒரு காவல் - பேணுநர் (Watch-dog) என இக்குழு செயலாற்றும். உங்களது கவனத்துக்கு வரும் அத்தகைய விதித்தொகுப்பின் மீறுகை எதுவும் தேவையெனக் கருதப்படுகிறவாறான தீர்வு அல்லது தண்டனைச் செய்கைக்காக, அக்குழுவுக்கு உங்களால் அறிக்கை செய்யப்பட வேண்டும்.

ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் :

7.5.1. பொது அல்லது தனியார் இடம் எதிலும் ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு, முறையான அதிகாரியிடமிருந்து வேண்டப்பட்ட அனுமதியை நீங்கள் உரிய காலத்தில் பெறவேண்டும். பொதுத்திடல்கள், கூட்டம் நடத்தும் மன்றங்கள் முதலானவை, அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமாகக் கிடைக்கத்தக்கவையாக இருக்கவேண்டும். தகாத சலுகை அல்லது முன்னுரிமை எதுவும், குறிப்பிட்ட வேட்பாளர் எவருக்கும் இதனைப்பொறுத்துக் காட்டப்படக்கூடாது. கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் அல்லது வழிபாட்டிடங்கள், அத்தகைய கூட்டங்களுக்கான அல்லது தேர்தல் கொள்கை பரப்புதலுக்கான அரங்கமாகப் பயன்படுத்தக்கூடாது. அதேபோன்று ஊர்வலங்களை நடத்துவதற்கும் அனுமதி பெறப்படவேண்டும். தேவைப்படும் போக்குவரவு மற்றும் பாதுகாப்புறுதி ஏற்பாடுகளைச் செய்வதற்கு உள்ளூர்க் காவல் அதிகாரிகளை

இயல்விப்பதற்காக, விண்ணப்பம் உரிய காலத்தில் செய்யப்பட வேண்டும். அதே நாளில் வேறுசில வேட்பாளர் ஊர்வலம் செல்கிற அதே சாலைகளில் அல்லது வழித்தடங்களில் ஊர்வலம் செல்வது தவிர்க்கப்படவேண்டும். படக்காட்சி எடுத்துக்காட்டுகள் அமை வடக்கநிலையிலும் மட்டு நிலையிலும் வாக்காளர்களுக்கு உண்மையான கற்பிக்கும் மதிப்புள்ளவையாகவும் இருக்கவேண்டும். ஓர் உயர்ந்த தரநிலையின் நடத்தை நயம் மற்றும் நாகரீகப் பாங்கு உரைகள் நிகழ்த்துகையில் அல்லது முழக்கங்கள் எழுப்புகையில், பேணிவரப்பட வேண்டும்.

2. ஒலிப்பெருக்கிகள் எவையும், தொடர்புடைய அதிகாரிகளின் எழுத்துவழியான முன் அனுமதியின்றியும், நிருணயிக்கப்பட்ட மணிநேரங்களுக்கு அப்பாலும், அத்தகைய கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் எவற்றிற்காகவும் அல்லது பொதுவான கொள்கைப்பரப்புதலுக்காகவும் பயன்படுத்தக்கூடாது.

3. வாக்குப்பதிவுப் பகுதியில் வாக்குப்பதிவு முடிவுக்காகக் குறித்திட்ட மணிநேரத்துடன் முடியும் 48 மணிநேரத்தின்போது, எவ்வகையான ஊர்திகளிலும் பொருத்தப்பட்ட அல்லது எவ்வகைப்பட்ட வேறு ஏதேனும் முறையிலும் அமைந்த ஒலிபெருக்கி எதுவும், பயன்படுத்தப்படக் கூடாது.

4. கோவிட் நெறிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

பொதுத்துறை அல்லது தனியார் சொத்தினைச் சிதைத்தல் :

7.6. புதுச்சேரி திறந்தவெளி இடங்கள் (உருக்குலைத்தல் தடுப்பு) சட்டம் 2000, புதுச்சேரி முழுவதிலும் 20-12-2000 முதற்கொண்டு செயலாற்றலில் இருக்கிறது, (பின்னிணைப்பு 7.2). மறுப்புரைக்கத்தக்க விளம்பரம் எதையும் அல்லது சொந்தக்காரர் முதலியவர்களின் எழுத்துவழி இசைவு இன்றி விளம்பரம் எதையும், திறந்த வெளியிடம் எதிலும் பொதுமக்கள் பார்வைக்கு வைப்பதை இது தடை செய்கிறது. உருக்குலைத்தல் என்பது அழகிய தோற்றத்தை பழுது செய்தல் அல்லது தலையிட்டுக்கெடுத்தல் அல்லது வேறு ஏதேனும் வழியில் சேதப்படுத்துதல், உருக்குலைத்தல், கெடுத்தல் அல்லது தீங்கு செய்தலை உள்ளடக்கும். இக் குற்றச்செயல் கைது செய்வதற்குரியதாகும் மேலும் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கத்தக்கதாகும். நீங்களோ அல்லது உங்கள் முகவர் முதலானவர்களோ இச்சட்டத்தின் வகை முறைகளை மீறவில்லை என்பதை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**வாக்குப்பதிவு முடிவதை ஒட்டி முன்னுள்ள 48 மணி நேரத்தின்போது பொதுக்கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் தடை :**

7.7.1. ஆள் எவரும், வாக்குப்பதிவுப் பகுதி எதிலும் தேர்தல் எதற்குமான வாக்குப்பதிவு முடிவடைவதற்காகக் குறித்திட்ட மணிநேரத்துடன் முடியும் நாற்பத்தெட்டு மணி நேரத்தின்போது, அந்த வாக்குப்பதிவுப் பகுதி எதிலும்-

(அ) ஒரு தேர்தல் தொடர்பாக, பொதுக்கூட்டம் அல்லது ஊர்வலம் எதையும் கூட்டவோ, நடத்தவோ, அதற்கு வருகைதரவோ, அதில் சேர்ந்துகொள்ளவோ அல்லது உரையாற்றவோ கூடாது; அல்லது

(ஆ) திரைப்படம், தொலைக்காட்சி அல்லது வேறு அதுபோன்ற கருவியம் வாயிலாகத் தேர்தல் பொருட்பாடு எதையும் பொதுமக்களுக்குக் காட்டக்கூடாது, அல்லது

(இ) பொதுமக்களைக் கவரும் ஒரு நோக்கில், ஏதேனும் இசை நிகழ்ச்சி, அல்லது ஏதேனும் நாடக நிகழ்ச்சி, அல்லது ஏதேனும் வேறு கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்துவதன் மூலம், அல்லது நடத்த ஏற்பாடு செய்வதன் மூலம், தேர்தல் பொருட்பாடு எதையும் பொதுமக்களுக்குப் பரப்பக் கூடாது.

என்று சட்டம் வகைசெய்கிறது.

2. மேலுள்ள வகைமுறைகளை மீறுகிற ஆள் ஒருவர் இரண்டாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம், அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

3. தேர்தல் பொருட்பாடு (Election Matter) என்னும் சொல்லமைப்பு ஒரு தேர்தல் முடிவின் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு அல்லது அதைப் பாதிப்பதற்கு உட்கருத்து கொண்ட அல்லது திட்டமிடப்பட்ட பொருட்பாடு எதுவும் என்று பொருள்படும்.

4. நீங்கள் பொதுக்கூட்டங்களை நடத்துகையில் அல்லது ஏதேனும் ஊர்வலம் செல்லுதல் முதலியவற்றில், இத்தகைய வகை முறைகளைக் கவனத்தில் கொண்டு, காத்துப்பேண வேண்டும்.

**பொதுக்கூட்டங்களில் குழப்பம் :**

**7.8. ஒரு போட்டி வேட்பாளரின் ஆதரவாளர் எவரும், அல்லது உங்களை எதிர்க்கிற எவரேனும் ஒருவர், உங்களது தேர்தல் கூட்டங்களில் எதிலும் குழப்பம் விளைவிக்கிறார் என்றால், கூட்டத் தலைவர், வருகை தந்திருக்கலாகும் காவல் அலுவலர் எவரையும், கூட்டத்தில் குழப்பம் விளைவிக்கிற ஆளின் பெயரையும் முகவரியையும் கண்டறியுமாறு வேண்டிக்கொள்ளலாம். அக் காவலர் புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் பிரிவு 29இன் கீழ்க் குற்றச்செயலர் மீது சட்ட நடவடிக்கை தொடரும் செய்கையை மேற்கொள்ளுவார் அது பின்னிணைப்பு 7.1 இல் எடுத்து வழங்கப்படுகிறது. அதேபோன்று உங்களுடைய தொண்டர்கள், முகவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் போட்டி வேட்பாளர்களின் பொதுக்கூட்டங்களில் குழப்பம் செய்யாதிருக்கும்படி, அவர்களுக்குச் சொல்லவும் வேண்டும்.**

**தேர்தல் துண்டறிக்கைகளை அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் மீதான வரையறைகள் :**

**7.9.1. உங்களது கவனம், புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் பிரிவு 30க்கு ஈர்க்கப்படுகிறது அப்பிரிவு தேர்தல் துண்டறிக்கைகளையும் விளம்பர அறிவிப்புகளையும் அச்சிடுதல் மற்றும் வெளியிடுதல் மீது வரையறைகளை விதிக்கின்றது இப்பிரிவு -**

**(அ) (கையால் படியெடுத்தவை தவிர) அச்சிடப்பட்ட அல்லது ஏதேனும் செயல்முறை மூலம் பல்வகையாக வரையப்பட்ட தேர்தல் துண்டறிக்கை, சிற்றறிக்கை, விளம்பரத்தட்டி அல்லது சுவரொட்டி ஒவ்வொன்றும், அதன் முகப்பில், அச்சிடுபவரின் பெயரையும், முகவரியையும், வெளியிடுபவரின் பெயரையும் கொண்டிருக்க வேண்டும்.**

**(ஆ) அத்தகைய ஆவணம் எதையும் அச்சிடுபவர், வெளியிட விரும்புபவரால் கையொப்பமிடப்பட்டு, அவரை நேர்முகமாக அறிந்த இரண்டு ஆட்களால் சான்றொப்பமிடப்பட்ட அவரது அடையாளம் பற்றிய (இரட்டைப் படியத்தில்) விளம்புகை ஒன்றை அத்தகைய வெளியிடுபவரிடமிருந்து பெற வேண்டும்,**

**(இ) அத்தகைய ஆவணம் அச்சிடப்பட்ட உடனேயே, அச்சிடுபவர், விளம்புகையின் படியம் ஒன்றையும், ஆவணத்தின் படியம் ஒன்றையும் அந்த ஆவணம் மபுதுச்சேரி வட்டாரத்தில் அச்சிடுப்படுகிறது என்றால் தலைமைத்**

தேர்தல் அலுவலருக்கும், வேறு எந்த நேர்விலும் அது அச்சிடுப்படுகிறது என்றால், வகுத்துரைக்கப்பட்ட அதிகாரிக்கும் அனுப்பிவைக்க வேண்டும்,

(ஈ) இந்தப்பிரிவின் வகைமுறைகளில் எதையும் மீறுதலானது ஆறு மாதங்கள் வரையில் சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரையில் பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கத்தக்கது ஆகும்,

(உ) எனினும், இத்தகைய வரையறைகள், ஒரு தேர்தல் கூட்டத்தின் தேதி, நேரம், இடம் மற்றும் பிற விவரங்களை மட்டும் தெரிவிக்கும் கைச்சிற்றறிக்கை, விளம்பரத்தட்டி அல்லது சுவரொட்டி எதற்குமோ அல்லது தேர்தல் முகவர்களுக்கு அல்லது தொண்டர்களுக்கான வழக்கமான அறிவுறுத்தங்களுக்கோ பொருந்தாது, என்று வகை செய்கிறது.

2. மேற்சொன்ன சட்ட வகைமுறைகளின் வேண்டுறுத்தங்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்தலின் மற்றும் அவற்றிற்கு இணங்க நடத்தலின் பொருட்டு, மாநிலத் தேர்தல் ஆணையம், 20-9-2001 அன்று விளக்கமான ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறது (பின்னிணைப்பு 7.3) அந்த ஆணை முக்கியமாகப் பின்வருவனவற்றுக்கு வகை செய்கிறது -

(அ) மேலுள்ள உள்-பத்தி (இ)இல் சொல்லப்பட்டுள்ளதற்குப் பதிலாக அச்சிடப்பட்ட ஆவணங்களின் நான்கு படியங்களையும், வெளியிடுபவரின் விளம்புகையின் படியம் ஒன்றையும், அவை வெளியிடப்பட்ட 3 நாட்களுக்குள், தொடர்புடைய வட்டாரத்தின் மாவட்டக் கூடுதல் நீதி நடுவர் உள் - கோட்ட நீதி நடுவருக்கு,
அச்சிடுபவர் அனுப்பிவைக்க வேண்டும்.

(ஆ) அச்சிடுபவர் ஆணையத்தால் வகுத்துரைக்கப்பட்ட படிவமுறையில், அச்சிட்ட துண்டறிக்கைகள் முதலியவற்றின் எண்ணிக்கையையும் அத்தகைய வேலைக்காகச் சார்த்தப்பட்ட விலையையும் பற்றி, அத்தகைய அச்சிடுபவரால் கையொப்பமும் உறுதியொப்பமும் இடப்பட்ட முழு விவரங்களை, மேற்சொன்ன விளம்புகை மற்றும் அச்சிட்ட ஆவணப்படியங்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். இந்நோக்கத்திற்காக வகுத்துரைத்த படிவமுறை பின்னிணைப்பு 7.3 பிற்சேர்க்கை ஆ வில் மீண்டும் வழங்கப்படுகிறது.

(இ) மாவட்டக் கூடுதல் நீதி நடுவர் உள்கோட்ட நீதி நடுவர் அச்சகத்திலிருந்து தம்மால் பெறப்பட்ட அனைத்துத் தேர்தல் துண்டறிக்கைகள்

முதலியவற்றைத் தமது அலுவலகத்தில் ஏதோ ஒரு எடுப்பான இடத்தில் காட்சிக்கு வைத்தல் வேண்டும்; அப்போது தான், வேட்பாளர்களும் அக்கறையுள்ள வேறு ஆட்களும், சட்டத்தின் வேண்டுறுத்தங்கள் இணங்கி நடக்கப்பட்டிருப்பதைப் பொறுத்தமட்டில், சரிபார்க்க இயலும் மேலுள்ள சட்டத்தின் வேண்டுறுத்தம் மீறப்பட்டிருப்பதைப் பொறுத்தமட்டில், தேர்தல் கவரொட்டிகள், துண்டறிக்கைகள் முதலானவை குறித்த வழக்குகளைத் தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர அவர்களை இயல்விக்கும்.

(ஈ) மாவட்டக் கூடுதல் நீதி நடுவர் உள்கோட்ட நீதி நடுவர் மற்றும் குற்றங்களைத் துப்பறிந்து புலனாய்வு செய்யும் பொறுப்புடைய பிற அதிகாரிகள், புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் மேற்சொன்ன 30ஆம் பிரிவு வகைமுறைகளின் மீறுகையாக, தேர்தல் சுவரொட்டி, துண்டறிக்கை முதலியவற்றின் வெளியீடு பற்றிய வழக்கு எதுவும் தங்களது கவனத்திற்கு வருகிற அல்லது கொண்டுவரப்படுகிறது. என்றால் உடனடிச் செய்கையையும் புலனாய்வையும் தொடங்க வேண்டும். என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

3. உங்களால் அல்லது உங்கள் சார்பாக அச்சிட்டு வெளியிடப்பட்ட தேர்தல் துண்டறிக்கைகளையும் சுவரொட்டிகளையும் பொறுத்தமட்டில், மேலுள்ள சட்டத்தின் வேண்டுறுத்தங்கள் மற்றும் ஆணையத்தின் வழிகாட்டு நெறிகள் அனைத்தும் இணங்கி நடக்கப்படுகின்றன என்பதை நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். இது நலமார்ந்த தேர்தல் செயலாக்கங்களை உறுதி செய்யவும். தேர்தல்களின் தூய்மையைப் பேணுவதற்கும் மிகவும் இன்றியமையாதது. மேற்சொன்ன சட்ட வகை முறைகளின் மீறுகையாக எவையேனும் தேர்தல் சுவரொட்டிகள் அல்லது துண்டறிக்கைகளின் வெளியீடு பற்றி உங்களது கவனத்திற்கு அல்லது அறிவுறுகைக்கு வந்திருந்தால், தொடர்புடைய அதிகாரிகளிடம் அது பற்றி அறிக்கை கொடுக்கத்தயங்க வேண்டாம்.

**அலுவல்முறை சாராத அடையாளத் துண்டுச் சீட்டுகள் :**

7.10.1. அரசியல் கட்சிகள் / வேட் பாளர்கள் பின்வரும் தகவல் அடங்கிய அலுவல் சாரா அடையாளத் துண்டுச் சீட்டுகளை வாக்காளர்களுக்கு வழங்கலாம்

(i) வாக்காளர் பட்டியலிலுள்ள வாக்காளரின் பெயர் மற்றும் வரிசை எண் ;
(ii) வாக்காளர் பட்டியலின் பாகத்தின் எண்

(iii) வாக்குச்சாவடியின் வரிசை எண் மற்றும் பெயர் ; மற்றும்
(iv) வாக்குப் பதிவுத் தேதி

2. அடையாளத் துண்டுச் சீட்டு வெள்ளைத்தாளில் இருக்கவேண்டும்; வேட்பாளரின் பெயர் மற்றும் அல்லது வேட்பாளரின் அல்லது அவரது கட்சியின் தேர்தல் சின்னத்தைக் கொண்டிருக்கக்கூடாது. இத்துண்டுச் சீட்டுகள் அல்லது ஒரு கட்சிக்கு அல்லது ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க எவையேனும் முழக்கங்களையோ ஊக்குரைகளையோ கொண்டிருக்கக்கூடாது. இத்தகைய வாக்குச்சீட்டுகள், வாக்காளர்களால் வாக்குச்சாவடிக்குக் கொண்டு செல்லப்பபடுமானால், ஆதரவுதிரட்டுவதாக அமையும் என்பதால், அதை அனுமதிப்பதற்கில்லை. வாக்குச்சாவடியின் 100 மீட்டருக்குள் துண்டுச் சீட்டுகள் எவற்றையும் சுற்றனுப்புதல் (circulation) ஆதரவுதிரட்டுதலாக அமையும், சட்டத்தின் கீழ் அதுவும் அனுமதிக்கத்தக்கதாக இல்லை.

வாக்களிக்கும் நடைமுறைபற்றி வாக்காளர்களுக்குக் கற்பித்தல் :

7.11.1 உங்களுடைய தொண்டர்கள் வாக்காளர்களுக்கு வாக்களிக்கும் நடைமுறை பற்றிக் கற்பிக்க வேண்டும். வாக்காளர்கள் தங்களுடைய கையொப்பங்களையோ அல்லது பெருவிரல் பதிவுகளையோ அச்சம் எதுமின்றி இடுமாறு அறிவுரையளிக்கப்பட வேண்டும். அவர்களது வாக்களிப்பு இரகசியத்தை எந்தவழியிலும் மீறுவதாகவோ அல்லது அவர்களுடைய அடையாளத்தை வெளிப்படுத்துவதாகவோ, இது அமையாது. வாக்காளர்களின் கையொப்பங்கள் பெருவிரல் பதிவுகள் கொண்டிருக்கும் வாக்குச் சீட்டுகளின் அடிச்சீட்டுச் சிப்பப்பொதிகள் வாக்குப்பதிவு முடிந்த பின்பு உடனடியாகத் தலைமை அலுவலரின் மற்றும் வேட்பாளர் வாக்குச்சாவடி முகவர்களின் முத்திரையுடன், முத்திரையிடப்படும். மேலும், அத்தகைய முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதிகள், தகுதிறம் வாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் ஆணையின் கீழ் அல்லாமல், அதன்பின்பு திறக்கப்படுதலோ அல்லது ஆய்வு செய்யப்படுதலோ கூடாது.
2. உங்கள் தொண்டர்கள், வாக்குச்சாவடியில் பின்பற்றப்படும் பிற வாக்களிப்பு விவரங்கள் பற்றியும் நன்கு அறிந்திருக்கவேண்டும்.
வாக்குச் சாவடியில் வாக்குப்பதிவு செய்யும் நடைமுறை :

சுருக்கமாக வாக்களிக்கும் நடைமுறை பின்வருமாறு :

7.12.1 ஒரு வாக்காளர் ஒரு வாக்காளர் வாக்குச்சாவடிக்குள் நுழையும் போது, வாக்காளர்களின் அடையாளம் அறிதலையும் வாக்காளர் பட்டியலின் குறியிட்ட படியத்தை (பிரதியையும் பொறுப்பில் கொண்டுள்ள உதவித் தலைமை அலுவலரிடம், நேரடியாகச் செல்வார். அவரது அடையாளம் நிறுவப்பட்டு, வாக்குச்சாவடி முகவர்களில் எவராலும் அவரது அடையாளத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை என்றபின்பு, வாக்காளரின் இடது சுண்டுவிரல் அழியாத மையினால் குறியிடப்படும். இது முதலிலுள்ள வாக்குப்பதிவு அலுவலரால் செய்யப்படும். அதன் பின்பு, வாக்குச்சீட்டுகளைப் பொறுப்பில் கொண்டுள்ள அடுத்த வாக்குப்பதிவு அலுவலரிடம் வாக்காளர் செல்வார். அந்த வாக்குப் பதிவு அலுவலர் வாக்குச் சீட்டின் அடிச்சீட்டில் வாக்காளரின் வாக்காளர் பட்டியல் எண்ணைக் குறித்துக்கொண்டு, அந்த அடிச்சீட்டில் வாக்காளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் பதிவைப் பெற்றுக் கொண்டு, அடிச்சீட்டிலிருந்து அந்த வாக்குச்சீட்டைப் பிரித்தெடுத்துக் கடைசியிலுள்ள வாக்குப்பதிவு அலுவலருக்கு அதை அனுப்பி வைப்பார். கடைசி வாக்குப்பதிவு அலுவலர் வாக்குச்சீட்டுகளில் குறியிடுவதற்கான ரப்பர் முத்திரைகளையும் வாக்குப் பெட்டியையும் பொறுப்பில் கொண்டிருப்பார். அந்த வாக்குப் பதிவு அலுவலர், வாக்குச்சீட்டை முதலில் செங்குத்தாகவும் பின்பு கிடைமட்டமாகவும் இரண்டு முறை மடித்து, அதன்பின்பு வாக்குச் சீட்டைப் பிரித்து, அதை மையுள்ள ரப்பர் முத்திரையுடன் சேர்த்து, வாக்காளரிடம் கொடுப்பார்.

7.12.2 அதன்பின்பு வாக்காளர் மறைவாகவுள்ள வாக்களிக்கும் அறைகளில் ஓர் அறைக்கு, அவரது வாக்குச்சீட்டில் குறியிடுவதற்காக, அந்த நோக்கத்திற்காக அவருக்கு வழங்கப்பட்ட ரப்பர் முத்திரையுடன் செல்வார். அவரது வாக்குச்சீட்டில் குறியிட்டு, தமது வாக்களிப்புக் குறியை மறைக்கக்கூடிய நிலையில், வாக்குப்பதிவு அலுவலரால் அது மடிக்கப்பட்ட கோடுகள் வழியே அதை மடித்த பின்பு, அவர் வாக்களிப்பு அறையிலிருந்து வெளியே வந்து கடைசி வாக்குப்பதிவு அலுவலரின் முன்புறத்தில் வைக்கப்பட்டுள்ள வாக்குப் பெட்டிக்குள் தமது வாக்குச்சீட்டைச் செருகுவார். வாக்காளர் வாக்குச்சாவடியை விட்டு நீங்க அனுமதிக்கும் முன்பு, கடைசி வாக்குப்பதிவு அலுவலர், அவரது இடது சுண்டுவிரலில் தெளிவான அழியாத மைக்குறி இருக்கிறது என்பதை உறுதிசெய்வதற்காக அதைச் சரிபார்ப்பார். அத்தகைய குறி தெளிவாகக் காணப்படவில்லை அல்லது அழியாத மைக்குறி துடைத்து அழிக்கப்பட்டிருக்கிறது என்றால், மீண்டும் அவர்

வாக்காளருடைய இடது சுண்டு விரலில் அழியாத மையினால் குறியிடுதல் வேண்டும்.

7.13.1 உண்மையான வாக்காளர்களின் வாக்களிக்கும் உரிமையைச் செலுத்தும் வகையில், வாக்காளர்களின் மாறாட்டத்தைத் தடுக்கும் நோக்குடன் வாக்காளர்கள் எல்லோரும், வாக்களிப்பதற்காக அவர்கள் வாக்குச்சாவடிக்கு வரும்போது, தங்களது வாக்குரிமையைச் செலுத்தும் பொருட்டுத் தங்களது அடையாளத்தை நிறுவுவதற்காக அடியிற் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை முன்னிலைப்படுத்த வேண்டும். ஆனால் அந்த ஆவணம் தலைமை அலுவலர் மனநிறைவுகொள்ளும் வகையில் மென்தகட்டுக் குலைவுத் தடைக்காப்பு நிழற்படம் (Laminated tamper proof photo) ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும்.

(i) இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரவுரிமையின் கீழ் வழங்கப்பட்ட தேர்தல் நிழற்பட அடையாள அட்டை ( EPIC)

(ii) கடவுச்சீட்டு (Passport).

(iii) ஓட்டுநர் உரிமம்.

(iv) வருமானவரி அடையாள் (PAN) அட்டை.

(v) மாநில /மைய அரசு, பொதுத்துறை ஏற்புநிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், அல்லது பிற தனியார் தொழில் நிறுவனங்களால் அதன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பணி அடையாள அட்டை.

(vi) வங்கி /கிசான் / அஞ்சல் நிலையச் சேமிப்புப் புத்தகம்.

(vii) 2002 ஜனவரி முதல் தேதிக்கு முன்னதாக வழங்கப்பட்ட உணவுப் பங்கீட்டு அட்டை.

(vii) தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்பட்ட பட்டியல் சாதி பட்டியல் பழங்குடி பிற்பட்ட வகுப்புச் சான்றிதழ்.

(ix) மாணவர் அடையாள அட்டை.

(x) பட்டாக்கள், பதிவு செய்த ஒப்பாவணங்கள் (Deeds) முதலியன போன்ற சொத்து ஆவணம்.

(xi) ஆயுதங்கள் உரிமம்.

(xii) போக்குவரத்து அதிகாரியால் வழங்கப்பட்ட நடத்துநர் உரிமம்.

(xiii) முன்னாள் படைவீரர் ஓய்வூதியப் புத்தகம் / ஓய்வூதியம் வழங்கு ஆணை போன்ற ஓய்வூதிய ஆவணம்,

(xiv) முன்னாள் படைவீரர்களின் கைம்பெண் சார்ந்திருப்பவர் சான்றிதழ்

(XV) இரயில்வே பேருந்து பயண அனுமதிச்சீட்டு.

(xvi) உடல் ஊனச் சான்றிதழ்.

(xvii) விடுதலைப் போராட்ட வீரர் அடையாள அட்டை,

2. வாக்காளர் மேற்சொன்ன ஆவணங்களில் ஏதொன்றையும் முன்னிலையாக்கத் தவறுகிறார் என்றால், வாக்குச்சீட்டுகள் அவருக்கு வழங்கப்படக்கூடாது; அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படவும் கூடாது.

7.14(1) இறந்துபோன, இல்லாநிலையான மற்றும் போலியான வாக்காளர்களின் பட்டியல் : உங்கள் சார்பாக வாக்குகளுக்கு ஆதரவுதிரட்டும் நிகழ்வின்போது, உங்களுடைய தொண்டர்களும் முகவர்களும், வாக்காளர் பட்டியலில் பெயர்களைக் கொண்டிருக்கும் வாக்காளர்களில் சிலர் இறந்திருக்கிறார்கள். வாக்காளர்களில் சிலர் பெரும்பாலும் அந்த வட்டாரப்பகுதியை விட்டு நிலையாகவே சென்றிருக்கிறார்கள், மற்றும் மேலும் சிலர் உண்மையான ஆட்கள் அல்லர் என்று கண்டறிந்திருக்கலாம். ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் அத்தகைய இறந்தவர். இல்லாநிலையர் அல்லது போலி வாக்காளர்களின் பட்டியல் ஒன்றைத் தனித்தனியே ஏற்பாடு செய்யும்படி உங்களுடைய தொண்டர்கள் கேட்டுக்கொள்ளப்படலாம். இயலுமேல், அத்தகைய வாக்காளர்களின் பட்டியலை போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களாலும் உடன்பாடு கொள்ளுமாறு செய்திடுக மற்றும் அவ்வாறு உடன்பாடு கொண்ட பட்டியலை, அத்தொகுதியில் வாக்களிப்பு முதல் நாளுக்குக் குறைந்தது 7 நாட்களுக்கு முன்பு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் ஒப்படைக்குமாறு ஏற்பாடு செய்திடுக. போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களாலும் அந்தப் பட்டியல் உடன்பாடு கொள்ளப்படவில்லை என்றாலும் கூட, இயன்ற அளவு அவர்களில் மிகுதியானவர்களை உடன்பாடு கொள்ளச் செய்திடுக! அதுவும் தவறினால், உங்களது சொந்தப் பட்டியலைத் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்கிடுக.

(2) அந்தப் பட்டியல் சரியான முறையில் தயாரிக்கப்படவேண்டும். அதில் உண்மையான வாக்காளர் எவரின் பெயரும் சேர்க்கப்படாதிருக்குமாறு கவனம் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இறந்த, இல்லாநிலை அல்லது போலிவாக்காளர் பட்டியலில், உண்மையான வாக்காளர் எவரும் தவறுதலாகச் சேர்க்கப்படுகிறார் என்றால், அது தொந்தரவை விளைவிப்பதுடன், அவருடைய வாக்களிப்பு உரிமையும் வாக்குச்சாவடியில் கேள்விக்குரியதாகும்.

(3) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்குமான உங்கள் வாக்குச்சாவடி முகவரிடம் அந்த வாக்குச்சாவடிக்குரிய அத்தகைய இறந்த, இல்லாநிலை அல்லது போலி வாக்காளர்கள் பட்டியலின் படியம் ஒன்றைக் கொடுத்திடுக. அப்போதுதான், வாக்குப்பதிவு நாளன்று அத்தகைய வாக்காளர்கள்

எவருடைய பெயரிலும் வாக்களிக்க வருகின்ற ஆட்கள் எவரையும் அவர் கண்காணித்து, அந்த உண்மை விவரத்தைத் தலைமை அலுவலரின் கவனத்துக்கு ஈர்க்கலாம்.

(4) மேலுள்ள அறிவுறுத்தங்களை விழிப்புடன் பின்பற்றுவதன் மூலம், நீங்கள் உங்களுக்கு மட்டும் உதவி செய்து கொள்ளாமல், போலி வாக்களிப்பைத் தடுப்பதில் கணிசமான அளவுக்குத் தேர்தல் அதிகாரிகளுக்கும் உதவி செய்தவராகிறீர்கள்.

வாக்குப்பதிவுக்கு முன்பு ஒரு வேட்பாளரின் இறப்பு :

7.15.1. வேட்பு மனு கூர்ந்தாய்வின்போது செல்லுநிலையிலுள்ளது என்று கண்டறியப்பட்டிருக்கிற , மற்றும் அத்தகைய வேட்புநிலையைத் திரும்பப் பெற்றுக்கொண்டிராத வேட்பாளர் ஒருவரின் இறப்புப் பற்றிய அறிக்கை ஒன்று, போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை வெளியிடுவதற்கு முன்பு பெறப்படுகிறது என்றால் அல்லது போட்டியிடும் வேட்பாளர் ஒருவரின் இறப்புப் பற்றிய அறிக்கை வாக்குப் பதவி தொடங்குவதற்கு முன்பு பெறப்படுகிறது என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் இறப்புக்குறித்த உண்மை விவரம் பற்றி மனநிறைவு கொள்வதன் மேல், தேர்தலை எதிர் அறவு ரத்து) ( Countermand) செய்து அந்த உண்மைவிவரத்தை மாநிலத் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை செய்யலாம்.

(2) அடுத்தகட்ட நடவடிக்கைகள், ஒரு புதிய தேர்தலைப்போன்று, எல்லாவற்றையும் பொறுத்து, புத்தம் புதியனவாகத் தொடங்கப்படும். ஆனால்

(அ) தேர்தலை எதிர் அறவுசெய்யும் நேரத்தில் போட்டியிடும் வேட்பாளராக ஒருவர் இருக்கும் நேர்வில், புதிய வேட்புமனு எதுவும் தேவை இல்லை.

(ஆ) தேர்தலை எதிர் அறவு செய்வதற்கு முன்பு, தமது வேட்புநிலையைத் திரும்பப் பெற்றுக்கொள்வதாக ஓர் அறிவிப்பைக் கொடுத்திருக்கிற ஆள் ஒருவர். அத்தகைய எதிர் அறவுக்குப் பின்பு ஒரு வேட்பாளராக முன்மொழியப்படுவதற்கு உரிமைப்பாடு உடையவர் ஆவார்.

(3) தேர்தலுக்கான அடுத்த கட்டங்கள், ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்பட்ட திருத்தியமைத்த அட்டவணைக்கு ஏற்பத் தொடர்ந்து நடைபெறும்.

# பின்னிணைப்பு 7.1

(புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் எடுகுறிப்பு)

25. ஊழல் பழக்க முறைகள். இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பின்வருபவை ஊழல் பழக்கமுறைகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

1. "கைக்கூலி" என்பது, அதாவது-

அ. ஒரு வேட்பாளரால் அல்லது அவருடைய முகவரால் அல்லது ஒரு வேட்பாளரின் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு ஆள் எவராலும். -

(அ) ஒரு தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்கவோ, நிற்காமலிருக்கவோ அல்லது வேட்புநிலையைத் திரும்பப் பெறவோ திரும்பப் பெறாதிருக்கவோ ஆள் எவரையும், அல்லது

(ஆ) ஒரு தேர்தலில் வாக்களிக்கவோ வாக்களிக்காதிருக்கவோ ஒரு வாக்காளரை நேர்முகமாக அல்லது மறைமுகமாகத் தூண்டும் நோக்குடன்,

(i) அவ்வாறு வேட்பாளராக நின்றதற்கோ நிற்காமலிருந்ததற்கோ அல்லது அவரது வேட்புநிலையைத் திரும்பப் பெற்றதற்கோ திரும்பப்பெறாததற்கோ ஓர் ஆளுக்கு, அல்லது

(ii) வாக்களித்ததற்கோ வாக்களிக்காமல் இருந்ததற்கோ ஒரு வாக்காளருக்கு

ஒரு வெகுமதியாக -

எவ்வகைப்பட்ட ஆள் எவராயினும் அவருக்குக் கொடுக்கப்படும் கொடை, கொடுக்க முற்படுதல் அல்லது உறுதிமொழி எதுவும்;

ஆ. ஒரு தூண்டு நோக்கம் (motive) ஆகவோ அல்லது ஒரு வெகுமதி (reward) யாகவோ

(அ) ஒரு வேட்பாளராக நிற்கவோ, நிற்காதிருக்கவோ அல்லது வேட்புநிலையைத் திரும்பப் பெறவோ திரும்பப்பெறாதிருக்கவோ ஆள் ஒருவரால், அல்லது

(ஆ) வாக்களிக்கவோ வாக்களிக்காதிருக்கவோ, வாக்காளர் எவரையும் வாக்களிக்க அல்லது வாக்களிக்காதிருக்கத் தூண்டவோ, தூண்டமுயலவோ அல்லது வேட்பாளர் எவரையும் தமது வேட்புநிலையைத் திரும்பப் பெறவோ திரும்பப்பெறாதிருக்கவோ, தமக்காக அல்லது வேறு எவரேனும் ஆளுக்காக எவ்வகைப்பட்ட ஆள் எவராயினும் அவரால்,

பெறப்பட்ட அல்லது பெறஉடன்பட்ட அவாநிறைவு (gratification) எதுவும்.

விளக்கம் :- இந்தப் பிரிவுக்கூறின் நோக்கங்களுக்காக, " அவாநிறைவு " என்னும் சொல்லமைப்பு பணச்சார்பான அவாநிறைவு அல்லது பணத்தில் மதிப்பிடத்தக்க அவாநிறைவுகள் என்று வரையறை செய்யப்படவில்லை. அது அனைத்து விருந்தோம்பல் வடிவுகளையும் வெகுமதிக்கான வேலையமைவின் அனைத்து வடிவுகளையும் உள்ளடக்குகிறது. ஆனால், ஏதேனும் தேர்தலில் அல்லது தேர்தல் நோக்கத்திற்காக உண்மையாகச் செய்ய நேர்ந்த செலவுகளுக்குப் பணம் கொடுக்கப்படுதலை. அது உள்ளடக்காது.

(2) தகாத செல்வாக்கு அதாவது வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது வேட்பாளரின் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு எவரேனும் ஆளினால், தேர்தல் உரிமை எதையும் தடையின்றிச் செலுத்துவதல் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ, தலையிடுதல் அல்லது தலையிட முயலுதல் ஆனால்,-

(அ) இந்தப் பிரிவுக்கூறின் வகைமுறைகளின் பொதுப்பாங்கிற்கு ஊறுபாடின்றி, அதில் கட்டுகை செய்யப்பட்டுள்ள அத்தகைய ஆள் எவரும் -

(i) வேட்பாளர் எவரையும் அல்லது வாக்காளர் எவரையும், அல்லது வேட்பாளரோ வாக்காளரோ அக்கறை கொண்டுள்ள ஆள் எவரையும் சமுதாய ஒதுக்கிவைப்பு மற்றும் ஏதேனும் சாதி அல்லது சமூகத்திலிருந்து விலக்கிவைப்பு அல்லது வெளியேற்றுவது உள்ளடங்க எவ்வகையான தீங்கும் செய்வதாக அச்சுறுத்துகிறார் அல்லது

(ii) ஒரு வேட்பாளர் அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள ஆள் தெய்வச் சீற்றத்துக்கோ ஆன்மீகக் கண்டனத்துக்கோ ஆளாவார்

அல்லது ஆளாகும் பொருளாக ஆக்கப்படுவார் என்று வேட்பாளரை அல்லது வாக்காளரை நம்புமாறு தூண்டுகிறார் அல்லது தூண்ட முயலுகிறார்

என்றால், அத்தகைய வேட்பாளர் அல்லது வாக்காளரின் தேர்தல் உரிமையைத் தடையின்றிச் செலுத்துவதில், இந்தப் பிரிவுக்கூறின் பொருளின்படி, தலையீடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) பொதுக்கொள்கை பற்றிய ஒரு விளம்புகை, அல்லது வெளியீடு பற்றிய ஓர் உறுதிமொழி அல்லது தேர்தல் உரிமையில் தலையிடும் உட்கருத்தன்றி ஒரு சட்டமுறையான உரிமையை வெறுமனே செலுத்துதல், இந்தப் பிரிவுக்கூறின் பொருளின்படி, தலையீடாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

3. தமது சமயம், இனம், சாதி, சமூகம் அல்லது மொழி அல்லது சமயச் சின்னங்களின் பயன்பாடு அல்லது முறையீடு அல்லது தேசியக்கொடி அல்லது தேசிய இலச்சினை போன்ற தேசியச் சின்னங்களின் பயன்பாடு அல்லது முறையீடு ஆகிய காரணங்களினால், ஒரு வேட்பாளரின் வெற்றி வாய்ப்பை மிகுவிப்பதற்காக அல்லது எவரேனும் வேட்பாளரின் தேர்தலை ஊறுபடுத்திப் பாதிக்கச் செய்வதற்காக, ஆள் எவருக்கும் வாக்களிக்குமாறு அல்லது வாக்களிப்பதிலிருந்து விலகியிருக்குமாறு அந்த வேட்பாளர் அல்லது அவருடைய முகவரால் அல்லது வேட்பாளர் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு எவரேனும் ஆளால் முறையீடுசெய்யப்படுதல்.

(4) ஒரு வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வெற்றிவாய்ப்புகளை மிகுவிப்பதற்காகவோ அல்லது எவரேனும் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதை ஊறுபாடாகப் பாதிக்கச் செய்வதற்காகவோ, ஒரு வேட்பாளர் அல்லது அவருடைய முகவர், அல்லது அந்த வேட்பாளர் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு எவரேனும் ஆள், சமயம் இனம் சாதி சமூகம் அல்லது மொழி ஆகிய காரணங்கள் மீது. இந்தியக் குடிமக்களின் வெவ்வேறு வகுப்பினர்களுக்கிடையே பகைமை அல்லது வெறுப்பு உணர்வுகளை வளர்ப்பாடு செய்தல் அல்லது வளர்ப்பாடுசெய்ய முயலுதல்.

(5) எவரேனும் வேட்பாளரின் சொந்தப் பண்புநலன் அல்லது நடத்தை தொடர்பாக அல்லது எவரேனும் வேட்பாளரின் வேட்புநிலை அல்லது அதைத் திரும்பப் பெறுதல் தொடர்பாக, பொய்யாக இருக்கிற அல்லது பொய்யானது எனத் தாம் அறிந்திருக்கிற அல்லது நம்புகிற அல்லது உண்மையானது எனத்

தாம் நம்பாதிருக்கிற, அந்த வேட்பாளரின் வெற்றி வாய்ப்பை ஊறுபடுத்துவதற்கு ஆராய்ந்து திட்டமிடப்பட்ட ஓர் உரையினை ஒரு வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது அவ்வேட்பாளரின் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு ஆள் எவராலும் வெளியிடப்படுதல்.

(6) ஒரு வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது அவ்வேட்பாளரின் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு ஆள் எவராலும், ஊர்தி அல்லது நீர்வழிக்கலம் (vehicle or vessel) எதுவும் பணம் செலுத்தியோ அல்லது பிறவாறாகவோ வாடகைக்கு அமர்த்தப்படுதல் அல்லது முயன்று பெறப்படுதல் அல்லது (வேட்பாளர் தாமோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ அல்லது அவருடைய முகவரோ அல்லாமல் வேறு) வாக்காளர் எவரையும் 25ஆம் பிரிவின் கீழ் வகை செய்யப்பட்ட வாக்குச்சாவடிக்கு அல்லது அதிலிருந்து அல்லது வாக்குப்பதிவுக்காக 29ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ்க் குறித்திட்ட ஓர் இடத்திற்கு அல்லது அதிலிருந்து கட்டணமின்றி ஏற்றிச்செல்ல அத்தகைய ஊர்தியை அல்லது கலத்தைப் பயன்படுத்துதல்:

ஆனால், அத்தகைய வாக்குச்சாவடி அல்லது வாக்குப்பதிவுக்காகக் குறித்திட்ட இடத்திற்கு அல்லது அதிலிருந்து வாக்காளர் ஒருவரையோ அல்லது பலரையோ அவர்களுடைய கூட்டுக் கட்டணத் தொகையில் ஏற்றிச்செல்லும் நோக்கத்திற்காக அவரால் அல்லது அவர்களால் ஓர் ஊர்தி அல்லது கலம் வாடகைகு அமர்த்தப்படுவது - அந்த ஊர்தி அல்லது கலம் எந்திர ஆற்றலால் உந்திச் செலுத்தப்படவில்லை என்றால், இந்தப் பிரிவுக்கூறின் கீழ் ஓர் ஊழல் பழக்கமுறையாகக் கொள்ளப்படுதல் ஆகாது :

மேலும், அத்தகைய வாக்குச்சாவடி அல்லது வாக்குப்பதிவுக்காகத் குறித்திட்ட இடத்திற்குப் போய்வரும் நோக்கத்திற்காக, எவரேனும் வாக்காளரால் பொதுப்போக்குவரத்து ஊர்தி அல்லது கலம் அல்லது டிராம் உந்து அல்லது இருப்பூர்திப்பெட்டி எதுவும் அவரது சொந்த செலவில் பயன்படுத்தப்படுவது, இந்தப் பிரிவுக்கூறின்கீழ் ஓர் ஊழல் பழக்கமுறையாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

விளக்கம் :- இந்தப் பிரிவுக்கூறில், " ஊர்தி " என்னும் சொல்லமைப்பு, எந்திர ஆற்றலினாலோ பிறவாறாகவோ உந்திச் செலுத்தப்பட்டும் வேறு ஊர்திகளை இழுப்பதற்காக அல்லது பிறவாறாகப் பயன்படுத்தப்பட்டும், . சாலைப்

போக்குவரத்து நோக்கத்திற்காகப் பயன்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்டு வரும் தகுதியுள்ள ஊர்தி எதுவும் எனப் பொருள்படும்.

(7) ஒரு வேட்பாளர் அல்லது அவருடைய முகவர் அல்லது அவ்வேட்பாளரின் அல்லது அவருடைய முகவரின் இசைவுடன் வேறு ஆள் எவரும் அந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வெற்றி வாய்ப்பை மிகுவிப்பதற்காக அரசு பணியிலும் பின்வரும் பதவி வகைகளில் எதையும் சேர்ந்திருக்கும் ஆள் எவரிடமிருந்தும் (வாக்கை) வேண்டிப் பெறுதல் அல்லாமல் வேறு) உதவி எதையும் பெறுதல் அல்லது முயன்று பெறுதல் அல்லது பெற உடந்தையாதல் அல்லது பெறவோ முயன்று பெறவோ முயலுதல்:

(அ) அரசிதழ்ப் பதிவு அலுலர்கள்,
(ஆ) ஊதிய உதவிபெறும் நீதிபதிகள் மற்றும் நீதி நடுவர்கள்,
(இ) ஒன்றியத்துப் படைக்கலப் படைகளின் உறுப்பினர்கள்,
(ஈ) காவல் படை உறுப்பினர்கள்
(உ) ஆயத்துறை அலுவலர்கள்
(ஊ) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வேறு பிரிவு ஆட்கள்

விளக்கம் :- (1) இப் பிரிவில், "முகவர்' என்னும் சொல்லமைப்பு ஒரு தேர்தல் முகவர், ஒரு வாக்குச்சாவடி முகவர் மற்றும் வேட்பாளர் இசைவுடன் தேர்தல் தொடர்பாக ஒரு முகவராகச் செயலாற்றுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படுகிற ஆள் எவரையும் உள்ளடக்கும்.

(2) பிரிவுக்கூறு (7)இன் நோக்கத்திற்காக, ஒரு வேட்பாளரின் தேர்தல் முகவராக ஆள் ஒருவர் செயலாற்றுகிறார் என்றால், அந்த வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் வெற்றிவாய்ப்புகளை மிகுவிப்பதில் உதவி செய்கிறார் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## (ஈ) தேர்தல் குற்றச்செயல்கள்

26. வாக்களிப்பு இரகசியத்தை பேணி வருதல் : (1) ஒரு தேர்தலில் வாக்குகளை பதிவு செய்தல் அல்லது எண்ணுதலுக்கு தொடர்புடைய கடமை எதையும் ஆற்றுகிற அலுவலர், எழுத்தர், முகவர் அல்லது வேறு ஆள் எவரும் வாக்களிப்பு இரகசியத்தை பேணிவருதலும், பேணிவர உதவி செய்தலும் வேண்டும். (ஏதேனும் சட்டத்தின் வழியாகவோ, வாயிலாகவோ அதிகாரமளிக்கப்பட்ட. சில நோக்கத்திற்காக தவிர) அத்தகைய இரகசியத்தை

மீறுவதாக கருதப்படும் தகவல் எதையும் ஆள் எவருக்கும் தெரிவித்தல் கூடாது.

(2) உட்பிரிவு (1)ன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும் ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும். ஒரு கால அளவுக்கு சிறை தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

27. தேர்தல் தொடர்பாக வகுப்பினருக்கிடையே பகையை வளப்பாடு செய்தல் : இச்சட்டத்தின் கீழ் ஒரு தேர்தல் தொடர்பாக, சமயம், இனம், சாதி, சமூகம் அல்லது மொழி ஆகிய காரணங்களினால் இந்தியக் குடிமக்களின் வெவ்வேறு வகுப்புகளுக்கிடையே பகையுணர்வு அல்லது வெறுப்புணர்வை வளர்ப்பாடு செய்கிற அல்லது வளர்ப்பாடு செய்ய முயலுகிற ஆள் எவரும், மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

28. தேர்தலுக்கு மந்திய நாள் அன்று மற்றும் தேர்தல் நாள் அன்று பொதுக் கூட்டங்களுக்குத் தடை: 1. ஆள் எவரும் வாக்குப்பதிவுப் பகுதி எதிலும் தேர்தல் எதற்குமாகவும் வாக்குப்பதிவு முடிவடைவதற்காகக் குறித்திட்ட மணியுடன் முடியும் நாற்பத்தெட்டு மணிநேரத்தின் போது, அந்த வாக்குப்பதிவுப் பகுதி எதிலும் பொதுக்கூட்டம் எதையும் கூட்டுதல், நடத்துதல் அல்லது அதில் கலந்து கொள்ளுதல் கூடாது.

2. உட்பிரிவு (1)இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும், இருநூற்று ஐம்பது ரூபாய்வரை போகலாகும் ஒரு பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

29. தேர்தல் கூட்டங்களில் குழப்பம் : 1. இந்தப் பிரிவு பொருந்துகிற ஒரு பொதுக்கூட்டத்தில் எந்த அலுவல் நடைபாடு (transactionof business) குறித்து அக்கூட்டம் கூடுமாறு அழைக்கப்பட்டதோ அந்த அலுவல் நடைபாட்டைத் தடுக்கும் நோக்கத்துடன் ஒழுங்கற்ற முறையில் செயலாற்றுகிற அல்லது செயலாற்றப் பிறரைத் தூண்டுகிற ஆள் எவரும், இருநூற்றைம்பது ரூபாய் வரை போகலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

2. உறுப்பினர் ஒருவரை அல்லது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கத் தொகுதியினரைக் கோரும் இச்சட்டத்தின்படியான ஓர் அறிவிக்கை பிறப்பித்த தேதிக்கும் அத்தகைய தேர்தல் நடைபெறும் தேதிக்கும் இடையே தேர்தல்

தொகுதி எதிலும் நடத்தப்படும் அரசியல் இயல்பு கொண்ட பொதுக்கூட்டம் எதற்கும் இப்பிரிவு பொருந்துகிறது.

3. உட்பிரிவு (1) இன்கீழ் ஒரு குற்றச்செயலைச் செய்யும் ஆள் எனக்காவல் அலுவலர் எவரும் தகவானமுறையில் ஐயுறுகின்றார் என்றால், அக்கூட்டத்தின் தலைவரால் அவர் அவ்வாறு செய்யுமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறவிடத்து. அவர் அந்த ஆளை அவருடைய பெயரையும் முகவரியையும் தம்மிடம் விளம்புமாறு வேண்டுறுத்தலாம். மற்றும் அந்த ஆள் தம்முடைய பெயரையும் முகவரியையும் அவ்வாறு விளம்ப மறுக்கிறார் அல்லது தவறுகிறார் என்றாலோ, அல்லது காவல் அலுவலர் அந்த ஆள் பொய்யான பெயரை அல்லது முகவரியைக் கொடுப்பதாகத் தகவானமுறையில் ஐயுறுகிறார் என்றாலோ, அக்காவல் அலுவலர் பிடியாணை (warrani) இன்றி அவரைச் சிறை (கைது) செய்யலாம்.

30. துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியவற்றை அச்சிடுவதன் மீது வரையறைகள்: 1. ஆள் எவரும், தேர்தல் துண்டு வெளியீடு அல்லது சுவரொட்டி எதையும் அச்சிடுபவர், அதை வெளியிடுபவர் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும் அதன் முகப்பில் கொண்டிராமல் அச்சிடவோ வெளியிடவோ, அல்லது அச்சிடுமாறு அல்லது வெளியிடுமாறு செய்விக்கவோ கூடாது.

2. ஆள் எவரும், தேர்தல் துண்டு வெளியீடு அல்லது சுவரொட்டி எதையும் -

(அ) வெளியிடுபவரால் கையொப்பமிடப்பட்டும் அவரை நேர்முகமாக அறிந்துள்ள இரண்டு ஆட்களால் சான்றொப்பமிடப்பட்டும் உள்ள அவரது அடையாளம் குறித்த விளம்புகை ஒன்று, இரட்டைப் படியத்தில் அவரால் அச்சிடுபவரிடம் ஒப்படைக்கப்படுகிறது என்றாலன்றி,

(ஆ) அந்த ஆவணத்தை அச்சிட்ட பின்பு ஒரு தகவான காலத்திற்குள் அந்த ஆவணத்தின் ஒரு படியத்துடன் சேர்த்து அந்த விளம்புகையின் ஒரு படியம் அச்சிடுபவரால் -

(i) அது புதுச்சேரி வட்டாரத்தில் அச்சிடப்படுகிறவிடத்து, தலைமைத் தேர்தல் அதிகாரிக்கும்.

(ii) வேறு எந்த வட்டாரத்திலும், அது அச்சிடப்படுகிற விடத்து

வகுந்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரிக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது என்றாலன்றி, அச்சிடவோ அல்லது அச்சிடுமாறு செய்வித்தலோ கூடாது.

3. இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக-

(அ) கையால் படியெடுத்தல் அல்லாமல் வேறு வகையில் ஓர் ஆவணத்தைப் பல படியமெடுக்கும் செயல்முறை எதுவும் அச்சிடுதல் எனக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அச்சிடுபவர்' என்னும் சொல்லமைப்பு அங்ஙனமே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஆ) தேர்தல் துண்டு வெளியீடு அல்லது சுவரொட்டி' என்பது ஒரு வேட்பாளரின் அல்லது வேட்பாளர்கள் குழுவின் தேர்தலை வளர்ப்பாடு செய்யும் அல்லது ஊறுபடுத்தும் நோக்கத்திற்காக வழங்கப்படும் அச்சிட்ட துண்டுவெளியீடு, கையறிக்கை அல்லது வேறு ஆவணம் எதுவும் அல்லது ஒரு தேர்தலைச் சுட்டிக்குறிப்பிடும் விளம்பரத்தட்டி அல்லது சுவரொட்டி எதுவும் என்று பொருள்படும்.

4. உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (3)இன் வகைமுறைகளில் எதையும் மீறுகிற ஆள் எவரும். ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரை போகலாம். பணத்தண்டம். அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

31. அலுவலர்கள் முதலியோர் தேர்தல்களில் வேட்பாளர்களுக்காகச் செயலாற்றாதிருத்தல் அல்லது செல்வாக்கைப் பயன்படுத்தாதிருத்தல் : 1.ஒரு தேர்தலில் ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் அல்லது ஒரு தலைமை அலுவலர் அல்லது வாக்குப்பதிவு அலுவலர் அல்லது தேர்தல் தொடர்பாக கடமையாற்றுவதில் தேர்தல் நடத்தும் அலுவலரால் அல்லது தலைமை அலுவலரால் அமர்த்தப்பட்ட அலுவலர் அல்லது எழுத்தராக இருக்கும் ஆள் எவரும் தேர்தலை நடத்துகையில் அல்லது மேலாண்மை செய்கையில் ஒரு வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் வெற்றி வாய்ப்புகளை மிகுவிப்பதற்காக வாக்களிப்பதைத் தவிர வேறு செயல் எதையும் செய்தல் கூடாது.

2. மேற்கூறிய அத்தகைய ஆள் எவரும், காவல்படை உறுப்பினர் எவரும் -

(அ) ஒரு தேர்தலில் ஆள் எவரையும் அவரது வாக்கை அளிக்குமாறு வேண்டிக்கொள்ளுவதற்கு, அல்லது

(ஆ) ஒரு தேர்தலில் ஆள் எவரையும் அவரது வாக்கை அளிப்பதிலிருந்து அறிவுறுத்தித் தடுப்பதற்கு, அல்லது

(இ) ஒரு தேர்தலில் ஆள் எவரையும் எந்த முறையிலும் வாக்களிக்கச் செல்வாக்கைச் செலுத்துவதற்கு

அருமுயற்சி செய்தல் ஆகாது.

3. உட்பிரிவு (1) மற்றும் உட்பிரிவு (2) இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும் ஆறுமாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

4. உட்பிரிவு (3) இன்கீழ்த் தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்வதற்குரியது ஆகும்.

32. வாக்குச் சாவடியில் அல்லது அருகில் ஆதரவதிரட்டுதலுக்குத் தடை :

1. வாக்குச்சாவடி எதிலும் ஒரு வாக்குப்பதிவு நடத்தப்படுகிற தேதி அல்லது தேதிகள் அன்று, ஆள் எவரும் வாக்குச்சாவடிக்குள், அல்லது வாக்குச்சாவடி யிலிருந்து நூறு மீட்டர் தொலைவுக்குள் உள்ள பொது அல்லது தனி இடம் எதிலும் பின்வரும் செயல்களில் எதையும் செய்தல் கூடாது; அவையாவன:

(அ) வாக்குகளுக்காக ஆதரவுதிரட்டுதல், அல்லது

(ஆ) வாக்காளர் எவருடைய வாக்கினை வேண்டிப் பெறுதல்; அல்லது

(இ) குறிப்பிட்ட வேட்பாளர் எவருக்கும் வாக்களிக்காதிருக்க வாக்காளர் எவரையும் கேட்டுக்கொள்ளுதல்; அல்லது

(ஈ) தேர்தலில் வாக்களிக்காதிருக்க வாக்காளர் எவரையும் கேட்டுக்கொள்ளுதல்; அல்லது

(உ) தேர்தல் தொடர்பாக (ஓர் அதிகார முறை அறிவிப்பு அல்லாத வேறு) அறிவிப்பு அல்லது சின்னம் எதையும் காட்சிக்கு வைத்தல்.

2. உட்பிரிவு (1) இன் வகைமுறைகளை மீறுகிற ஆள் எவரும் இருநூற்று ஐம்பது ரூபாய் வரை போகலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

3. இப்பிரிவின் கீழ்த்தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்வதற்குரியது ஆகும்.

33. வாக்குச் சாவடியில் அல்லது அதற்கருகில் ஒழுங்கற்ற நடத்தைக்கான தண்டம் : 1. வாக்குச்சாவடி எதிலும் ஒரு வாக்குப்பதிவு நடத்தப்படும் தேதி அல்லது தேதிகள் அன்று, ஆள் எவரும், வாக்குச்சாவடிக்கு வாக்களிக்க வருகைதரும் ஆள் எவருக்கும் தொல்லை விளைவிக்கிற வகையில் அல்லது வாக்குச்சாவடியில் கடமையாற்றும் அலுவலர்கள், வேறு ஆட்கள் ஆகியோரின் பணியில் தலையிடுகிற வகையில்,

(அ) வாக்குச்சாவடிக்குள் அல்லது அதன் வாயிலில், அல்லது அதன் அக்கம்பக்கத்திலுள்ள பொது அல்லது தனி இடம் எதிலும், ஒரு குரல் பெருக்கி அல்லது ஒலிபெருக்கியைப் போன்று மனிதக் குரலைப் பெருக்கிக்காட்டும் அல்லது மீண்டொலிக்கச்செய்யும் கருவி எதையும் பயன்படுத்துதல் அல்லது செயற்படுத்துதல் கூடாது, அல்லது

(ஆ) வாக்குச்சாவடிக்குள் அல்லது அதன் வாயிலில், அல்லது அதன் அக்கம்பக்கத்திலுள்ள பொது அல்லது தனி இடம் எதிலும், ஒரு ஒழுங்கற்ற முறையில் கூச்சலிடுதல் அல்லது பிறவாறு செயலாற்றுதல் கூடாது. அல்லது

2. உட்பிரிவு (1)இன் வகைமுறைகளை மீறுகிற அல்லது மீறுவதற்கு விருப்பத்துடன் உதவுகிற அல்லது உடந்தையாயிருக்கிற ஆள் எவரும், மூன்று மாதங்கள்வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

3. இப்பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றச்செயல் ஒன்றை ஆள் எவரும் செய்துகொண்டிருக்கிறார் அல்லது செய்திருக்கிறார் என்று நம்புவதற்குரிய காரணத்தை, ஒரு வாக்குச்சாவடியின் தலைமை அலுவலர் கொண்டிருக்கிறார் என்றால், அத்தகைய ஆளைச் சிறை கைது) செய்யுமாறு காவல் அலுவலர் எவருக்கும் அவர் கட்டளையிடலாம். அதன்மேல் அக்காவல் அலுவலர் அவரைச் சிறை (கைது) செய்யவேண்டும்

4. உட்பிரிவு (1) இன் வகை முறைகளின் மீறுகை எதையும் தடுக்கும் பொருட்டு, தகவான (நியாயமான) முறையில் தேவைப்படலாகும் அத்தகைய

செயற்படிகளைக் காவல் அலுவலர் எவரும் எடுக்கலாம் மற்றும் அத்தகைய வல்லாற்றலைப் (force) பயன்படுத்தலாம்

34. வாக்குச் சாவடியில் நடத்தைக் கேட்டுக்கான தண்டம் : 1. வாக்குச்சாவடி எதிலும் வாக்குப் பதிவுக்காகக் குறித்திட்ட நேரத்தின் போது, தாமே தவறாக நடந்து கொள்கிற , அல்லது தலைமை அலுவலரின் சட்டமுறையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுக்கிற ஆள் எவரும், தலைமை அலுவலரால், அல்லது கடமையாற்றும் காவல் அலுவலர் எவராலும் அல்லது அத்தகைய தலைமை அலுவலரால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஆள் எவராலும் வாக்குச் சாவடியிலிருந்து அகற்றப்படலாம்.

2. உட்பிரிவு (1) ஆல் அளிக்கப்பட்ட அதிகாரங்கள், ஒரு வாக்குச்சாவடியில் வாக்களிக்கும் வாய்ப்பைப் பெற்றிருப்பதிலிருந்து அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்கப் பிறவாறு உரிமைப்பாடு உடைய வாக்காளர் எவரையும் தடுக்கும் வகையில், செலுத்தப்படுதல் ஆகாது.

3. ஒரு வாக்குச்சாவடியிலிருந்து அவ்வாறு அகற்றப்பட்டிருக்கிற ஆள் எவரும் தலைமை அலுவலரின் இசைவளிப்பின்றி வாக்குச்சாவடிக்குள் மீண்டும் நுழைகிறார் என்றால், அவர் மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்,

4. உட்பிரிவு (3) இன் கீழ்த்தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்வதற்குரியது ஆகும்.

35. தேர்தல்களில் ஊர்திக்கலங்களைச் சட்டமுரணாக வாடகைக் கமர்த்துதல் அல்லது முயன்று பெறுதலுக்கான தண்டம் : ஒரு தேர்தலில் அல்லது அது தொடர்பாக 25ஆம் பிரிவின் (6) ஆம் பிரிவுக்கூறில் குறித்துரைத்தவாறு அத்தகைய ஊழல் பழக்கமுறைக் குற்றவாளியாக ஆள் எவரும் இருக்கிறார் என்றால், அவர் ஆயிரம் ரூபாய் வரை போகலாகும் ஒரு பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

36(1). தேர்தல்கள் தொடர்பான அலுவல் முறைக் கடமையின் மீறல்கள்: 1.இப்பிரிவு பொருந்துகிற ஆள் எவரும் தகவான காரணமின்றித் தமது அலுவல்முறைக் கடமையின் மீறலாகச் செயல் அல்லது விடுகை எதனையும் செய்த குற்றவாளியாக இருக்கிறார் என்றால், அவர் ஐந்நூறு

ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(2) உட்பிரிவு(1) இன்கீழ்த் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை கைது) செய்தற்குரியது ஆகும்.

(3) மேற்கூறியவாறு அத்தகைய செய்கை அல்லது விடுகை எதனையும் பொறுத்தமட்டில், அத்தகைய ஆள் எவருக்கும் எதிராக இழப்பீட்டுக்கான உரிமை வழக்கு எதுவும் அல்லது வேறு சட்டமுறை நடவடிக்கைகள் எவையும் கொணரப்படுதல் ஆகாது.

(4) மாவட்டத் தேர்தல் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் உதவி அலுவலர்கள் தலைமை அலுவலர்கள், வாக்குப் பதிவு அலுவலர்கள், ஒரு தேர்தலில் வேட்புமனுக்களைப் பெற்றுக்கொள்ளல் அல்லது வேட்புநிலையைத் திரும்பப்பெறுதல் அல்லது வாக்குகளைப் பதிவுசெய்தல் அல்லது எண்ணுதல் தொடர்பாகக் கடமை எதையும் ஆற்றுவதற்காகப் பணியமர்த்தப்பட்ட வேறு ஆட்கள் ஆகியோர் இந்தப் பிரிவு பொருந்துகிற ஆட்கள் ஆவர். மேலும் அலுவல் முறைக்கடமை" என்னும் சொல்லமைப்பு இப்பிரிவின் நோக்கங்களுக்காக அங்ஙனமே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்; ஆனால், இச்சட்டத்தின் வழியாகவோ வாயிலாகவோ அல்லாமல் பிறவாறாகச் சுமத்தப்பட்ட கடமைகளை உள்ளடக்குதல் ஆகாது.

37. தேர்தல் முகவர், வாக்குப்திவுமுகவர் அல்லது வாக்கெண்ணும் முகவராகச் செயலாற்றும் நகராட்சி மற்றும் அரசு பணியாளர்கள் முதலியோர்களுக்கான தண்டம் : நகராட்சி மற்றும் அரசு பணியிலுள்ள ஆள் எவரும் ஒரு தேர்தலில் ஒரு தேர்தல் முகவர் அல்லது ஒரு வாக்குப்பதிவு முகவர் அல்லது ஒரு வாக்கெண்ணும் முகவராகச் செயலாற்றுகிறார் என்றால், அவர் மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் வதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

38. வாக்குச்சாவடியிலிருந்து வாக்குச்சீட்டுகளை அகற்றுதல் ஒரு குற்றச்செயல் ஆதல் - (1) தேர்தல் எதிலும் ஒரு வாக்குச்சாவடியிலிருந்து ஒரு வாக்குச்சீட்டை அதிகாரமளிப்பு இல்லாமல் வெளியே எடுத்துச் செல்கிற அல்லது எடுத்துச்செல்ல முயல்கிற அல்லது அத்தகைய செயல் எதையும் செய்வதில் உதவுகிற அல்லது உடந்தையாயிருக்கிற ஆள் எவரும், ஓராண்டு

வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது ஐந்நூறு ரூபாய் வரை போகலாகும் ஒரு பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

(2) ஒரு வாக்குச்சாவடியின் தலைமை அலுவலர், (1) ஆம் உட்பிரிவின் கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயலை ஆள் எவரும் செய்துகொண்டிருக்கிறார் அல்லது செய்திருக்கிறார் என்று நம்புவதற்கான காரணம் பெற்றிருக்கிறார் என்றால், அத்தகைய அலுவலர், வாக்குச்சாவடியை விட்டு அத்தகைய ஆள் செல்லும் முன்பு கைது செய்யலாம். அல்லது அத்தகைய ஆளைக் கைது செய்ய ஒரு காவல் அலுவலருக்குக் கட்டளையிடலாம். மற்றும் அத்தகைய ஆளைச் சோதனையிடலாம் அல்லது ஒரு காவல் அலுவலரால் சோதனையிடப்படுமாறு செய்விக்கலாம்

ஆனால் ஒரு பெண் சோதனையிடப்படுமாறு செய்விப்பது தேவைப்படுகிறபோது, அச்சோதனை பெண்ணின் மாண்பினை நன்கு கவனத்தில் கொண்டு மற்றொரு பெண்ணால் செய்யப்படவேண்டும்.

(3) சோதனையில் வாக்குச்சீட்டு எதுவும் காணப்பட்டுக் கைது செய்யப்பட்ட ஆள் தலைமை அலுவலரால் ஒரு காவலரிடம் பாதுகாப்பான காவல் வைப்புக்காக ஒப்படைக்கப்படவேண்டும், அல்லது அச்சோதனை ஒரு காவல் அலுவலரால் செய்யப்பட்டிருக்கிறபோது, அத்தகைய அலுவலரால் பாதுகாப்பான காவல் வைப்பில் வைக்கப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (1) இன்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்தற்குரியது ஆகும்.

39. பிற குற்றச்செயலும் அதற்கான தண்டனைகளும் -

(1) ஆள் ஒருவர், தேர்தலில், -

(அ) வேட்புமனு எதையும் மோசடியாக உருக்குலைக்கிறார். அல்லது மோசடியாக அழிக்கிறார், அல்லது

(ஆ) தேர்தல் நடத்தும் அலுவலரின் அதிகாரத்தின் வாயிலாகவோ கீழாகவோ ஒட்டப்பட்ட பட்டியல், அறிவிப்பு அல்லது வேறு ஆவணம் எதையும் மோசடியாக உருக்குலைக்கிறார், அழிக்கிறார், அல்லது அகற்றுகிறார்.

அல்லது

(இ) ஏதேனும் வாக்குச் சீட்டு, அல்லது வாக்குச்சீட்டு எதன் மீதமுள்ள அலுவல் முறைக் குறி அல்லது ஏதேனும் அடையாளம் பற்றிய விளம்புகை அல்லது அஞ்சல் வாக்குச்சீட்டு மூலம் வாக்களிப்பது தொடர்பாகப் பயன்படுத்தப்பட்ட அலுவல்முறை உறையை மோசடியாக உருக்குலைக்கிறார் அல்லது மோசடியாக அழிக்கிறார், அல்லது

(ஈ) உரிய அதிகாரவுரிமை இன்றி, வாக்குச் சீட்டு எதையும் ஆள் எவருக்கும் வழங்குகிறார். அல்லது வாக்குச்சீட்டு எதையும் ஆள் எவரிடமிருந்தும் பெறுகிறார் அல்லது வாக்குச்சீட்டு எதையும் உடைமையில் கொண்டிருக்கிறார்.
அல்லது

(உ) சட்டத்தினால் உள்ளே போடுவதற்கு அவர் அதிகாரமளிக்கப்பட்ட வாக்குச்சீட்டு அல்லாமல் வேறு எதையும் வாக்குப்பெட்டி எதற்குள்ளும் மோசடியாகப் போடுகிறார், அல்லது

(ஊ) உரிய அதிகாரவுரிமை இன்றி, தேர்தல் நோக்கத்திற்காக அப்போது பயன்படுத்தப்படுகிற வாக்குப் பெட்டி அல்லது வாக்குச் சீட்டு எதையும் அழிக்கிறார். எடுக்கிறார். திறக்கிறார். அல்லது பிறவாறு குறுக்கிடுகிறார்
அயலது

(எ) மோசடியாக, அல்லது நேர்வுக்கேற்ப, உரிய அதிகாரவுரிமை இன்றி, முன்சென்ற செயல்களில் எதையும் செய்ய முயல்கிறார். அல்லது அத்தகைய செயல்கள் எவற்றையும் செய்வதற்கு வேண்டுமென்றே உதவுகிறார் அல்லது உடந்தையாகிறார்.

என்றால், ஒரு தேர்தல் குற்றச்செயல் புரிந்த குற்றவாளியாக ஆவார்.

(2) இப் பிரிவின் கீழ் ஒரு தேர்தல் குற்றச்செயல் புரிந்த குற்றவாளியாகிய ஆள் எவரும் -

(அ) அவர் ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர் அல்லது தேர்தல் நடத்தும் உதவி அலுவலர் அல்லது ஒரு வாக்குச்சாவடியில் தலைமை அலுவலர் அல்லது தேர்தல் தொடர்பாக அலுவல் முறைக் கடமையில்

ஈடுபட்டுள்ள வேறு அலுவலர் அல்லது எழுத்தர் ஆக இருக்கிறார் என்றால், இரண்டாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(ஆ) அவர் வேறு எந்த ஆளாகவும் இருக்கிறார் என்றால், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனை, அல்லது பணத்தண்டம் அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவர் ஆவார்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆள் ஒருவரின் கடமை, வாக்கு எண்ணிக்கை உள்ளடங்க ஒரு தேர்தலை அல்லது தேர்தலின் பகுதியை நடத்துவதில் பங்கு பெறுதல் அல்லது அத்தகைய தேர்தல் தொடர்பாகத் தேர்தல் முடிந்த பின்பு பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுகளுக்கும் பிற ஆவணங்களுக்கும் பொறுப்பாக இருத்தல் என்பதாகக் இருக்கிறது என்றால், அவர் அலுவல் முறைக் கடமையில் இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால் அலுவல் முறைக் கடமை" என்னும் சொல்லமைப்பு இச்சட்டத்தின் வாயிலாகவோ, கீழாகவோ அல்லாமல் பிறவாறாகச் சுமத்தப்பட்ட கடமை எதனையும் உள்ளடக்குதல் ஆகாது.

(4) உட்பிரிவு (2) இன்கீழ் தண்டிக்கத்தக்க ஒரு குற்றச்செயல் சிறை (கைது) செய்தற்குரியது ஆகும்,

40. குறித்த சில தேர்தல் குற்றச்செயல்கள் பொறுத்துச் சட்ட நடவடிக்கை தொடர்தல்: அரசு ஆணைமூலம் அல்லது அதனிடமிருந்து பெறும் அதிகாவுரிமையின் கீழ், எழுத்துவழியான ஒரு முறையீட்டின் மேல் அல்லாமல், நீதிமன்றம் எதுவும், 31ஆம் பிரிவின் கீழ், அல்லது 36ஆம் பிரிவின் கீழ், அல்லது 39ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) பிரிவிக்கூறின் கீழ்த் தண்டிக்கத்தக்கக் குற்றச்செயல் எதனையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளல் ஆகாது.

## பின்னிணைப்பு 7.2

## 2000ஆம் ஆண்டு புதுச்சேரி திறந்த வெளி இடங்கள் (அழகுக்கேட்டினைத் தடுத்தல்) சட்டம்

(சட்ட. எண் 6/2000)

[20-12-2000]

**மறுப்புக்கிடமான அல்லது அதிகாரமளிக்கப்பெறாத விளம்பரங்கள் காரணமாகப் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் பொதுமக்கள் பார்வைக்கான திறந்தவெளி இடங்களில் அழகு கெடுதலைத் தடுப்பதற்கான**

## ஒரு
## சட்டம்

மறுப்புக்கிடமான அல்லது அதிகாரமளிக்கப்பெறாத விளம்பரங்களின் மூலம் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் பொதுமக்கள் பார்வைக்கு திறந்தவெளி இடங்களில் அழகு கெடுதலைத் தடுப்பது உகந்ததாக இருக்கிறபடியால்,

இந்தியக் குடியரசின் ஐம்பத்தோராவது ஆண்டில் புதுச்சேரி சட்டப்பேரைவயால் கீழ்க்கண்டவாறு சட்டமியற்றப்படுவதாகுக :-

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.- (1) இச்சட்டம் 2000ஆம் ஆண்டு புதுச்சேரி திறந்தவெளி இடங்கள் (அழகுக்கேட்டினைத் தடுத்தல்) சட்டம், என வழங்கப்பெறும்.

(2) இது, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது உடனடியாகச் செயலாற்றலுக்கு வரும்.

2. பொருள் வரையறைகள்.- இச்சட்டத்தில் தறுவாய் பிறவாறாக வேண்டுறுத்துகிறது என்றாலன்றி.--

(அ) "விளம்பரம் என்பது, ஏதேனும் உருவடிவம் அல்லது எவையேனும் சொற்கள், அடையாளக்குறிகள் அல்லது கண்ணுக்குப் புலனாகும்

உருவமைப்புகள் அடங்கிய ஒரு துண்டு அறிவிப்பு, அறிவிப்பு, ஆவணம், தாள் அல்லது வேறு பொருளை உள்ளடக்கும்.

(ஆ) "உருவழித்தல்" என்பது, அழகிய தோற்றத்தைப் பழுதுறச்செய்தல் அல்லது குறுக்கிட்டுக் கெடுத்தல், வேறு எந்த வகையேலுனும் சேதப்படுத்துதல் உருவைகுலைத்தல் பாழ்படுத்துதல் அல்லது ஊறுபடுத்துதலை உள்ளடக்கும். மேலும் “ உரு வழி” என்ற சொல்லும் அங்ஙனமே பொருள் கொள்ளப்பட வேண்டும்;

(இ) "அரசு " என்பது, இந்திய அரசமைப்பின் 239ஆம் உறுப்பின்கீழ் குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்பட்ட புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் ஆட்சியாளர் எனப் பொருள்படும் ;

(ஈ) மறுப்புக்கிடமான விளம்பரம் என்பது. பெரும்பாலும் -

(i) கொலை, நாசவேலை அல்லது வன்முறை உள்ளடக்கிய ஒரு குற்றச்செயலைச் செய்யுமாறு ஓர் ஆளைத் தூண்டுகிற; அல்லது

(ii) ஒன்றியத்தின் ஆயுதப்படை அல்லது காவல்படையின் உறுப்பினர் எவரையும் அவருடைய பற்றுறுதி அல்லது கடமையிலிருந்து வழுவும்படித் தூண்டுகிற அல்லது அத்தகைய படை எதிலும் பணியாற்ற ஆள் தெரிவு செய்தலை ஊறுபடுத்துகிற அல்லது எதேனும் அத்தகைய படையின் ஒழுங்குக் கட்டுப்பாட்டை ஊறுபடுத்துகிற ; அல்லது

(iii) இந்தியக் குடிமக்களின் ஏதேனும் ஒரு பிரிவினரை இந்தியக் குடிமக்களின் மற்றொரு பிரிவினருக்கெதிரான வன்முறைச் செயல்களுக்குத் தூண்டுகிற, அல்லது

(iv) இந்தியக் குடிமக்களின் ஏதேனும் ஒரு வகுப்பினரின் சமயம் அல்லது சமய நம்பிக்கைகளை அவமதித்தல் அல்லது பழித்துரைத்தல் அல்லது புனிதங்கெடுத்தல் மூலம் அவ்வகுப்பினரின் சமய உணர்வுகளை வேண்டுமென்றே புண்படுத்தும் உட்கருத்துடைய; அல்லது படுமோசமான நயமில்லாமல் இருக்கிற அல்லது கீழ்த்தரமாக அல்லது அருவருப்பாக இருக்கிற அல்லது அச்சுறுத்திப் பணம் பறிக்கும் உட்கருத்துடைய ஒரு விளம்பரம் எனப்பொருள்படும்.

விளக்கம் :--ஒரு விளம்பரம்.-

(1) அரசின் ஏதேனுமொரு சட்டம் அல்லது ஏதேனுமொரு கொள்கை அல்லது நிருவாகச் செயல் பற்றி, சட்ட முறையான வழிவகையினால் அதனுடைய மாற்றுகை அல்லது குறைதீர்வு பெறும் நோக்கத்தோடு. கண்டனம் அல்லது குறைகூறுவதை வெளிப்படையாகத் தெரிவிக்கிற,

(2). சமூக அல்லது சமயப் பழக்கங்கள் எவற்றையும் தீய உள்நோக்கம் இல்லாமலும், சமூக அல்லது சமயச்சீரமைப்பு அல்லது சமூக நீதியைப் பேணி வளர்க்கும் நேர்மையான நோக்கத்துடன் குறை கூறுகிற.

சொற்கள் அல்லது அடையாளக்குறிகள் அல்லது கண்ணுக்குப் புலனாகும் உருவமைப்புகள் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றன என்ற காரணத்தால் மட்டுமே மறுப்புக்கிடமானது எனக் கொள்ளப்படக்கூடாது;

(உ) "பொதுமக்கள் பார்வைக்கான இடம் என்பது, ஏதேனுமொரு பொது இடத்தில் அல்லது அதன் வழிநெடுகிலும் ஓர் ஆளின் கண்ணுக்குப் புலப்படத்தக்க ஏதேனுமொரு தனி இடம் அல்லது கட்டிடம், நினைவுச்சின்னம், சிலை, கம்பம், சுவர், வேலி, மரம் அல்லது பிறபொருள் அல்லது கருவியை உள்ளடக்கும்.

(ஊ) “பொது இடம்" என்பது, (நேர்வழியாக இருப்பினும் அல்லது இல்லையென்றாலும் சாலை, தெரு அல்லது வழி மற்றும் ஓர் இறங்குமிடம் உள்ளடங்கலாக) எந்த இடத்திற்குப் பொதுமக்கள் எளிதாகப் போய்வரும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறார்களோ அல்லது விரும்பி அணுகும் உரிமை கொண்டிருக்கிறார்களோ அல்லது அதை அவர்கள் கடந்துசெல்ல உரிமை கொண்டிருக்கிறார்களோ அந்த இடம் எனப் பொருள்படும்.

3. ஆள் எவரும் பொதுமக்கள் பார்வைக்கான திறந்தவெளி இடம் எதிலும் மறுப்புக்கிடமான விளம்பரம் முதலியவற்றை ஒட்டவோ எழுதிவைக்கவோ காட்சிக்கு வைக்கவோ கூடாது.

இச்சட்டத்தின் தொடக்கத்தன்றும் அதுமுதற் கொண்டும் ஆள் எவரும் பொதுமக்கள் பார்வைக்கான திறந்தவெளி இடம் எதிலும்,

(i) ஏதேனும் மறுப்புக்கிடமான விளம்பரத்தை, அல்லது

(ii) மேற்படி இடம் அமைந்துள்ள சொத்தின் சொந்தக்காரர் அல்லது கையுடைமைக்காரர் அல்லது அதனை மேலாண்மையில் கொண்டிருப்பவரின் எழுத்துவடிவிலான இசைவு இன்றி ஏதேனும் விளம்பரத்தை, ஒட்டவோ, எழுதவோ அல்லது காட்சிக்கு வைக்கவோ கூடாது.

4. பொதுமக்களின் பார்வைக்கு திறந்துவிடப்பட்ட எந்த இடத்தினை ஆள் எவரும் உருக்குலைத்தல் ஆகாதோ அந்த இடம் உள்ள பரப்பிடத்தை அரசு அறிவிக்கை மூலம் குறித்துரைத்தல்.- இச்சட்டத்தில் அல்லது அப்போதைக்குச் செயலாற்றலில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் உருக்குலைத்தலைத் தடுக்கும் நோக்கத்திற்காக, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை மூலம் அத்தகைய அறிவிக்கையில் குறித்துரைக்கப் படலாகிறவாறு பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்துவிடப்பட்ட இடம் எதிலுமுள்ள சொத்தின் சொந்தக்காரர் அல்லது கையுடைமைக்காரரின் பெயரையும் முகவரியையும் சுட்டிக்காட்டும் நோக்கத்திற்காகவும் மேற்படி அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலா கிறவாறான பிற நோக்கங்களுக்காகவும் தவிர ஆள் எவரும் எழுதுவதன் மூலம், எழுதும் மை, சாக்குக்கட்டி, வண்ணம் அல்லது வேறோரு பொருளின் மூலம் அடையாளமிடுவதன் மூலம் அவ்விடத்தின் உருவைக்குலைத்தல் கூடாது என்று கட்டளையிடுவது தேவையாகிறது அல்லது உகந்ததாகிறது என அரசு மனநிறைவு கொள்கிறது என்றால், அது அவ்வாறு செய்யலாம்.

5. மறுப்புக்கிடமான விளம்பரங்களின் மூலம் உருக்குலைத்தலுக்கான தண்டம்.-- பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்பட்ட இடம் எதிலும் மறுப்புக்கிடமான விளம்பரத்தை ஒட்டுகிற அல்லது எழுதிவைக்கிற அல்லது காட்சிக்கு வைக்கிற எவராயினும், ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கு இரண்டிலொரு வகைச் சிறைத்தண்டனையோ அல்லது ரூபாய் ஓராயிரம் வரை நீடிக்கலாகும் பணத்தண்டனையோ அல்லது இவ்விரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவார்.

6. அதிகாரமளிக்கப்பெறாத விளம்பரங்கள் மூலம் உருக்குலைத்தலுக்கான தண்டம்.- எவரேனும் பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்பட்ட இடம் எதிலும் அந்த இடம் அமைந்துள்ள சொத்தின் சொந்தக்காரர் அல்லது கையுடைமைக்காரர் அல்லது அதனை மேலாண்மையில் கொண்டிருப்பவரின் எழுத்து வடிவிலான இசைவின்றி ஏதேனும் விளம்பரத்தை ஒட்டுகிற

அல்லது எழுதிவைக்கிற அல்லது காட்சிக்கு வைக்கிற எவராயினும், மூன்று மாதம் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கு இரண்டிலொரு வகைச் சிறைத்தண்டனையோ அல்லது சூடாய் இருநூறு வரை நீடிக்கலாகும் பணத்தண்டனையோ அல்லது இவ்விரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவார்.

7. 4ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையின் மீறுகைக்கான தண்டம்.-- எவரேனும் 4ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கையின் மீறுகையாக, பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்பட்ட இடம் எதனையும் உருக்குலைக்கிற எவராயினும், ஆறு மாதம் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கு சிறைத்தண்டனையோ அல்லது ரூபாய் ஓராயிரம் வரை நீடிக்கலாகும் பணத்தண்டனையோ அல்லது இவ்விரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுவார்.

8. குற்ற உடந்தையாருக்குத் தண்டனை. 3ஆம் பிரிவு, 4ஆம் பிரிவு அல்லது 5ஆம் பிரிவின் கீழ் எந்த முறையிலேனும் ஏதேனும் ஒரு குற்றச்செயலைச் செய்வதற்கு எவ்வகையிலும் தூண்டுகிற, முயன்று பெறுகிற. ஆலோசனை கூறுகிற. உதவுகிற, உடந்தையாயிருக்கிற அல்லது அதற்கு துணையாகிற எவராயினும் அவருக்கு அக்குற்றச்செயலுக்காக வகைசெய்யப்பட்டுள்ள தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுவார்.

9. நேர்வுகளில் மெய்ப்பிக்கும் சுமை.- ஓர் ஆள், 5ஆம் பிரிவின்கீழ் ஒரு குற்றச் செயலைச் செய்வதற்காக வழக்கு தொடரப்பெற்றிருக்கிறார் என்ற நிலையில், அப்பிரிவில் சுட்டப்பட்ட எழுத்துபடிவிலான இசைவினை அவர் பெற்றிருக்கிறார் என மெய்ப்பிக்கும் சுமை அவரைச் சார்ந்தது ஆகும்.

10. நிறுமங்களின் குற்றச்செயல்கள்.- (1) ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருக்கிறவிடத்து, குற்றச்செயல் செய்யப்பட்ட சமயத்தில் அந்நிறுமத்தைப் பொறுப்பில் கொண்டிருந்த மற்றும் அந்நிறுமத்தின் அலுவல் நடத்துகைக்குப் பொறுப்பாயிருந்த ஆள் ஒவ்வொருவரும், அக்குற்றச் செயலைச் செய்த குற்றவாளியாகக் கருதப்பட்டு, எதிரான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு அங்ஙனமே தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார். ஆனால், அத்தகையவர் எவரும் அக்குற்றச்செயல் தமக்குத் தெரியாமலேயே செய்யப்பட்டது என்றோ அல்லது அத்தகைய குற்றச்செயல் நிகழ்வதைத் தடுக்க உரிய கடும் முயற்சி அனைத்தையும் தாம் செய்திருக்கிறார் என்றோ அவர் மெய்ப்பிக்கிறார் என்றால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அவரை எந்தத் தண்டனைக்கும் உள்ளாக்காது.

(2). (1) உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின்கீழ் ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் செய்யப்பட்டிருந்து, அந்நிறுமத்தின் இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலர் ஒருவரின் இசைவுடன் அல்லது மறைமுக ஆதரவுடன் செய்யப்பட்டிருக்கிறது அல்லது அவர்மீதான புறக்கணிப்பு எதனுடனும் சாட்டத்தக்கதாயிருக்கிறது என மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து அத்தகைய இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது வேறு அலுவலர் அக்குற்றச்செயல் செய்த குற்றவாளியாகக் கருதப்பட்டு எதிரான நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு, அங்ஙனம் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

விளக்கம் - இப்பிரிவின் நோக்கங்களுக்காக , -

(அ) "நிறுமம்' என்பது, ஆட்களின் கூட்டமைப்பு எதுவும் எனப்பொருள்படும்; மற்றும் இதில் ஒரு நிறுவகம் அல்லது வேறு தனிப்பட்டவர்கள் சங்கத்தை உள்ளடக்கும்; மேலும்

(ஆ) ஒரு நிறுவகம் தொடர்பாக இயக்குநர் என்பது, அந்த நிறுவகத்தின் ஒரு கூட்டாளி என்று பொருள்படும்.

11. சட்டத்தின் கீழான குற்றச்செயல் பிடியாணை வேண்டாதவையாக இருத்தல்.- 1973ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும். இச்சட்டத்தின்கீழ்த் ( மையச் சட்டம் 2/1974}] தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் எதுவும் மேற்படி தொகுப்புச்சட்டப் பொருளின்படி பிடியாணைவேண்டாத ஒரு குற்றச்செயல் எனக்கொள்ளப்பட வேண்டும்.

12. தண்டத் தவிர்ப்பு.- இச்சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்தில் செய்த அல்லது செய்யக் கருதப்பெற்ற எதற்காகவும், அரசு , ஏதேனும் உள்ளூர் அதிகார ஆயம் அல்லது எவரேனும் ஒருவருக்கு எதிராக உள்ள வழக்கு குற்ற நடவடிக்கைத் தொடர்பு அல்லது வேறு சட்ட நடவடிக்கை எதுவும் ஏற்புடையதாகாது.

13. எழுத்து முதலியவற்றை அழிப்பதற்கு அரசின் அதிகாரம். - (1) அரசு அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் அலுவலர், பொதுமக்கள் பார்வைக்குத் திறந்துவிடப்பட்ட இடம் எதன்மீது கட்டுப்பாடு கொண்டிருக்கும் சொந்தக்காரர் அல்லது ஆளை, அறிவிப்பு மூலம் அத்தகைய அறிவிப்பால் குறித்துரைக்கப்படலாகிறவாறான காலத்திற்குள் அத்தகைய இடத்திலிருந்து

எழுத்தினை அழிக்கும்படி, உருக்குலைவை இல்லாமல் செய்யும்படி அல்லது அடையாளத்தை அகற்றும்படி வேண்டுறுத்தலாம்.

{2} (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அறிவிப்பில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள், நேர்வுக்கேற்ப, அத்தகைய அழித்தல், இல்லாது செய்தல் அல்லது அகற்றுதல் மேற்கொள்ளப்படவில்லை என்றால் அரசு அல்லது அதிகாரமளிக்கப்பெற்ற அத்தகைய அலுவலர் அத்தகைய அழித்தல், இல்லாமல் செய்தல் அல்லது அகற்றுதலைச் செய்விக்கவேண்டும் மற்றும் நேரிட்ட செலவுகள் சொந்தக்காரர் அல்லது அத்தகைய வேறு ஆளால் செலுத்தப்பட்ட வேண்டும், மேலும் அத்தகைய செலுத்தும் தவறுகையில், அத்தகைய செலவுத்தொகைகள் அத்தகைய சொந்தக்காரர் அல்லது அத்தகைய வேறு ஆளிடமிருந்து, நிலவருவாயின் நிலுவையைப் போன்றே வசூலிக்கப்பட வேண்டும்.

14. வேறு சட்டங்கள் பாதிக்கப்பட மாட்டா.-- இச்சட்டத்தின் வகைமுறைகள், அப்போதைக்குச் செயலாற்றலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தின் வகைமுறைகளுக்குக் கூடுதலானவையாகவும் அவற்றைக் குன்றச் செய்யாதவையாகவும் இருக்கும்.

15. விதிகளைச் செய்ய அதிகாரம்.-- (1) அரசு அறிக்கை மூலம், இச்சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்கு விதிகளைச் செய்யலாம்.

(2) இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகள் மற்றும் பிறப்பிக்கப்பட்ட அறிக்கைகள் அனைத்தும். அவை இயற்றப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டப்பேரவை முன்பு வைக்கப்பட வேண்டும், மற்றும் சட்டப்பேரவை ஒரே கூட்டத்தொடரில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கூட்டத்தொடரில் உள்ளபடியே பேரவை அமலிலிருக்கும் பதினான்கு நாட்களுக்குள் திருத்தம் அல்லது நீக்கிவிடுகை என்ற வகையில் சட்டப்பேரவையால் செய்யப்படலாகும் அத்தகைய மாற்றமைவுக்கு உட்பட்டு இருக்கும்.

ஆனால், மேற்சொன்ன மாற்றமைவுகள் அல்லது நீக்கினவை எதுவும் அத்தகைய விதிகள் அல்லது அறிவிக்கைகளின் கீழ் ஏற்கெனவே செய்த மற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மையையும் பாதித்தல் ஆகாது.

ஜான் குளோது பொம்பே மரியதாசு
அரசுத் துணைச் செயலர்

# பின்னிணைப்பு 7.3

## புதுச்சேரி அரசு

## மாநிலத் தேர்தல் ஆணையம்

**எண் 11/மாதேஆ/உள்ளாட்சி தேர்தல்/212 புதுச்சேரி, 22 சூன் 2021.**

# ஆணை

**துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியவற்றை அச்சிடுதல் மீது வரையறைகள்.**

**புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் 30ஆம் பிரிவின் வேண்டுறுத்தங்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பது. அவற்றிற்கு இணங்கிநடப்பது ஆகியவற்றின் பொருட்டு, மாநிலத்தேர்தல் ஆணையம், இந்திய அரசமைப்பின் 243ZA உறுப்பு, புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் 15-அ பிரிவு ஆகியவற்றின் கீழ் அதன் அதிகாரத்தைச் செலுத்தி, இதன் மூலம் பின்வருமாறு கட்டளையிடுகிறது:**

**(1) நகராட்சி மன்றத்தின் உறுப்பினர் தலைவருக்கான தேர்தல் எதுவும் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட உடனேயே, புதுச்சேரி மற்றும் காரைக்காலின் மாவட்டக் கூடுதல் நீதி நடுவர்களும் மாஹே . ஏனாமிலுள்ள உட்கோட்ட நீதி நடுவர்களும், அத்தகைய தேர்தலை அறிவித்த மூன்று நாட்களுக்குள், அவர்களுடைய மாவட்டங்களிலுள்ள அனைத்து அச்சகங்களுக்கும் -**

**(அ) மேலேசொல்லப்பட்ட 30ஆம் பிரிவின் வேண்டுறுத்தங்களை அவர்களுக்குச் சுட்டிக்காட்டியும், அவர்களால் அச்சிடப்படும் தேர்தல் துண்டுவெளியீடுகள் அல்லது சுவரொட்டிகள் அல்லது அத்தகைய வேறு வெளியீடுகளை அச்சிடுபவர் மற்றும் வெளியிடுபவரின் பெயரையும் முகவரியையும் அச்சு வரியில் தெளிவாகச் சுட்டிக்காட்டும்படி அவர்களுக்குக் குறித்த வகையில் அறிவுறுத்தியும்,**

**(ஆ) (அவ்வாறு அச்சிடப்பட்ட பொருட்கள் ஒவ்வொன்றின் மூன்று மிகைப்படியங்களுடன் சேர்த்து) அச்சிடப்பட்ட பொருட்களின் படியங்களையும், 30(2) பிரிவின் கீழ் வேண்டுறுத்தப்பட்டவாறு**

வெளியீட்டாளரிடமிருந்து பெற்ற விளம்புகையையும், அச்சிடப்பட்ட மூன்று நாட்களுக்குள் அனுப்பிவைக்குமாறு அச்சகங்களைக் கேட்டுக் கொண்டும்,

(இ) 30-அ பிரிவின் வகைமுறைகள் மற்றும் மாநிலத்தேர்தல் ஆணையத்தின் மேற்சொன்ன கட்டளைகளின் மீறுகை எதுவும் மிகவும் கடுமையாகக் கருதப்பட்டு, பொருத்தமான நேர்வுகளில் அச்சகத்தின் உரிமத்தை முறித்தம் (ரத்து) செய்தல் உட்பட கடும் நடவடிக்கை தொடர்புற்ற சட்டத்தின் கீழ் எடுக்கப்படும் என்பதைத் தெளிவான வாசகங்களில் அவர்கள் உளங்கொள்ளுமாறும்,

எழுதுதல் வேண்டும்.

(2) தேர்தல் துண்டு வெளியீடுகள் அல்லது சுவரொட்டிகள் முதலியவற்றை அச்சிடும் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு, இதனுடனுள்ள பிற்சேர்க்கை - அ வில் மாநிலத்தேர்தல் ஆணையத்தினால் வகுத்துரைக்கப் பட்ட படிவ முறையில் 30(2) பிரிவுக்குரிய வாசகங்களில் ஒரு விளம்புகையை வெளியீட்டாளரிடமிருந்து அச்சிடுபவர் பெறுதல் வேண்டும். இந்த விளம்புகை வெளியீட்டாளரால் உரியவாறு கையொப்பமிடப்பட்டும். வெளியீட்டாளரை நேர்முகமாக அறிந்திருக்கிற இரண்டு ஆட்களால் சான்றொப்பமிடப்பட்டும் இருத்தல் வேண்டும். புதுச்சேரி, காரைக்கால் மாவட்டக் கூடுதல் நீதி நடுவர்களுக்கும், மாஹே, ஏனாம் உட்கோட்ட நீதிநடுவர்களுக்கு அது அனுப்பப்படுகிறபோது, அச்சிடுபவரால் அது உண்மையென உறுதியுரைக்கப் படுதலும் வேண்டும்.

(3) மேலே கட்டளையிட்டவாறு, வெளியீட்டாளரின் விளம்புகையுடன் சேர்த்து அச்சிட்ட வெளியீடுகளின் (4) படியங்களை, அவற்றை வெளியிட்ட மூன்று நாள்களுக்குள் அச்சிடுபவர் அளித்தல் வேண்டும். அத்தகைய அச்சிட்ட வெளியீட்டுடனும் விளம்புகையுடனும் சேர்த்து, இதனுடனுள்ள பிற்சேர்க்கை - ஆவில், மாநிலத் தேர்தல் ஆணையத்தால் வகுத்துரைக்கப்பட்ட படிவமுறையில், அச்சிட்ட ஆவணப் படியங்களின் எண்ணிக்கை, அத்தகைய அச்சிடும் வேலைக்காகச் சார்த்தப்பட்ட விலை ஆகியவை பற்றிய தகவலையும் அச்சிடுடவர் அளித்தல் வேண்டும்.

(4) ஓர் அச்சகத்திலிருந்து தேர்தல் துண்டுவெளியீடுகள் அல்லது சுவரொட்டிகள் முதலான எவற்றையும் ஓர் உட்கோட்ட நீதிநடுவர் பெறுகின்ற உடனேயே, சட்டத்தின் வேண்டுறுத்தங்களுடனும் மாநிலத் தேர்தல்

ஆணையத்தின் மேற்சொன்ன கட்டளைகளுடனும், வெளியீட்டாளரும் அச்சிடுபவரும் இணங்கி நடந்திருக்கின்றார்களா என்பதை அவர் ஆராய்தல் வேண்டும். அத்தகைய ஆவணம் தொடர்பாகச் சட்டத்தின் வேண்டுறுத்தல்கள் இணங்கி நடக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைச் சரிபார்க்க வேட்பாளர்களையும் அக்கறையுள்ள வேறு ஆட்களையும் இயல்விக்கின்ற வகையிலும், சட்டத்தின் மேற்சொன்ன வேண்டுறுத்தங்கள் மீறப்பட்டிருப்பதைப் பொறுத்தமட்டில், பிற தேர்தல் துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலிய தொடர்புடைய அதிகாரிகளின் கவனத்துக்குக் கொணர அவர்களை இயல்விக்கின்ற வகையிலும் நீதி நடுவர் தமது அலுவலகத்திலுள்ள ஏதோ ஒரு எடுப்பான இடத்தில் அதன் படியம் ஒன்றைக் காட்சிக்குவைக்குமாறு செய்வித்தல் வேண்டும்.

(5) மேற்சொன்ன 30-ம் பிரிவின் மேலே சொல்லப்பட்ட வகைமுறைகளின் மற்றும்/ அல்லது ஆணையத்தின் மேலுள்ள கட்டளையின் மீறுகையாகவுள்ள தேர்தல் துண்டு வெளியீடுகள், சுவரொட்டிகள் முதலியவற்றை வெளியிட்ட வழக்கு எதுவும் தங்களுடைய கவனத்துக்கு வருகின்றது அல்லது கொணரப்படுகிறது என்றால், உட்கோட்ட நீதி நடுவர்கள் அக்கணமே புலனாய்வுக்கான உடனடி நடவடிக்கைச் செயல்களைத் தொடங்குதல் வேண்டும். அத்தகைய வழக்குகள் எல்லாவற்றிலும், சட்ட நடவடிக்கைத் தொடர்வுகள் மிக்க விரைவாகக் குற்றவாளிகளுக்கு எதிராகத் தொடுக்கப்படவேண்டும் மற்றும் இத்தகைய வழக்குகள் தொடர்புடைய நீதிமன்றங்களில் விறுவிறுப்புடன் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்.

ராய் பி. தாமஸ்.
மாநிலத் தேர்தல் ஆணையாளர்.

## பிற்சேர்க்கை - அ

## தேர்தல் சுவரொட்டிகள் துண்டு வெளியீடுகள் முதலியவற்றை வெளியிடுபவரால் பணிந்தனுப்பப்பட வேண்டிய விளம்புகைக்கான படிவமுறை

.

**[காண்க பிரிவு 30, புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973)]**

**..................................................................................................................................... மாவட்டத்தின் ..........................................................................................................................கிராமத்தில் நகரத்தில் குடியிருந்துவரும்......................................................................................... என்பவரின் மகன் /மகள் / மனைவியாகிய...............................................................................என்னும் நான்,.................................. ........................................................................................... என்னும் அச்சகத்தில் அச்சிடப்படுகின்ற (தேர்தல் சுவரொட்டிகள், துண்டு வெளியீடுகள் முதலிய விவரங்களைத் தருக) ஆகியவற்றின் வெளியீட்டாளராக நான் இருக்கிறேன் என்பதை நான் இதன்மூலம் விளம்புகிறேன்.**

**இடம் :**

**தேதி :**

**வெளியிடுபவரின் கையொப்பம்.**

**முழு முகவரி .............................................**

**.................................................................**

**.................................................................**

**(வெளியிடுபவரை நேர்முகமாக அறிந்தவர்களால்) சான்றொப்பமிடப்படுகிறது**

**1. கையொப்பம்**

**(பெயரும், முவரியும்)**

**2. கையொப்பம்**

**(பெயரும், முவரியும்)**

**மேலொப்பமிடப்படுகிறது.**

**3. கையொப்பம்**

**(வெளியிடுபவரின் கையொப்பமும் முகவரியும்)**

## பிற்சேர்க்கை - ஆ

## தேர்தல் சுவரொட்டிகள் துண்டுவெளியீடுகள் முதலியவற்றை அச்சிடுவது பற்றிய தகவலைப் பணிந்தனுப்புவதற்கான படிவமுறை

1. வெளியிடுபவரின் பெயரும் ..........................................................................................................
முக வரியும் ..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

2. வெளியிடுபவரின் பெயரும் ..........................................................................................................
முக வரியும் -..........................................................................................................
..........................................................................................................

3. வெளியிடுபவரின் அச்சடிப்பு ஆணைத் தேதி ..........................................................................................................

4. வெளியிடுபவரின் விளம்புகைத் தேதி..........................................................................................................

5. தேர்தல் சுவரொட்டிகள் துண்டுவெளியீடு ..........................................................................................................
முதலியவற்றின் விவரங்கள். ..........................................................................................................

6. அச்சிடப்பட்ட மேலுள்ள ஆவணப்..........................................................................................................
படியங்களின் எண்ணிக்கை..........................................................................................................

7. அச்சிட்ட தேதி..........................................................................................................

8. மேலுள்ள ஆவணங்களைப் பொறுத்தமட்டில் ..........................................................................................................
கட்டணமாகக் கோரப்படுகிற (தாள் விலை உள்ளடங்கலாக)
அச்சுக் கட்டணங்கள்..........................................................................................................

இடம் :

தேதி :

அச்சிடுபவரின் கையொப்பம்.
(அச்சிடுபவரின் முத்திரை)

# இயல் VIII
## வாக்குப்பதிவு நாள்

**முன்னுரை**

8.1. வாக்குப்பதிவு என்பது தேர்தல் நடைமுறையில் மிகவும் முக்கியமான நிகழ்ச்சி ஆகும். வாக்காளர்கள் நகராட்சி மன்றத்தில் தங்களை சார்பாண்மை செய்யும் வேட்பாளர்களைத் தெரியசெய்வதை அவர்கள் வாக்குப்பதிவு வாயிலாகவே வெளிப்படுத்துகிறார்கள்.

**ஆதரவு திரட்டுதலுக்குத் தடை**

8.2 வாக்குப்பதிவு நாளன்று வாக்குச் சாவடிக்குள் அல்லது அதனருகில் ஆதரவு திரட்டுவதைத் தேர்தல் சட்டம் தடைசெய்கிறது. வாக்குச்சாவடிக்குள் அல்லது ஒரு வாக்குச்சாவடியிலிருந்து 100 மீட்டர் தொலைவுக்குள்ளிருக்கும் பொது அல்லது தனி இடம் எதிலும், ஆள் எவரும் பின்வரும் செயல்களில் எதையும் செய்தல் கூடாது. அதாவது-

(அ) வாக்குகளுக்காக ஆதாவு திரட்டுதல்

(ஆ) வாக்காளர் எவருடைய வாக்கையும் கோரிப்பெறுதல்

(இ) வாக்காளர் எவரையும் குறியிட்ட போயாளர்கள் எவருக்கும் வாக்களிக்காதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்

(ஈ) வாக்காளர் எவரையும் தேர்தலில் வாக்களிக்காதிருக்குமாறு கேட்டுக்கொள்ளுதல்

(உ) தேர்தல் தொடர்பான (அலுவல் முறை அறிவிப்பு அல்லாத வேறு) அறிவிப்பு அல்லது அடையாளக்குறி எதையும் காட்சிக்கு வைத்தல்

(ஊ) குரல்பெருக்கி அல்லது ஒலிபெருக்கியைப் போன்று மனிதக் குரலைப் பெருக்கிக்காட்டும் அல்லது மீண்டொலிக்கச் செய்யும் கருவி எதையும் வாக்குச் சாவடிக்குள் அல்லது அதன் வாயிலில் அல்லது அதற்கு அக்கம்பக்கத்திலுள்ள பொது அல்லது தனி இடம் எதிலும் பயன்படுத்துதல் அல்லது செயற்படுத்துதல்; மற்றும்

(எ) ஒரு வாக்குச்சாவடிக்குள் அல்லது அதன் வாயிலில், அல்லது அதன் அக்கம்பக்கத்திலுள்ள பொது அல்லது தனி இடம் எதிலும் கூச்சலிடுதல் அல்லது பிறவாறு ஒழுங்கற்ற ஒரு முறையில் செயலாற்றுதல்;

பிற்குறிப்பு: ஓர் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிற தூரம் பொருட்படுத்த்தக்கது அன்று. 100 மீட்டரைவிட, மிகுதியான ஒரு தூரத்திலிருந்து அது பயன்படுத்தப்படுகிறது என்றாலும், வாக்களிக்க வாக்குச்சாவடிக்கு வரும் ஆள் எவருக்கும் தொந்தரவையோ அல்லது வாக்குச்சாவடிக்குள் கடமையாற்றும் அலுவலர்கள் மற்றும் பிற ஆட்களின் பணியில் குறுக்கீடோ விளைவிக்கிறது என்றாலும், குற்றம் செய்யப்பட்டதாக அமையும்.

வேட்பாளர்களின் தேர்தல் சாவடிகள்

8.3. வேட்பாளர்களின் தேர்தல் சாவடிகள் எவையம் அவை வாக்காளர்களுக்குத் தடங்கல்கள், பல்வேறு கட்சித் தொண்டர்களுக்கிடையே மோதல்கள் சட்டம்-ஒழுங்குச் சிக்கல்கள் ஆகியவற்றை உருவாக்குவதன் மூலம், தன்னுரிமையான, நேரிய, அமைதிநலமான தேர்தல்களை நடத்தும் வழியில் பல இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும் என்பதால் வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிக்கு அருகில் அமைக்க அனுமதி வழங்குதல் கூடாது. எனினும், வெய்யில்/மழையிலிருந்து காப்பாற்றுவதற்காக முகவர்கள் மற்றும் தொண்டர்களின் தலைக்குமேல் ஒரு குடையையோ அல்லது தார்ப்பாலினின் சிறு பகுதியையோ வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவுக்கு அப்பால் வாக்காளர்களுக்கு அலுவல் முறைசாரா அடையாளத் துண்டுச்சீட்டுகளை வழங்குவதறகாக ஒரு மேசையையும் இரண்டு நாற்காலிகளையும் அவர்களின் பயன்பாட்டுக்காக வேட்பாளர்கள் வகைசெய்ய வேண்டும். அத்தகைய மேசைகளைச் சுற்றிக் கூட்டம் எதுவும் சூழ்ந்திருக்க அனுமதிக்கக்கூடாது. கோவிட் நெறிமுறைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

வாக்களிப்பதிலிருந்து வாக்காளர்களைத் தடுத்தல்

8.4. வாக்காளர் எவரையும் அவருடைய இசைவுடனோ அல்லது இசைவின்றியோ ஒரு தங்குகை (Camp) அல்லது வேறு இடம் எதிலும் இருத்திவைப்பது, அல்லது வாக்குச்சாவடிக்கு அவர் செல்லும் வழியில் இடையூறு செய்வது, அல்லது எந்த முறையிலும் வாக்களிப்பதிலிருந்து அவரைத் தடுப்பது ஆகியவை கைதுசெய்வதற்குரிய குற்றச் செயல்களாகும். ஆள் எவரும் அவ்வாறு இருத்திவைக்கப்படுகிதார் அல்லது இடையூறுக்குள்ளாகிறார் அல்லது தடுக்கப்படுகிரார் என்னும் தகவல்களை நீங்கள் பெறுகின்றீர்கள் என்றால், நீங்கள் தலைமை அலுவலருக்கு அல்லது மிகவும் அருகிலுள்ள காயல் நிலையத்திற்கு அல்லது தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அச்செய்தியை அறிக்கை செய்யவேண்டும். அத்தகைய இருத்திவைப்பு அல்லது இடையூறு ஒரு தனியார் இடத்தில் செய்யப்பட்டிருந்தாலும் கூட, அவ்வாறு தவறாக இருத்திவைக்கப்பட்ட அல்லது இடையூறு செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்ட ஆள் எவரும் தமது வாக்குரிமையைச் செலுத்த இயல்விக்கும் திறமான செய்கைகளை அவர்கள் மேற்கொள்வார்கள்.

வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்காகச் சட்ட முரணாக ஊர்திகளை வாடகைக்கமர்த்தல்

8.5. வாக்குப்பதிவு நாsன்று வாக்காளர்களுக்காக வாகன வசதி செய்வதற்கு உங்கள் சார்பாக எவரொருவரையம் அனுமதிக்க வேண்டாம். அது ஓர் ஊழல் பழக்கமுறை, ஒரு தேர்தல் குற்றச்செயல் என்னும் இரண்டும் ஆகும். வேறு வேட்பாளர் அல்லது அவருடைய முகவர்கள், ஆதரவாளர்கள் அல்லது தொண்டர்கள் வாக்காளர்களுக்காக அத்தகைய வாகன வசதிக்கு வகைசெய்கிறார்கள் என்பதை நீங்கள் கண்டறிந்தால் உடனுக்குடன் இதனைப் பொறுத்து ஒரு முறையீடு செய்தலும் புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973இன் 35ஆம் பிரிவின் கீழ் குற்றவாளியின் மீது சட்ட நடடிக்கை எடுக்கும் செய்கையைச் செய்தலும் வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யவில்லை என்றால், குற்றவாளிகளுக்கு எதிராக மிகவும் மதிப்புமிக்க சான்று இழக்கப்பட்டுவிடும். பிறவாறு நீங்கள் தேர்தல் அதிகாரிக்கு இது குறித்து வெறுமனே ஒரு முறையீட்டை அனுப்பலாம். நீங்கள் இதனைக் குற்றம் புரியும் வேட்பாளருக்கு எதிராகத் தேர்தல் மனுவைத் தாக்கல் செய்வதற்குக் காரணமாகக் காலப்போக்கில் பயன்படுத்தலாம். ஏனென்றால், வாக்காளர்களை வாக்குச்சாவடியிலிருந்து அல்லது அதற்கு ஏற்றிச் செல்வதும் ஓர் ஊழல் பழக்க முறையாகும். உங்கள் வாக்குச்சாவடி முகவரும் கூட இதுபற்றி எழுத்துருவிலான ஒரு முறையீட்டைத் தலைமை அலுவலருக்குச் செய்யக்கூடும். அத்தகைய வழக்குகளக் கையாளும் அதிகார வரம்பு கொண்டுள்ள நீதிநடுவருக்கு அவர் அதனை மேலனுப்புவார். நீங்கள் தலைமை அலுவலரை முறையீடு பற்றி அவரது சொந்த நுண்நோக்குக் குறிப்புரைகளைப் பதிவு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளலாம்.

வாக்குப்பதிவு நாளன்று போக்குவரவு ஒழுங்குமுறை

8.6.1. வாக்குப்பதிவு நாளன்று வாக்காளர்களுக்காக இலவச வாகன வசதிக்கு வகைசெய்வதாகிய ஊழல் பழக்க முறையையும் தேர்தல் குற்றச் செயலையும் தடுக்கும் பொருட்டு, ஆணையம் ஓர் உத்தியைத் திட்டமுறைப்படுத்தியிருக்கிறது. பின்வரும் வழிகாட்டுநெறிகள் பின்பற்றப்படலாம்.

(1) தோதல் சட்டத்தின் மீறுகையாக வாக்குச் சாவடிக்கும் அதிலிருந்தும் வாக்காளர்களை ஏற்றிக் செல்வதைத் தடுக்கும் பொருட்டு வாக்குப்பதிவு நாளன்று, வாகனப் போக்குவரவிலிருந்து வாக்குப்பதிவுப் பகுதிகள் பாதுகாப்பு வளையம் அமைக்கப்பட வேண்டும் என்பது குறிக்கோளாரும்.

(2) பேருந்துகள்/சிற்றுந்துகள் போன்ற பொதுத்துறை ஊர்திகள் போய்வர அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்காக அவை ஒளிவுமறைவாகப் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

(3) மருத்துவனைகள், விமான நிலையங்கள், இருப்பூர்தி நிலையங்கள், பேருந்து நிலையங்கள், நண்பர்கள்-உறவினர்களின் வீடுகள், சங்கங்கள், அருந்தகங்கள்

போன்று வாக்குச்சாவடிகள் அல்லாமல் வேறு இடங்களுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் தனியார் சீருந்துகளும் வாடகையுந்துகளும், சாலையில் செல்ல அனுமதிக்கப்படும். ஆனால் வாக்காளர்களை ஏற்றிச் செல்வதற்காக, வாக்குப்பதிவுப் பரப்பிடங்கருக்கு அருகில் ஒளிவுமறைவாக வருதற்கு அவை அனுமதிக்கப்படமாட்டது. இத்தகைய ஊர்திகளின் போக்குவரவு தவறாகப் பயன்படுத்தப்படுவதை திறமையாகக் கட்டுப்படுத்தும் வகையில் வழி மாற்றியனுப்படும்.

(4) சரக்குந்துகள் பெருஞ்சுமையுந்துகளின் போக்குவரவும் இதேபோன்று ஒழுங்குமுறைப்படுத்தப்படும்

(5) கூடுதல் நீதி நடுவர், உட்கோட்ட நீதி நடுவர்கள், வட்டாரப் போக்குவாத்து அதிகாரிகள் முதலானோர், எழுத்து-உணர்வு வழுவாமல் இவ்வொழுங்கு முறையைத் திறமையாகவும் முழுமையாகவும் நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(6) அரசியல் கட்சிகளும், போட்டியிடும் வேட்பாளர்களும், அவர்களுக்கிடையே அவர்களுடைய முகவர்களும் தொண்டர்களும், ஒழுங்குமுறையின் மீறுகை எதுவும், கடுமையாகக் கவனிக்கப்படும் என்றும், ஒரு தேர்தல் மனுவில் தேர்தலுக்கு எதிர்ப்புரைக்கப் போதுமான சான்றுப்பொருட்களை அது வகை செய்யக்கூடும் என்றும், சட்டத்தின் கீழ்த் தண்டனையையும் ஈர்க்கும் என்றும் எச்சரிக்கப்படுகிறார்கள்.

(7) வேட்பாளர்கள், அவர்களுடைய தேர்தல் முகவர்கள், அவர்களுடைய தொண்டர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோர், ஒவ்வொருவரும் வாக்குப்பதிவு நாளன்று இசைவாணைச் சீட்டு (Permit) வழங்குவதன் மேல் இரண்டு ஊர்திகளை மட்டுமே பின்வருமாறு பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள்-

(அ) மன்ற உறுப்பினருக்காகப் போட்டியிடும் வேட்பாளருக்காக ஓர் ஊர்தி;
(ஆ) வேட்பாளரின் தேர்தல் முகவர் அல்லது அவருடைய தொண்டர்கள், அல்லது அந்த வேட்பாளரை நிறுத்துவைக்கிற அரசியல் கட்சியின் தலைவர்கள் மற்றும் தொண்டர்களுக்காக ஓர் ஊர்தி;

(8) தலைவர் நிலைக்கான தேர்தல் ஆகும் நேர்வில் ஒரு வேட்பாளர், அவருடைய முகவர்கள், தொண்டர்கள், மற்றும் அவரது அரசியல் கட்சியின் தலைவரால், அதேபோன்று பயன்படுத்தப்படலாகும் ஊர்திகளின் எண்ணிக்கை பின்வருமாறு அமையும்-

(அ) நகராட்சி வரம்புகள் முழுவதிலும் வேட்பாளர்களின் பயன்பாட்டுக்காக ஓர் ஓர் ஊர்தி, மற்றும்

(ஆ) நகராட்சி மன்றத்தொகுதி ஒவ்வொன்றைப் பொறுத்தும், அவருடைய முகவர்கள், தொண்டர்கள் மற்றும் அவரது அரசியல் கட்சித் தலைவர்களின் பயன்பாட்டுக்காக ஓர் ஊர்தி.

(9) இசைவாணை வழங்கும் அதிகாரியின் முத்திரையும் கையொப்பமும் மேலேபொறிக்கப்பட்டுள்ள (தேர்தல் இசைவாணைச் சீட்டு) என்று தடித்த எழுத்தில் அச்சிடப்பட்ட இசைவாணைச் சீட்டுகள், ஊர்தியின் காற்றுத்திரைமீது எடுப்பாக்க் காணுமாறு இருத்தல் வேண்டும்.

8.6.2. நீங்கள் மேற்சொன்ன ஆணையத்தின் வழிகாட்டுநெறிகளை மிகக் கவனத்துடன் பின்பற்ற வேண்டும் மற்றும் உங்களாலும் உங்கள் கட்சித் தொண்டர்களாலும் பயன்படுத்தப்பட வேண்டி ஊர்திகளுக்கான இசைவாணைச் சீட்டுகள் வாக்குப்பதிவு நாளன்று நன்கு முன்னதாகவே பெறவேண்டும்.

8.6.3. எந்தச் சூழ்நிலைகளிலும் சீருந்துகள்/ஊர்திகள் எவையும் மூன்று ஊர்திகளுக்கு மேல் அணிவகுத்துச்செல்ல அனுமதிக்கப்படமாட்டாது. மைய அலலது மாநில அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு அமைச்சர்ளை, அல்லது வேறு ஆள் எவரையும் அவை ஏற்றிச் செல்கின்றன என்றாலும் கூட, அத்தகைய தனிப்பட்டவர் எவர் பொறுத்தும் வழங்கப்பட்ட பாதுகாப்புறுதி அறிவுறுத்தங்கள் எவற்றுக்கும் உட்பட்டு, பெரிய அணிவகுப்வு எல்லாம் இடையிடையே பிரிக்கபடவேண்டும்.

வாக்குச்சாவடியிலிருந்து வாக்குச் சீட்டுகளை அல்லது வாக்குப்பதிவு எந்திரத்தை அகற்றுதல் ஒரு குற்றச் செயலாக ஆதல்

8.7. வாக்காளர் எவரும் வாக்குச் சாவடிக்கு வெளியே வாக்குச் சீட்டு அல்லது வாக்குப்பதிவு எந்திரம் எதையும் சட்ட முரணாக எடுத்துச் செல்கிறார் அல்லது அதிகாரவுரிமையின்றி அல்லது மோசடியாக அதைக் குலைவுசெய்து கெடுக்கிறார் என்று நீங்களோ அல்லது உங்கள் முகவரோ நேர்மையான முறையில் ஐயப்படுகிறீர்கள் என்றால், தலைமை அலுவலரின் தேவையான நடவடிக்கைச் செயலுக்காக அச்செய்தியை உடனடியாக அவரது கவனத்திற்குக் கொண்டு செல்க.

ஒழுங்கில்லாத ஆட்களை அகற்றுதல்

8.8. வாக்களிப்பின் போது தவறாக நடந்து கொள்கிற அல்லது தலைமை அலுவலரின் சட்டமுறையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியத் தவறுகிற ஆள் எவரும், காவல் அலுவலர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற வேறு ஆட்கள் எவராலும், தலைமை அலுவலரின் ஆணையின்படி வாக்குச்சாவடியிலிருந்து அகற்றப்படலாம்.

வாக்குச் சாவடி முகவர்கள்

8.9.1. நீங்களோ அல்லது உங்கள் தேர்தல் முகவரோ, உங்கள் தொகுதியிலுள்ள வாக்குச்சாவடி ஒவ்வொன்றிலும் நேரடியாக வந்திருப்பது என்பது முடியாத ஒன்றாகும். ஆதலால் ஒவ்வொரு வாக்குச்சாடியிலும் உங்கள் நலனை விழிப்புடன் பார்த்துக்கொள்வதற்கு யாரோ சிலர் வந்திருக்கவேண்டும். ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் ஒரு வாக்குச்சாவடி முகவரையும் இரண்டு விடுப்புதவி (relief) முகவர்களையும் பணியமர்த்துவதற்குச் சட்டம் உங்களை அனுமதிக்கிறது. அவர்கள் அனைவரும் வாக்குச்சாவடி முகவர்கள் என அழைக்கபெறுவர். எனினும், வாக்குச்சாவடி எதற்கும் அல்லது எல்லாவற்றுக்கும் வாக்குச்சாவடி முகவர்களை நீங்கள் பணியமர்த்த வேண்டும் என்பது கட்டாயமன்று. உங்கள் தேர்தல் முகவரும் உங்கள் சார்பாக இத்தகைய பணியமர்த்துகைகளில், எதையும் செய்யலாம். ஒரு வாக்குச்சாவடிக்குரிய மூன்று வாக்குச்சாவடி முகவர்களில் ஒருவர் மட்டுமே வாக்குச்சாவடிக்குள் ஒரே நேரத்தில் வந்திருப்பதற்கு உரிமைப்பாடு உடையவர் ஆவார். அவர்கள் அவ்வப்போது ஒருவருக்கொருவர் விடுவித்து கொள்ளலாம். ஓர் அமைச்சரின் சொந்தப் பாதுகாப்புறுதி தேர்தல் முகவராகப் பணியமர்த்தப்படுவதால் பேரிடருக்குள்ளாகும் என்பதால், அவர் அத்தகையவராகப் பணியமர்த்தப்படுதல் ஆகாது; ஏனென்றால் அவருடைய பாதுகாப்புப் பணியாளர்கள் வாக்குச் சாவடிக்குள் அவருடன் சேர்ந்து போவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

8.9.2. வாக்குச்சாவடி முகவர்களின் பணியமர்த்துகை, படிவம்-10இல் (பின்னிணைப்பு-8.1) எழுத்துவழிச் செய்யப்படுகிறது. பணியமர்த்தும் ஆணையின் படிவம் ஒன்றைத் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு நீங்கள் அனுப்பி வைக்குமாறு வேண்டுறத்தப்படவில்லை. வாக்குச்சாவடி முகவர் வாக்குச்சாவடியில் மூல (Original) பணியமர்த்தும் ஆணையை முன்னிலைப்படுத்த வேண்டும். அப்போதுதான், தலைமை அலுவலர் அவரை வாக்குச்சாவடிக்குள் அனுமதிப்பார். ஒரு வாக்குசாவடி முகவர் உங்களுடைய வாக்குச்சாவடி முகவராகச் செயலாற்றும் அவரது உடன்பாட்டின் அடையாளமாக படியம்-10இல் உள்ள பணிமர்த்துகைக் கடிதத்தில் கையொப்பமிட வேண்டும். உங்கள் முன்னிலையில் அல்லது உங்கள் தேர்தல் முகவர் பணியமர்த்துகை செய்கிறார் என்றால் அவரது முன்னிலையில் அவர் கையொப்பம் இடுதல் என்பது, உங்களுக்குரிய அறிவுரையாகும். வாக்குச்சாவடி முகவர், வாக்குச்சாவடியில் தலைமை அதுவலரின் முன்னிலையில் மீண்டும் கையொப்பமிட வேண்டும். உங்கள் முன்பு அல்லது உங்கள் தேர்தல் முகவரின் முன்பு அவர் கையொப்பமிட்ட அதே முறையில் தலைமை அலுவலருக்கு முன்பு கையொப்பமிடுவமாறு அவர் கேட்டுக்கொள்ளப்படவேண்டும். அப்போதுதான் அவரது கையொப்பத்தில் முரண்பிழை (Discrepancy) எதுவும் இருக்காது. அவரது அடையாளத்தை உடனே ஏற்றுக்கொள்ள இது உதவிசெய்யும்.

8.9.3. படிவம்-8இல் (பின்னிணைப்பு: 8.4) உள்ள பணியமர்த்துகைக் கடிதத்தில் கொடுக்கப்பட்டவாறு வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல் முகவரின் கையொப்பத்தைச் சரிபார்ப்பதற்கு வாக்குச்சாவடியின் தலைமை அலுவலரை

இயல்விக்கும் வகையில், உங்களது மாதிரிக் கையொப்பம் அல்லது உங்கள் தேர்தல் முகவரின் அத்தகைய கையொப்பம் பின்னிணைப்பு (8.3) படிவ முறையில் தேர்தல் நடத்தும் அலுவலரல் பெறப்பட்டு, போதிய எண்ணிக்கையில் அதன் படிவங்கள் ஒவ்வொரு தலைமை அலுவலருக்கும் வழங்கப்படுதல் வேண்டும். நீங்கள் தேர்தல் முகவர் எவரையும் பணியமர்த்தவில்லை என்றால், அப்போது, தேர்தல் முகவரின் கையொப்பத்திற்காகக் குறிக்கப்பட்ட அந்தப் பத்தியில் தேர்தல் முகவர் எவரும் பணியமர்த்தப்படவில்லை என்னும் சொற்கள் மேற்சொன்ன படிவமுறையில் பதியப்படுதல் வேண்டும். ஒரு தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை முறித்தறவு (ரத்து) செய்யவும். அவரிடத்தில் மற்றொருவரைப் பணியமர்த்தவும் நீங்கள் தன்னுரிமை (Liberty) கொண்டிருக்கிறிர்கள். உங்களால் முதன்முதலில் அளிக்கப்பட்டவாறு, மாதிரிக் கையொப்பங்கள் அடங்கிய பின்னிணைப்பு-(8.3) படிவ முறையில் படியம் ஏற்கெனவே தலைமை அலுவலருக்கு வழங்கப்பட்டிருந்தது. கடைசி நேரத்தில் அத்தகைய ஒரு மாற்றம் பணியமர்த்துகையில் செய்யப்படுகிறது என்றால் அப்போது தலைமை அலுவலருக்கு, தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை முறித்தறவு (ரத்து) செய்யும் படிவம்-9இன் (பின்னிணைப்பு - 8.5) படியம் (copy) ஒன்றை வழங்குவதும், புதிய தேர்தல் முகவரைப் பணியமர்த்தும் படிவம்-8இன் படியம் ஒன்றை வழங்குவதும், உங்கறுடைய பொறுப்பாக அமைதல் வேண்டும்.

8.9.4. நீங்களோ அல்லது உங்கள் தேர்தல் முகவரோ உங்கருடைய வாக்குச்சாவடி முகவர்களில் எவர் ஒருவருடைய பணியமர்த்துகையையும் முறித்தறவு (பின்னிணைப்பு 8.2) 11ஆம் படிவத்தில் எழுத்துவழி அந்த முறித்தறவு (ரத்து) ஆணையை வாக்குச்சாவடியின் தலைமை அலுவலரிடம் பதிந்து வைக்கலாம். ஒரு வாக்குச்சாவடி முகவர் வாக்குப்பதிவுக்கு முன்பு இறந்துபோக நேரிடுகிறது என்றால், நீங்களோ அல்லது உங்கள் தேர்தல் முகவரோ தலைமை அலுவலருக்குத் தகவலளிக்கவேண்டும், பின்னறவு அல்லது இறப்பு என்னும் நேர்வில், நீங்களோ அல்லது உங்கள் தேர்தல் முகவரோ முன்சொன்ன அதே முறையில் படிவம்-8இல், ஒரு புதிய பணியமர்த்துகைக் கடிதத்தின் மூலம் மற்றொரு வாக்குச்சாவடி முகவரைப் பணியாத்தலாம், ஆனால் அத்தகையதொரு நேர்வில், அத்தகைய பானியமர்த்துகைக்கு வழிவகுத்த உண்மை விவரங்களை அந்தக் கடிதத்தில் உரைத்திடலாம்.

வாக்குச்சாவடி முகவர் வாக்குச்சாவடியை அடைவது எப்போது?

8.10. வாக்குச் சாவடி முகவர், வாக்குப்பதிவு தொடங்குவதற்குக் குறைந்தது 30 மணித்துளிகளுக்கு முன்பு, வாக்குச்சாவடியைச் சென்றடைய வேண்டும். வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு தலைமை அலுவலர் வேறு முதனிலை ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கையில், அங்கிருப்பதற்கு அவரை இது இயல்பிக்கும். இத்தகைய முதனிலை ஏற்பாடுகளில் பகுதி எதுவும் ஏற்கெனவே செய்து முடிக்கப்பட்டிருக்கிறது என்றால், காலந்தாழ்ந்து வந்தவருக்கு வசதி செய்துகொடுக்கும் பொருட்டு நடவடிக்கை புதியதாக தொடங்கப்பட மாட்டாது.

ஒவ்வொரு வாக்குச்சாவடி முகவரும், தலைமை அலுவலரால் ஓர் அனுமதிச்சீட்டு வழங்கப்படுவார். அந்தச் சீட்டின் அதிகாரவுரிமையின் மேல், வாக்குச்சாவடி முகவர், தேவைப்படும்போது வாக்குச்சாவடிக்குள் வரவும் அங்கிருந்து வெளியே போகவும் முடியும்.

**வாக்குச்சாவடி முகவர்களின் கடமைகள்**

8.11.1. வாக்குச்சாவடி முகவர்களின் முக்கியமான கடமை, எந்த வேட்பாளர்கள் அவர்களைப் பணியமர்த்தினார்களோ அவர்களுடைய நலன்கள் வாக்குச்சாவடிகளில் பாதுகாக்கப்படுகின்றன என்பதைப் பார்த்துக்கொள்வதாகும். அவர்களுடைய பிற கடமைகள் பின்வருவன:-

(அ) வாக்காளர்களை ஆள் மாறாட்டம் செய்ய முயலும் ஆட்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதன் மூலம், வாக்காளர்களைக் கண்டறிவதற்கும் ஆள் மாறாட்டத்தைத் தடுப்பதற்கும் தலைமை அலுவலருக்கு உதவுதல்;

(ஆ) வாக்குப்பதிவுக்கு முன்பும் வாக்குப்பதிவின் போதும், அதற்குப் பின்பும், விதிகளுக்கு இணங்க, வாக்குப்பதிவு எந்திரங்கள் முறையாகச் காப்புறுதி செய்யப்பட்டு முத்திரையிடப்படுவதில் உதவுதல்;

(இ) வாக்குப்பதிவு முடிந்தபின்பு தலைமை அலுவலரிடமிருந்து பதிவான வாக்குக் கணக்குத் தாள், முத்திரைக் கணக்கு (பின்னிணைப்பு 8.6 மற்றும் 9.3) ஆகியவற்றின் ஒரு படியத்தை எடுத்துக்கொள்ளல்; மற்றும்

(ஈ) சட்டத்தால் வேண்டப்பட்டவாறு வாக்குப்பதிவு முடிந்ததன் பின்பு, வாக்குப்பதிவுக்குத் தொடர்பான தேர்தல் ஆவணஏடுகள் (Records) அனைத்தும் முறைப்படி காப்புறுதியுடனும், முத்திரையிடப்பட்டும் இருக்கின்றன என்பதைப் பார்த்துக் கொள்ளல்.

(உ) வாக்குச்சாவடியில் வழக்கமான வாக்கெடுப்பைத் தொடங்குவதற்கு முன் மாதிரி வாக்கெடுப்பை நடத்த தலைமை அலுவலருக்கு உதவுதல்

2. ஆணையம் தேவைப்பட்டால், வாக்குச்சாவடி முகவர்களிடையே அளிப்பதற்காக ஒரு தனி "வாக்குப்பதிவு முகவர்களுக்கான கையேட்டை" கொண்டு வந்துள்ளது. இது தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உள்ளது.

**வாக்குச்சாவடி முகவர்கள் கொண்டுவர வேண்டிய பொருட்கள்**

8.12. வாக்குச்சாவடி முகவர் வாக்குச் சாவடிக்கு வருகின்றபோது பின்வரும் இனங்களை, அவர் தாமே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.

(அ) அவரது பணியமர்த்துகைக் கடிதம்

(ஆ) வாக்குச்சாவடிக்கான வாக்காளர் பட்டியலின் படியம் (பிரதி),

(இ) வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கலாகும் இறந்து போனவர், இல்லாதவர், அல்லது சாட்டியுரைக்கப்பட்ட ஐயத்திற்குரிய வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல்

(ஈ) ஒரு சிறு செப்பு முத்திரை; மற்றும்

(உ) எழுதுகோல், தாள், மற்றும் பென்சில்

வாக்குச்சாவடி முகவர்கள் அடையாளச் சின்னம் அணிதல்

8.13. வாக்குச்சாவடி முகவர்கள் வேட்பாளர்களின் அல்லது வேறு எவரேனும் அரசியல் தலைவரின் நிழற்படம் நிற்க அடங்கிய அடையாளச் சின்னம் அணிவதிலிருந்தும் வாக்குச்சாவடிக்குள் அல்லது அதிலிருந்து 100 மீட்டருக்குள் ஆதரவு வாசகம் எதையும் அல்லது வாக்கினைப் பெறும் தூண்டுரை எதையும் பலர் காணுமாறு வைப்பதிலிருந்தும், தடைசெய்யப்படுகிறார்கள். அவர் அவ்வாறு செய்தால், அது ஒரு கைது செய்தற்குரிய ஒரு குற்றச் செயலாவதுடன் இரு நூற்றைம்பது ரூபாய் வரை போகலாகும். ஒரு பணத்தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கதும் ஆகும். எனினும், தலைமை அலுவலரால் அவருக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டையை அவரது உடம்பில் அணிந்திருக்க வேண்டும்.

வாக்குச்சாவடிகளில் ஏற்பாடு

8.14. ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் வெளியே, வாக்குப்பதிவு பரப்பிடம், அந்த வாக்குச் சாவடியில் வாக்களிக்கும் உரிமைப்பாடுள்ள வாக்காளர்கள், போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் ஆகியவற்றைக் குறித்துரைக்கும் ஓர் அறிவிப்பு எடுப்பான இடத்தில் பலர் காண வைக்கப்படும் .

வாக்குச்சாவடிக்குள் அனுமதி

8.15. வாக்காளர்களைத் தவிர பின்வரும் ஆட்கள் மட்டுமே தலைமை அலுவலரால் வாக்குச் சாவடிக்குள் அனுமதிக்கமுடியும்

(அ) உதவித் தலைமை அலுவலர்கள், வாக்குப்பதிவு அலுவலர்கள்;

(ஆ) வேட்பாளர் ஒவ்வொருவர், அவருடைய தேர்தல் முகவர், மற்றும் ஒவ்வொரு வேட்பாளரின் வாக்குச்சாவடி முகவர் ஒருவர்-ஒரு நோத்தில்;

(இ) மாநிலத் தேர்தல் ஆணையத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள்;

(ஈ) தேர்தல் தொடர்பாகக் கடமையாற்றும் அரசு பணியாளர்கள்

பின்குறிப்பு: "கடமையாற்றும் அரசு பணியாளர்கள்" என்னும் சொல்லமைப்பு ஒன்றியத்தின், அல்லது மாநிலம்/ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் அமைச்சர்கள், இணை அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் ஆகியோரை உள்ளடக்காது;

(உ) ஒரு வாக்காளருடன் வரும் கைக்குழந்தை;

(ஊ) உதவியின்றி இயங்கமுடியாத ஒரு பார்வையற்ற அல்லது ஓர் ஏலாத வாக்காளருடன் துணையாகவரும் ஆள்;

(எ) வாக்காளர்களை அடையாளம் காட்டுகிற அல்லது மற்றப்படி வாக்குப்பதிவு நடத்துவதில் தலைமை அலுவலருக்கு உதவிசெய்கிற நோக்கத்திற்காக,

அவ்வப்போது தலைமை அலுவலர் அனுமதிக்கலாகும் அத்தகைய வேறு ஆட்கள்.

பின்குறிப்பு: ஒரு வாக்காளர், வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல் முகவர் அல்லது வாக்குச்சாவடி முகவருடன் சேர்ந்து வரும் பாதுகாப்புப் பணியாளர், எவரேனும் இருப்பின் அவர் எவரும், வாக்குச்சாவடிக்குள் நுழைய அனுமதித்தல் கூடாது .

வாக்குச்சாவடி முகவர்களின் இருக்கை வசதி

8.16. வாக்குச்சாவடி முகவர்கள், வாக்காளர்களை அடையாளம் அறிதல், செயற்பாடுகளை முழுமையாகக் காணுதல், உதவித் தலைமை அலுவலரின் மேசையிலிருந்து வாக்காளார் வாக்குப்பதிவு அறைக்குச் செல்வதையும் வாக்குப்பதிவு அறையில் அவர் தமது வாக்கைப் பதிவுசெய்து வாக்குப்பெட்டியில் வாக்குச்சீட்டை(களை)ப் போட்ட பின்பு அவர் வாக்குச்சாவடியை விட்டு நீங்குவதையும் காணுதல் ஆகியவற்றுக்குப் போதிய வாய்ப்பைக் கொண்டிருக்கும் அத்தகைய இடத்தில் தலைமை அலுவலர் அவர்களுக்கு இருக்கை ஏற்பாடுகளைச் செய்து தருவார்.

வாக்குப்பதிவின் தொடக்கத்திற்கு முன்பு முதனிலை ஏற்பாடுகள்

8.17. வாக்குப்பதிவு தொடங்குவதற்காகக் குறித்திட்ட நேரத்திற்கு, ஏறத்தாழ 30 மணித்துளிகளுக்கு முன்பு, தலைமை அலுவலர், வாக்குப்பதிவு நடத்துவதற்கான முதனிலை முன்னேற்பாடுகளைச் செய்யத் தொடங்குவார். தலைமை அலுவலர்-

(அ) வாக்குப்பதிவுக்காகப் பயன்படுத்தப்படும் வாக்குப்பெட்டி/பெட்டிகள் வெறுமையாக (காலியாக) இருக்கிறது/இருக்கின்றன என்பதை, வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் விளக்கிச் சொல்லுவார்.

(ஆ) வாக்காளர் பட்டியலின் குறியிடப்பட்ட படியம் (பிரதி) (வாக்களிக்க அனுமதிக்கப்படும் வாக்காளர்களின் பெயரைக் குறியீடுவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய வாக்காளர் பட்டியலின் படியம்) அஞ்சல் வாக்குச்சீட்டுகளும் தேர்தல் கடமைச் சான்றிதழ்களும் வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டவை அல்லாத வேறு குறிப்புரைகள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை என்பதை வாக்குச்சாவடி முகவர்களுக்கும் வேறு ஆட்களுக்கும் விளக்கிச் சொல்லுவார்.

(இ) வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் வாக்குச்சீட்டு வரிசைகளின் முதல் மற்றும் கடைசி எண்களையும், வாக்குப்பெட்டிகளின் வரிசை எண்களையும் குறித்துக்கொள்ள வாக்குச்சாவடி முகவர்களை அனுமதிப்பார்.

மின்னணு வாக்குப் பதிவு எந்திரத்தை ஆயத்தம் செய்தல்

8.18.1. வாக்குப்பதிவு தொடங்குவதற்காகக் குறித்திட்ட நேரத்திற்கு 30 மணித்துளிகளுக்கு முன்பு, தலைமை அலுவலர் வாக்குப்பதிவுக்காக மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தை ஆயத்தம் செய்யத் தொடங்குவார். அவர் முதலில் அங்கு வந்திருப்பவர்களுக்கு வாக்குப்பதிவு எந்திரத்தை வெறுமை (காலி)யாக இருக்கிறது என்பதை விளக்கிக்காட்டுவார். அதன்பின்பு, அதற்கு முத்திரையிட்டு, வாக்களிக்கும் நிலையில் அதனைப் பாதுகாப்பாக வைக்கும் நடவடிக்கையை மேற்கொள்வார்; அதாவது அந்த வாக்குப்பதிவு எந்திரம் மூடி முத்திரையிடப்படும்;

8.18.2. போட்டியிடும் வேட்பாளர்களின் வாக்குச்சாவடி முகவர்களில் எவரும், அவ்வாக்குச்சாவடியில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட வாக்குப் பதிவு எந்திரங்களின், மற்றும் உள்ளபடியே பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவு எந்திரத்தின் (எந்திரங்களின்) வரிசை எண்களையும் குறித்துக்கொள்ள விரும்புகிறார் என்றால், அத்தகைய வாக்குப் பதிவு எந்திரங்களின் வரிசை எண்களைக் குறித்துக்கொள்வதற்கு, அவர் தலைமை அலுவலரால் அனுமதிக்கப்பட வேண்டும்.

II வாக்குப் பதிவு எந்திரத்துக்கான பச்சைத் தாள் முத்திரைகள்

8.19.(அ) வாக்குப் பதிவு எந்திரங்களில், அதை முத்திரையிட்டுப் பாதுகாப்பாக வைப்பதற்காக, மாநிலத் தேர்தல் ஆணையத்தால் சிறப்பாக அச்சிடப்பட்ட ஒரு பச்சைத்தாள் முத்திரை பயன்படுத்தப்படுகிறது. சேதமடைந்த தாள் முத்திரை எதுவும் வாக்குப் பதிவு எந்திரம் எதையும் முத்திரையிடுவதற்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதை வாக்குச்சாவடி முகவர் பார்த்துக்கொள்ள வேண்டும். வாக்குப் பதிவு எந்திரத்தில் உரிய இடத்தில் அது புகுத்தப்படுவதற்கு முன்பு அந்தத் தாள்

முத்திரையில் அவர் கையொப்பமிடுவதற்கு அவரை அனுமதிக்க வேண்டும். அவ்வாறு பயன்படுத்தப்பட்ட தாள் முத்திரையின் எண்ணைக் குறித்துக் கொள்வதற்கும் அவர் அனுமதிக்கப்பட வேண்டும் .

(ஆ) தலைமை அலுவலர் வாக்குப்பதிவு முடிவில் பச்சைத்தாள் முத்திரை பற்றியதொரு கணக்கை ஆயத்தம் செய்வார். வாக்குச்சாவடி முகவர்கள் அதில் கையொப்பமிடவேண்டும். கணக்குப் பதிவுகள் சரியாக இருக்கின்றன என்பது பற்றி அவர்கள் தாங்களே மனநிறைவுகொள்ள வேண்டும். வாக்கு எண்ணிக்கைக்காக வாக்குப் பதிவு எந்திரங்களைத் திறக்கும் நேரத்தில் சரிபார்க்கும் நோக்கத்திற்காக, வேட்பாளர்களுக்கு அனுப்பப்படும் பொருட்டு அந்தக் கணக்கிலுள்ள எந்தப் பதிவு பற்றியுமான குறிப்புகளையும் அவர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

வாக்களிப்பு இகசியத்தைப் பேணி வருதல்

8.21.1 வாக்குச்சாவடி முகவர் ஒவ்வொருவரும் வாக்களிப்பு இகசியத்தைப் பேணி வருவதற்கும் பேணிவர உதவுவதற்கும், மற்றும் அத்தகைய இரகசியத்தை மீறுவதாகக் கணிக்கப்படும் தகவல் எதையும் ஆள் எவருக்கும் தெரிவிக்கக்கூடாது என்றும், புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1970இன் 26ஆம் பிரிவின் மூலம் வேண்டப்படுகிறார். மேலுள்ள சட்ட வகைமுறையை மீறும் ஆள் எவரும், 6 மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டனையோ அல்லது பணத்தண்டமோ (அபராதமோ) அல்லது இரண்டுமோ விதித்துக் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

8.21.2. வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு, வாக்களிப்பு இரகசியத்தைப் பேணி வருதல், அதன் மீறுகை எதற்குமான தண்டம் ஆகியவைப் பற்றி வாக்குச்சாவடி முகவரின் கடமை குறித்து மேற்கூறிய 26ஆம் பிரிவின் வகைமுறைகளை வந்திருக்கும் அனைவரின் கவனத்திற்கும் தலைமை அலுவலர் கொண்டுவருவார்.

வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு தலைமை அலுவலரின் விளம்புகை (Declaration)

8.22. தலைமை அலுவலர் மேலே உரைத்தவாறு முன்னேற்பாடுகளைச் செய்துமுடித்த பின்பு, அவர் அத்தகைய முன்னேற்பாடுகளை முடித்திருக்கிறார் என்னும் விளைவுக்கு வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் (பின்னிணைப்பு 8.7 பகுதி-1) ஒரு விளம்புகையை அவர் செய்வார், வாக்குச்சாவடியில் வந்திருக்கும் ஆள் அனைவரும் கேட்கும்படி அந்த விளப்புகையை அவர் உரக்கப் படிப்பார். மற்றும் விளம்புகையில் கையொப்பமிடுவார். வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களில் அதில் கையொப்பமிட விரும்பும் அத்தகையவர்களின் கையொப்பததையும் அதில் பெறுவார். அது வாக்குப்பதிவு தடையின்றியும் நேரிய முறையிலும் தொடங்கியிருந்தது என்று அனைவருக்கும் மனநிறைவு அளிக்கும் என்பதால் வாக்குச்சாவடி முகவர்கள் அந்த விளம்புகையில் கைபொப்பமிட வேண்டும். வாக்குச்சாவடி முகவர் எவரும் அந்த

விளம்புகையில் கையொப்பமிட மறுக்கிறார் என்றால், மேற்சொன்ன விளம்புகைப் படிவத்தில் அந்த நோக்கத்திற்காக வகைசெய்யப்பட்ட பத்தியில் அவரது பெயரைத் தலைமை அலுவலர் குறித்துக்கொள்வார்.

வாக்குப்பதிவைத் தொடங்குதல்

8.23.1. வாக்குப்பதிவு அந்நோக்கத்திற்காகக் குறித்திட்ட மணி அடிப்பு நேரத்தில் தொடங்கப்படும். அந்த நேர அளவில் முன்னேற்பாடுகள் தலைமை அலுவலரால் முடிக்கபட்டிருக்கும். எதிர்பார்த்திராத காரணங்கள் எவற்றாலும் முன்னேற்பாடுகள் முடியாதிருக்கின்றன என்றால், வாக்குப்பதிவு தொடங்குவதற்காகக் குறித்திட்ட நேரத்தில் ஏறத்தாழ நான்கு முதல் ஆறு வாக்காளர்கள் வரை தலைமை அலுவலர் அனுமதிக்கலாம், மற்றும் வாக்குப்பதிவு நடைமுறையைச் செய்து முடிக்கும் வகையில், வாக்குப்பதிவு அலுவலர்கள் அவர்களுடன் செயல்தொடர்பு கொள்ளுமாறு செய்யலாம்.

8.23.2. வாக்களிப்புக்காகக் குறித்திட்ட முடிவு நேரத்திற்கு முன்பு, ஏற்கெனவே வாக்குச்சாவடியை அடைந்து அவர்களின் இடத்தில் இருக்கும் அத்தகைய வாக்காளர்களை வாக்களிக்க அனுமதிப்பதற்காகத் தவிர, குறித்திட்ட முடிவு நேரத்தை எந்தத் தருணத்திலும் தலைமை அலுவலர் நீட்டிக்க முடியாது.

வாக்குச் சாவடிக்குள் வாக்காளாகள் நுழைவு

8.24 பொதுவாக ஆண் மற்றும் பெண் வாக்காளர்களுக்கு தனி வரிசைகள் இருக்கும். வரிசைகளை ஏற்பாடு செய்யும் நபர்கள் 3 அல்லது 4 வாக்காளர்களை ஒரே நேரத்தில் வாக்குச்சாவடிக்குள் அனுமதிப்பார்கள். இதனைத் தலைமை அலுவலர் வழிநடத்துவார். காத்திருக்கும் மற்ற வாக்காளர்கள் வெளியே வரிசையில் நிற்க வைக்கப்படுவார்கள். ஆண் மற்றும் பெண் வாக்காளர்கள் அடுத்தடுத்து வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கப்படுவார்கள். எவ்வாறாயினும், தலைமை அலுவலர், இயலாதவர்கள் மற்றும் குழந்தைகளுடன் வரும் பெண் வாக்காளர்கள் ஆகியோரை முன்னுரிமை அடிப்படையில் அனுமதிக்கலாம். வாக்குச்சாவடி முகவர்கள் அதை எதிர்க்கக்கூடாது

ஊடகவியலாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்களுக்கான வசதிகள்:

8.25. கோவிட் நெறிமுறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் அமைதி மற்றும் ஒழுங்கை பராமரித்தல் ஆகியவற்றுக்கு உட்பட்டு, எந்த புகைப்படக் கலைஞரும் வாக்குச்சாவடிக்கு வெளியே வரிசையில் நிற்கும் வாக்காளர்களை புகைப்படம் எடுப்பதில் மறுப்பெதுவும் இல்லை. இருப்பினும், மாநில தேர்தல் ஆணையத்தின் அதிகாரக் கடிதம் இல்லாமல் அரசாங்கத்தின் விளம்பர அதிகாரிகள் உட்பட யாரையும் ஒரு வாக்குச்சாவடிக்குள் அனுமதிக்கக்கூடாது. எந்தவொரு

சூழ்நிலையிலும், வாக்காளர் தனது வாக்கைப் பதிவு செய்யும் எந்த புகைப்படத்தையும் எடுக்க அனுமதிக்கப்பட மாட்டார்.

**வாக்காளரின் அடையாளத்தை மறுத்து எதிர்த்தல்**

8.26. மேலே குறிப்பிட்டுள்ளபடி, வாக்குச்சாவடி முகவரின் முக்கிய கடமைகளில் ஒன்று வாக்காளர் ஆள்மாறாட்டத்தை கண்டறிந்து தடுக்க தலைமை அதிகாரிக்கு உதவுவதாகும். ஆகவே, வாக்காளர் என்று கூறிக்கொள்ளும் நபர் அதே நபர் அல்ல என்று தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தால் வாக்காளராக வரும் ஒருவரின் அடையாளத்தை மறுத்து எதிர்ப்புத் தெரிவிக்க வாக்குச்சாவடி முகவர் தகுதியுடையவர். இருப்பினும், வாக்குச்சாவடி முகவர்கள் கண்மூடித்தனமான எதிர்ப்புகளைச் செய்யக்கூடாது, ஏனெனில் இது வாக்குப்பதிவின் சுமூகமான செயல்முறையைத் தடுக்கும். இது தாமதத்திற்கு வழிவகுக்கும். இதில் அவரது சொந்த வேட்பாளரின் ஆதரவாளர்கள் உட்பட சில வாக்காளர்கள் சோர்வடைந்து வாக்களிக்காமல் வரிசையில் இருந்து வெளியேறலாம்.

**இறந்த, இல்லாத மற்றும் ஐயப்பாட்டுக்குரிய வாக்காளர்களின் பட்டியல்:**

8.27. ஒரு வாக்குச்சாவடி முகவர் அவரிடம் வாக்காளர் பட்டியலின் படியத்தையும், இறந்தவர், இல்லாத மற்றும் ஐயப்பாட்டுக்குரிய வாக்காளர்களின் பெயர்களின் பட்டியலையும் வேட்பாளர் அல்லது அவரது கட்சியினர் தயாரித்திருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த பட்டியலின் படியத்தைத் தலைமை அலுவலர்களுக்கும் வழங்க வேண்டும். அந்த பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரு வாக்காளர் என்று யாராவது கூறினால், வாக்குச்சாவடி முகவர் அதைத் தலைமை அதிகாரியின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும். இது ஒரு இயல்பான மறுப்பெதிர்ப்பாக இருக்காது. தலைமை அலுவலர் அந்த நபரின் அடையாளத்தை சரிபார்ப்பார்.

**வாக்காளர்களின் அடையாளத்திற்கான முறையான மறுப்பெதிர்ப்பு தெரிவித்தல்:**

8.28.1 தலைமை அலுவலர் பட்டியலை புறக்கணித்தால், வாக்குப்பதிவு முகவர் தொடர்புடைய ஆள், வாக்காளரைப் போல் ஆள்மாறாட்டம் செய்கிறார் என்று உறுதியாக நம்பினால் முறைப்படி அந்த நபரின் அடையாளத்தை மறுத்து எதிர்ப்புத் தெரிவிக்கலாம்.

2. இறந்த, இல்லாத மற்றும் சந்தேகத்திற்குரிய வாக்காளர்களின் பட்டியலில் மேற்கண்ட வாக்காளர் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும், வாக்காளர் என்று கூறிக்கொள்ளும் நபர் உண்மையான வாக்காளர் அல்ல என்று ஒரு வாக்குப்பதிவு முகவர் தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தால், வாக்குப்பதிவு முகவர் அந்த நபரின் அடையாளத்தை மறுத்து முறையாக எதிர்ப்பு தெரிவிக்கலாம்.

3. வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ள ஒவ்வொரு நபரும் தேர்தலில் வாக்களிக்க உரிமை உண்டு மற்றும் வாக்காளர் என்று கூறிக்கொள்ளும் நபர், பெயர் மற்றும் பிற விவரங்களை சரியாக அளித்தால், பொதுவாக அவர் அந்த வாக்காளராகவே கருதப்படுவார். எனவே, வாக்குச்சாவடி முகவர்கள், மறுத்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நபரின் அடையாளம் குறித்து உறுதியாக இருக்கும்போது மட்டுமே வாக்காளரின் அடையாளத்தை மறுத்து எதிர்ப்புத் தெரிவிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மறுத்து எதிர்த்தல் கட்டணம்

8.29. தலைமை அலுவலர், வாக்குச் சாவடி முகவர் விடுக்கும் மறுத்து எதிர்த்தலை ரூ.2ஐ ரொக்கமாக்க கட்டாதவரை ஏற்கமாட்டார். அவருக்கு ரூ. 2 ரொக்கமாக. தொகை செலுத்தப்பட்ட பிறகு தலைமை அதற்குரிய பெறுகைச் சீட்டை வழங்குவார்.

மறுத்து எதிர்த்தல் மீதான விசாரணைச் சுருக்கம்:

8.30.1 ஒரு வாக்காளரின் அடையாளத்தை மறுத்து ஒரு வாக்குப்பதிவு முகவர் முறையாக எதிர்க்கும்போது, ஆள் மாறுகைக்கான தண்டனை பற்றி மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நபரை தலைமை அலுவலர் எச்சரிப்பார், மேலும் வாக்காளர் பட்டியலில் உள்ள தரவு உள்ளீட்டை முழுமையாகப் படித்து, அவர்தானா என்று அவரிடம் கேட்பார். பின்னிணைப்பு 8.8 படிவத்தில் அவரது பெயர் மற்றும் முகவரியை எழுதி அவரின் கையொப்பம் மற்றும் அவரது கட்டைவிரல் பதிவைப் பதிக்கும்படி கேட்பார். அந்த அவ்வாறு செய்ய மறுத்தால், தலைமை அலுவலர் அவரை வாக்களிக்க அனுமதிக்க மாட்டார்.

2. தலைமை அலுவலர், மறுப்பு தெரிவிக்கப்பட்ட வாக்குகளின் பட்டியலில் உள்ளீடுகளை செய்து முடித்து, தொடர்புடைய பத்தியில் மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நபரின் கையொப்பம் அல்லது கட்டைவிரல் பதிவை பெற்ற பிறகு, மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நபர், வாக்காளர் அல்ல என்று காட்ட உரிய சான்றுகளை அளிக்கும்படி மறுப்புத் தெரிவித்தவரிடம் கேட்பார். எதிர்ப்புத் தெரிவித்தவர் தனது மறுப்புக்கு ஆதரவாக முதன்மையான சான்றுகளை அளிக்கத் தவறினால், தலைமை அலுவலர் மறுப்பை அனுமதிக்கமாட்டார் மற்றும் மறுப்புத் தெரிவிக்கப்பட்ட நபரை வாக்களிக்க அனுமதிப்பார். விசாரணையின் போது, உண்மையை அறியும் வகையில் மறுத்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டவரிடம் தேவையான இன்றியமையாத கேள்விகளைக் கேட்க உரிமை உடையவர். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டவர் பதிலளிக்கக் கடமைப்பட்டவர். தலைமை அலுவலர், விசாரணைக்கு உதவியாக இருக்கும் என்று கருதுகின்றவிடத்து, கிராம அலுவலர், சம்பந்தப்பட்ட வாக்காளரின் அண்டை வீட்டார் அல்லது வேறு எந்த நபர்கள் போன்ற எந்தவொரு நபரையும் சான்றாக எடுத்துக் கொள்ளலாம். அத்தகைய சான்றுகளை எடுத்துக்

கொள்ளும்போது, அவர் மறுத்து எதிர்த்தவர் மற்றும் அவருக்குச் சார்பாகச் சான்றாக (சாட்சியாக) வந்தவர் எவருக்கும் அவர் உறுதிமொழியைச் செய்து வைக்கலாம்.

3. விசாரணை முடிந்த பிறகு, மறுத்து எதிர்த்தல் நிறுவப்படவில்லை என்று தலைமை அலுவலர் கருதினால், அவர் மறுத்து எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நபரை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும். எனினும், மறுத்து எதிர்த்தல் நிறுவப்பட்டதாக அவர் கருதும் இடத்தில், தலைமை அலுவலர் வாக்களிப்பதில் இருந்து மறுத்து எதிர்க்கப்பட்ட நபரை வாக்களிக்க தகுதியில்லாதவர் என்றாக்கி வாக்களிக்க விடக்கூடாது.. மேலும், தலைமை அலுவலர், சம்பந்தப்பட்ட அந்த நபரை அந்த வாக்குச் சாவடியில் பணியில் இருக்கும் காவலரிடம் ஒப்படைத்து, ஆள் மாறாட்டம் செய்த குற்ற வழக்கில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதியின் அதிகார வரம்புக்குள் உள்ள காவல் நிலைய காவல் அதிகாரிக்கு புகார் மனுவை அளிப்பார்.

மறுப்பு எதிர்த்தல் கட்டணம் திருப்பி அளித்தல்

8.31.1. விசாரணை முடிந்த பிறகு, தலைமை அலுவலர், மறுப்பு எதிர்ப்புக் கட்டணமாக பெறப்பட்ட ரூ. 2ஐ மறுத்து எதிர்ப்புத் தெரிவித்தவருக்கு அளிப்பார். வாக்குகளின் பட்டியலில் மேலே சொல்லப்பட்ட பின்னிணைப்பு 8.8இன்படி பொருத்தமான பத்தியில் (பத்தி 10), உள்ளபடி உரிய பெறுகைச் சீட்டைப் பெற்றுக்கொண்டும் தொடர்புடைய பெறுகைச் சீட்டின் புத்தகத்தின் அடிக்கட்டையில் உள்ளதன்படியும் திருப்பி அளிப்பார்.

2. எனினும், தலைமை அலுவலர், மறுத்து எதிர்த்தல் அற்பமானது அல்லது நல்லெண்ணத்துடன் செய்யப்படவில்லை என்று கருதினால், அவர் மறுத்து எதிர்த்தல் கட்டணத்தை மறுத்து எதிர்த்தவருக்கு அளிக்காமல் அரசுக்குக் கட்டிவிடுவார்.

வாக்காளர் பட்டியலிலுள்ள எழுத்தர் மற்றும் அச்சுப் பிழைகள் புறக்கணிக்கப்படுதல்:

8.32. ஒரு வாக்காளரைப் பொறுத்தமட்டில், வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்கள், சில சமயங்களில் தவறாக அச்சிடப்பட்டிருக்கின்றன, அல்லது அந்த ஆளுக்குப் பொருந்தாமல் போகின்றன. எடுத்துக்காட்டாக வாக்காளரின் வயது. வாக்குச்சாவடி முகவர்கள் ஒரு வாக்காளரின் அடையாளம் குறித்து பிறவாறு மனநிறைவு கொள்கின்றார்கள் என்றால், அத்தகைய வாக்காளர் தொடர்பான பதிவு எதிலுமுள்ள எழுத்து மற்றும் அச்சுப் பிழைகளைப் புறக்கணிக்கவேண்டும், மற்றும் அத்தகைய வாக்காளர் பற்றிய மறுப்புரைகளை எழுப்புதலும் கூடாது.

**வாக்காளரின் தகுதிப்பாடு பற்றி வினா எழுப்புதல் கூடாது :**

8.33. வாக்காளர் பட்டியலின் குறியிடப்பட்ட படியத்தில் (பிரதியில்) பெயர் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆள் ஒவ்வொருவரும், தேர்தலில் வாக்களிக்க உரிமைப்பாடுடையவர் ஆவார். அத்தகைய ஆளின் அடையாளம் பற்றி ஐயப்பாடு எதுவும் இல்லாதிருக்கும் வரையில், அத்தகையவர் ஒரு வாக்காளராகப் பதிவு செய்யப்படுவதற்கான தகுதிப்பாடு பற்றித் தலைமை அலுவலர் முன்பு வாக்குச்சாவடியில் வாக்குச்சாவடி முகவர் ஒருவரால் வினா எதுவும் எழுப்பப்படுதல் ஆகாது.

**உரிய வயதை அடையாத வாக்காளர்களால் வாக்களிக்கப்படுவதற்கு எதிரான முன்னெச்சரிக்கைகள்:**

8.34.1 மேலே உரைத்தவாறு, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிற மற்றும் வாக்காளராக இருக்கக்கூடிய ஆள் ஒருவரின் தகுதிப்பாடு, வாக்குச்சாவடியிலுள்ள தலைமை அலுவரால் வினவப்படவோ, அல்லது விசாரிக்கப்படவோ முடியாது. எனினும், தலைமை அலுவலர் ஒரு வாக்காளரின் அடையாளம் பற்றியும், வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்பட்டிருக்கும் உண்மை விவரம் பற்றியும் முதல் நிலையிலேயே மனநிறைவு கொள்கிறார்; ஆனால், அத்தகைய ஆள் குறைந்த அளவு வாக்களிக்கும் வயதுக்கும் குறைவாக இருக்கிறார் எனக் கருதுகின்றார் என்றால், தொடர்புடைய ஆளிடமிருந்து, அவரது வயது பற்றி, வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் (பின்னிணைப்பு-8.9) ஒரு விளம்புகையைப் பெறுமாறு ஆணையத்தினால் தலைமை அலுவலர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார். அத்தகைய வாக்காளரிடமிருந்து விளம்புகையைப் பெறுவதற்கு முன்பு, வாக்காளர் பட்டியலில் அவரது பெயரைச் சேர்ப்பது தொடர்பாக ஒரு தவறான விளம்புகையைச் செய்ததற்காக 1950ஆம் ஆண்டு மக்கள் சார்பாண்மைச் சட்டத்தின் 31ஆம் பிரிவிலுள்ள தண்டனை வகைமுறைகளைப் பற்றித் தலைமை அலுவலர் அவருக்குத் தெரிவிப்பார்.

8.34.2 மேலே சொல்லப்பட்டவாறு அத்தகைய வாக்காளர்களைப் பொறுத்தமட்டில் தலைமை அலுவலர் நடவடிக்கையை எடுக்கும் வகையில், வாக்காளர் பட்டியலில் பெயர்கள் சேர்க்கப்பட்டு, ஆனால், வாக்களிக்கும் வயதுக்கு மிகவும் குறைவானவராகக் காணப்படுகிற, அத்தகைய வாக்காளர்களின் நேர்வுகளை, வாக்குச்சாவடி முகவர்கள் தலைமை அலுவலரின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

**அழியாத மையின் பயன்பாடு :**

8.35.1 விதி 29 இன் கீழ், எந்த வாக்காளரின் அடையாளம் பற்றி தலைமை அலுவர் அல்லது நேர்வுக்கேற்ப உதவித் தலைமை அலுவலர் மனநிறைவு கொண்டிருக்கிறாரோ அந்த வாக்காளர் ஒவ்வொருவரின் இடது சுண்டு விரல்

அழியாத மையினால் குறியிடப்படுதல் வேண்டும். இது முதலாம் வாக்குப்பதிவு அலுவலரால் செய்யப்படும்.

8.35.2 அழியாத மையின் பயன்பாடு ஆள்மாறாட்டத்திற்கு எதிராகவும் அதே வாக்காளர் ஒரு தடவைக்கு மேல் வாக்களிக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் உள்ள ஓர் உயிர்நிலையான பாதுகாவல் ஆகும், வாக்காளர் எவரும் தமது இடது சுண்டுவிரல், பார்வையிடப்படுவதை அல்லது அழியாத மையினால் குறியிடப்படுவதை அனுமதிக்கமறுக்கிறார் அல்லது அவர் தமது இடது சுண்டு விரலில் அத்தகைய ஒரு குறியை ஏற்கனவே கொண்டிருக்கிறார் அல்லது அவர் மைக் குறியை அகற்றும் நோக்குடன் செயல் எதையும் செய்கிறார் என்றால், அவரை வாக்களிக்க அனுமதித்தல் கூடாது.

8.35.3 வாக்காளர் இடது சுண்டுவிரல், அவரது அடையாளம் உதவித் தலைமை அலுவலரால் கண்டறியப்படுகிற பின்பு உடனடியாகவும், இரண்டாம் வாக்குப் பதிவு அலுவலரால் வாக்குச்சீட்டின் அடிச்சீட்டில் அவரது கையொப்பம் அல்லது பெருவிரல் பதிவு பெறப்படுவதன் முன்பு, குறியிடப்படுதல் வேண்டும். இந்த அறிவுறுத்தத்தின் அடிப்படையான நோக்கம், வாக்காளரின் சுண்டுவிரலில் அழியாத மை காய்ந்து அவர் வாக்குச்சாவடியை விட்டு நீங்குவதன்முன்பு முறையான அழியாத மைக்குறியை கொண்டிருப்பதற்குப் போதிய கால இடைவெளி இருக்கவேண்டும் என்பதாகும். அவரது சுண்டுவிரல் மீது ஒரு தெளிவான அழியாத மைக்குறி உள்ளது என்பதைச் சரிபார்க்கும் பொருட்டு. அவர் வாக்குச்சாவடியைவிட்டுப் போவதற்கு முன்பு மீண்டும் அவ்விரலைச் சோதித்துப்பார்க்க வேண்டும். வாக்காளர் மையை அழித்திருக்கிறார், அல்லது முறையான மைக்குறி காணப்படவில்லை என்றால் அவரது கண்டு முன்விரல் அழியாத மையினால் மீண்டும் குறியிடப்படவேண்டும்.

பார்வையற்ற அல்லது ஏலாத வாக்காளர்களால் வாக்களிக்கப்படுதல்:

8.36.1 பார்வையின்மை அல்லது ஏதேனும் உடல் ஏலாமை காரணமாக வாக்காளர் ஒருவர் வாக்குச்சீட்டிலுள்ள அடையாளச் சின்னங்களை அறிந்து கொள்ளவோ, அல்லது உதவியின்றி அதில் குறியிடவோ இயலாதவராக இருக்கிறார் என்று தலைமை அலுவலர் மனநிறைவு கொள்கிறார் என்றால், வாக்காளர் சார்பாகவும் அவரது விருப்பத்திற்கு இணங்கியவாறும் வாக்குச்சீட்டில் வாக்கைப் பதிவு செய்வதற்கும், வாக்களிப்பு மறைவாக இருக்கும் வகையில் வாக்குச்சீட்டை மடிப்பதற்காகவும், வாக்குப் பெட்டிக்குள் அதைச் செருகுவதற்காகவும், வாக்களிப்பு அறைக்குள் வயது வந்த துணைவர் ஒருவரை (எ.டு. 18 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுள்ளவர்) அவருடன் செல்லுவதற்கு அவர் அனுமதிப்பார். ஆனால், ஒரு வாக்காளரின் எழுத்தறிவின்மை அவரது சார்பாக வாக்குச் சீட்டில் குறியிடுவதற்காகத் துணைவர் ஒருவரின் உதவியை அவருக்கு அளிப்பதற்குப் போதியதொரு காரணமாக அமையாது.

8.36.2 ஒரு வேட்பாளர், அவருடைய தேர்தல் முகவர், அல்லது வாக்குச்சாவடி முகவர் (18 வயதுக்குக் குறையாதவர்), பார்வையற்ற அல்லது ஏலாத வாக்காளர் ஒருவருக்கு அத்தகைய துணைவராகச் செயலாற்றவும் கூடும். ஆனால், அவர் அந்த நாள் அன்று ஒரு வாக்காளருக்கு மட்டுமே அத்தகைய துணைவராகச் செயலாற்ற முடியும். அத்தகைய துணைவராகச் செயலாற்றும் ஆள், வாக்காளரின் சார்பாக அவரால் பதிவு செய்யப்பட்ட வாக்கு இரகசியத்தை அவர் காப்பாற்றுவார், மற்றும், அந்த நாள் அன்று வாக்குச்சவாடி எதிலும் வேறு வாக்காளர் எவருக்கும் துணைவராக அவர் ஏற்கனவே செயலாற்றியிருக்கவில்லை என்னும் விளைவினையுடைய விளம்புகை ஒன்றை வகுத்துரைக்கப்பட்ட படிவத்தில் (பின்னிணைப்பு 8.10) செய்யுமாறு வேண்டப்படுகிறார்.

ஆராய்வுக்குரிய வாக்குகள் :

8.37. குறிப்பிட்டதொரு வாக்காளராகத் தம்மை எடுத்துரைக்கும் ஓர் ஆள், அத்தகைய வாக்காளராக ஏற்கெனவே வேறுசில ஆள் வாக்களித்திருக்கிற பின்பு, முன் வருகிறார் என்பது நிகழலாம். அந்த நேர்வில், தேவையான' விசாரிப்புக்குப் பின்பு, உண்மையான வாக்காளர் என்று அத்தகைய ஆளின் அடையாளம் பற்றித் தலைமை அலுவலர் மனநிறைவு கொள்கிறார் என்றால், அவரை வாக்களிக்கத் தலைமை அலுவலர் அனுமதிப்பார். அந்நோக்கத்திற்காக, தலைமை அலுவலர் ஆராய்வுக்குரிய வாக்குகளின் பட்டியலில் (படிவம் -21) (பின்னிணைப்பு 8.11) தேவையான பதிவுகளைச் செய்து, அதில் வாக்காளரின் கையொப்பம் அல்லது பெருவிரல் பதிவைப் பெற்றுக்கொள்வார். வாக்குச்சாவடியில் பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுக் கட்டில் கடைசி வரிசை எண்ணிலிருந்து வாக்குச்சீட்டு வழங்கப்படும், மற்றும் "ஆராய்வுக்குரிய வாக்குச்சீட்டு" என்னும் சொற்கள் தலைமை அலுவலரால் அத்தகைய வாக்குச்சீட்டு மற்றும் அதன் அடிச்சீட்டு ஒவ்வொன்றின் பின்புறத்திலும் எழுதப்படும் என்பதைத் தவிர மற்றப்படி வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படும் சாதாரண வாக்குச்சீட்டு வாக்காளருக்கு வழங்கப்படும். அத்தகைய ஆராய்வுக்குரிய வாக்குச்சீட்டு, வாக்களிப்பு அறையில் வாக்காளரால் குறியிடப்பட்டு மடிக்கப்பட்ட பின்பு, வாக்குப்பெட்டியில் போடப்படாமல், அந்த நோக்கத்திற்காகச் சிறப்பாக வைக்கப்பட்டிருக்கும் ஓர் உறையில், தலைமை அலுவலரால் அது தனியே வைக்கப்பட வேண்டும்.

வாக்காளர் வாக்களிக்காதிருக்க முடிவு செய்தல் :

8.38. வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டைப் பெற்றபின்பு தமது வாக்கைப் பதிவு செய்யாதிருக்க முடிவு செய்கிறார் என்றால், அவர் தமது வாக்கைப் பதிவு செய்யுமாறு வற்புறுத்தப்படுதலோ கட்டாயப் படுத்தப்படுதலோ ஆகாது. அவர் தமது வாக்கை பதிவுசெய்யாதிருக்க முடிவு செய்திருக்கிறார் என்பதற்கான ஒரு குறிப்புரை வாக்காளர் பட்டியலின் குறியிடப்பட்ட படியத்தில் செய்யப்படுதல் வேண்டும். வாக்குச்சீட்டும் அத்தகைய வாக்குச் சீட்டின் அடிச்சீட்டும், 'திருப்பிக்கொடுக்கப்பட்டது அறவு (ரத்து) செய்யப்பட்டது' என்னும் சொற்களை அதன் மேல் எழுதுவதன் முலம்

அறவுசெய்யப்படுதல் வேண்டும். அத்தகைய அறவு செய்த வாக்குச்சீட்டுக்கான உறையில் அறவு செய்த வாக்குச் சீட்டுப் பேணிவைக்கப்படுதல் வேண்டும்.

வாக்களிப்பு இரகசியத்தை மீறுதல் :

8.39 ஒரு வாக்குச்சீட்டு வழங்கப்பட்டிருக்கிற வாக்காளர் ஒவ்வொருவரும் வாக்குச்சாவடிக்குள் வாக்களிப்பு இரகசியத்தைப் பேணுமாறும் வகுத்துரைக்கப்பட்ட வாக்களிக்கும் நடைமுறையைக் கடைபிடிக்குமாறும் வேண்டப்படுகிறார். தலைமை அலுவலரால் வாக்காளர் எவருக்கும் எச்சரிக்கை கொடுக்கப்பட்ட பின்பும் வாக்களிப்பு இரகசியத்தைப் பேணவும் வாக்களிக்கும் நடைமுறையை கடைபிடிக்கவும் அவர் மறுக்கிறார் என்றால், அவர் வாக்கைப் பதிவுசெய்திருந்தாலும் அல்லது இல்லை என்றாலும், அவருக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டு தலைமை அலுவலராலோ அல்லது அவரது கட்டளையின்படி ஒரு வாக்குப்பதிவு அலுவலராலோ அவரிடமிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும். அத்தகைய வாக்காளர் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார். அத்தகையதொரு நேர்வில் வாக்காளரிடமிருந்து திரும்பப்பெறப்பட்ட அந்த வாக்குச்சீட்டு வாக்குப் பெட்டிக்குள் போடப்படாமல் அத்தகைய வாக்குச்சீட்டின் பின்புறத்திலும் அதன் அடிச்சீட்டிலும் அறவு ரத்து செய்யப்பட்டது, வாக்களிப்பு நடைமுறை மீறப்பட்டது என்னும் சொற்களைப் பதிவு செய்வதன் மூலமும் அந்தச் சொற்களின் அடியில் தமது கையொப்பத்தை இடுவதன் மூலமும் தலைமை அலுவலரால் அறவு செய்யப்படும். அவ்வாறு அறவு செய்யப்பட்ட வாக்குச்சீட்டுகள் அறவு செய்த வாக்குச்சீட்டுகளுக்கான உறையில் தலைமை அலுவலரால் பேணிவைக்கப்படும்.

வாக்குப்பதிவு முடியும் நேரத்தில் வந்திருக்கும் ஆட்கள் வாக்களித்தல்:

8.40. தலைமை அலுவலர் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் வாக்குச் சாவடியை மூடிவிடுவார். மற்றும் அதன்பின்பு வாக்குச்சாவடிக்குள் வாக்காளர் எவரையும் அனுமதிக்கமாட்டார். ஆனால், வாக்குச்சாவடி மூடப்படுவதற்கு முன்பு அங்கு வந்திருக்கும் வாக்காளர் அனைவரும் குறித்துரைக்கப்பட்ட முடிவு நேரத்திற்கு அப்பாலும் வாக்குப்பதிவு நோக்கத்திற்காக அது தொடரப்பட வேண்டியிருந்தாலும் கூட, தங்களுடைய வாக்குகளை அளிக்க அனுமதிக்கப்படுவார்கள். மேலுள்ள நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட முடிவு நேரத்தில் வரிசையில் நின்று வாக்களிக்கக் காத்துக்கொண்டிருக்கும் வாக்காளர்கள் அனைவரும், தலைமை அலுவலர், தம்மால் முழுக் கையொப்பமும் வரிசை எண் 1 முதற்கொண்டு வரிசையாக எண்ணும் இடப்பட்ட துண்டுத் தாள்களைக் கொடுப்பார். அவர் அதன்பின்பு ஆள் எவரையும் வரிசையில் சேர அனுமதிக்கமாட்டார். இதனை உறுதி செய்யும் பொருட்டு வரிசையின் கடைசி முனையிலிருந்து அதன் தலைப் பகுதி நோக்கிப் பின்புறமாக வந்து அங்குள்ள வாக்காளர்களுக்கு மேற்சொன்ன துண்டுத்தாள்கள் வழங்குவார்.

## வாக்குப் பதிவு எந்திரங்களை மூடுதல்

8.4.1.

(அ) வாக்குப்பதிவு முடிவடைந்த பின்பு, தலைமை அலுவலர் வாக்குப்பதிவு எந்திரத்தின் வாக்குப்பதிவு கட்டுப்பாட்டு எந்திரத்தில் உள்ள "மூடு" பொத்தானை அழுத்தி மூடி விடுவார். மேற்கொண்டு வாக்களிக்க முடியாத நிலையில் வாக்குச்சாவடி முகவர்கள் முன்னிலையில் அதனைக் காப்புறுதி செய்வார்.

(ஆ) வாக்குப்பதிவு எந்திரத்தை, அல்லது (வாக்குச்சாவடியில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்துப்படுகிறது என்றால்) வாக்குப்பதிவு எந்திரங்களை மூடிக் காப்புறுதி செய்தபின்பு, தலைமை அலுவலர் வாக்குப் பதிவு எந்திரத்தை வாக்குச்சாவடி முகவர்களின் முன்னிலையில் மூடி முத்திரையிடுவார். அவர் முகவர்களையும் அவர்கள் விரும்பினால், அவர்களின் முத்திரையைப் பதிக்க அனுமதிப்பார். இதன் பின்பு, தலைமை அலுவலரால், அந்த வாக்குப்பதிவு எந்திரம் அதற்குரிய பெட்டியில் வைக்கப்பட்டு முகவரி அட்டைகளுடன் முத்திரையிடப்படும். தலைமை அலுவலர் பதிக்கும் முத்திரையுடன் கூடுதலாக அங்கு இருக்கும் முகவர்களின் முத்திரையையும் பதிக்க அவர் அனுமதிப்பார்.

## தலைமை அலுவலரால் பதிவான வாக்குகளின் கணக்கின் படியம் அளிக்கப்படுதல்

8.4.2. தலைமை அலுவலர் வாக்குப்பதிவின் முடிவில் வகுத்துரைக்கப்பட்ட படிவம் 22Aஇல் வாக்குப்பதிவுக் கணக்கு ஒன்றை ஆயத்தம் செய்யவேண்டும். வாக்குப்பதிவின் முடிவில், வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர் ஒவ்வொருவருக்கும், வாக்குபதிவுக் கணக்கின் சான்றொப்பமிட்ட படியம் ஒன்றை, அவரிடமிருந்து அதற்கான வரவுச்சீட்டைப் பெற்றுக்கொண்ட பின்பு கொடுக்குமாறு, மேலுள்ள விதியினால் அவர் வேண்டப்படுகிறார். ஆதலால், வாக்கு எண்ணிக்கை நேரத்தில் வாக்குச்சாவடி முகவர்களின் வேட்பாளர்களுக்கு அத்தகைய கணக்கு மிகவும் தேவைப்படும் என்பதால், அவர்கள் தலைமை அலுவலரிடமிருந்து வாக்குப்பதிவுக் கணக்கின் படியம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதை அவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். தலைமை அலுவலரிடமிருந்து வாக்குப்பதிவுக் கணக்கின் படியம் ஒன்றைப் பெற்றுக்கொள்கிற வாக்குச்சாவடி முகவர் ஒவ்வொருவரும், தலைமை அலுவலர் வாக்குப்பதிவின் முடிவில் செய்ய வேண்டுமென்று ஆணையத்தால் வகுத்துரைக்கப்பட்ட விளம்புகைப் படிவத்தில் (பின்னிணைப்பு-8.7 பகுதி-III) தமது கையொப்பத்தைப் பதிக்க வேண்டும், வாக்குப்பதிவுக் கணக்கின் படியம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வாக்குச்சாவடி முகவர் எவரும் மறுக்கிறார் என்றால், தலைமை அலுவலர் மேலே சொல்லப்பட்ட விளம்புகையில் அத்தகைய வாக்குச்சாவடி முகவர் ஒவ்வொருவரின் பெயரையும் குறித்துக்கொள்வார்.

**தேர்தல் தாள்களை முத்திரையிடுதல், வாக்குச்சாவடி முகவர்களால் அவற்றின்மீது முத்திரைகள் பதிக்கப்படுதல்**

**8.43.1 வாக்குப்பதிவு முடிந்தபின்பு, தேர்தல் ஆணையத்தின் விதிக்கும் அறிவுறுத்தங்களுக்கும் இணங்கியவாறு, தனித்தனிச் சிப்பப்பொதிகளில் தேர்தல் தாள்கள் எல்லாவற்றையும் வைத்து முத்திரையிடுவார். வாக்குச்சாவடியில் வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்கள், தலைமை அலுவலரின் முத்திரைக்கும் கூடுதலாகத் தங்களுடைய முத்திரைகளையும், பின்வரும் ஆவணங்கள் அடங்கிய உறைகள் மற்றும் சிப்பப் பொதிகள் மீது பதிக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.**

**(i) குறியிடப்பட்ட வாக்காளர் பட்டியல்**

**(ii) செயற்பாட்டுக்குரிய வாக்காளர் பட்டியல்**

**(iii) வாக்காளர்கள் பதிவேடு**

**(iv) பதிவான வாக்குகளின் கணக்கு**

**(v) பிரித்தெடுக்கக் கூடிய நினைவு செயலி**

**(vi) பயன்படுத்தப் படாத வாக்காளர் குறிப்புத்தாள்கள்**

**(vii) பயன்படுத்திய வாக்குச்சீட்டுகளில் அடிச்சீட்டுகள்**

**(viii) கையொப்பமிடப்பட்ட ஆனால் பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள் ஏதேனும் இருந்தால்;**

**(ix) பயன்படுத்தப்படாத மற்ற வாக்குச் சீட்டுகள் அடிச்சீட்டுகளுடன்;**

**(x) வாக்களிக்கும் முறையை மீறியதற்காக முறித்தறவு (ரத்து) செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள்;**

**(xi) திரும்பப்பெற்ற மற்றும் பிற முறித்தறவு (ரத்து) செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள்;**

**(xii) ஆராய்வுக்குரிய வாக்குச் சீட்டுகள் மற்றும் படிவம் 21இல் ஆராய்வு செய்யப்பட்ட வாக்குகள் பட்டியல்;**

**(xiii) எதிர்த்துரைக்கப்பட்ட வாக்குகளின் பட்டியல்;**

**(xiv) பயன்படுத்தப்படாத மற்றும் சேதமடைந்த தாள் முத்திரைகள் ஏதேனும் இருந்தால்;**

**(xv) வாக்குச்சாவடி முகவர்களின் பணியமர்த்த கடிதங்கள்; மற்றும்**

**(xvi) தேர்தல் அதிகாரி உத்தரவிட்ட பிற ஆவணங்களை மூடி முத்திரையிட்ட சிப்ப்ப்பொதியில் வைக்க வேண்டும்.**

**8.43.2 வாக்குச்சாவடி முகவர்கள் தங்களுடைய வேட்பாளர்களின் நலன்கருதி தங்களுடைய முத்திரைகளை மேற்சொன்ன தேர்தல் ஆவணத்தாள்கள் உள்ள சிப்பப்பொதிகளின் மீது இடுமாறு அறிவுரையளிக்கப்படுகிறார்கள்.**

**வாக்குப்பதிவு எந்திரங்களையும் தேர்தல் ஆவனத்தாள்களையும் திரட்டுகை சேகரிப்பு மையத்துக்கு அனுப்பிவைத்தல்**

8.44. தலைமை அலுவலரால் வாக்குப்பெட்டிகளும் அனைத்துத் தேர்தல் ஆவணத்தாள்களும் முத்திரையிடப்பட்டும் பாதுகாப்புறுதி செய்யப்பட்டதன் பின்பு, அவர் அவற்றைத் திரட்டுகை/ சேகரிப்பு மையத்தில் ஒப்படைப்பார் அல்லது ஒப்படைக்கும்படி செயவிப்பார்.

**வாக்குப்பதிவு எந்திரங்கைள கொண்டுசெல்லும் ஊர்திகளுடன் செல்லுதல்**

8.45. வாக்குச் சாவடி முகவர்கள் வாக்குப் பதிவு எந்திரங்களையும் தேர்தல் ஆவணத்தாள்களும் திரட்டுகை/சேகரிப்பு மையத்திற்குக் கொண்டு செல்லும் ஊர்தியுடன் செல்ல இசைவளிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் தங்களுடைய சொந்த போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவேண்டும் மற்றும் வாக்குப்பதிவு எந்திரங்களையும், தோதல் ஆவணத்தாள்களையும் கொண்டுசெல்லும் ஊர்தியில் பயணம் செய்ய இசைவளிக்கப்படமாட்டார்கள்.

**வாக்குப்பதிவு நாளன்றே வாக்கெண்ணிக்கை நடைபெறாத விடத்து வாக்குப்பதிவு எந்திரங்களின் காப்படைவு ( Custody ) :**

8.46. ஒரு தொகுதியில் வாக்குப்பதிவு முடிவடைந்த பின்பு, வாக்குப்பதிவு எந்திரத்தை சேகரிப்பு இடத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, வாக்கெண்ணும் இடத்திற்கு அவை கொண்டுசெல்லப்பட்டு முறையான காவலரின் கீழ் பாதுகாவலான காப்படைவில் வைக்கப்படும். வாக்குச் சாவடிகளிலிருந்து வாக்குப்பதிவு செய்யப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்களைச் சேகரிப்பதற்கும் அவற்றைச் சேகரிப்பு இடத்திற்குக் கொண்டுசெயல்லவும் தேர்தல் நடத்தும் அலுவலர் அனுப்பப்பட்ட சேகரிப்புச் சார்பிளான நிகழ்வும் திட்டமும் வழித்தடமும் பற்றிய உங்களுக்கு அவர் முன்கூட்டியே தகவலளிப்பார். நீங்கள் விரும்பினால், அந்தச் சேகரிப்புச் சார்பினர்களுடன் சேர்ந்து போகுமாறு உங்கள் முன்பு நீங்கள் கேட்டுககொள்ளலாம் அதுவரை ஊர்திகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதால், நீங்கள் உங்களது சொந்த ஏற்பாடுகளை அவர்களுடைய போக்குவரத்துக்காக செய்துகொள்ளவேண்டும். நீங்கள் விரும்பினால், வாக்குப்பதிவு எந்திரங்கள் பேணிக்காக்கப்படுகிற இடத்தில், விழிப்புடன் கவனித்துக் கொள்வற்காக ஒரு முகவரை நீங்கள் காவல் வைக்கலாம். தேர்தல் நடத்தும் அலுவலரால் இடப்பட்டிருக்கலாகும் முகவர்களுடனும் கூடுதலாக வாக்குப்பதிவு எந்திரங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்தின் கதவுகளிலும் சன்னல்களிலும், அந்த முகவர் தமது முத்திரையையும் இடுவதற்கு அனுமதிக்கப்படுவர். கேட்பான அல்லது அவருடைய தேர்தல் முகவர் அத்தகைய முத்திரைகளைத் தாமே இடவில்லை என்னும் நேர்வில் அத்தகைய முத்திரையை இடும் முகவரின் அடையாளத்தைச் சரிபார்ப்பதை இசையளிப்பதற்காக, வேட்பாளர் அவரது முழு விவரங்களையும் கொடுக்கவேண்டும். வாக்குப்பதிவு எந்திரங்கள் பெறப்பட்டு சேகரிக்கப்பட்டு அந்த அறை பூட்டப்பட்ட பின்பு, எவர் ஒருவரும் வாக்கெண்ணிக்கைக்காகக் குறித்திட்ட நாள் காலை வரையில் அதனுள் போவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். இடைக்காலத்தில் ஏதோ சில காரணத்திற்காக அந்த அறை திறக்கப்பட வேண்டும்

என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் வேட்பாளர்களுக்குத் தகவல் தெரிவித்து அவர்கள் முன்னிலையில் அறையைத் திறப்பார். மற்றும் அறையைத் திறப்பதற்குரிய நோக்கம் நிறைவுற்ற பின்பு உடனடியாக வேட்பாளர்கள் அல்லது அவருடைய சார்பாளர்கள் கதவுகளையும் சன்னல்களையும் மீண்டும் முத்திரையிட அனுமதிக்கப்படுவார்கள். அறையில் நுழையும் ஆள் வருகையின் நோக்கம், நேரம், வெளிவந்த நேர் முதலியவை பற்றிய ஒரு முழுப்பதிவுகளும் கிடைக்கத்தக்கதாகும் பொருட்டு, ஒரு விவரக்குறிப்பேடு பேணி வைக்கப்பட வேண்டும்.,

கலகம் முதலியவற்றின் பொருட்டு வாக்குப்பதிவு ஒத்திவைப்பு

847-1 ஒரு வாக்குச்சாவடியின் தலைமை அலுவலர்-

(i) வெளளப்பெருக்கு போன்ற இயற்கைக் குழப்பம் கடுமையான புயற்காற்று போலும் அதுபோன்றால், அல்லது

(ii) வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவை நடத்த முடியாதபடி செய்யா அமைதிக் குலைவு, அல்லது

(iii) வேறு ஏதேனும் போதிய காரணம்

ஆகியவற்றின் பொருட்டு வாக்குப் பதிவை ஒத்திவைப்பதற்கு அதிகாரமளிக்கப் பெற்றிருக்கிறார் .

8.47.2 ஒரு கலகம் அல்லது வெளிப்படை வன்முறை முயற்சி எதுவும் இருக்கிறது. என்றால், தலைமை அலுவலர் அதைக் கட்டுப்படுத்தக் காவலரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எனினும், அது கட்டுப்படுத்தபட முடியவில்லை மற்றும் வாக்குப்பதிவைத் தொடர்ந்து நடத்த இயலவில்லை என்றால் தேர்தல் அலுவலர் வாக்குப்பதிவை ஒத்திவைக்கலாம். ஏதேனும் இயற்கைக்குழப்பம் அல்லது வேறு போதிய காரணத்தின் பொருட்டு வாக்குப் பதிவை நடத்துவது இயலாததாகிறது என்றால், அப்போதும் வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட வேண்டும். கடந்து செல்லும் ஒரு மழைப்பொழிவு அல்லது கடுங்காற்று வாக்குப்பதிவை ஒத்திவைக்கப் போதியதொரு காரணமாக ஆகாது. வாக்குப்பதிவை ஒத்திவைக்கத் தலைமை அலுவலருக்குக் கொடுக்கப்பட்ட உளத்தேர்வு (discretion) அதிகாரம், அரிதாகவும் வாக்குப் பதிவை நடத்துவது இயலாததாகிற நேர்வுகளிலும் மட்டுமே செலுத்தப்படவேண்டும்.

8.47.3 வாக்குப்பதிவை ஒத்திவைக்கும் நேர்வு ஒவ்வொன்றிலும், தலைமை அலுவலர் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு முழுமையான உண்மை விவரங்களுடன் உடனடியாக அறிக்கை செய்திடுவார். ஒரு வாக்குப் பதிவு ஒத்திவைக்கப்படுகிற இடத்திலெல்லாம், மாநிலத் தேர்தல் ஆணையத்தால் பிந்திய நிலையில் அறிவிக்கை செய்யப்பட வேண்டிய ஒரு நாளன்று வாக்குப்பதிவு நடைபெறும் என்று, வந்திருக்கும் அனைவருக்கும் முறைப்படி அறிவிப்பார்.

8.47.4 வாக்குப்பதிவு ஓர் இயல்பான வழியில் முடிவுக்கு வந்திருந்தாற்போன்றே, தலைமை அலுவலர், பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்(கள்), இனிமேலும் பயன்படுத்தவேண்டிய வாக்குப்பதிவு எந்திரங்கள், பயன்படுத்திய வாக்காளர் பதிவேடு, வாக்குப்பதிவுக் குறிப்பு தாள்கள், மற்றும் அனைத்துத் தேர்தல் ஆவணத்தாள்கள் ஆகியவற்றை வாக்குச்சாவடி முகவர்களின் முன்னிலையில் முத்திரையிட்டுப் பாதுகாப்புறுதி செய்வார், மற்றும் -

(i) முத்திரையிடப்பட்ட வாக்குப்பதிவு எந்திரம்(கள்)
(ii) முத்திரையிடப்பட்ட வாக்குப்பதிவுக் கணக்கு
(iii) முத்திரையிடப்பட்ட பிரித்தெடுக்கப்படக்கூடிய நினைவுச் செயலி
(iv) முத்திரையிடப்பட்ட வாக்காளர் பதிவேடு
(v) வாக்காளர் பட்டியலின் பயன்படுத்தப்பட்ட படியங்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதிகள்
(vi) வாக்காளர் பட்டியலின் குறிக்கப்பட்ட படியைக் கொண்ட முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதிகள்.
(vii) பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுகள் மற்றும் ரத்து செய்யப்பட்ட வாக்குச் சீட்டுகள் அடங்கிய முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதிகள்.
(viii) முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதியில், மாநில தேர்தல் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்ட வேறு ஏதேனும் ஆவணங்கள் அடங்கிய முத்திரையிடப்பட்ட சிப்ப்ப்பொதியில் வைக்க வேண்டும்.
(ix) வாக்கெடுப்பில் பயன்படுத்தப்படும் மற்ற அனைத்து சிப்பப்பொதிகள் மற்றும் குறியிடப்பட்ட அல்லது முத்திரையிடப்பட்ட பொருள்கள்
(x) பயன்படுத்தப்படாத வாக்காளரின் குறிப்புச் சீட்டுகள் அடங்கிய முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதிகள்.

8.47.5 இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தேர்தல்கள் ஒரே சமயத்தில் நடை பெறுகிறபோது, மேலே சுட்டுகை செய்த (v) முதல் (vii) வரையுள்ள இனங்களின் கீழ், அனைத்துத் தேர்தல்களுக்கும் ஒரு பொது சிப்பப்பொதி செய்யப்படக்கூடும்.

ஒத்திவைக்கப்பட்ட வாக்குப்பதிவு முடிவடைதல் :

3.47.6 ஒரு வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறவிடத்து, ஒத்திவைக்கப்பட்ட வாக்குப் பதிவானது, ஒத்திவைப்பதை அடுத்து முன்பு அது எந்தக் கட்டத்தில் விடப்பட்டதோ அந்தக் கட்டத்திலிருந்து, மாநிலத் தேர்தல் ஆணையத்தால் குறித்திட்ட தேதியன்றும் நேரத்திலும் மீண்டும் தொடங்கப்படும். அதாவது, வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்டதன் முன்பு ஏற்கனவே வாக்களித்திராத வாக்காளர்கள் மட்டுமே, ஒத்திவைக்கப்பட்ட வாக்குப்பதிவில் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள். தேர்தல் நடத்தும் அலுவலர், அத்தகைய ஒத்திவைக்கப்பட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிற வாக்குச்சாவடியின் தலைமை அலுவலருக்கு, தம்மால் முன்னதாகத் தலைமை அலுவலரிடமிருந்து பெறப்பட்ட

முத்திரையிட்ட அனைத்து சிப்பப் பொதிகளையும் பொருள்களையும் திருப்பியனுப்பிவைப்பார் .

8.47.7 ஒத்திவைக்கப்பட்ட வாக்குப்பதிவு மீண்டும் தொடங்கப்படுவதற்கு முன்பு வாக்காளர் பட்டியலின் குறியீட்ட படியம் (பிரதி) அடங்கியிருக்கும் முத்திரையிடப்பட்ட சிப்பப்பொதியானது, வாக்குச் சாவடிக்கு வந்திருக்கலாகும் வேட்பாளர்களின் அல்லது அவர்களுடைய முகவர்களின் முன்னிலையில், தலைமை அலுவலராக திறக்கப்படுதல் வேனாடும். மற்றும் வக்காளர் பட்டியலின் குறியிடப்பட்ட இந்த படியம் மட்டுமே ஒத்திவைக்கப்பட்ட வாக்குப்பதிவுக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

8.47.8 வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்படுவதன் முன்பு வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுகளின் அடிச்சீட்டுகள் அடங்கியிருக்கும் சிப்பப்பொதிகளையும் தேர்தல் நடத்தும் அலுவலர் தலைமை அலுவலருக்கு வழங்குவார். இந்தச் சிப்பப்பொதிகள் முற்றுறுதியாகத் தேவைப்படுகின்றன என்றாலன்றி, அவற்றைத் திறக்கக்கூடாது. வாக்களர் ஒருவர் இடத்தில் வேறு ஒருவர் வாக்களித்திருக்கையில் அத்தகையவராக அவர் உரிமை கோரி வாக்குச்சாவடிக்கு வருகிறபோது மேற்சொன்ன ஆளுக்கு ஆராய்வுக்குரிய ஒரு வாக்குச்சீட்டு வழங்கப்படவேண்டும், அந்த நோக்கத்திற்காக ஆள் மாறாட்டம் மூலம் அவர் இடத்தில் வாக்களித்த ஆளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட வரிசை எண் 21Aஆம் படிவத்தில் குறிப்பிடப்பட வேண்டும் என்று வேண்டுறுத்தப்படுகிறது .

8.47.9 மாநிலத் தோதல் ஆணையம் ஒரு புதிய வாக்குப்பதிவு வாக்குச்சாவடியில் நடத்தப்பட வேண்டும் எனக் கட்டளையிடுகிறது என்றால், அத்தகைய புதிய வாக்குப்பதிவு முதன் முதலான வாக்குப்பதிவைப் போன்று அதே முறையில் நடத்தப்படுதல் வேண்டும்.

வாக்குப் பதிவு எந்திரங்களைச் சிதைத்தல் முதலியவை காரணமாக வாக்குப்பதிவை நிறுத்திவைத்தல்

8.47.10 மாநிலத் தோதல் ஆணையம், ஒரு வாக்குச் சாவடியில் வாக்குப்பதிவு முறிவு( ரத்து) ஆகும் என விளம்புவதற்கும் , மற்றும்

(i) வாக்குச்சீட்டு அல்லது வாக்குப்பதிவு எந்திரம் எதுவும், அதிகாரம் பெற்றிராத ஆள் எவராலும் சட்டமுரணாக வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது, அல்லது

(II) வாக்குச்சீட்டு அல்லது வாக்குப்பதிவு எந்திரம் எதுவும், தற்செயலாக அல்லது வேண்டுமென்றே, சிதைக்கப்பட்டோ அல்லது இழக்கப்பட்டோ அல்லது சேதப்பட்டோ அல்லது குலைவு செய்து கெடுக்கப்பட்டோ இருக்கிறது. அந்தக் காரணத்தால் அந்த வாக்குச்சாவடியில் வாக்குப்பதியின் முடிவு கண்டறியப்பட முடியவில்லை அல்லது

(iii) வாக்குப்பதிவைப் பெரும்பாலும் சீர்குலைவு செய்யுமாறு நடைமுறையில் தவறு அல்லது முறைகேடு எதுவும் செய்யப்பட்டிருக்கிறது என்றால், அந்த வாக்குச்சாவடியில் ஒரு புதிய வாக்குப்பதிவுக்குக் கட்டளையிடுவதற்கும் தகுதிறம் உடையதாகும் .

8.47.11 அத்தகைய எதுவும் உங்கள் வாக்குச்சாவடியில் நிகழுகிறது என்றால், மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அதன் கட்டளைகளுக்காக இந்தப் பொருட்பாட்டை அறிக்கை செய்வதற்குத் தேர்தல் நடத்தும் அலுவலரை இயல்விக்கும் வகையில், தலைமை அலுவலர் உடனே முழுமையான உண்மை விவரங்களை அவருக்கு அறிக்கைசெய்ய வேண்டும்.

8.47.12. பொருட்படுத்தத்தக்க அனைத்துச் சூழ்நிலைகளையும் கருதிய பின்பு, ஆணையம் ஒரு வாக்குச் சாவடியில் புதிய வாக்குப்பதிவு நடத்தப்பட வேண்டும் எனக் கட்டளையிடுகிறது என்றால், அத்தகைய புதிய வாக்குப்பதிவு முதன் முதலான வாக்குப்பதிவைப் போன்று அதே முறையில் நடத்தப்படுதல் வேண்டும்.

8.47.13. வினவுகையிலுள்ள வாக்குச்சாவடியில் (in question) வாக்களிக்கும் உரிமைப்பாடுள்ள வாக்காளர்கள் அனைவரும், புதிய வாக்குப்பதிவில் வாக்களிக்கும் உரிமைப்பாடு உடையவர் அவர். முதன் முதலான வாக்குப்பதிவில் இடப்பட்ட அழியாத மைக்குறிகள், புதிய வாக்குப்பதிவில் புறக்கணிக்கப்பட வேண்டும். முதன் முதலான வாக்குப்பதிவில் ஏற்கனவே இடப்பட்ட குறிகளிலிருந்து புதிய வாக்குப்பதிவில் இடப்படவேண்டிய குறிகளைத் தனிவேறாகக் காட்டுவதற்காக, அழியாத மைக்குறி, புதிய வாக்குப்பதிவில் வாக்காளரின் இடது நடுவிரலில் வைக்கப்படவேண்டும்.

8.47.14. அந்த வாக்குச்சாவடியில் நடத்தப்படும் ஒரு புதிய வாக்குப்பதிவின் முடிவு, எவ்வழியிலும், வாக்காளரின் முடிவைப் பாதிக்காது அல்லது நடைமுறையிலுள்ள பிழை அல்லது முறைகேடு பொருட்படுத்தத்தக்கதன்று என மனநிறைவுகொள்கிறது என்றால், மாநிலத் தேர்தல் ஆணையம், மேற்கொண்டு தேர்தலை நடத்தி முடிப்பதற்கு முறையானது எனக்கொள்கிற கட்டளையை இடலாம். ஆணையத்தின் கட்டளைகள் தலைமை அலுவலரால் தேர்தல் நடத்தும் அலுவலரால் பின்பற்றப்படுதல் வேண்டும்.

## பின்னிணைப்பு 8.1

### படிவம் - 10

## *வாக்குச் சாவடி முகவரின் பணியமர்ததுகை

**[காண்க விதி 24 (4) ]**

**...................................................................................................... க்குத் தேர்தல்****

**மேற்சொன்ன தேர்தலில் ஒரு வேட்பாளர் வேட்பாளராக இருக்கும் ......................................................................................................இன் தேர்தல் முகவர் ஆகிய நான் ...................................................................................................... இல் உள்ள (வாக்குப்பதிவுக்காகக் குறித்த இடம்) ......................................................................................................ஆம் எண் வாக்குச்சாவடியைக் கவனித்துக் கொள்ளுவதற்கு ......................................................................................................இல் உள்ள ...................................................................................................... என்பவரை வாக்குச்சாவடி முகவராக இதன் மூலம் பணியமர்த்துகிறேன்**

**இடம்:**
**தேதி :** **வேட்பாளர் / தேர்தல் முகவர் கையொப்பம்**

---

**நான் அத்தகைய வாக்குச்சாவடி முகவராகச் செயலாற்ற உடன்படுகிறேன்.**

**இடம்:**
**தேதி :** **வாக்குச்சாவடி முகவரின் கையொப்பம்**

**தலைமை அலுவலர் முன்பு கையொப்பமிடப்பட வேண்டிய வாக்குச்சாவடி முகவரின் விளம்புகை**

**நான் படித்திருக்கிற எனக்குப் படித்துக்காட்டப்பட்டிருக்கிற, 11973 ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் 26 ஆம் பிரிவினால் தடையுறுத்தப்பட்ட எதையும் மேலுள்ள தேர்தலில் நான் செய்ய மாட்டேன் என்று நான் இதன் மூலம் நான் விளம்புகிறேன்.**

**தேதி :** **வாக்குச்சாவடி முகவரின் கையொப்பம்**
**என் முன்பு கையொப்பமிடப்பட்டது.**
**(தலைமை அலுவலர்)**

***வாக்குச்சாவடியில் அல்லது வாக்குப்பதிவுக்காகக் குறித்திட்ட இடத்தில் முன்னிடுவதற்காக வாக்குச்சாவடி முகவரிடம் கையளிக்கப்பட வேண்டும்***

***தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்கே புகுத்தப்பட வேண்டும்*
*இரண்டில் பொருந்தாத ஒன்றை அடித்துவிடுக*
*பிரிவு 26 புதுச்சேரி நகராட்சிகள் சட்டம் 1973*

**26. வாக்களிப்பு இரகசியத்தைப் பேணிவருதல்-** (1) ஒரு தேர்தலில் வாக்குகளைப் பதிவுசெய்தல் அல்லது எண்ணுதல் தொடாபான பணிக்கடமை எதனையும் செய்கிற அலுவலர், எழுத்தர், முகவர் அல்லது வேறு ஆள் ஒவ்வொருவரும், வாக்களிப்பு இரகசியத்தைப் பேணிவர, அல்லது பேணுதலில் உதவி செய்ய வேண்டும். மற்றும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட சில நோக்கங்களுக்காகத் தவிர, அத்தகைய இரகசியத்தை மீறுவதாகக் கருதப்படுகிற தகவல் எதையும் ஆள் எவருக்கும் தெரிவிக்கக்கூடாது.

(2) உடபிரிவு (1)இன் வகைமுறைகளை மீறுகிற எவரும், ஆறு மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத்தண்டளை அல்லது பணத்தண்டம், அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்

## பின்னிணைப்பு 8.2

### படிவம் - 11

### வாக்குச்சாவடி முகவரின் பணியமர்த்துகையைப் முறித்தம் ( ரத்து ) செய்தல்

**[காணக விதி 24 (7)]**

.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. **க்குத் தேர்தல்**

**பெறுநர்**

**தலைமை அலுவலர்,**

**மேலுள்ள தேர்தலில்** (.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. **என்பவரின் தேர்தல் முகவர்**) **வேட்பாளர் ஆகிய நான் , அவருடைய / என்னுடைய வாக்குச்சாவடி முகவராகிய** .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. **என்பவரின் பணியமர்த்துகையை இதன்மூலம் முறித்தறவு** ( **ரத்து** ) **செய்கிறேன்**

**இடம்** :
**தேதி**: **முறித்தம் செய்பவரின் கையொப்பம்**.

---

**தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்கே புகுத்தப்பட வேண்டும்.*

## பின்னிணைப்பு 8.3

### வேட்பாளர்கள் மற்றும் அவர்கருடைய தேர்தல் முகவர்களின் மாதிரி கையொப்பங்களுக்காக படிவமுறை

(.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. நகராட்சியின் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ஆம் எண்
.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. தொகுதியின் உறுப்பினர்
.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. நகராட்சித் தலைவர்
} தேர்தல்*

(*பொருந்தாதவற்றை அடித்துவிடுக)

போட்டியிடும் வேட்பாளர்களின் மற்றும் அவர்களுடைய தேர்தல் முகவர்களின் மாதிரிக் கையொப்பங்கள் வாக்குப்பதிவு நேரத்தில் வாக்குச்சாவடி முசுவர்களின் பணியமரத்துகைக் கடிதத்திலுள்ள அவர்களுடைய கையொப்பாகள் தலைமை அலுவலரால் சரிபார்க்கப்படும் நோக்கத்திற்காக அடியில் கொடுக்கப்படுகின்றன:-

| போட்டியிடும் வேட்பாளரின் பெயர் | மாதிரிக் கையொப்பம் | அவருடைய/அவளுடைய தேர்தல் முகவரின் பெயர் | மாதிரிக் கையொப்பம் |
|---|---|---|---|
| 1. திரு/திருமதி/செல்வி வேட்பாளர் எண் | .. .. .. .. .. .. .. | திரு/திருமதி/செல்வி | .. .. .. .. .. .. .. |
| 2. திரு/திருமதி/செல்வி வேட்பாளர் எண் | .. .. .. .. .. .. .. | திரு/திருமதி/செல்வி | .. .. .. .. .. .. .. |
| 3. திரு/திருமதி/செல்வி வேட்பாளர் எண் | .. .. .. .. .. .. .. | திரு/திருமதி/செல்வி | .. .. .. .. .. .. .. |
| பிற பிற | | | |

இடம் :
தேதி :

கையொபபம்
(முத்திரை )
தேர்தல் நடத்தும் அலுவலர்

## பின்னிணைப்பு 8.4

**படிவம் - 8**

**தேர்தல் முகவரின் பணியமர்த்துகை**

**[காணக விதி 24 (1)]**

**.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. க்குத் தேர்தல்**

**பெறுநர்**

**தலைமை அலுவலர்,**

**மேற்சொன்ன தேர்களில் ஒரு வேட்பாளராக இருக்கும் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. என்னும் நான் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இல் உள்ள .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. என்பவரை மேற்சொன்ன தேர்தலில் இந்த நாள் முதல் எனது தோதல் முகவராக இதன் மூலம் பணியமர்த்துகிறேன்.**

**இடம்:** **வேடபாளர் கையொப்பம்**

---

**நான் மேற்சொன்ன பாணியமர்த்துகையை ஏற்றுக்கொள்கிறேன்.**

**இடம்:** **தேர்தல் முகவர் கையொப்பம்**

**தேதி:**

---

**தேர்தல் பற்றிய உரிய விவரங்கள் இங்கே புகுத்தப்பட வேண்டும்*

**பின்னிணைப்பு-8.5**

**படிவம் - 9**

**தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை முறித்தம் (ரத்து) செய்தல்**

**[காணக விதி 24 (3)]**

**.. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ௧்குத் தேர்தல்**

**பெறுநர்**

**தலைமை அலுவலர்,**

**மேலுள்ள தேர்தலில் ஒரு வேட்பாளராகிய .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. என்னும் நான் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. என்னும் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. எனது தேர்தல் முகவரின் பணியமர்த்துகையை இதன் மூலம் முறித்தம் (ரத்து) செய்கிறேன்.**

**இடம்:** **வேட்பாளர் கையொப்பம்.**

**தேதி:**

---

** தோதல் பற்றிய உரிய விவரங்கள் இங்கே புகுத்தப்பட வேண்டும்*

## பின்னிணைப்பு -8.6

### படிவம்

### பகுதி I

மன்ற உறுப்பினர்/தலைவருக்கான தேர்தலில் பயன்படுத்திய தாள் முத்திரைகளின் பதிவு வாக்குச்சாவடி எண் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

| பயன்படுத்திய வாக்குப்பெட்டிகளின் வரிசை எண் | பயன்படுத்திய தாள் முத்திரையின் வரிசை எண் | குறிப்புரை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | | |
| 2. | | |

### பகுதி II

### தாள் முத்திரைகளின் கணக்கு

வாக்குப்பதிவு முகவர்களின் கையொப்பம்

| | |
|---|---|
| 1. வழங்கப்பட்ட தான முத்திரைகளின் வரிசை எண் .. .. .. .. முதல் .. .. .. .. வரை | 1<br>2 |
| 2. வழங்கப்பட்டவற்றின் மொத்த எண்ணிக்கை | 3<br>4 |
| 3. பயன்படுத்திய தாள் முத்திரைகளின் எண்ணிக்கை | 5<br>6 |
| 4. தேர்தல் நடத்தும் அலுவலருக்குத் திருப்பி யனுப்பப்பட்ட பயன்படுத்தாத தாள் முத்திரைகளின் எண்ணிக்கை, (2ஆம் இனத்திலிருந்து 3ஆம் இனத்தைக் கழித்திடுக) | 7<br>8<br>9<br>10 |
| 5. சேதமுற்ற தாள் முத்திரைகள் எவையேனும் இருப்பின் அவற்றின் வரிசை எண் | |

இடம்: தலைமை அலுவலர் கையொப்பம்

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------பிற்குறிப்பு:

பகுதி I மற்றும் II ஒரே படிவத்தின் பகுதிகள். எனவே ஒரே தாளில் அவை அச்சிடப்படுதலும் ஒன்றிலிருந்து மற்றொன்று பிரிக்கப்படாமலும் இருக்சுவேண்டும்.

## பின்னிணைப்பு 8.7

**பகுதி I**

**வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு தலைமை அலுவலரால் செய்யப்படும் விளம்புகை**

| | |
|---|---|
| .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. நகராட்சியின் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ஆம் எண் | தேர்தல்* |
| .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. தொகுதியின் உறுப்பினர் | |
| .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. நகராட்சித் தலைவர் | |

**நகராட்சி மன்றத்தின் வரிசை எண், தொகுதி எண் மற்றும் பெயர்**

**வாக்குப்பதிவுத் தேதி**

**நான் இதன் மூலம்-**

1. **வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கும் பிற ஆட்களுக்கும் வாக்குப்பதிவுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய வாக்குப் பெட்டி காலியாக இருக்கிறது என நான விளக்கிக் காட்டியிருக்கிறேன் என்றும்,**

2 **வாக்குப் பெட்டியின் காப்புறுதிக்காகப் பயன்படுத்தப்பட்ட தாள் முத்திரை மீது நான் எனது சொந்தக் கையொப்பத்தைப் பதித்திருக்கிறேன்; வந்திருக்கிற மற்றும் கையொப்பத்தைப் பதிக்க விரும்புகிற அத்தகைய வாக்குச்சாவடி முகவர்களின் கையொப்பங்களை அதன்மீது பெற்றிருக்கிறேன். மேலும் அவ்வாறு பயன்படுத்திய தாள் முத்திரையின் எண்ணை குறித்துக்கொள்ள அவர்களை நான் அனுமதித்திருக்கிறேன் என்றும்,**

3. **வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கும் ஏனையோர்க்கும், வாக்குப்பதிவின் போது திருத்தப்பட வேண்டிய வாக்காளர் பட்டியலின் குறியிடப்பட்ட படியம் (பிரதி), அஞ்சல் வாக்குச்சீட்டுகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்ட குறிகளையும் தேர்தல் கடமைச் சான்றிதழ் குறிகளைத் தவிர வேறு எவற்றையும் கொண்டிருக்கவிலலை என நான் விளக்கிக் காட்டியிருக்கிறேன் என்றும்,**

4. **வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்படவிருக்கும் வாக்குச்சீட்டுகளின் முதல் மற்றும் கடைசி வரிசை எண்களைக் குறித்துக்கொள்வதற்கு, நான் வாக்குச்சாவடி முகவர்களை அனுமதித்திருக்கிறேன் என்றும் விளம்புகைச் செய்கிறேன்.**

**தலைமை அலுவலர்**

**வாக்குச்சாவடி முகவரின் கையொப்பம்**

1. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
2. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
3. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
4. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
5. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
6. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
7. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
8. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
9. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
10. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
11. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
12. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
13. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
14. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
15. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

பின்வரும் வாக்குச்சாவடி முகவர்(கள்) தமது/தங்களுடைய கையொப்பத்தை (கையொப்பங்களை) இந்த விளம்புகையில் பதிக்க மறுதலிக்கிறார்(கள்):

1. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
2. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
3. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
4. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
5. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

தலைமை அலுவலர்

தேதி :

## பகுதி II

### அடுத்தடுத்து வாக்குப் பதிவு எந்திரம்(கள்) பயன்படுத்தப்படும் நேரத்தில் தலைமை அலுவலரால் செய்யப்படும் விளம்புகை

**நகராட்சி மன்றத்தின் வரிசை எண், தொகுதி எண் மற்றும் பெயர்**

**வாக்குப்பதிவுத் தேதி**

**நான் இதன் மூலம்-**

**1. வந்திருக்கும் வாக்குச்சாவடி முகவர்களுக்கும் பிற ஆட்களுக்கும் வாக்குப்பதிவுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய இரண்டாம் வாக்குப் பதிவு எந்தரம்(கள்) காலியாக இருக்கிறது என நான விளக்கிக் காட்டியிருக்கிறேன் என்றும்,**

**2 வாக்குப் பதிவு ஏந்திரத்தின் காப்புறுதிக்காகப் பயன்படுத்தப்பட்ட பச்சைத் தாள் முத்திரை மீது நான் எனது சொந்தக் கையொப்பத்தைப் பதித்திருக்கிறேன்; வந்திருக்கிற மற்றும் கையொப்பத்தைப் பதிக்க விரும்புகிற அத்தகைய வாக்குச்சாவடி முகவர்களின் கையொப்பங்களை அதன்மீது பெற்றிருக்கிறேன். மேலும் அவ்வாறு பயன்படுத்திய தாள் முத்திரையின் எண்ணை குறித்துக்கொள்ள அவர்களை நான் அனுமதித்திருக்கிறேன் என்றும்,**

**விளம்புகை செய்கிறேன்.**

**தலைமை அலுவலர்**
**வாக்குச்சாவடி முகவரின் கையொப்பம்**

1. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
2. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
3. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
4. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
5. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
6. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
7. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
8. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
9. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
10. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
11. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
12. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

13. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
14. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
15. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

பின்வரும் வாக்குச்சாவடி முகவர்(கள்) தமது/தங்களுடைய கையொப்பத்தை (கையொப்பங்களை) இந்த விளம்புகையில் பதிக்க மறுதலிக்கிறார்(கள்):

1. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
2. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
3. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
4. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
5. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

தலைமை அலுவலர்

தேதி :

## பகுதி III

### வாக்குப்பதிவு முடிவில் விளம்புகை

வாக்குப்பதிவு முடிவில் வாக்குச்சாவடியில் வந்திருந்த, மற்றும் அடியில் கையொப்பங்களைப் பதித்திருக்கிற வாக்குச்சாவடி முகவர்களுக்கு, படிவம் 22Aஇல் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்கு கணக்கிலுள்ள பதிவுகளை ஒவ்வொன்றின் சான்றொப்பமிட்ட படியத்தை நான் அளித்திருக்கிறேன்.

தேதி : தலைமை அலுவலர்

வாக்குச்சீட்டுக் கணக்கில் செய்யப்பட்ட பதிவுகளின் சான்றொப்பமிடப்பட்ட உண்மைப் படியம் பெறப்பட்டது .

வாக்குச்சாவடி முகவர்களின் கையொப்பம்

1. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
2. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
3. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
4. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
5. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
6. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
7. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
8. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
9. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
10. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
11. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
12. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
13. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
14. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
15. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

வாக்குப் பதிவு முடிவின்போது இருந்த பின்வரும் வாக்குச்சாவடி முகவர்(கள்) சான்றொப்பமிட்ட வாக்குச் சீட்டுக் கணக்குப் படியத்தை பெற மறுதலித்ததால் அவர்களுக்கு சான்றொப்பமிட்ட பதிவு செய்யப்பட்ட வாக்குக் கணக்குப் படியத்தை அளிக்கவில்லை.

1. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
2. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
3. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
4. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..
5. (வேடபாளர் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. இன் ) .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. ..

தலைமை அலுவலர்

தேதி :

# பின்னிணைப்பு - 8.8

## படிவம் - 20

### எதிர்த்துரைக்கப்பட்ட வாக்குகளின் பட்டியல்

**[விதி 42(2)(d)ஐக் காண்க]**

**.......................................................................................க்கான தேர்தல்**

**வாக்குச்சாவடி**

| உள்ளீட்டின் வரிசை எண் | வாக்காளரின் பெயர் | வாக்காளர் பட்டியலின் பகுதி | பகுதியில் உள்ள வாக்காளரின் பெயரின் வரிசை எண் | எதிர்த்துரைக்கப்பட்டவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் முத்திரை | எதிர்த்துரைக்கப்பட்டவரின் முகவரி | அடையாளம் காட்டுபவரின் பெயர் (இருந்தால்) | எதிர்த்துரைப்பவரின் பெயர் | தேர்தல் அலுவலரின் ஆணை | Signature of challenger on Receiving refund of deposit |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |

---

இடம் :

தேதி :

**தேர்தல் நடத்தும் அலுவலரின் கையொபபம்**

## பின்னிணைப்பு 8.9

### வாக்காளரின் விளம்புகைப் படிவம்

........................................................... ஜனவரி முதல் நாளன்று ஆயத்தம் செய்யப்பட்டு/ திருத்தியமைக்கப்பட்டு இப்போதிருந்து வரும் தேர்தல் தொகுதிக்குரிய வாக்காளர் பட்டியலைப் பொறுத்துத் தகுதிபெறும் தேதியன்று எனது வயது 18க்கும் மேற்பட்டது என்று நான் விழுமிய முறையில் விளம்புகை செய்து இதன்மூலம் உறுதி செய்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் எதையும் சேர்த்தல், அல்லது வாக்காளர் பட்டியலைத் தயாரித்தல் மறு ஆய்வுசெய்தல் அலலது திருத்துதல் தொடர்பாகத் தவறான விளம்புகை எதையும் செய்ததற்காக 1950ஆம் ஆண்டு மக்கள் சார்பாண்மைச் சட்டத்தின் 31ஆம் பிரிவிலுள்ள தண்டனை வகைமுறைகளைப் பற்றி நான் அறிந்திருக்கிறேன்.

வாக்காளரின் கையொப்பம்/பெருவிரல் பதிவு ..................................................<br>
தந்தையின்/தாயின் கணவரின் பெயர் ..................................................<br>
வாக்காளா பட்டியலின் பகுதி எண் ..................................................<br>
வாக்காளரின் வரிசை எண் ..................................................

தேதி ............................

மேலுள்ள வினம்புகை மேலே பெயர் குறிக்கப்பட்ட வாக்காளரால் என்முன்பு செய்யப்பட்டுக் கையொப்பமிடப்பட்டது எனச் சான்றிதழ் அளிக்கிறேன்.

...........................................................................

தலைமை அலுவலரின் கையொப்பம்<br>
வாக்குச்சாவடியின் எண் மற்றும் பெயர்

தேதி............................................

## பின்னிணைப்பு 8.10

**படிவம் - 18**

### பார்வையற்ற அல்லது ஏலாத வாக்காளர் துணைவரின் விளம்புகை

**[காண்க விதி 41(1)]**

**.................................................................................................................................................க்குத் தேர்தல்***

**வாக்குச்சாவடி எண் மற்றும் பெயர் :**

**.................................................................................................................................... குடியிருந்து வருகிற ..........................................................வயதுடையவரும் , ............................................ என்பவரின் பசனும் ஆகிய நான், இதன் மூலம்-**

**(அ) இன்று வாக்குச்சாவடி எதிலும் வேறு வாக்காளர் எவருக்கும். நான் துணைவராக செயலாற்றியிருக்கவில்லை, மற்றும்**

**(ஆ) ........................................................................ என்பவரின் சார்பாக என்னால் பதிவு செயயப்பட்ட வாக்கு இரகசியத்தை நான் பேணிக்காப்பேன் என்று விளம்புகின்றேன்.**

**துணைவரின் கையொப்பம்**

---

**தேர்தலின் உரிய விவரங்கள் இங்குப் புகுத்தப்படயோடும்,*
*முழுமையான முகவரி கொடுக்கப்பட வேண்டும்.*
*வாக்காளரின் பெயரும் வாக்காளர் பட்டியல் எண்ணும் கொடுக்கப்பட வேண்டும்.*

## பின்னிணைப்பு 8.11

**படிவம் - 21**

### ஆராய்வுக்குரிய வாக்குகளின் பட்டியல்

**[காண்க விதி 43(2)]**

**........................................................................................................................................க்குத்**

**தேர்தல்***

**வாக்குச்சாவடி எண் மற்றும் பெயர் :**

| பகுதி எண், வரிசை எண் மற்றும் வாக்காளரின் பெயர் | வாக்காளரின் முகவரி | ஆராய்வுக்குரிய வாக்குச் சீட்டின் வரிசை எண் | ஏற்கெனவே வாக்களித்தவருக்கு அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டின் வரிசை எண் | ஆராய்வுக்குரிய வாக்களத்தவரின் கையொப்பம் அல்லது பெருவிரல் பதிவு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |

---

***தேர்தலின் உரிய விவரங்கள் இங்குப் புகுத்தப்படயோடும்,**

**இடம் :** **தலைமை அலுவலரின் கையொப்பம்**

**நாள்**

# இயல்-IX

## வாக்குகளை எண்ணுதல்

**வாக்கெண்ணும் முகவர்களைப் பணியமர்த்துதல்**

**9.1 வாக்கெண்ணும் முகவர் ஒருவரின் பணியமர்த்துகை வேட்பாளர் தம்மால் அல்லது அவருடைய தேர்தல் முகவரால் செய்யப்பட வேண்டும். அத்தகைய பணியமர்த்துகை, படிவம்-23இல் (பின்னிணைப்பு-9.1) செய்யப்படுகிறது . வாக்கெண்னும் முகவரின் பெயரும் முகவரியும் அந்தப் படிவத்தில் நிரப்பப்பட்டு, வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல் முகவர் தாமே அந்தப் படிவத்தில் கையொப்பமிடுவார். வாக்கெண்னும் முகவரும், தாம் பணியமர்த்துகையை ஏற்றுக்கொண்டதன் அடையாளமாக அந்தப் படிவத்தில் கையொப்பமிடுவார். எல்லா நேர்வுகளிலும் அத்தகைய படிவத்தின் இரண்டு படியங்கள் (பிரதிகள்) தயாரிக்கப்படும். அந்தப் படிவத்தின் ஒரு படியம் வேட்பாளர் தேர்தல் முகவரால் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு மேலனுப்பப்படும்; மற்றொரு படியம், தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பு முன்னிடுவதற்காக வாக்கெண்ணும் முகவரிடம் கொடுக்கப்படுகிறது .**

**2. வேட்பாளர் ஒருவர், தம்முடைய வாக்கெண்ணும் முகவர்களை எல்லோருடைய பணியமர்த்துகையையும் ஒற்றைக் கடிதம் ஒன்றின் மூலம், படிவம்-23இல் பணியமர்த்தலாம். அந்த நேர்வில், வாக்கெண்ணும் முகவர்கள் எல்லோரும் பணியமர்த்துகையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதன் அடையாளமாக அந்தப் பணியமர்த்துகைக் கடிதத்தில் கையொப்பமிடுமாறு வேண்டப்படுகிறார்கள்.**

**வாக்கெண்ணும் முகவரைப் பணியமர்த்துகை செய்வதற்கான காலவரம்பு:**

**9.2.1 தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை எப்படியிருப்பினும், அனைத்துத் தொகுதிகளிலும் தங்களுடைய வாக்கெண்ணும் முகவர்களின் நிழற்படங்களுடன் அவர்களுடைய பட்டியல்களை, தேர்தல் நடத்தும் அலுவலருக்கு, வாக்கெண்ணிக்கைக்காகக் குறித்திட்ட தேதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னுள்ள நாளன்று கடைசி எல்லையாக 17.00 மணி அளவில் வேட்பாளர்கள் அனுப்பிவைக்க வேண்டும். தேர்தல் நடத்தும் அதிகாரி அத்தகைய முகவர் ஒவ்வொருவருக்குமுரிய அடையாள அட்டைகளைத் தயாரித்து அவற்றை வேட்பாளரிடம் வழங்குவார்.**

9.2.2 வாக்கெண்ணும் முகவர்கள் வாக்கெண்ணிக்கைக்கு வரும்போது அந்த அடையாள அட்டைகளைத் தங்களுடைய பணியமர்த்துகைக் கடிதத்துடன் சேர்த்து முன்னிலைப்படுத்த வேண்டும் .

9.2.3 வாக்கெண்ணும் முகவரின் அடையாள அட்டையுடன் சேர்த்துப் பணியமர்த்துகைக் கடிதம் வாக்கெண்ணிக்கைக்காகக் குறித்திட்ட நேரத்திற்குக் குறைந்த அளவு ஒரு மணி நோத்திற்கு முன்பு தேர்தல் நடத்தும் அலுவலரிடம் முன்னிலைப் படுத்தப்பட வேண்டும் . மேற்கூறப்பட்ட நேரத்திற்குப் பின்பு பெறப்படும் பணியமாததுகைக கடிதம் எதனையும் தேர்தல் நடத்தும் அலுவலர் ஏற்கமாட்டார் .

வாக்கெண்ணும் முகவரின் பணியமர்த்துகையைப் முறித்தறவு ரத்து ) செய்தல்

9.3.1 வேட்பாளர் அல்லது அவருடைய தேர்தல் முகவர் வாக்கெண்ணும் முகவர் ஒருவரின் பணியமர்த்துகையைப் முறித்தறவு (ரத்து ) செய்யலாம் .

9.3.2 அத்தகைய பணியமர்த்துகையைப் முறித்தறவு செய்தல், படிவம் 24இல் (பின்னிணைப்பு 9.2) தேர்தல் நடத்தும் அலுவவரிடம் அது கொடுக்கப்பட்ட நேரத்திலிருந்து அது செயற்பாட்டுக்கு வருகிறது. அத்தகையதொரு நேர்வில் வாக்கெண்ணும் முகவரின் பணியமர்த்துகை பின்னறவு செய்யப்பட்டிருக்கிற இடத்தில், வாக்கெண்ணிக்கை தொடங்கப்படுவதன் முன்பு எந்த நோத்திலும் வேட்பாளர் மற்றொரு முகவரைப் பணியமர்த்த அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறார். வாக்கெண்ணிக்கை தொடங்கப்பட்டவுடன், புதிய வாக்கெண்ணும் முகவரின் பணியமர்த்துகை எதுவும் செய்யப்பட முடியாது .

9.3.3 அத்தகைய புதிய வாக்கெண்ணும் முகவரின் பணியமர்த்துகை மேலுள்ள 9.1ஆம் பத்தியில் விவரிக்கப்பட்ட அதேமுறையில் செய்யப்பட வேண்டும் .

வாக்கெண்ணும் கூடத்திற்குள் வாக்கெண்ணும் முகவர்களை அனுமதித்தல்

9.4.1 வாக்கெண்ணும் முகவர், தம்முடைய பணியமர்த்துகைக் கடிதத்தையும் அடையாள அட்டையையும் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் முன்னிலைப்படுத்தியதன்மேல், வாக்களிப்பு இரகசியத்தைப் பேணுதல் பற்றி அவரது பணியமர்த்துகைக் கடிதத்தில் அடங்கியுள்ள விளம்புகையில் தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பு அவர் கையொப்பமிடுமாறு வேண்டப்படுவார். பணியமர்த்துகைக் கடிதம், அடையாள அட்டை, விளம்புகை ஆகியவற்றைச் சரிபார்த்த பின்பு, தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்கெண்ணும் முகவரை வாக்கெண்ணும் கூடத்திற்குள் நுழைய அனுமதிப்பார்.

9.4.2 வாக்கெண்ணும் கூடத்திற்குள் வாக்கெண்ணும் முகவர் நுழைவதற்கு முன்பு அவரது உடலைச் சோதனைக்கு உட்படுத்துவற்கான அதிகாரமளிப்பதைத் தேர்தல் நடத்தும் அலுவலர் பெற்றிருக்கிறார் .

**வாக்கெண்ணும் முகவர்களுக்கான அடையாளச் சின்னங்கள்**

9.5.1 வாக்கெண்ணும் முகவர் ஒவ்வொருவருக்கும், அவர் எவருடைய முகவர் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன் எந்த வரிசை எண் கொண்ட மேசையில் அவர் வாக்கெண்ணிக்கையைக் கவனிப்பார் என்பதையும் காட்டுகிற ஒரு அடையாளச் சின்னம், தேர்தல் நடத்தும் அலுவலரால் அளிக்கப்படும். அவருக்கு ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட மேசை இடத்தில் அவர் அமர்ந்திருக்க வேண்டும். அவர் கூடம் எங்கணும் சுற்றிவர அனுமதிக்கப்படமாட்டார். எனினும் , வேட்பாளர் , அவருடைய தேர்தல் முகவர், அவர்கள் இல்லாத நிலையில், தோதல் நடத்தும் அலுவவரின் மேசை இடத்திலுள்ள அவருடைய வாக்குச்சாவடி முகவர் மட்டும் வாக்கெண்ணும் மேசைகள் எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவர அனுமதிக்கப்படுவார்

**வாக்கெண்ணும் கூடத்தில் ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் பேணிவருதல்**

9.6.1 வாக்கெண்ணும் கூடத்திற்கு உளளே கடும் ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் பேணிவருவதில் ஒவ்வொருவரும் தேர்தல் நடத்தும் அலுவலருடன் முழுமையாக ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகிறார். அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரால் இடப்படும் கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றவேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலரின் கட்டளைகளுக்குத் தொடர்ந்து கீழ்ப்படியாதிருக்கும் ஆள் எவரையும் வாக்கெண்ணும் கூடத்திலிருந்து அவர் வெளியேற்றலாம் என்பதை அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும் . வாக்கெண்ணும் கூடத்தில் உள்ள அனைவரும் கொரோனா தொடர்பான நடத்தை விதிகள் அனைத்தையும் தவறாமல் கடைப்பிடிக்கவேண்டும்.

2 வாக்கெண்ணும் நடைமுறையின்போது, வாக்கெண்ணும் முகவர்கள் மற்றும் ஏனையோர். எவரும், வாக்கெண்ணும் கூடத்திற்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். வேறுசொற்களில் சொல்வதென்றால், ஒருமுறை வாக்கெண்ணும் முகவர்களும் ஏனையோரும் வாக்கெண்ணும் கூடத்திற்குள்ளே வந்துவிட்டார்கள் என்றால், பொதுவாக முடிவுகளின் விளம்புகைக்குப் பின்புதான் அவர்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படுவார்கள் .

3. முகமூடி அணிதல், கை சுத்திகரிப்பான் மற்றும் சமூக இடைவெளி போன்றவற்றை அனைவரும் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கவேண்டும்.

**வாக்கெண்ணும் கூடத்தில் புகைபிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது**

9.7.1 புகைக்க விரும்பும் எவரும், வாக்கெண்ணும் கூடத்திற்கு வெளியே சென்று (வாக்கெண்ணும் வளாகத்திற்கு வெளியே செல்லாமல்) அதற்காக, தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அனுமதி பெற்றே பெறாமலோ வாக்கெண்ணுதலுக்கு இடையூறு இல்லாமல் புகைக்கலாம்.

**வாக்கெண்ணும் முகவர்களுக்கான இருக்கை ஏற்பாடுகள்**

9.7.1 வாக்கெண்ணிக்கையானது வரிசையில் ஏற்பாடு செய்யப்பட்ட மேசைமீது நடத்தப்படும். ஒவ்வொரு வரிசையிலும் உள்ள மேசைகள் வரிசைமுறையில் எண் இடப்படும் .

9.7.2 ஒவ்வொரு வாக்கெண்ணும் மேசைமீதும் வாக்கெண்ணும் முகவர்களுக்கான இருக்கை ஏற்பாடுகள் பின்வரும் வகையினங்களின் முன்னுரிமையைக் கருத்தில் கொண்டு செய்யப்பட வேண்டும். அதாவது,

(i) தேசியக் கட்சிகளின் வேட்பாளர்கள் ;
(ii) மாநிலக் கட்சிகளின் வேட்பாளர்கள் ;
(iii) பதிவுசெய்யப்பட்ட ஏற்பிசைவு பெறாத கட்சிகளின் வேட்பாளர்கள் ;
(iv) சுயேட்சை வேட்பாளர்கள் ,

**வாக்கெண்ணும் மேசைகளின் இடைத்தடுப்புக்கான ஏற்பாடுகள்**

9.9 வாக்கெண்ணும் கூடம் ஒவ்வொன்றிலும், வாக்கெண்ணும் முகவர்கள் வாக்குச்சீட்டுகளைக் கையாள முடியாத வகையில் இடைத்தடுப்புகளுக்கு வகை செய்யப்படும். எனினும், வாக்குச்சாவடி முகவர்கள் வாக்கெண்ணும் மேசையில் வாக்கெண்ணும் நடைமுறையை முழுமையாகக் காணுவதற்கு நியாயமான வசதிகள் அனைத்தும் செய்யப்படும். இடைத்தடுப்புகள் ஊடே தெளிவாகக் காணத் தக்கவையாக இருக்கின்றன மற்றும் இடைத்தடுப்புகள் எழுப்பும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் மூங்கில்கள் அல்லது வேறு மூலப்பொருள்களுக்கு இடையே அல்லது மேலே உள்ள இடமானது, வாக்கெண்ணும் நடைமுறையை முழுவதுமாகக் காணுவதை அனுமதிக்குமாறு போதிய அளவில் இருக்கிறது என்பதைத் தேர்தல் நடத்தும் அலுவலர் உறுதிப்படுத்துவார். இடைத்தடுப்புகள் எந்தத் துல்லியமான முறையில் அமைக்கப்படலாம் என்பது தேர்தல் நடத்தும் அலுவலரின் உளத்தேர்வு

(Discretion)க்கு விடப்படுகிறது. வாக்குச் சீட்டுகள் அதிகாரமளிக்கப்படாத ஆட்களால் கையாளப்படவில்லை, அல்லது வாக்கெண்ணும் நடைமுறையில் எந்த வகையிலும் குறுக்கீடு இல்லை என்பதை உறுதிப்படுத்தும் குறிக்கோளை அடைவதற்காக, தேர்தல் நடத்தும் அலுவலர், தாம் பொருத்தமெனக் கருதுகிறவாறான அணுகுமுறையை மேற்கொள்ளவேண்டும்.

இரகசியத்தைப் பேணிவருதல்

9.9.1 வாக்கெண்ணும் கூடத்தின் உள்ளே இருக்கும் ஆள் ஒவ்வொருவரும், வாக்களிப்பு இரகசியத்தைப் பேணிவரவும், பேணுவதில் உதவிசெய்யவும், சட்டத்தினால் வேண்டப்படுகிறார். மேலும், அத்தகைய இரகசியத்தை மீறுவதாகக் கருதப்படும் தகவல் எதையும் ஆள் எவருக்கும் தெரிவிக்கக்கூடாது. இதனைப் பொறுத்தமட்டில், சட்டத்தின் வகைமுறைகளை மீறும் ஆள் எவரும், 6 மாதங்கள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை, அல்லது பணத்தண்டம் (அபராதம்), அல்லது இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார் (பிரிவு -26). புதுச்சேரி நகராட்சிகள் சட்டம், 1973)

9.9.2 வாக்கெண்ணிக்கையின் தொடக்கத்திற்கு முன்பு, தேர்தல் நடத்தும் அலுவலர், வந்திருக்கும் எல்லோரும் தகவல் அறிந்து கொள்வதற்காகவும், அதற்கேற்ப அவர்கள் இணங்கி நடப்பதற்காகவும், மேலே சொல்லப்பட்ட 26ஆம் பிரிவின் வகைமுறைகளைப் படித்துக் காட்டுவார்.

வாக்கு எண்ணிக்கையைத் தொடர்தல்

வாக்கு எண்ணிக்கை, நடைமுறையில் முடிந்தவரை, அது முடியும் வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

முதலில் அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணுதல்

9.12.1 முதலில் அஞ்சல் வாக்குச்சீட்டுகள் எண்ணிக்கைக்கு எடுத்துக்கொள்ளப்படும். தேர்தல் நடத்தும் அலுவலரால் வாக்கெண்ணும் இடத்தில் இது மேற்கொள்ளப்படும்.

2. ஒரு வாக்காளரிடமிருந்து பெறப்பட்ட, அஞ்சல் வாக்குச்சீட்டு ஒவ்வொன்றும், படிவம்-15இன் உள்-உறையில் வைக்கப்படும். இந்த உறை படிவம்-14இல் வாக்காளரின் விளம்புகையுடன் சேர்த்து படிவம்-16இல் ஒரு பெரிய உறையில் வைக்கப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலருக்கு முகவரியிட்டு அனுப்பப்படும்

3. தேர்தல் நடத்தும் அலுவலர், காலந்தாழ்த்தி, அதாவது, வாக்கெண்ணிக்கையின் தொடக்கத்திற்காக குறித்திட்ட நேரத்திற்குப் பின்பு பெறப்படலாகும் அஞ்சல் வாக்குச்சீட்டு அடங்கிய பெரிய வெளி உறையை அவர் பிரிக்கமாட்டார். இந்த நோக்கத்திற்காக படிவம்-16இல் வெளிப்புற உறைமீது அவர் தகுந்த மேற்குறிப்பை எழுதுவார். உறைகளில் அடங்கியுள்ள வாக்குகள் எண்ணப்படமாட்டா. அவர் அத்தகைய உறைகள் எல்லாவற்றையும் ஒரு சிப்பப்பொதியாகச் செய்து அச்சிப்பப்பொதிக்கு முத்திரையிடுவார்.

4. தேர்தல் நடத்தும் அலுவலரால் உரியநேரத்தில் பெறப்பட்ட அஞ்சல் வாக்குச்சீட்டுகள் அடங்கிய உறைகள் அனைத்தும் அவரால் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிக்கப்படும், படிவம்-16இல் உள்ள ஒவ்வோர் உறையின் உள்ளேயும் படிவம்-14இல் வாக்காளரால் செய்யப்பட்ட விளம்புகை காணப்படும். முறையான அஞ்சல் வாக்குச்சீட்டுகள் அடங்கிய உள் உறைகள் எவற்றையும் பிரிக்கும் முன்பு, தேர்தல் நடத்தும் அலுவலர் விளம்புகைகளை (படிவம்-14) சரிபார்ப்பார். பின்வரும் நேர்வுகளில் ஏதொன்றிலும், அவர் வாக்குச்சீட்டின் உள் உறையைப் (படிவம்-15) பிரிக்காமலேயே-

(அ) படிவம்-16இல் உள்ள உறையுள் படிவம்-14இல் விளம்புகை காணப்படவில்லை என்றால்,

(ஆ) விளம்பகை வாக்காளரால் உரியவாறு கையொப்பம் இடப்படவில்லை அல்லது சான்றொப்பமிடுவதற்குத் தகுதி வாய்ந்த அலுவலரால் அவ்வாறு ஒப்பமிடப்பட்டிருக்கவில்லை அல்லது பிறவாறு கணிசமான அளவுக்குக் குறைபாடு கொண்டிருக்கிறது என்றால்,

( இ ) விளம்புகைமேல் புலப்படும் வாக்குச்சீட்டின் வரிசை எண் படிவம்-15இல் உள் - உறைமீது மேற்குறிப்பு எழுதப்பட்ட வரிசை எண்ணிலிருந்து வேறாக இருக்கிறது என்றால்,

அதை மறுத்தொதுக்குவார் .

5. அவ்வாறு மறுத்தொதுக்கப்பட்ட படிவம்-15இல் உள்-உறைகள் அனைத்தும் தேர்தல் நடத்தும் அலுவலரால் தகுந்தவாறு மேற்குறிப்பு எழுதப்படும். மேலும், அதனதனுக்குரிய விளம்புகைகளுடன் பெரிய உறையில் படிவம்-16இல் வைக்கப்படும். அத்தகைய பெரிய உறைகள் அனைத்தும், தனியே ஒரு சிப்பப்பொதிக்குள் வைக்கப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரால் முத்திரை இடப்படும். அத்துடன், தொகுதியின் பெயர் வாக்கெண்ணும் தேதி, உள்ளடக்கங்கள்

பற்றிய ஒரு சுருக்க விவரம் போன்ற முழுவிவரங்கள், அச்சிப்பப் பொதியை இனங்கண்டறிவதற்காக அதன் மீது குறிக்கப்படும் .

9.11.6 அதன் பின்பு தேர்தல் நடத்தும் அலுவலர், மேற்கூறியவாறு மறுத்தொதுக்கப்பட்டவை அல்லாமல் படிவம்-15இல் எஞ்சியுள்ள உறைகள் பொறுத்துச் செயல்மேற்கொள்ளத் தொடங்குவார். அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் இரகசியம் மீறப்பட்டிருப்பதான இடர்வு (Risk) எதுவும் இல்லை என்னும் பொருட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரின் கூர்ந்தாய்வின் மேல் முறையாக இருக்கின்றன எனக்கண்டறியப்பட்டு, படிவம்-14இல் உள்ள விளம்புகைகள் அனைத்தும் முதற்படியாக ஒரு தனி சிப்பப்பொதியில் வைக்கப்பட்டு முத்திரையிடப்படும்; சிப்பப்பொதிமீது, இனங்கண்டறியும் விவரங்கள் குறிக்கப்படும். விளம்புகைகள், வாக்காளர்களின் பெயர்களை, அவர்களுடைய அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் அந்தந்த வரிசை எண்களுடன் சேர்த்துக் கொண்டிருக்கும் என்பதால், படிவம்-15இல் உள்ள முறையான வாக்குச்சீட்டுகள் எவற்றையும் அவையுள்ள உறைகளிலிருந்து வெளியே கொணர்வதற்கு முன்பு, அத்தகைய விளம்புகைகளை முத்திரையிட்ட உறையால் தனித் தனியாக வைப்பது தேவைப்படுகிறது .

7. மேலுள்ள நடைமுறை முடிக்கப்பட்ட பின்பு, தேர்தல் நடத்தும் அலுவலர் உறைகளை ஒன்றன் பின் ஒன்றாகப் பிரிக்க முற்படுவார். அவற்றில் அடங்கிய அஞ்சல் வாக்குச்சீட்டுகள் வெளிக்கொணரப்படும். தேர்தல் நடத்தும் அலுவலர் அத்தகைய வாக்குச்சீட்டு ஒவ்வொன்றையும் கூர்ந்தாய்வுசெய்து, அதன் செல்லுந்தன்மையைத் தீர்மானிப்பார்.

8. ஓர் அஞ்சல் வாக்குச் சீட்டு மறுத்தொதுக்கப்படும் -

( அ ) வாக்கு எதுவும் அதன்மீது பதிவுசெய்யப்பட வில்லை என்றால் , அல்லது

(ஆ) ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளரின் சார்பாக அதன்மீது வாக்குகள் கொடுக்கப்படுகின்றன என்றால் அல்லது

(இ ) அது ஒரு போலியான வாக்குச்சீட்டு என்றால் , அல்லது

(ஈ) ஓர் உண்மையான வாக்குச்சீட்டு என்று அதனுடைய அடையாளம் நிறுவப்பட முடியாதவாறு அது மிகவும் சேதமடைந்திருக்கிறது அல்லது சிதைக்கப்பட்டிருக்கிறது என்றால் , அல்லது

(உ) தேர்தல் நடத்தும் அலுவலரால் வாக்காளருக்கு அதனுடன் சேர்த்து அனுப்பிய உறையில் அது திருப்பியனுப்பப்பட வில்லை என்றால் ; அல்லது

(ஊ) வாக்கு எந்த வேட்பாளருக்கு போடப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்வது ஐயத்திற்கு இடமளிக்கும் அத்தகையதொரு முறையில் வாக்கைச் சுட்டிக்காட்டும் குறி இடப்படுகிறது என்றால் , அல்லது

(எ) வாக்காளரை இனங்கண்டறியக்கூடியவாறு, குறி அல்லது எழுத்து எதையும் அது கொண்டிருக்கிறது என்றால் :

9. ஓர் அஞ்சல் வாக்குச் சீட்டு மீது வாக்காளர் ஒருவர் தம்முடைய வாக்கைச் சுட்டிக்காட்டுவதற்கு அவரால் செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட குறி எதுவும், சட்டத்தினால் வேண்டப்படவில்லை. ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்கு / வாக்களிப்பதான வாக்காளரின் உட்கருத்து, நியாயமான ஐயப்பாடு எதற்கும் அப்பாற்பட்டுத் தெளிவாக இருக்கிறது என்னும் நிலையில், குறி எதுவும் வாக்குச்சீட்டின் மீது அவவாறு செய்யப்பட்டிருக்கிற மற்றும் இடப்பட்டிருக்கிற வரையில் அந்தக் குறி எதுவும் செல்லுநிலையானது என ஏற்றுக்கொள்ளப்படும். இவ்வாறு ஒரு வேட்பாளருக்கு ஒதுக்கிக கொடுக்கப்பட்ட இடத்தில் எந்த இடத்திலும் செய்யப்பட்ட ஒரு குறி தொடர்புடைய அந்த வேடபாளரின் சார்பாகச் செல்லுபடியான ஒரு வாக்கு என்று எடுத்துக்கொள்ளப்படும். மீண்டும், ஓர் அஞ்சல் வாக்குச்சீட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு வாக்கு, அவ்வாக்கினைச் சுட்டிக்காட்டும் குறி தெளிவற்று இருக்கிறது, அல்லது அதே வேட்பாளருக்கு ஒரு தடவைக்கு மேல் செய்யப்பட்டிருக்கிறது என்னும் வெறும் காரணங்காட்டி மறுத்து ஒதுக்கப்படமாட்டாது. ஆனால், வாக்குச்சீட்டில் குறியிடப்பட்ட முறையிலிருந்து ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்குத்தான் வாக்குப் போடப்பட்டிருக்கிறது என்ற உட்கருத்துத் தெளிவாகப் புலப்பட வேண்டும்.

10. அதன்பின்பு செல்லுநிலை வாக்குகள் எண்ணப்பட்டு, வேட்பாளர் ஒவ்வொருவரும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளை, படிவம்-22Aஇல் வாக்குச்சீட்டுக் கணக்கின் பகுதி இன் பத்தி 2இல் வரவுவைக்கப்படும்.

11. அதன்பின்பு, அனைத்துச் செல்லுநிலை அஞ்சல் வாக்குச்சீட்டுகளும் மறுத்தொதுக்கிய அஞ்சல் வாக்குச்சீட்டுகளும், தனித்தனியாகக் கட்டப்பட்டு, ஒரு சிப்பப்பொதியில் ஒன்றாகச் சேர்த்துவைக்கப்படும். தேர்தல் நடத்தும் அலுவலரின் முத்திரையுடனும், அதன் மீது தங்களுடைய முத்திரைகளைப் பதிக்க விரும்பலாகும் வேட்பாளர்கள், அவர்களுடைய தேர்தல் முகவர்கள், அல்லது வாக்கெண்ணும் முகவர்களின் (எந்த ஒரு வேட்பாளரைப் பொருத்தும் இருவருக்கு மேற்படாமல்) முத்திரைகளுடனும் முத்திரையிடப்படும்.

வாக்குச் சாவடிகளில் பதிவான வாக்குகளை எண்ணுதல்

9.13.1. அஞ்சல் வாக்குச்சீட்டுகள் தேர்தல் நடத்தும் அலுவலரால் தமது மேசையில் எண்ணப்பட்டுவருகையில், வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகளை எண்ணுதல் வாக்கெண்ணும் கூடத்தில் வகை செய்யப்பட்டுள்ள பிற மேசைகளில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலரால் (அலுவலர்களால்) மேற்கொள்ளப்படும்.

அந்த நோக்கத்திற்காக, வாக்குச்சாவடிகளிலிருந்து பெறப்பட்ட வாக்குப் பதிவு எந்திரங்கள், 1ஆம் வாக்குச்சாவடியின் வாக்குப் பதிவு எந்திரங்ம்(கள்) தொடங்கிப் பல்வேறு வாக்கெண்ணும் மேசைகளுக்கு வழங்கப்படும்.

2. வாக்கெண்ணும் கூடத்தில் வரிசைக்கு பதினைந்து மேசைகளுக்கு மேற்படாமல் இரண்டு மேசை வரிசைகள் இருக்கும். மேசை ஒவ்வொன்றிலும் வாக்கெண்ணும் மேற்பார்வையாளர்கள், வாக்கெண்ணும் உதவியாளாகள், வாக்கெண்ணும் முகவர்கள் ஆகியோருக்கு இருக்கை வசதிகள் செய்து தரப்படும். இடப்பக்க வரிசையில் அமாந்திருக்கும் வாக்கெண்ணும் பணியாளர்கள் நகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான வாக்கெண்ணிக்கைக்குப் பொறுப்பாகிறார்கள். மற்றும் வலப்பக்க வரிசையில் அமர்ந்திருக்கும் வாக்கெண்ணும் பணியாளர்கள் நகராட்சி மன்றத் தலைவருக்கான வாக்கெண்ணிக்கைக்குப் பொறுப்பாகிறார்கள்.

3. பதிவு செய்யப்பட்ட வாக்குகள் கணக்குடன் சீல் செய்யப்பட்ட வாக்குப்பதிவு எந்திரம் (ங்கள்) (EVM / EVM) இரண்டு தேர்தல்களான நகரமன்ற உறுப்பினர்கள் மற்றும் நகராட்சி தலைவர் மற்றும் ஒரு பச்சை தாள் முத்திரை கணக்கு வலது வரிசையின் ஒவ்வொரு மேசையிலும் வைக்கப்படும். வாக்குப்பதிவு இயந்திரத்தைத் திறப்பதற்கு முன், இடது வரிசைகளில் உள்ள அனைத்து வாக்கெண்ணும் மேற்பார்வையாளர்கள் வலது மேசைகளில் கூடுவார்கள். வலது வரிசைகளின் வாக்கெண்ணும் மேற்பார்வையாளர்கள் நகராட்சி மன்றத் தலைவருக்காக பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் கணக்கை வைத்து, நகராட்சி உறுப்பினர்களுக்காக பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் கணக்கை இடது பக்க வரிசைகளின் எண்ணும் மேற்பார்வையாளர்களுக்கு அளிப்பார்கள்.

4. வாக்குப்பதிவு எந்திரம் எதுவும் திறக்கப்படுவதள முன்பு, வாக்குப் பதிவு எந்திரத்தின் மீதுள்ள முத்திரைகள் கெட்டியாக இருக்கின்றன மற்றும் அவை குலைவு செய்யப்பட்டிராமல் உள்ளன என்று வாக்கெண்ணும் முகவர்கள் தாங்களாகவே மனநிறைவு கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

5. ஒரு வாக்குப்பெட்டியை மூடுவதற்கு ஒரு தாள் முத்திரை பயன்படுத்தப்படுகிறது அல்லது உட்புற உலோக முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றன என்றவிடத்து, வாக்குப் பெட்டியின் வெளிப்புற முத்திரைகள் முக்கியமானவை அல்ல. மேலும் இந்த வெளிப்புற முத்திரைகள் காணப்படவில்லை அல்லது சேதமுற்றிருக்கின்றன என்றாலும் உட்புறத்தான் முத்திரை / உலோக முத்திரைகள் கெட்டியாக இருக்கிறது/ இருக்கின்றன என்னும் நிலையில் வாக்குப் பதிவு எந்திரங்கள் குலைவு செய்யப்பட்டிருக்க முடியாது என்னும் பாகம் (interference) தெளிவானதாகும். அத்தகைய நேர்வுகளில் வாக்கெண்ணும் முகவர்கள் இத்தகைய வெளிப்புற முத்திரைகளைப்

பொறுத்தமட்டில் மறுப்புரை எதுவும் எழுப்பக்கூடாது. அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள் என்றால், அவர்களது மறுப்புரை அற்பமானது மற்றும் மறுத்தொதுக்கப்படுவதற்கு உட்பட்டதாகும் .

வாக்குப் பதிவு எந்திரங்களைத் திறத்தல்

9.14.1 வாக்குப் பதிவு எதிரம் ஒவ்வொன்றும் திறக்கப்படுகையில், வாக்கெண்ணும் முகவர்கள்-

( அ ) வாக்குப் பதிவு எந்திரத்தில் செதுக்கப்பட்ட வரிசை எண் ,
(ஆ) தாள் முத்திரை மீதுள்ள அடையாளக் குறிகள், அல்லது நேர்வுக்கு ஏற்ப, வாக்குப் பதிவு எந்திரைத்தில் போடப்பட்ட அடையாள அட்டை ;
(இ) தாள் முத்திரையின் வரிசை எண் (அத்தகைய தாள் முத்திரை ஒரு வாக்குப் பதிவு எந்திரத்தை முத்திரையிடப் பயன்படுகிறது என்றவிடத்து)

ஆகியவைப் பொறுத்து, வாக்குப் பெட்டியின் அடையாளத்தைச் சரிபார்க்க அனுமதிக்கப்படுவார்கள் ,

2. வாக்குப் பதிவு எந்திரம் ஒவ்வொன்றிலும் பயன்படுத்தப்பட்ட தாள் முத்திரையின் வரிசை எண், தாள் முத்திரைக் கணக்கில் கொடுக்கப்பட்டுள்ளவாறு வரிசை எண்ணுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படும். வாக்கெண்ணும் முகவர்கள் இத்தகைய வரிசை எண்களைச் சரிபார்க்கவும் அனுமதிக்கப்படுவார்கள். அத்தகைய சரிபார்ப்பு நோக்கத்திற்காக வாக்கெண்ணும் முகவர்கள் தங்களுடைய வேட்பாளர்கள் அவர்களுடைய வாக்குச்சாவடி முகவரிடம் இருந்து பெற்றிருக்கக் கூடிய மற்றும் வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட தாள் முத்திரைகளின் வரிசை எண்களை அவர்களிடமிருந்து பெற்றிருக்கவேண்டும். தாள் முத்திரையின் வரிசை எண் பச்சைத் தாள் முத்திரைக் கணக்கில் கொடுக்கப்பட்ட எண்ணுடன் சரிநேராக இல்லை என்னும் நேர்வில், வாக்குப்பதிவு எந்திரம் குலைவு செய்யப்பட்டிருக்கிறது எனப் பொருள்கொள்ளத் தேவை இல்லை. வரிசை எண் பச்சைத் தாள் முத்திரைக கணக்கில் சரியாகக் குறிக்கப்பட்டிராமல் இருப்பது முற்றிலும் நிகழக்கூடியதே. ஆதலால், வாக்கெண்ணும் மேற்பார்வையாளர் அல்லது உதவியாளர் வரிசை எண் சரியாக அல்லது தவறாகக் குறிக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க, அந்த வாக்குச்சவாடிக்குத் தொடர்புடைய பயன்படுத்தாத பச்சைத் தாள் முத்திரைகளைச் சரிபார்ப்பார். வரிசை எண்ணைக் குறிப்பதில் ஒரு தவறு மட்டுமே இருக்கிறது என்றால், வாக்குப் பதிவு எந்திரம் குலைவு செய்யப்பட்டிருக்கவில்லை எனப் பொருள்படும் என்பதால், அது கவனிக்கப்பட வேண்டும் ,

3. வாக்குப் பதிவு எந்திரம் எதுவும் குலைவு செய்யப்பட்டிருக்கிறது என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்கெண்ணுதலை முழுவதுமாக ஒத்திவைக்கமாட்டார் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். அப்படி இருப்பினும், அத்தகைய குலைவு செய்யப்பட்ட வாக்குப் பதிவு எந்திரம் பயன்படுத்தப்பட்ட வாக்குச் சாவடியிலிருந்து பெறப்பட்ட வாக்குப் பதிவு எந்திரங்கள் எதையும் அவர் எண்ணமாட்டார்; ஆனாலும், ஏனைய வாக்குச் சாவடிகள் எல்லாவற்றிலும் இருந்து பெறப்பட்ட வாக்குப் பதிவு எந்திரங்களின் எண்ணிக்கையை அவர் தொடர்ந்து மேற்கொள்வார். வாக்குப் பதிவு எந்திரங்கள் எவையும் குலைவு செய்யப்பட்டதாகக் காணப்படும் நேர்வில் பாதிக்கப்பட்ட அந்த வாக்குச்சாவடியில் ஒரு புதிய வாக்குப்பதிவு நடத்தப்படலாமா அல்லது பாதிக்கப்பட்ட வாக்குச்சாவடியில் ஒரு புதிய வாக்குப்பதிவு தேர்தல் முடிவைப் பொருட்படுத்தத்தக்க வகையில் பாதிக்காது என்றால் தேர்தல் முடிவு விளம்புகை செய்யப்படலாமா என்பது குறித்துத் தேர்தல் ஆணையத்தின் கட்டளைக்காகத் தேர்தல் நடத்தும் அலுவலர் அச்செய்தி பற்றி அதற்கு அறிக்கை செய்வார். அதன் பின்பு தேர்தல் நடத்தும் அலுவலர் ஆணையத்தின் கட்டளைக்கு இணங்கச் செயலாற்றுவார்.

வாக்கெண்ணிக்கை பற்றி விரிவான நடைமுறை

9.15.1. ஒரு வாக்குச் சாவடியிலிருந்து வாக்குப் பதிவு எந்திரத்தின் முத்திரையும் அடையாளமும் சோதிக்கப்பட்டு ஒழுங்காக இருக்கின்றன என்று காணப்பட்டிருக்கிற பின்பு, அதில் அடங்கியுள்ளவை வாக்கெண்ணும் மேசைமீது எடுத்து வைக்கப்படும். ஒரு வாக்குச்சாவடியில் ஒன்றுக்கு மேற்பட்ட வாக்குப் பதிவு எந்திரங்கள் பயன்படுத்தபட்டிருக்கின்றன என்றால், எல்லா எந்திரங்களும் ஒரே நேரத்தில் திறக்கப்படமாட்டாது. ஒரு நேரத்தில் ஒரே ஒரு எந்திரம் மட்டுமே திறக்கப்படும். எந்திரத்தில் பதிவுசெய்யப்பட்ட எல்லாம் நீக்கப்பட்டு அது வெறுமையாக (காலியாக) இருக்கிறது என்று, வாக்கெண்ணும் முகவர்கள் தாங்களாகவே மனநிறைவுகொள்ளுமாறு அனுமதிக்கப்படுவார்கள்.

மின்னணு வாக்குப் பதிவு எந்திரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குகளை எண்ணுதல்

9.16.1. அஞ்சல் வாக்கு எண்ணும் பணி தொடங்கிய 30 நிமிடங்களுக்குப் பிறகு, மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குகளை எண்ணும் பணியைத் தொடங்கலாம். எனினும், அஞ்சல் வாக்கு எண்ணிக்கை முடிவடையாத வரை மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தின் இறுதிச் சுற்று எண்ணும் பணி தொடங்கப்படாது.

தேர்தல் நடத்தும் அலுவலர், அஞ்சல் வாக்குச் சீட்டுகளை எண்ணும் பணியில் ஈடுபட்டிருந்தாலும், பல்வேறு வாக்கு எண்ணும் மேசைகளில் வாக்குப்பதிவு எந்திரங்களின் கட்டுப்பாட்டு எந்திரங்களை வழங்கும் பணியைத் தொடங்கலாம்.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் வலுவான அறையில் இருந்து வாக்கெண்ணும் அறைக்கு பாதுகாவலரின் பாதுகாப்பின்கீழ் கொண்டு வரப்பட வேண்டும். வாக்கு எண்ணும் மேசைகளுக்கு வாக்குப்பதிவு எந்திரங்களை வழங்குவது வாக்குச்சாவடிகளின் வரிசைப்படி அதாவது முதல் சுற்றில், வாக்குச் சாவடி எண் 1இல் பயன்படுத்தப்படும் கட்டுப்பாட்டு எந்திரம், வாக்கெண்ணும் மேசை 1க்கும் வாக்குச்சாவடி எண் 2இன் எந்திரம் வாக்கெண்ணும் மேசை2க்கும் கொடுக்கப்பட வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சுற்றின் அனைத்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களும் சரியாக எண்ணப்பட்ட பின்னரே, மாநிலத் தேர்தல் ஆணையத்தின் மேற்பார்வையாளர் சீரற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை வாக்கெண்ணுவதற்கு எடுத்துக்கொள்வார். மற்றும் சுற்று வாரியாக அட்டவணையிடுதல் முடித்த பிறகு, சுற்று வாரியாக முடிவு தேர்தல் நடத்தும் அலுவலரால் அறிவிக்கப்பட்டு தேர்தல் நடத்தும் அலுவலர் ஒவ்வொரு சுற்று முடிவிலும் படிவம் 22A இன் பகுதி-IIலும், உரிய படிவத்தில் சுற்'றுவாரியான முடிவு அட்டவணையிலும் கையெழுத்திட வேண்டும். அடுத்த சுற்றுக்கான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலரின் வாய்மொழி அனுமதியைப் பெற்ற பிறகு வாக்கு எண்ணும் மையத்தில் கொண்டு வரப்படுகின்றன.

வாக்கெண்ணும் நேரத்தில், வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரத்தின் கட்டுப்பாட்டு எந்திரம் மட்டும் முடிவை அறிந்துகொள்ள தேவை. வாக்குப் பதிவு எந்திரங்கள் வலுவான அறையில் வைக்கப்பட வேண்டும்.

வாக்குச்சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்துடன், அந்த வாக்குச்சாவடிக்குத் தொடர்பான படிவம் 22Aஇன் பகுதி Iஇன்படி, பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குகளை மூடிமுத்திரையிடப்பட்ட உறைகளும் வாக்கெண்ணும் மேசைக்கு வழங்கப்பட வேண்டும்.

வாக்களிக்கும் எந்திரத்தின் கட்டுப்பாட்டு எந்திரத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குகள் எண்ணப்படுவதற்கு முன், வாக்கு எண்ணும் மேசையில் இருக்கும்

வேட்பாளர்கள் அல்லது அவர்களின் தேர்தல் முகவர்கள் வாக்குப்பதிவு எந்திரங்களை உள்ளடக்கிய பெட்டியின் உள்ள "வெளிப்புறப் பட்டை முத்திரை", சிறப்பு அட்டை, தாள் முத்திரைகள் மற்றும் பிற முக்கிய முத்திரைகளை ஆய்வு செய்யவும் அவர்களாகவே மனநிறைவுகொள்ளும் வகையில் அனுமதிக்கப்படுவார்கள்.

எந்தவொரு வாக்களிக்கும் எந்திரமும் குலைவுபடுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும். அவர் எந்திரத்தில் உள்ள முத்திரைகள் குறித்து மனநிறைவு அடையவில்லை என்றால், அவர் வாக்குகளை எண்ண மாட்டார்.

வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் முத்திரைகள் மற்றும் அடையாளக் குறிகளைச் சரிபார்த்தல்

9.17.1. ஒவ்வொரு வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரமும் அது வைக்கப்பட்டிருந்த பெட்டியிலிருந்து எடுக்கப்படும்போதும், தேர்தல் நடத்தும் அலுவலர் முதலில் அதன் வரிசை எண்ணைச் சரிபார்த்து, அது தன்னால் அந்த வாக்குச்சாவடித் தேர்தல் தலைமை அலுவலருக்கு அளிக்கப்பட்ட அதே எந்திரம்தான் என்பதை உறுதிசெய்துகொள்ள வேண்டும்.

அதன்பின், அவர், வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தை மூடி முத்திரையிடப் பயன்படுத்தப்பட்ட இளஞ்சிவப்பு தாள் முத்திரையில் உள்ள வரிசை எண்ணையும், வேட்பாளர் அமைப்புப் பிரிவின் மீதுள்ள முத்திரையையும், மற்றும் வெளிச்சுற்றுத் தாள் முத்திரை மற்றும் முடிவுப்பிரிவின் வெளிப்புற உறையின் சிறப்புத் துண்டுத்தாள் மீதான முத்திரை போன்றவற்றையும் வாக்குச்சாவடியில் மாதிரி வாக்குப்பதிவின்போது வாக்குச்சாவடியின் தலைமைத் தேர்தல் அலுவலரால் பயன்படுத்தப்பட்ட எந்திரத்தின் வரிசை எண்தான் என்பதைச் சரிபார்க்கவேண்டும்.

உண்மையில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தில் உள்ள தாள் முத்திரையின் வரிசை எண், தேர்தல் நடத்தும் அலுவலரால் தாள் முத்திரைக் கணக்கில் காட்டப்பட்டுள்ள வரிசை எண்ணுடன் பொருந்தவில்லை என்றால், அது தாள் முத்திரை கணக்கில் தவறாக இருக்கலாம் அல்லது வாக்குப்பதிவு எந்திரத்தில் ஏதேனும் தேசப்படுத்தப்பட்டுள்ளதாக முதற்கண் சந்தேகம் கொள்ளலாம். தேர்தல் நடத்தும் அலுவலர், வாக்குச்சாவடியின் தலைமைத் தேர்தல் அலுவலரால் திருப்பி அளிக்கப்பட்ட பயன்படுத்தாத தாள் முத்திரையின் வரிசை எண் மற்றும் பிற தொடர்புடைய வாக்குச்சாவடியின் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்களால் புகார்கள் ஏதேனும்

அளிக்கப்பட்டிருந்தால் அவற்றையும் உள்ளடக்கிய சூழலைக் கருத்தில்கொண்டு வினா எழுப்ப முடிவெடுக்கலாம்.

வேட்பாளரால் அல்லது வாக்குச்சாவடிகளில் ஏஜெண்டுகளால் செய்யப்பட்ட புகார்கள் உட்பட பிற பயன்பாட்டு காகித முத்திரையின் வரிசை எண் மற்றும் பிற சம்பந்தப்பட்ட சூழ்நிலைகளை சரிபார்த்து கேள்விக்கு முடிவு எடுக்க வேண்டும்.

வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் வரிசை எண்ணைச் சரிபார்த்தல்

9.18.1. ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒதுக்கப்பட்ட வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரங்களின் பட்டியல் ஏற்கெனவே அனைத்து வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளதாலும், மற்றும் அப்பட்டியல் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் உள்ளதாலும், சுற்று வாரியான அட்டவணை தாளில், வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் வரிசை எண் மற்றும் வாக்குச்சாவடிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை முன்கூட்டியே நிரப்பப்பட வேண்டும். .

2. வாக்கெண்ணும் மேசையில், வாக்கெண்ணும் மேற்பார்வையாளர் முறையே கொம்யூன் பஞ்சாயத்து மற்றும் நகராட்சிக்கான தேர்தலுக்கான படிவம் 22Aஇன் பகுதி-IIஇல் சரிபார்த்தும் பதிவு செய்யவும் வேண்டும். வாக்கெண்ணுவதற்காக எடுத்துக்கொள்ளப்படும் வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரமும், படிவம் 22Aஇன் பகுதி-Iஇல் குறிப்பிடப்பட்டுள்ளதும் ஒன்றே, இதனை மின்சாரம் இயக்கப்பட்டவுடன் வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் காட்சிப் பலகை காட்டும் வரிசை எண்ணிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

3. நுண்-பார்வையாளரும் அவரால் பேணப்படும் தாளில் வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் வரிசை எண்ணைப் பதிவு செய்வார். ஏதேனும் முரண்பாடு இருந்தால், இதை தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மேற்பார்வையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

4. மறுபுறம், தேர்தல் நடத்தும் அலுவலர், வாக்குப்பதிவு எந்திரம் சேதப்படுத்தப்பட்டதாகவோ அல்லது அந்த வாக்குச் சாவடியில் பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட அதே எந்திரம் இல்லையென்றோ கருதினால், அந்த எயந்திரம் ஒதுக்கி வைக்கப்படவேண்டும் மற்றும் அதில் பதிவான வாக்குகள் எண்ணப்படக்கூடாது.

முடிவுகளை கண்டறிதல்

9.19.1 ஒவ்வொரு சுற்று வாக்கெண்ணும்போதும், மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தின் கட்டுப்பாட்டு எந்திரத்தில் உள்ள "முடிவு பொத்தானை" அழுத்தும் நேரத்தில், அனைத்து வேட்பாளர்களின் வாக்கெண்ணும் முகவர்கள் தங்கள் வேட்பாளர்களுக்காக காட்சிப் பலகையில் உள்ள வாக்குகளின் எண்ணிக்கையைக் குறித்துக்கொள்ளும்வகையில், "காட்சிப் பலகை" அவர்களுக்குக் காட்டப்படுவதை வாக்கெண்ணும் மேற்பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்..

2. இந்த நோக்கத்திற்காக, தேவைப்பட்டால், வாக்கெண்ணும் உதவியாளர் ஒருவரால், வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் காட்சிப் பலகை வாக்கெண்ணும் மேற்பார்வையாளருக்கும், இரண்டாவது எண்ணும் உதவியாளர்களுக்கும், வாக்கெண்ணும் மேசையில் உட்கார்ந்திருக்கும் நுண்-மேற்பார்வையாளருக்கும் மற்றும் கம்பி-வலை/வேலிக்குப்பின் உட்கார்ந்திருக்கும் வேட்பாளர்களின் வாக்கெண்ணும் முகவர்களுக்கும் தெளிவாகத் தெரியும்படித் தூக்கிக் காண்பிக்கப்படவேண்டும்.

வாக்கு எண்ணிக்கை முடிவுப் படிவம் 22A இன் பகுதி-IIஐ முடித்தல்

9.20.1. ஒவ்வொரு வேட்பாளரும், நோட்டாவும் பெற்ற வாக்குகள் வாக்குப் பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் காட்சிப் பலகைகளில் காண்பிக்கப்படுவதைப் போல், வாக்கெண்ணும் மேற்பார்வையாளர் வாக்கு எண்ணிக்கை முடிவுப் படிவம் 22A இன் பகுதி-II முடிவில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் தனித்தனியாக அந்த வாக்குகளின் எண்ணிக்கையை பதிவு செய்ய வேண்டும்.

2. படிவம் 22A-வில் கூறப்பட்டுள்ள பகுதி- II -இல் அந்த படிவத்தின் பகுதி-Iஇன் உருப்படி 6க்கு எதிராக காட்டப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையுடன் சமமாக உள்ளதா அல்லது அவை இரண்டுக்கும் ஏதேனும் முரண்பாடு உள்ளதா என்பதை அவர் கவனிக்க வேண்டும். எல்லா வகையிலும் அந்த படிவத்தை பூர்த்தி செய்த பிறகு, வாக்கெண்ணும் மேற்பார்வையாளர்கள் அதில் கையெழுத்திட வேண்டும். மேலும், வாக்கு எண்ணும் மேசையில இருக்கும் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் முகவர்களிடமிருந்து அவர் கையெழுத்தைப் பெற வேண்டும்.

3. படிவம் 22Aஇன் பகுதி IIஇன் ஒரு படியம் சுற்றுவாரியான வாக்குகளை கணக்கிட்டு நேர் செய்வதற்காகத் தேர்தல் நடத்தும் அலுவலர் / உதவி நடத்தும் தேர்தல் அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பகுதி-IIஇன் மற்றொரு படியம்

ஒவ்வொரு அட்டவணையில் இருந்தும் சேகரிக்கப்பட்டு, அவற்றின் பதிவு மற்றும் சரிபார்ப்புக்காக அந்தந்த எண்ணும் மேசையில் இருக்கும் வாக்கெண்ணும் முகவர்களுக்கு அளிக்கப் படியம் எடுக்கப்பட வேண்டும்.

4. இந்தப் படியங்களை அளிக்கும் பணி முடிவடையும் வரை அடுத்த சுற்று எண்ணிக்கையை தொடங்கக் காத்திருக்கத் தேவையில்லை. இது ஒரே நேரத்தில் தொடரலாம்.

வாக்கெண்ணும் தாள்களை அட்டவணையிடுதல்

9.21.1. ஒவ்வொரு வாக்குச் சாவடியின் அட்டவணைத் தாள் தேர்தல் நடத்தும் அலுவலரின் அட்டவணையில் பதிவு செய்யப்படும்போது, அவை, ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் ஒவ்வொரு வேட்பாளரின் முடிவுகளையும் குறித்துக்கொள்ள ஏதுவாகத் தேர்தல் நடத்தும் அலுவலரின் மேசையில் அமர்ந்திருக்கும் வேட்பாளர்/அவர்களின் தேர்தல் முகவர்கள்/எண்ணும் முகவர்களுக்குக் காட்டப்பட வேண்டும். .

2. அனைத்து வகையிலும் சரியாக நிரப்பப்பட்டு நிறைவு செய்யப்பட்டதாக மனநிறைவுகொள்ளுமிடத்து, தேர்தல் நடத்தும் அலுவலர் படிவத்தில் மறு-கையெழுத்திட வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவரால் கையொப்பமிடப்பட்ட படிவம், இறுதி முடிவைத் தொகுத்து, படிவம் 25இல் (நகராட்சிக்கு) உள்ள இறுதி முடிவுத் தாளைத் தயாரிக்கும் அலுவலருக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. மேலும், ஒவ்வொரு சுற்றுக்கும் பிறகு ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகளை தேர்தல் நடத்தும் அலுவலர் அறிவிக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் 6x9 அடி அளவுள்ள காட்சிப் பலகையில் தெளிவாக எழுதி வைக்க வேண்டும். இதன்மூலம், வாக்கெண்ணும் முகவர்கள் அதனைப் பார்க்கவும் குறித்துக்கொள்ளவும், சரிபார்த்துக்கொள்ளவும் முடியும். மற்ற வாக்குச் சாவடிகளில் வாக்கு எண்ணும் போது தேர்தல் நடத்தும் அலுவலர் பணியைத் தடையின்றி தொடர இது வழிவகை செய்யும்.

தேர்தல் முன்னிலை மற்றும் முடிவுகளை அட்டவணையிடுதல்

9.22.1. தேர்தல் நடத்தும் அலுவலர், தேர்தல் முடிவின் முன்னிலை மற்றும் முடிவுகளை அறிவிக்கும் நோக்கத்திற்காக அதற்குரிய படிவத்தில் சுற்றுவாரியான முடிவுகளைப் பெற்று, தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும். வாக்குச்சாவடிவாரியான, சுற்றுவாரி முடிவுகளை விபரங்களுடன் மேற்பார்வையாளர் அவருடைய கோப்பறையில் வைக்கப்பட வேண்டும்.

2. கூடுதலாக, மனித-இயல் பிழையைப் மறுசரிபார்ப்பு செய்ய ஏதுவாக, வாக்கெண்ணும் வளாகத்தில் பொருத்தப்பட்டுள்ள கணினியில், இணையாக எக்சல் கோப்பில் அட்டவணையிடுதல் பணி மேற்கொள்ளப்படவேண்டும்.

3. தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மேற்பார்வையாளர், ஒவ்வொரு வாக்கெண்ணும் மேசையின் ஒவ்வொரு வேட்பாளருக்கும் பதிவான வாக்குகள் படிவம் 22Aன் (வாக்கு எண்ணிக்கை முடிவு) பகுதி-IIஇல் உள்ள அந்த வாக்கெண்ணம் மேசைக்குரிய வாக்குகளுக்கு சம்மாக(நேராக) உள்ளதா என்பதைச் சரிபார்த்து மனநிறைவுகொள்ள வேண்டும். அதன்பிறகு, தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மேற்பார்வையாளரால் கையொப்பமிடப்படவேண்டும். மற்றும், தேர்தல் நடத்தும் அலுவலர் முடிவை சத்தமாக அல்லது ஒலிபெருக்கியின் மூலம் அறிவிக்கவேண்டும்.

**வாக்குச்சாவடி தலைமை அலுவலர் வாக்குப்பதிவு முடிவில், வாக்குப்பதிவு எந்திரத்தில் உள்ள மூடு (Close) பொத்தானை அழுத்தாமல் விட்டுவிடுகின்ற நேர்வில் வாக்கு எண்ணிக்கை**

9.23.1 வாக்குப்பதிவு முடிவில், வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தில் உள்ள மூடு (Close) பொத்தானை வாக்குச்சாவடித் தலைமை அலுவலர் அழுத்தாமல் விட்டுவிட்டதைக் கண்டறிந்த நேர்வில் வாக்கு எண்ணிக்கையின்போது வேட்பாளர்கள்/அவர்களின் முகவர்கள் முன்னிலையில் காணொளிப் பதிவுடன் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

2. வாக்குப்பதிவின் முடிவில் "மூடு" பொத்தானை வாக்குச்சாவடித் தலைமை அலுவலர் அழுத்தாமல் விட்டதால், எந்தவொரு வாக்குப் பதிவு எந்திரம் முடிவைக் காட்டாதவிடத்து அந்த எந்திரத்தை அதை வைக்கவேண்டிய பெட்டியில் வைத்து அதனை வாக்கெண்ணும் வளாகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரின் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும். அதன்பின் எப்போதும்போல் பிற எந்திரங்களில் உள்ள வாக்குகளை எண்ணும் பணியைத் தொடரவேண்டும்.

3. பிற வாக்குப்பதிவு எந்திரங்களில் உள்ள வாக்குகள் எண்ணப்பட்டவுடன், தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மேற்பார்வையாளர் முதலிடம் பெற்ற வேட்பாளருக்கும் அவரைத் தொடர்ந்து வந்த வேட்பாளருக்கும் உள்ள வாக்கு வேறுபாட்டுடன், மேற்கூறிய எந்திரத்தில்(எந்திரங்களில்) பதிவாகியுள்ள வாக்குகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதா? அல்லது குறைவாக உள்ளதா? என்பதைப் பார்க்க வேண்டும்.

வாக்கு வேறுபாடு எந்திரத்தில்(களில்) பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குகளை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருக்கின்ற இரண்டு நேர்வுகளிலும், தேர்தல் நடத்தும் அலுவலர்/வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர் வாக்குப் பதிவு எந்திரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள மொத்த வாக்குகளைப் பார்க்க, வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தல் உள்ள ”மொத்தம்’ என்னும் பொத்தானை அழுத்த வேண்டும்.

வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவான மொத்த வாக்குகள் படிவம் 22A இல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த வாக்குகளுடன் ஒத்து இருந்தால், தேர்தல் நடத்தும் அலுவலர்/வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர் வாக்குப்பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் "மூடு" பொத்தானை அழுத்த வேண்டும். இவ்வாறு செய்தால், "முடிவு" பொத்தானை அழுத்தி தேர்தல் முடிவை அறிந்துகொள்ள முடியும். இது தொடர்பாக, முழுப் பிரச்சினையையும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு விளக்கி, வேட்பாளர்கள் / அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களின் கையொப்பம் பெற்று இந்த செயல்முறையைப் பதிவுசெய்ய வேண்டும்.

வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவான மொத்த வாக்குகள் படிவம் 22Aஇல் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த வாக்குகளுடன் ஒத்திருக்கவில்லை என்றால், இதுகுறித்து, தேர்தல் ஆணையத்தின் முடிவுக்காகத் தேர்தல் ஆணையத்துக்குத் தேர்தல் நடத்தும் அலுவலரால் தெரிவிக்கப்படவேண்டும். மேலும், ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மறு எண்ணிக்கை

9.24.1 பொதுவாக, வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை மீண்டும் எண்ணும் கேள்வி எழாது. வாக்குப்பதிவு இயந்திரத்தால் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு வாக்கும் செல்லுபடியாகும். மேலும், அதன் செல்லுபடியாகும் தன்மை அல்லது அதுகுறித்து வேறு எந்தச் சிக்கலும் எழாது.

2. தேர்தல் நடத்தும் அலுவலர் கொடுத்த காலத்திற்குள் எந்த ஒரு வேட்பாளராலும் மறு எண்ணிக்கைக்கான விண்ணப்பம் செய்யப்படும்போது, தேர்தல் நடத்தும் அலுவலர் அத்தகைய விண்ணபத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள காரணங்களைக் கருதுகை செய்து சட்டப்படி முடிவெடுக்க வேண்டும்.

3. விண்ணப்பம் முறையானதாக இருந்தால், அதனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ தேர்தல் நடத்தும் அலுவலர் அதனை அனுமதிக்கலாம் அல்லது மறுத்தொதுக்கலாம்.

4. தேர்தல் நடத்தும் அலுவலர் மறு எண்ணிக்கைக்கான விண்ணப்பத்தினை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அனுமதிக்கும் நேர்வில், அவர் அவருடைய முடிவின்படி, வாக்குப் பதிவு எந்திரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்குகளை மறுபடியும் எண்ணலாம். தேர்தல் நடத்தும் அலுவலர் முடிவெடுத்தால் அஞ்சல் வாக்குகளையும் மீண்டும் எண்ணலாம்.

5. மீண்டும் எண்ணப்பட்ட பிறகு, தேர்தல் நடத்தும் அலுவலர் இறுதி முடிவுத் தாளைத் தேவையான அளவுக்குத் திருத்த வேண்டும். அதன்பிறகு, தேர்தல் அதிகாரி அவர் செய்த திருத்தங்கள் ஏதேனும் இருந்தால் அதனை அறிவிக்க வேண்டும். மறுவாக்கு எண்ணிக்கை முடிந்தவுடன், ஒவ்வொரு வேட்பாளரும் பெற்ற வாக்குகள் அறிவிக்கப்படும். அதன்பிறகு, தேர்தல் நடத்தும் அலுவலர் முடிவுத் தாளை முடித்துக் கையெழுத்திட வேண்டும்.

6. தேர்தல் நடத்தும் அலுவலர் தேர்தல் முடிவை இறுதிசெய்து தேர்தல் முடிவுத்தாளில் ஒப்பமிட்டபின்னர், எந்த வேட்பாளருக்கும் மறுவாக்கு எண்ணிக்கை கோரும் உரிமை கிடையாது. தேர்தல் நடத்தும் அலுவலர் தேர்தல் முடிவு இறுதிசெய்யப்பட்டு ஒப்பமிடப்பட்ட பின்னர் கோரப்படும் மறு வாக்கு எண்ணிக்கைக் கோரிக்கையை மறுத்தொதுக்க வேண்டும்.

வாக்குப் பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் வெளிக்காட்டுத் திரையில் முடிவுகள் தெரியாத நேர்வு

வாக்குப் பதிவுக் கட்டுப்பாட்டு எந்திரத்தின் வெளிக்காட்டுத் திரையில் முடிவுகள் தெரியாத நேர்வுகள் ஏற்படுகிறவிடத்துப் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

9.25.1 எந்தவொரு வாக்குப் பதிவு எந்திரம் முடிவைக் காட்டாவிடத்து அந்த எந்திரத்தை அதை வைக்கவேண்டிய பெட்டியில் வைத்து அதனை வாக்கெண்ணும் வளாகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரின் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும். அதன்பின் எப்போதம்போல் பிற எந்திரங்களில் உள்ள வாக்குகளை எண்ணும் பணியைத் தொடரவேண்டும்.

2. இதுபோன்ற எந்திரங்களில் உள்ள முடிவைத் துணை வெளிக்காட்டு அலகோ அல்லது அச்சுப் பொறியோ பயன்படுத்தி எடுக்கக்கூடாது.

## வாக்கெண்ணிக்கையை ஒத்தி வைத்தல்

9.26.1 தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்கெண்ணும் பணியைத் தொடர்ந்து ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் நடத்தவேண்டும். தவர்க்கமுடியாத காரணங்களால் தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்கெண்ணிக்கையை நிறுத்தவோ அல்லது ஒத்தி வைக்கவேண்டிய நேர்வுகளில், வாக்குப் பதிவு எந்திரத்தையும் மற்றும் தேர்தல் தொடர்பான பிற அனைத்துத் தாள்களையும் மூடி முத்திரையிட வேண்டும். ஒவ்வொரு வேட்பாளர் அல்லது அவரின் முகவர், அவருடைய முத்திரையை வாக்குப்பதிவு எந்திரம் மற்றும் தேர்தல் தாள்கள் வைக்கப்பட்டுள்ள பைகளில் பதிக்க விரும்புகிறவிடத்து அவர்களை தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதிக்க வேண்டும்.

2. மூடி முத்திரையிடப்பட்ட அனைத்து வாக்குப் பதிவு எந்திரங்கள் மற்றும் பைகளைத் தனி அறையில் வைப்பதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டும். மேலும், அந்தத் தனியறையை தேர்தல் நடத்தும் அலுவலரின் முத்திரை மற்றும் வேட்பாளர்கள் அல்லது அவர்களுடைய முகவர்கிளன் முத்திரையுடன் பூட்டி முத்திரையிடவேண்டும். இந்த அறைகளில் தேர்தல் நடத்தும் அலுவலரின் பூட்டுடன் வேட்பாளர்கள் தங்களது பூட்டையும் கொண்டு அந்த அறையைக் கூடுதலாகப் பூட்டலாம்.

## ஒவ்வொரு வாக்குச்சாவடியின் எண்ணிக்கை முடிவுகளை அறிவித்தல் :

9.27.1. தேர்தல் நடத்தும் அலுவலர், ஒரு வாக்குச்சாவடிக்குத் தொடர்பான வாக்குச் சீட்டுகளின் கட்டுகளைச் சரிபார்த்து, ஐயத்திற்குரிய வாக்குச் சீட்டுகளைக் கூர்ந்தாய்வு செய்து அத்தகைய ஐயத்திற்குரிய வாக்குச்சீட்டுகளுக்குத் தொடர்பான ,றுதி முடிவை எடுத்தபின்பு, அந்த வாக்குச்சாவடிக்குத் தொடர்புடைய வாக்கெண்ணும் மேற்பார்வையாளரால் நிரப்பப்பட்டிருக்கும் படிவம் 22Aஇன் பகுதி-||இல், திருத்தங்கள் எவையேனும் தேவைப்பட்டால் அவற்றை அவர் செய்து கையொப்பமிடுவார். அதன் பின்பு, அவர் அந்த வாக்குச்சாவடியின் எண்ணிக்கை முடிவைத் தெரிவிக்கும் விவரங்களை அறிவிப்பார் .

## இறுதி முடிவை அட்டவணையிடுதல்

9.28.1. வாக்கெண்ணிக்கையின் இறுதி முடிவை அட்டவணைப்படுத்தும் வேலை அருகருகே செய்யப்படும். தேர்தல் நடத்தும் அலுவலரால் உரியவாறு திருத்தப்பட்டுக் கையொப்ப மிடப்பட்ட மேற்சொன்ன படிவம்-22A, இறுதி முடிவுத்தாளை (படிவம்-25) பொறுப்பில் கொண்டிருக்கும் ஓர் அலுவலருக்குக் கைமாற்றியமைக்கப்படும். அந்த அலுவலர் அந்தப் படிவத்தில் ஒவ்வொரு வாக்குச்சாவடியின் எண்ணிக்கை முடிவை நிரப்புவார் .

## புதிய வாக்குப்பதிவு நேர்வில் வாக்கெண்ணுதலை ஒத்திவைத்தல்

9.29.1 முடிவை விளம்புவதற்கான செயற்படிகளில் எதையும் எடுக்கும் முன்பு, தேர்தல் நடத்தும் அலுவலர் குலைவுசெய்யப்பட்டிருப்பதாகக் காணப்பட்ட வாக்குப்பதிவு எந்திரம் எதையும் பற்றி மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கை எதையும் செய்திருக்கிறார் என்றால், அவர் அதன் கட்டளைக்காகக் காத்திருப்பார். பாதிக்கப்பட்ட வாக்குச்சாவடியில் (சாவடிகளில் ஒரு புதிய வாக்குப்பதிவு நடத்தப்படுவதற்கு ஆணையம் கட்டளையிடுகிற விடத்து, (பிற வாக்குச்சாவடிகள் எல்லாவற்றையும் பொறுத்து வாக்கெண்ணும் நடைமுறை முடிக்கப்பட்டிருக்கிற பின்பு வாக்கெண்ணிக்கை ஒத்திவைக்கப்படும். அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட வாக்கெண்ணிக்கை, மாநிலத் தேர்தல் ஆணையம் இதன் பொருட்டுக் குறித்திடலாகிற தேதியன்றும் நேரத்திலும் புதிய வாக்குப்பதிவு நடத்தப்பட்ட பின்பு, மீண்டும் தொடங்கப்படவேண்டும், மற்றும் புதிய வாக்குப்பதிவில் பதிவான வாக்குகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்ட பின்பு இறுதி முடிவு கணக்கிடப்படவேண்டும்.

2 தேர்தல் நடத்துவதைக் கண்காணிப்பதற்காக மாநிலத் தேர்தல் ஆணையத்தால் பணியமர்த்தப்பட்ட பார்வையாளர்களின் கருத்துரையில், வாக்குச்சாவடிகளில், அல்லது வாக்கெண்ணும் இடத்தில் பெரும் எண்ணிக்கையில் வாக்குச்சாவடி கைப்பற்றுதல் நிகழ்ந்திருக்கிறது அல்லது வாக்குச்சீட்டுகள் அல்லது வாக்குப் பதிவு எந்தரங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரின் பாதுகாவலில் இருந்து சட்ட முரணாக வெளியே எடுக்கப்பட்டிருக்கின்றன அல்லது தற்செயலாகவோ உட்கருத்துடனோ அழிக்கப்பட்டு அல்லது இடிக்கப்பட்டு அல்லது சேதப்பட்டு அல்லது குலைவு செய்யப்பட்டு இருக்கின்றன என்றால், முடிவின் விளம்புகைக்கு முன்பு எந்த நேரத்திலும் வாக்கெண்ணிக்கையை நிறுத்திவைக்குமாறு, அல்லது முடிவை விளம்பாதிருக்குமாறு, அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலருக்குக் கட்டளையிடும் அதிகாரங்களைக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய நேர்வுகளில் தேர்தல் நடவடிக்கைகள், பார்வையாளர்களின் அறிக்கை மீதும், பொருட்பாடான சூழ்நிலைகள் எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டும், தேர்தல் ஆணையம் பிறப்பிக்கலாகும் அத்தகைய கட்டளைகளுக்கு இணங்கியவாறு, மேற்கொண்டும் நடத்தப்பட வேண்டும்.

## மறு எண்ணிக்கை

9.30.1 வாக்கெண்ணிக்கை முழுவதுமாக முடிந்த பின்பு, தேர்தல் நடத்தும் அலுவலர், இறுதி முடிவுத்தாளில் (படிவம்-25) பதிவு செய்யப்பட்டுள்ளவாறு. ஒவ்வொரு வேட்பாளராலும் பெறப்பட்ட வாக்குகளின் மொத்த

எண்ணிக்கையைத் தெரிவிக்கும் முடிவை அறிவிப்பார். அந்த அறிவிப்புச் செய்யப்பட்ட பின்பு, ஒரு வேட்பாளர் அல்லது அவர் இல்லா நிலையில் அவருடைய தேர்தல் முகவர் அல்லது அவருடைய வாக்கெண்ணும் முகவர்களில் எவரும் வாக்குச்சீட்டுகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றில் எதையும் மறுபடியும் எண்னுவதற்காக, அத்தகைய மறு பண்ணிக்கையை அவர் கோருவதற்கான காரணங்களை உரைத்து, எழுத்துவடிவில் விண்ணப்பம் செய்யலாம். இந்த நோக்கத்திற்காக, தேர்தல் நடத்தும் அலுவலர் மறு எண்ணிக்கைக்கான எழுத்துவடிவில் விண்ணப்பத்தைப் பெறுவதற்காக, எந்தத் துல்லியமான மணி மற்றும் மணித்துளி (நிமிடம்) வரை அவர் காத்திருப்பார் என்பதை அறிவிப்பார், மறு எண்ணிக்கைக்காக அத்தகைய விண்ணப்பம் ஒன்று செய்யப்படுகிறபோது, மறு எண்ணிக்கையைத் தூண்டுவதற்கான காரணங்கள் தேர்தல் நடத்தும் அலுவலரால் கருதுகை செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்படும். விண்ணப்பம் நியாயமானதாக இருக்கிறது என்றால் அதை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அவர் அனுமதிப்பார். அல்லது அது அற்பமானதாகவோ அல்லது நியாயமற்றதாகவோ தோன்றுகிறது என்றால், அவர் அதை முற்றிலுமாக மறுத்தொதுக்கலாம். தேர்தல் நடத்தும் அலுவலரின் முடிவு இறுதியானது ஆகும். எந்தவொரு நேர்விலும் மறு எண்ணிக்கைக்கான ஒரு விண்ணப்பம், முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அனுமதிக்கப்படுகிறது என்றால், தேர்தல் நடத்தும் அலுவலர் வாக்குப் பதிவு எந்திரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்குகளை மீண்டும் எண்ணுவதற்குக் கட்டளையிடுவார். அஞ்சல் வாக்குச்சீட்டுகளின் மறு எண்ணிக்கைக்காக ஒரு வேண்டுகோள் விடுக்கப்படுகிறது என்றால், அவையும் மீண்டும் எண்ணப்படலாம். அத்தகைய ஒரு வேண்டுகோள் தேர்தல் நடத்தும் அலுவலரால் அனுமதிக்கப்படுகிறது. அத்தகைய மறு எண்ணிக்கை முடிக்கப்பட்டிருக்கிற பின்பு, முடிவுத்தாள் தேவைப்படும் அளவுக்குத் திருத்தப்பட்டு அவ்வாறு செய்யப்பட்ட திருத்தங்கள் அறிவிக்கப்படும். ஒவ்வொரு வேட்பாளருக்கும் பதிவான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை அறிவிக்கப்பட்ட பின்பு, முடிவுத்தாள் முடிக்கப்பட்டுக் கையொப்பமிடப்படும் .

2. தேர்தல் நடத்தும் அலுவலர் தேர்தல் முடிவை இறுதிசெய்து தேர்தல் முடிவுத்தாளில் ஒப்பமிட்டபின்னர், வேட்பாளரோ அல்லது அவரின் தேர்தல் முகவரோ அல்லது எந்தவொரு வாக்கு எண்ணிக்கை முகவரோ மறு வாக்கு எண்ணிக்கை கோரக்கூடாது. தேர்தல் முடிவு இறுதிசெய்யப்பட்டு ஒப்பமிடப்பட்ட பின்னர் கோரப்படும் மறு வாக்கு எண்ணிக்கைக் கோரிக்கை மறுத்தொதுக்கப்படும்.

**சம எண்ணிக்கையில் வாக்குகள்**

9.31.1. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் சம எண்ணிக்கையில் வாக்குகளைப் பெற்றிருக்கும் நேர்வில், இந்த வேட்பாளர்களுக்குக் கூடுதலாக ஒரு வாக்கினை அளித்து அவர்களின் ஒருவரை வெற்றி பெற்றவராக அறிவிக்கலாம். தேர்தல் நடத்தும் அலுவலர் குலுக்கல் முறையில் கூடுதல் வாக்கினை அளிக்கும் முடிவை எடுக்கவேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் வேட்பாளர் அந்தக் கூடுதல் வாக்கினைப் பெற்றவராவார். அதன்பிறகு, அதன் அடிப்படையில் தேர்தல் நடத்தும் அலுவலர் முடிவை அறிவிக்க வேண்டும்.

**பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் அஞ்சல் வாக்குச் சீட்டுகளை முத்திரையிட்டு மூடுதல்**

10.1. வாக்கு எண்ணிக்கை முடிந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன், தொடர்புடைய வாக்குச் சாவடியில், ஒவ்வொரு வேட்பாளரின் ஏற்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகளும் தனியாகக் கட்டப்பட்டு, கட்டப்பட்ட அனைத்துக்கட்டுகளும் தனியாக ஒரே பையாக உருவாக்கப்பட வேண்டும். இந்தப் பையைத் தேர்தல் நடத்தும் அலுவலரின் முத்திரை மற்றும் தேர்தல் ஆணையத்தின் இரகசிய முத்திரைகளுடன் மூடி முத்திரையிடப்படவேண்டும். வேட்பாளர்கள் வேட்பாளர்களின் முகவர்கள் அல்லது வாக்கு எண்ணிக்கை முகவர்கள் விரும்பினால், அவர்களுடைய முத்திரைகளையும் அந்தப் பையில் பதிக்க அனுமதிக்க வேண்டும். தங்கள் வேட்பாளர்களுக்காகப் பிரதிநிதிகளாக வாக்கு எண்ணிக்கை முகவர்கள் மேற்சொல்லப்பட்டுள்ள அஞ்சல் வாக்குச் சீட்டுகள் மற்றும் வாக்குப் பதிவு எந்திரங்கள் உள்ள மூடி முத்திரையிடப்பட்டுள்ள பைககளில் அவர்களுடைய முத்திரை பதிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்துகொள்ள அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள். இது, அந்தப் பையில் உள்ள வாக்குச் சீட்டுகளில் எந்தவித மாற்றமும் செய்ய வாய்ப்பில்லை என்ற மனநிறைவை அவர்களுடைய வேட்பாளர்க்குத் தரும். எனினும், வேட்பாளரோ அல்லது வேட்பாளரின் முகவரின் தங்கள் முத்திரைகளை அவர்களாகவே பதிக்கும்நேர்வில், வாக்கு எண்ணிக்கை முகவர்கள் முத்திரைகளைப் பதிக்கவேண்டிய அவசியம் இல்லை.

**பிற்சேர்க்கை - 9.1**

**படிவம் - 23**

**வாக்கு எண்ணிக்கை முகவர்களை நியமனம் செய்தல்**

**[விதி 51(5)ஐக் காண்க]**

**......... ......... ........... ........ ......... ......... ........... ........ ......... ......... ........... ........ *க்கான தேர்தல்**

**பெறுநர்**

**தேர்தல் நடத்தும் அலுவலர்,**

**.............................................. என்னும் நான் மேலே குறிப்பிட்டுள்ள தேர்தலின் வேட்பாளர்/ தேர்தலின் வேட்பாளர் ........................................... என்பவரின் தேர்தல் முகவர் பின்வரும் நபர்களை வாக்கு எண்ணிக்கை முகவர்களாக ............. இடத்தில் நடைபெறும் வாக்கு எண்ணிக்கையில் கலந்துகொள்ள என்னுடைய முகவர்களாக நியமிக்கிறேன்.**
**மேலே குறிப்பிட்டுள்ள தேர்தலின் வேட்பாளர், ................... என்பவரின்/ அவருடைய வாக்கு எண்ணிக்கை முகவர்களின் நியமனத்தை விலக்கிக் கொள்கிறேன்.**

**இடம் :**
**தேதி :**

**விலக்குக் கோருபவரின் கையொப்பம்**

*** தேர்தல் தொடர்பான உரிய விவரங்கள் இங்கே கொடுக்கப்படவேண்டும்**
**குறிப்பு: தேவையானால் சொற்களை நீக்குக (                    )**

**வாக்கு எண்ணிக்கை முகவர்களின் பெயர்கள்**

**1.**
**2.**
**3.**
**4.**

****நான் நாங்கள் இதுபோ;ற வாக்கு எண்ணிக்கை முகவர்களாகப் பணிசெய்ய இசைவளிக்கின்றோம்.**

**1.**
**2.**
**3.**
**4.**

**இடம்:**
**தேதி:**

**வாக்கு எண்ணிக்கை முகவர்களின் முகவரி.**

****வேட்பாளர் தேர்தல் முகவரின் ஒப்பம்**

****வாக்கு எண்ணிக்கை முகவரின்(களின்) ஒப்பம்**

## வாக்கு எண்ணிக்கை முகவர்களின் உறுதிமொழி
## (தேர்தல் நடத்தும் அலுவலரின்முன் ஒப்பமிட வேண்டும்)

மேற்கண்ட தேர்தலில் 1973ஆம் ஆண்டு, புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 26இன்படி தடைசெய்யப்பட்ட எதையும் **நான் /நாங்கள் செய்யமாட்டோம் எனவும் அதை **நான் / நாங்கள் படித்திருக்கிறோம் / அது என்னால் /எங்களால் படிக்கப்பட்டுள்ளது எனவும் உறுதியளிக்கிறோம்.

1.

2.

3.

4.

தேதி :

வாக்கு எண்ணிக்கை முகவர்(களின்) ஒப்பம்
எனக்கு முன்னால் ஒப்பமிடப்பட்டது

தேர்தல் நடத்தும் அலுவலர்

தேதி:

***தேர்தல் தொடர்பான உரிய விவரங்கள் இங்கே கொடுக்கப்படவேண்டும்**
****பொருத்தமற்ற மாற்று விபரங்களை அடித்தவிடவும்.**

1973ஆம் ஆண்டு புதுச்சேரி நகராட்சிகள் சட்டத்தில் பிரிவு 26

"26 வாக்குப்பதிவின் இரகசியத்தைப் பராமரித்தல்,- (1) தேர்தலின், எந்தவொரு அலுவலர், எழுத்தர், முகவர் அல்லது வாக்குப் பதிவுசெய்தல் அல்லது வாக்கு எண்ணிக்கைக்குக் தொடர்புடைய எந்தவொரு பணியையும் செய்யும் பிற நபர் வாக்குப் பதிவின் இரகசியத்தைப் பராமரிக்கவும் பராமரித்தலில் உதவி செய்யவும் வேண்டும். மேலும், அவர்கள் எவருக்கும் எந்தவொரு தகவலையும் (சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள சில குறிப்பிட்ட நோக்கங்கள் தவிர்த்து) அளிக்கக் கூடாது. அவ்வாறு செய்வது இரகசியத்தைச் சீர்குலைத்தலாகும்.

(2) உட்பிரிவு (1)இன் சட்ட நடைமுறைகளுக்கு மாறாகச் செயல்படுவது ஒரு குறிப்பிட்ட காலஅளவுச் சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும். இத்தண்டனை ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்படும் அல்லது தண்டம் விதிக்கப்படும் அல்லது இரண்டும் அளிக்கப்படும்.

## பிற்சேர்க்கை - 9.2

### படிவம் - 24

### வாக்கு எண்ணிக்கை முகவர்களின் நியமனத்தை விலக்குதல்

**[விதி 51(7)ஐக் காண்க]**

**......... ......... ........... ........ ......... ......... ........... ........ ......... ......... ........... ........ *க்கான தேர்தல்**

**பெறுநர்**

**தேர்தல் நடத்தும் அலுவலர்,**

**............................................ என்னும் நான் (............................................ என்பவரின் தேர்தல் முகவர்) மேலே குறிப்பிட்டுள்ள தேர்தலின் வேட்பாளர், .................... என்பவரின்/ அவருடைய வாக்கு எண்ணிக்கை முகவர்களின் நியமனத்தை விலக்கிக் கொள்கிறேன்.**

**இடம் :**
**தேதி :**

**விலக்குக் கோருபவரின் கையொப்பம்**

***தேர்தல் தொடர்பான உரிய விவரங்கள் இங்கே கொடுக்கப்படவேண்டும்**
**குறிப்பு: தேவையானால் சொற்களை நீக்குக (                    )**

## பிற்சேர்க்கை 9.3

### படிவம் - 22A

[விதி 49 (S) காண்க]

### பகுதி - பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் கணக்கு

**........ வார்டுக்கான/........ எண்ணுக்கான நகரமன்றத் தலைவர் மற்றும் வாக்குச் சாவடி எண் ..... வாக்காளர் பட்டியலின் பகுதி எண் ....... வாக்களிக்கும் கட்டுப்பாட்டுக் கருவியின் அடையாள எண் ......... வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவுக் கருவி (வரிசை எண்.....................)**

**வாக்குச்சாவடியின் எண் மற்றும் பெயர் :**

**வாக்குச் சாவடியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பதிவுக் கருவியின் அடையாள எண்:**

**வாக்குப் பதிவுக் கட்டுப்பாட்டுக் கருவி :**

**பிரித்தெடுக்கப்பட்ட நினைவக நிரல் (DMM) :**

**வாக்களிக்கும் எந்திரம் : .....................................**

**1. வாக்குச் சாவடியில் வாக்களிக்க அனுமதிக்கப்பட்ட வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை:..................**

**2. வாக்காளர் பதிவேட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை:...........................**

**3. விதி 49-Oஇன்படி வாக்குப்பதிவு செய்யவேண்டாம் என முடிவெடுத்த வாக்காளர்களின் எண்ணிக்கை:..........**

**4. விதி 49Mஇன்படி வாக்குப் பதிவுசெய்ய அனுமதிக்கப்படாத வாக்காளர்களின் எண்ணிக்கை.....................**

**5. வாக்குப் பதிவு எந்திரத்தின்படி பதிவான வாக்குகளின் மொத்த எண்ணிக்கை..........................................**

**6. மேலே உள்ளதன்படி வரிசை எண் 2இல் உள்ள எண்ணிக்கையை வரிசை எண் 3இல் உள்ள வாக்கைப் பதிவு செய்ய வேண்டாம் என முடிவெடுத்த வாக்காளர்களின் எண்ணிக்கையோடு கழித்து வரிசை எண் 4இல் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையையும் கழித்து வரும் எண்ணிக்கை (அதாவது 2-3-4) வரிசை எண் 5இல் உள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளதா? அல்லது கண்டறியப்பட்ட வேறுபாடுகள் .........................**

7. விதி 49-Pகீழ் வாக்குச் சீட்டின் மூலம் வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கை.........................

8. வழங்கப்பட்ட வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை...............................................

வரிசை எண்.

| | | மொத்தம் | முதல் | வரை |
|---|---|---|---|---|
| (a) | பயன்பாட்டுக்காகப் பெறப்பட்ட தாள் முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை | | | |
| (b) | வாக்காளர்களுக்கு அளிக்கப்பட்டவை | | | |
| (c) | பயன்படுத்தப்படாதவை மற்றும் திருப்பியளிக்கப்பட்டவை | | | |

9. தாள் முத்திரைகளின் கணக்கு

வாக்குச்சாவடி முகவர்களின் கையொப்பம்

1. பயன்பாட்டுக்காக அளிக்கப்பட்ட தாள் முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை ......................... முதல் ....................... வரை
2. வாக்காளர்களுக்கு அளிக்கப்பட்ட தாள் முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை.......................... முதல் ....................... வரை
3. பயன்படுத்தப்படாதவை மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலருக்குத் திருப்பியளிக்கப்பட்டவை (1-2) ............. முதல் ....................... வரை
4. வீணாய்ப்போன தாள் முத்திரைகள் இருந்தால், மொத்த எண்ணிக்கை:....................

இடம்
தேதி

தலைமைத் தேர்தல் அலுவலரின் கையொப்பம்

வாக்குச்சாவடியின் எண்........................................................................

வரிசை எண் வாக்குச்சாவடி முகவரின் பெயர் கையொப்பம்

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................
5. ..........................................................................................................

### பகுதி II - வாக்கு எண்ணிக்கை முடிவுகள்

| வேட்பாளரின் வரிசை எண் | வேட்பாளரின் பெயர் | பதிவு செய்யப்பட்ட வாக்குகள் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10 | | |
| N | நோட்டா | |
| மொத்தம் | | |

மேலே உள்ள அட்டவனையில் உள்ள மொத்த எண்ணிக்கையும் பகுதி-ஐஇல் 6ஆம் பொருளில் உள்ள மொத்த எண்ணிக்கையும் சமமாக உள்ளதா அல்லது மொத்த எண்ணிக்கை இரண்டிலும் வேறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளனவா?

இடம்
தேதி

வாக்கு எண்ணிக்கைக் கண்காணிப்பாளரின் கையொப்பம்

வரிசை எண் வேட்பாளர்/தேர்தல் முகவர் /வாக்கு எண்ணிக்கை முகவரின் பெயர் முழு கையொப்பம்

1. ..................................................................................................................
2. ..................................................................................................................
3. ..................................................................................................................
4. ..................................................................................................................
5. ..................................................................................................................

இடம்
தேதி

தேர்தல் நடத்தும் அலுவலரின் கையொப்பம்